www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# குருபீடம்

ஜெயகாந்தன்

மீனாட்சி புத்தக நிலையம்

Scanned by CamScanner

K. SELVA RAMA RATHNAM

www.t.me/tamilbooksworld

# குருபீடம்

www.t.me/tamilbooksworld

பாரதீய ஞானபீடப் பரிசு பெற்ற

ஜெயகாந்தன்

மீனாட்சி புத்தக நிலையம்

மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு, மதுரை – 625 001.
தொலைபேசி : அலுவலகம்: 2345971 வீடு: 2560517
ஈ–மெயில் : meenakshiputhakam@hotmail.com

Scanned by CamScanner

www.t.me/tamilbooksworld

# உள்ளே...

1. குருபீடம் (1970)
2. டீக்கடைச் சாமியாரும் டிராக்டர் சாமியாரும் (1969)
3. நிக்கி (1970)
4. ஒரு வீடு பூட்டிக் கிடக்கிறது (1969)
5. தவறுகள், குற்றங்கள் அல்ல (1969)
6. அந்த உயிரின் மரணம் (1969)
7. விதியும் விபத்தும் (1969)
8. புதுச் செருப்புக் கடிக்கும் (1971)
9. எங்கோ, யாரோ, யாருக்காகவோ... (1970)

Scanned by CamScanner

www.t.me/tamilbooksworld

21. குருபீடம் *மின்பதிப்பு*
22. டீக்கடைச் சாமியாரும் டிராக்டர் சாமியாரும் *மின்பதிப்பு*
23. நிக்கி, *மின்பதிப்பு*
24. ஒரு வீடு பூட்டிக் கிடக்கிறது

## 21. குருபீடம்

அவன் தெருவில் நடந்தபோது வீதியே நாற்றமடித்தது. அவன் பிச்சைக்காகவோ அல்லது வேடிக்கை பார்ப்பதற்காகவோ சந்தைத்திடலில் திரிந்து கொண்டிருந்தபோது அவனைப் பார்த்த மாத்திரத்தில் எல்லோருமே அருவருத்து விரட்டினார்கள். அவனை விரட்டுவதற்காகவே சிலபேர் ஏதோ பாவ காரியத்தைச் செய்கிற மாதிரி அவனுக்குப் பிச்சையிட்டார்கள்.

அவன் ஜெயிலிருந்து வந்திருப்பதாகச் சில பேர் பேசிக்கொண்டார்கள். அவன் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேற்றப்பட்டவனென்றும் சிலர் சொன்னார்கள்.

ஆனால், இப்போது அவன் நோயாளியோ பைத்தியக்காரனோ அல்ல என்று

www.t.me/tamilbooksworld

அவனைப் பார்த்த எல்லாரும் புரிந்து கொண்டார்கள். உண்மையும் அதுதான். சோம்பலும், சுயமரியாதை இல்லாமையும், இந்தக் கோலம் அசிங்கமென்று உணர முடியாத அளவுக்கு அவனிடம் ஊறி உறைந்துபோன தாமசத்தின் மதமதப்பினாலும் அவன் இவ்வாறு திரிகிறான். பசிக்கிறதோ இல்லையோ தன் கையில் கிடைத்ததையும் பிறர் கையில் இருப்பதையும் தின்ன வேண்டுமென்ற வேட்கை அவன் கண்ணில் அலைந்தது. ஒரு குழந்தை சாப்பிடுவதைக்கூட ஒரு நாய் மாதிரி அவன் நின்று பார்த்தான். அவர்களும் அவனை நாயை விரட்டுவது மாதிரி விரட்டினார்கள். அவ்விதம் அவர்கள் விரட்டி அவன் விலகிவரும்போது அவன் தனது பார்வையால் பிறர் சாப்பிடும் பொருளை எச்சில் படுத்திவிட்டு வந்தான். அவன் எப்போதும் எதையாவது தின்றுகொண்டே இருந்தான். அவன் கடைவாயிலும் பல்லிலும் அவன் தின்றவை சிக்கிக் காய்ந்திருந்தது. யாராவது பீடியோ சுருட்டோ புகைத்துக் கொண்டிருந்தால் அதற்கும் அவன் கையேந்தினான். அவர்கள் புகைத்து எறிகிற வரைக்கும் காத்திருந்து, அதன் பிறகு அவற்றைப் பொறுக்கி அவர்களை அவமரியாதை செய்கிற மாதிரியான சந்தோஷத்துடன் அவன் புகைத்தான்.

சந்தைக்கு வந்திருக்கிற நாட்டுப்புறப் பெண்கள் குழந்தைகளுக்குப் பால் கொடுக்கும்போதும், குனிந்து நிமிர்கையில் ஆடை விலகும்போதும், இவன் காமாதுரம் கொண்டு வெட்கமில்லாமல் அவர்களை வெறித்துப் பார்த்து ரசித்தான்.

அவனுக்கு உடம்பில் நல்ல வலுவும் ஆரோக்கியமும் இருந்தது. எனினும் எப்போதும் ஒரு நோயாளியைப்போல் பாசாங்கு செய்வது அவனுக்குப் பழக்கமாகிப் போய்விட்டது. அவனுக்கு வயது நாற்பதுக்குள்தான் இருக்கும். கடுமையாக உழைக்காததாலும், கவலைகள் ஏதும் இல்லாததாலும் அவன் உடம்புவாகே ஒரு பொலிகாளை மாதிரி இருந்தது. இளமையும் உடல் வலுவும் ஆரோக்கியமும் இயற்கையால் அவனுக்கு அனுக்கிரகிக்கப்பட்டிருந்தும் அவன் தன்னைத்தானே சபித்துக் கொண்டது மாதிரி சேற்றில் மேய்கிற பன்றியாய்த் திரிந்தான்.

சந்தைத் திடலுக்கும் ரயிலடிக்கும் நடுவேயுள்ள குளக்கரையை அடுத்த சத்திரத்தில் உட்கார்ந்துகொண்டு அங்கே குளிக்கிற பெண்களை வேடிக்கை பார்ப்பது அவனுக்கு ஒரு பொழுதுபோக்கு. ஆனால், ஒரு நாளாவது தானும் குளிக்க வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியதே இல்லை. மற்ற நேரங்களில் அவன் அந்தத் திண்ணையில் அசிங்கமாகப் படுத்து உறங்கிக் கொண்டிருப்பான். சில சமயங்களில் பகல் நேரத்தில் கூட உறங்குவது மாதிரி பாவனையில் வேண்டுமென்றே ஆடைகளை விலக்கிப் போட்டுக்கொண்டு தெருவில் போவோர் வருவோரை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி ரகசியமாக மனத்திற்குள் மகிழ்ச்சி அடைவான்.

இரண்டு தினங்களுக்கு முன்பு லேசாக மழை பெய்து கொண்டிருந்த இரவில் ஒரு பிச்சைக்காரி இந்தச் சத்திரத்துத் திண்ணையில் வந்து படுக்க, அவளுக்கு ஏதேதோ ஆசை காட்டிக் கடைசியில் அவளை வலியச்சென்று சல்லாபித்தான். அதன் பிறகு இவனைப் பழிவாங்கிவிட்ட மகிழ்ச்சியில் தனது குறைபட்டுப்போன விரல்களைக் காட்டித் தான் ஒரு நோயாளி என்று அவள் சிரித்தாள். அதற்காக அருவருப்புக் கொள்கிற உணர்ச்சிகூட இல்லாமல் அவன் மழுங்கிப் போயிருந்தான். எனவே, இவள் இவனுக்குப் பயந்துகொண்டு இரண்டு நாட்களாக இந்தப் பக்கமே திரும்பவில்லை. இவன் அவளைத் தேடிக்கொண்டு நேற்று இரவெல்லாம் சினிமாக் கொட்டகை அருகேயும்,

சந்தைப்பேட்டையிலும், ஊரின் தெருக்களிலும் கார்த்திகை மாதத்து நாய் மாதிரி அலைந்தான்.

மனித உருக்கொண்டு அவனிடம் உறைந்துபோன தாமசத் தன்மையினால், சோம்பலைச் சுகமென்று சுமந்து கொள்கிற புத்தியின் மந்தத்தினால் அருவருக்கத்தக்க ஒரு புலை நாய் மாதிரி அவன் அங்கு அலைந்து கொண்டிருந்தான். வயிற்றுப்பசி, உடற்பசி என்கிற விகாரங்களிலும் உபாதைகளிலும் சிக்குண்டு அலைகின்ற நேரம் தவிர, பிற பொழுதுகளில் அந்தச் சத்திரத்துத் திண்ணையில் அவன் தூங்கிக்கொண்டே இருப்பான்.

ஃஃஃ ஃஃஃ ஃஃஃ ஃஃஃ

காலை நேரம்; விடியற்காலை நேரம் அல்ல. சந்தைக்குப் போகிற ஜனங்களும், ரயிலேறிப் பக்கத்து ஊரில் படிப்பதற்காகப் போகும் பள்ளிக்கூடச் சிறுவர்களும் நிறைந்து அந்தத் தெருவே சுறுசுறுப்பாக இயங்குகின்ற - சுரீர் என்று வெயில் அடிக்கிற நேரத்தில், அழுக்கும் கந்தலுமான இடுப்பு வேட்டியை அவிழ்த்துத் தலையில் இருந்து கால்வரை போர்த்திக் கொண்டு, அந்தப் போர்வைக்குள் க்ருப்பிண்டம் மாதிரி முழங்கால்களை மடக்கிக் கொண்டு, கைகளிரண்டையும் காலிடையே இடுக்கியவாறு வாயிலிருந்து எச்சில் ஒழுக, ஈ மொய்ப்பது கூடத் தெரியாமல் அவன் தூங்கிக் கொண்டிருந்தான். தெருவிலே ஏற்படுகிற சந்தடியும் இரைச்சலும் ஏதோ ஒரு சமயத்தில் அவன் தூக்கத்தைக் கலைத்தது. எனினும் அவன் விழித்துக் கொள்ள விரும்பாததனால் தூங்கிக் கொண்டிருந்தான்.

- இதுதான் சோம்பல். உறக்கம் உடலுக்குத் தேவை. அனால், இந்தத் தேவையற்ற நிர்ப்பந்தத் தூக்கம்தான் சோம்பலாகும். இந்த மதமதப்பைச் சுகமென்று சகிக்கிற அறிவுதான் தாமசமாகும்.

விரைவாக ஏறி வந்த வெயில் அவன்மீது மெதுவாக ஊர்ந்தது. அவன் தெருவுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு சுவர் ஓரமாகப் படுத்திருந்தான். சத்திரத்துச் சுவரின் நிழல் கொஞ்சங் கொஞ்சமாகச் சுருங்க ஆரம்பித்தது. முதலில் வெயிலின் விளிம்பு அவனது விலாவுக்கும் தரைக்கும் இடையே மெள்ள மெள்ளப் புகுவதை அவனது மதர்த்த தேகம் ரொம்பத் தாமதமாக உணர்ந்தது. வெயிலின் உறைப்பை உணரக்கூடிய உணர்ச்சிக் குறுகுறுப்பு மழுங்கிப் போனதால் ஒரு மலைப்பாம்பு மாதிரி அவன் அசிங்கமாக நெளிந்தான். அந்த வெப்பத்திலிருந்து - அந்த வெயிலின் விளிம்பிலிருந்து ஒரு நூல் இழை விலகுவதற்கு எவ்வளவு குறைவான, மெதுவான முயற்சி எடுத்துக் கொள்ளலாமோ, அவ்வளவே அவன் நகர்ந்து படுத்தான். சற்று நேரத்தில் மறுபடியும் வெயில் அவனைக் கடித்தது. அவனது அசமந்தம் எரிச்சலாகி அவன் தூக்கம் கலைந்தான். ஆனாலும் அவன் எழுந்திருக்கவில்லை. இன்னும் கொஞ்சம் நகர்ந்து சுவரோடு ஒட்டிக் கொண்டான்.

எதிரே இருந்த டீக்கடையிலிருந்து டீ அடிக்கிற சத்தம் கேட்டது. அந்தச் சத்தத்தில் அவன் டீ குடிப்பது மாதிரி கற்பனை செய்து கொண்டான்.

மறுபடியும் வெயில் அவனை விடாமல் போய்க் கடித்தது. அதற்குமேல் நகர முடியாமல் சுவர் தடுத்தது. ஒரு பக்கம் சுவரும் ஒரு பக்கம் வெயிலும் நெருக்க அவன் எரிச்சலோடு எழுந்து உட்கார்ந்தான். அவனுக்குக் கண்கள் கூசின. ஒரு கண்ணைத் திறக்கவே முடியவில்லை. பீளை காய்ந்து இமைகள் ஒட்டிக் கொண்டிருந்தன.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அவன் ஒரு கையால் கண்ணைக் கசக்கிக் கொண்டே இன்னொரு கையால், தலைமாட்டில் சேகரித்து வைத்திருந்த துண்டு பீடிகளில் ஒன்றை எடுத்தான். பீடியைப் பற்ற வைத்து அவன் புகையை ஊதிய போது அவனது அரைக் கண் பார்வையில் மிக அருகாமையில் யாரோ நின்றிருக்கிற மாதிரி முகம் மட்டும் தெரிந்தது. புகையை விலக்கிக் கண்களைத் திறந்து பார்த்தான்.

எதிரே ஒருவன் கைகளை கூப்பி, உடல் முழுவதும் குறுகி, இவனை வணங்கி வழிபடுகிற மாதிரி நின்றிருந்தான். இவனுக்குச் சந்தேகமாகித் தனக்குப் பின்னால் ஏதேனும் சாமி சிலையோ, சித்திரமோ இந்தச் சுவரில் இருக்கிறதா என்று திரும்பிப் பார்த்து நகர்ந்து உட்கார்ந்தான். இவனது இந்தச் செய்கையில் ஏதோ ஒரு அரிய பொருளைச் சங்கேதமாகப் புரிந்துகொண்டு வந்தவன் மெய்சிலிர்த்து நெக்குருகி நின்றான்.

" இவன் எதற்குத் தன்னை வந்து கும்பிட்டுக் கொண்டு நிற்கிறான் - பைத்தியமோ ? " என்று நினைத்து உள்சிரிப்புடன் -

" என்னாய்யா இங்கே வந்து கும்பிடறே ? இது கோயிலு இல்லே - சத்திரம். என்னைச் சாமியார் கீமியார்னு நெனச்சுக்கிட்டியா ? நான் பிச்சைக்காரன் ..." என்றான் திண்ணையிலிருந்தவன்.

" ஓ !.. கோயிலென்று எதுவுமே இல்லை.. எல்லாம் சத்திரங்களே ! சாமியார்கள் என்று யாருமில்லை. எல்லாரும் பிச்சைக்காரர்களே ! " என்று அவன் சொன்னதை உபதேச மொழிகள் மாதிரி இலக்கண அலங்காரத்தோடு திரும்பத் திரும்பச் சொல்லிப் புதிய புதிய அர்த்தங்கள் கண்டான் தெருவில் நின்றவன்.

" சரி சரி ! இவன் சரியான பைத்தியம்தான் " என்று நினைத்துக் கொண்டான் திண்ணையிலிருந்தவன்.

தெருவில் நின்றவன் இவனிடம் விண்ணப்பித்துக் கொள்கிற பவ்யத்துடன் ' சுவாமி ' என்றழைத்தான்.

இவனுக்குச் சிரிப்புத் தாங்கவில்லை. வந்த சிரிப்பில் பெரும் பகுதியை அடக்கிக் கொண்டு புன்முறுவல் காட்டினான்.

" என்னைத் தங்களுடைய சிஷ்யனாக ஏற்றுக் கொள்ள வேண்டும்; தங்களுக்குப் பணிவிடை புரியவும், தாங்கள் அழைத்த குரலுக்கு ஓடி வரவும் எனக்கு அனுக்கிரகிக்க வேண்டும். "

திண்ணையிலிருந்தவனுக்கு ஒன்றும் புரியவில்லை. " சரி, இப்போ எனக்கு ஒரு டீ வாங்கியாந்து குடு " என்றான்.

அந்தக் கட்டளையில் அவன் தன்னைச் சீடனாக ஏற்றுக் கொண்டுவிட்டான் என்று புரிந்துகொண்ட மகிழ்ச்சியுடன் இடுப்புத் துண்டிலிருந்த சில்லரையை அவிழ்த்துக் கொண்டு ஓடினான் வந்தவன். அவன் கையிலிருந்த காசைப் பார்வையால் அளந்த ' குரு ', ஓடுகின்ற அவனைக் கைதட்டிக் கூப்பிட்டு " அப்படியே பீடியும் வாங்கியா " என்று குரல் கொடுத்தான்.

அவன் டீக்கடைக்குச் சென்று பார்வைக்கு மறைந்ததும் இவன் வந்து சீடனாக வாய்த்த அதிர்ஷ்டத்தை எண்ணிப் பெருங்குரலில் சிரித்தான் குரு. " சரியான

www.t.me/tamilbooksworld

பயல் கிடைத்திருக்கிறான். இவன் மயக்கம் தெளியாதபடி பார்த்துக்கணும். திண்ணெயெ விட்டு எறங்காமல் சொகமா இங்கேயே இருக்கலாம். பிச்சைக்கு இனிமே நாம்ப அலைய வேணாம். அதான் சிஷ்யன் இருக்கானே... கொண்டான்னா கொண்டுவரான். முடிஞ்சா சம்பாரிச்சுக் குடுப்பான்... இல்லாட்டி பிச்சை எடுத்துக்கினு வரான்.. என்னா அதிர்ஷ்டம் வந்து நமக்கு அடிச்சிருக்கு..." என்று மகிழ்ந்திருந்தான் குரு.

சற்று நேரத்தில் சீடன் டீயும் பீடியும் வாங்கி வந்து நிவேதனம் மாதிரி இரண்டு கைகளிலும் ஏந்திக் கொண்டு குருவின் எதிரே நின்றான்.

குரு அவனைப் பார்த்து பொய்யாகச் சிரித்தான். அவன் கையிலிருந்த டீயையும் பீடியையும் தனக்குச் சொந்தமான ஒன்று - இதனை யாசிக்கத் தேவையில்லை - என்ற உரிமை உணர்ச்சியோடு முதன் முறையாய்ப் பார்த்தான். அதனை வாங்கிக் கொள்வதில் அவன் அவசரம் காட்டாமல் இருந்தான். தான் சீடனை ஏமாற்றுவதாக எண்ணிக்கொண்டு சாமர்த்தியமாக நடந்து கொள்வதற்காக அவன் பீடிகையாகச் சொன்னான்:

" என்னை நீ கண்டுபிடிச்சுட்டே. நீ உண்மையான சிஷ்யன்தான். என்னை நீ இன்னிக்குத்தான் கண்டுபிடிச்சே. ஆனால், நான் உன்னை ரொம்ப நாளாப் பார்த்துக்கினே இருக்கேன். நான் உன்னைக் கொஞ்சம் கேள்விங்கள்ளாம் கேப்பேன். அதுக்கெல்லாம் நீ பதில் சொல்லணும். அதுக்கோசரம் எனக்கு ஒண்ணும் தெரியாதுன்னு நினைச்சுக்காதே. எனக்கு எல்லாம் தெரியும் ! தெரிஞ்சாலும் சிலதெல்லாம் கேட்டுத்தான் தெரிஞ்சுக்கணும். "

இந்த வார்த்தைகளைக் கேட்டு இரண்டு கையிலும் டீயையும் பீடியையும் ஏந்தி இருந்த சீடன் அவனைக் கரங்கூப்பி வணங்க முடியாமல் பார்வையாலும் முகபாவத்தாலும் தன் பணிவைக் காட்டினான்.

" நீ யாரு ? எந்த ஊரு ? பேரு என்ன? நீ எங்கே வந்தே? நான்தான் குருன்னு உனக்கு எப்படி தெரிஞ்சது ? ... டீ ஆறிப் போச்சில்லே ? குடு " என்று டீயை வாங்கிக் குடித்துக் கொண்டே சீடன் சொல்கிற பதிலை மெத்தனமாகத் தலையை ஆட்டியவாறே கேட்டான்.

" குருவே... நான் ஒரு அனாதை. அதோ இருக்கிறதே முருகன் கோயில், அங்கே ஒரு மடப்பள்ளி இருக்குது. அங்கே தண்ணி எறைச்சுக் கொண்டு வர்ற வேலை. மடப்பள்ளியிலே இருக்கிற ஐயிரு மூணு வேளையும் சாப்பாடு போட்டுச் செலவுக்கு நாலணா தினம் குடுக்கிறாரு. எனக்கு வாழ்க்கை வெறுத்துப் போச்சு. இந்த வாழ்க்கைக்கு அர்த்தமில்லேன்னு தெரிஞ்சும் உடம்பைச் சுமந்துகிட்டுத் திரியற சுமையைத் தாங்க முடியலே.. துன்பத்துக்கெல்லாம் பற்று தான் காரணம்னு எல்லாரும் சொல்றாங்க. எனக்கு ஒரு விதப் பற்றும் இல்லே... ஆனாலும் நான் துன்பப்படறேன்... என்ன வழியிலே மீட்சின்னு எனக்குத் தெரியலே... நேத்து என் கனவிலே நீங்க பிரசன்னமாகி, ' இந்தச் சத்திரந்தான் குருபீடம், அங்கே வா ' ன்னு எனக்குக் கட்டளை இட்டீங்க குருவே ! நீங்க இதெல்லாம் கேட்கிறதனாலே சொல்றேன். தாங்கள் அறியாததா ? விடியற்காலையிலேருந்து சந்நிதானத்திலே காத்துக்கிட்டிருந்தேன். என் பாக்கியம் தங்கள் கடாட்சம் கிட்டியது.... "

" ம்...ம்... " என்று மீசையை நெருடிக்கொண்டே அவன் கூறுவதைக் கேட்ட குரு, காலியான தம்ளரை அவனிடம் நீட்டினான்.

www.t.me/tamilbooksworld

சீடன் டீக்கடையில் காலித் தம்ளரைக் கொடுக்கப் போனான். கடவுள் இந்தப் பயலை நன்றாகச் சோதிக்கிறார் என்று நினைத்து அவனுக்காக அனுதாபப்பட்டுச் சிரித்தான் குரு. " ம்.. அதனால் நமக்கென்ன ? நமக்கு ஒரு சிஷ்யன் கிடைத்திருக்கிறான் " என்று திருப்திப்பட்டுக் கொண்டான்.

சீடன் வந்தபிறகு அவன் பெயரைக் கேட்டான் குரு. அவன் பதில் சொல்வதற்குள் தனக்குத் தெரிந்த பல பெயர்களைக் கற்பனை செய்த குரு திடீரெனச் சிரித்தான். இவன் கூறுமுன் இவனது பெயரைத்தான் சொல்ல முடிந்தால் இந்த நாடகத்தில் அது எவ்வளவு அற்புதமான லீலையாக அமையும் என்று நினைத்தே அவன் சிரித்தான். அந்தச் சிரிப்பினால் சீடன் பதில் சொல்லச் சற்றுத் தயங்கி நின்றான்.

அப்போது குருசொன்னான்: " பேரு என்னான்னு ஒரு கேள்வி கேட்டா - ஒவ்வொருத்தனும் ஒவ்வொரு பதில் சொல்றான் பாத்தியா ? ஒரு கேள்விக்கு எம்மாம் பதில் ! " என்று ஏதோ தத்துவ விசாரம் செய்கிற மாதிரிப் பிதற்றினான். சீடன் அதைக் கேட்டு மகா ஞானவாசகம் மாதிரி வியந்தான்.

" சரி, உன் பேரு என்னான்னு நீ சொல்ல வேண்டாம். நான் குரு. நீ சிஷ்யன் ... எனக்குப் பேரு குரு; உனக்குப் பேரு ச ஷ்யன். நீதான் என்னை ' குருவே குருவே ' ன்னு கூப்பிட ஆரம்பிச்சுட்டே.... நானும் உன்னை ' சிஷ்யா சிஷ்யா ' ன்னு கூப்பிடறேன்... என்னா ? சரிதானா ? ..." என்று பேசிக்கொண்டே இருந்தான் குரு.

"எல்லாமே ஒரு பெயர்தானா?" என்று அந்தப் பேச்சிலும் எதையோ புரிந்துகொண்ட சீடனின் விழிகள் பளபளத்தன.

"நான் என்ன இப்படியெல்லாம் பேசுகிறேன்..." என்று குரு தன்னையே எண்ணித் திடீரென வியந்தான். இப்படியே அவர்கள் பேசிக்கொண்டிருந்தனர்.

மத்தியானமும் இரவும் அந்தச் சீடன் மடப்பள்ளியிலிருந்து தனக்குக் கிடைக்கிற புளியோதிரை, சர்க்கரைப் பொங்கல் ஆகியவற்றைப் பயபக்தியுடனும் அன்போடும் கொண்டுவந்து இந்தக் குருவுக்குப் படைத்தான். அவ்வளவு ருசியும் மணமும் புனிதமும் அன்பும் உபசரணையும் உடைய அமிர்தத்தை இவன் ஜென்மத்தில் ருசி பார்த்ததில்லை. ஆவல் மிகுதியால் தனது நடிப்பைக்கூட மறந்து அவற்றை அள்ளி அள்ளி இவன் உண்பதை அன்பு கனியப் பார்த்துக் கொண்டிருந்தான் சீடன்.

குருவுக்கு எதனாலோ கண்கள் கலங்கின. சீடன் தண்ணீரை எடுத்துக் கொடுத்தான்.

மறுநாள் காலை அதே மாதிரி திண்ணைக்குக் கீழே வந்து காத்து நின்றிருந்தான் சீடன். அவனுக்கு டீயும் பீடியும் வாங்கி வந்தான். குருவை அழைத்துக்கொண்டு ஆற்றங்கரைக்குப் போய் அவனது ஆடைகளைத் துவைத்துக் கொடுத்தான். அவனைக் குளிக்க வைத்து அழைத்து வந்தான்.

உச்சியில் வெயில் வருகிற வரை - குருவுக்குப் பசி எடுக்கும்வரை - அவர்கள் ஆற்றில் நீந்திக் குளித்தார்கள்.

"குளிக்கிறது சொகமாகத்தான் இருக்கு. ஆனா, குளிச்சி என்னா பிரயோசனம்... குளிக்க குளிக்க அழுக்கு சேந்துக்கிட்டுத்தானே இருக்கு?... அது அப்படித்தான். பசிக்குது... திங்கறோம்... அப்புறமும் பசிக்கத்தானே

www.t.me/tamilbooksworld

செய்யிது... குளிக்க குளிக்க அளுக்காகும். அளுக்கு ஆக ஆகக் குளிக்கணும். பசிக்கப் பசிக்கத் திங்கணும்... திங்கத் திங்கப் பசிக்கும்... என்ன வேடிக்கை!" என்று சொல்லிவிட்டு குரு சிரித்தான். சிரித்துக் கொண்டே இருக்கும் போது "என்ன இது, நான் இப்படியெல்லாம் பேசுகறேன்" என்று எண்ணிப் பயந்துபோய்ச் சட்டென நிறுத்திக் கொண்டான்.

சீடன் கை கட்டிக்கொண்டு இவன் சொல்வதைக் கேட்டான்.

ஃஃஃ ஃஃஃ ஃஃஃ ஃஃஃ

அன்றும் அதற்கு மறுதினமும் அதன் பிறகு ஒவ்வொரு நாளும் இதே மாதிரி காலையில் டீயும் பீடியும் வாங்கித் தந்து, குளிப்பாட்டி, மத்தியானம் உணவு படைத்து, அவனைத் தனிமையில் விடாமலும், அவன் தெருவில் அலையாமலும் இந்தச் சீடன் எப்போதும் அவன் கூடவே இருந்தான்.

அவன் பேசுகிற எல்லா வார்த்தைகளிலும் அவனே புதிதாகப் புரிந்து கொள்ளுகிற மாதிரி பலவிதமான அர்த்தங்கள் கண்டு இந்தச் சீடன் புளகாங்கிதம் அடைவதைச் சந்தைக்கு வருகிற சிலர் சத்திரத்துத் திண்ணையில் ஓய்வுக்காகத் தங்கி இளைப்பாறும்போது வேடிக்கை பார்த்தார்கள்.

சிலர் குருவை அடையாளம் கண்டு கொண்டு இவன் யாரோ ஒரு சித்தன் என்று அப்போதே நினைத்ததாகவும், அப்படிப்பட்டவர்கள் இப்படியெல்லாம் கந்தலுடுத்தி, அழுக்கு சுமந்து, எச்சில் பொறுக்கித் திரிவார்கள் என்றும் தன்னைப் பற்றி இவனுக்குத் தெரியாத ஒன்றைத் தெரிவித்தார்கள். அதைத் தெரிந்து கொள்வதற்கே ஒருவருக்குப் பக்குவம் வேண்டுமென்றும், அந்தப் பக்குவம் இந்தச் சீடனுக்கு இருப்பதாகவும் கூறிச் சீடனைப் புகழ்ந்தார்கள்.

அதில் சிலர், இப்படியெல்லாம் தெரியாமல் இந்தச் சித்த புருஷனை ஏசி விரட்டியடித்ததற்காக இப்போது பயமடைந்து இவனிடம் மானசீகமாவும், கீழே விழுந்து பணிந்தும் மன்னிப்பு வேண்டினார்கள்.

இந்த ஒரு சீடனைத் தவிர குருவுக்குப் பக்தர்கள் நாள்தோறும் பெருக ஆரம்பித்தார்கள். சந்தைக்கு வருகிற வியாபாரிகளும் மற்றவர்களும் இவனை வேடிக்கை பார்த்து நின்றுவிட்டு இவனுக்கு டீயும், பீடியும், பழங்களும் வாங்கித் தந்தார்கள்.

இவன் அவற்றைச் சாப்பிடுகிற அழகையும், தோலை வீசி எறிகிற லாவகத்தையும், பீடி குடிக்கிற ஒய்யாரத்தையும், விழி திறந்து பார்க்கிற கொலத்தையும், விழி மூடிப் பாராமலிருக்கிற பாவத்தையும், அவர்கள் புகழ்ந்தும் வியந்தும் பேசினார்கள்.

குருவுக்கு முதலில் இது வசதியாகவும், சந்தோஷமாகவும், பின்னர் ஒன்றும் புரியாமலும் புதிராகவும் இருந்து, கொஞ்ச நாட்களில் எல்லாம் புரியவும் புதிர்கள் விடுபடவும் தொடங்கின.

ஒரு நாள் இரவு குருவுக்குத் தூக்கம் வரவில்லை. அவன் எது எது பற்றியோ யோசித்துக் கொண்டிருந்தான். அதாவது, அந்தச் சிஷ்யனோடு பேசுகிற மாதிரித் தனக்குள்ளே பேசிக்கொண்டிருந்தான்.

அவன் நட்சத்திரங்களைப் பற்றியும், தான் இந்த உலகத்தில் வருவதற்கு

www.t.me/tamilbooksworld

முன்னால் இருந்த காலத்தைப் பற்றியும், மரணத்தைப் பற்றியும், தனக்குப் பின்னால் உள்ள காலங்களைப் பற்றியும் எந்த முடிவிலும் மனம் நிற்க முடியாத விஷயங்களைப் பற்றியெல்லாம் யோசித்தான்.

அவன் தூங்காமலே கனவு மாதிரி ஏதோ ஒன்று கண்டான். அதில் தன் குரலோ, சீடனின் குரலோ அல்லது சந்தையில் திரிகிற இவனை வணங்கிச் செல்கிற யாருடைய குரலோ மிகவும் தெளிவாகப் பேசியதைக் கேட்டான்.

"உனக்கு சிஷ்யனாக வந்திருக்கிறானே, அவன்தான் உண்மையிலே குரு... சிஷ்யனாக வந்து உனக்குக் கற்றுத் தந்திருக்கிறான்... அப்போதுதான் நீ வசப்படுவாய் என்று தெரிந்து சிஷ்யனாய் வந்திருக்கிறான். எந்தப் பீடத்திலே இருந்தால் என்ன? எவன் கற்றுத் தருகிறானோ அவன் குரு. கற்றுக் கொள்கிறவன் சீடன். பரமசிவனின் மடி மீது உட்கார்ந்துகொண்டு முருகன் அவனுக்குக் கற்றுத் தரவில்லையா? அங்கே சீடனின் மடியே குருபீடம். அவனை வணங்கு..."

பறவைகள் பாடிச் சிறகடித்துப் பறந்து சந்தைத் திடலின் மரச் செறிவில் குதூகலிக்கிற காலைப்பொழுது புலர்கிற நேரத்தில் அதே மாதிரியான குதூகலத்துடன் கண் விழித்தெழுந்த குரு, சீடனை வணங்குவதற்காகக் காத்திருந்தான். மானஸீகமாய் வணங்கினான். அவன் வந்தவுடன் சாஷ்டாங்கமாய் அவன் பாதங்களில் தான் விழப்போவதை எண்ணி மெய்சிலிர்த்தான்.

ஆனால், அந்தச் சிஷ்யன் வரவே இல்லை. இந்தக் குரு அந்த மடப்பள்ளிக்கு - தன்னை ரசவாதம் செய்து மாற்றிவிட்ட சீடனைத் தேடி ஓடினான்.

மடப்பள்ளியில் உள்ளவர்கள் இவனை வணங்கி வரவேற்று உட்காரவைத்து உபசரித்தார்கள்.

குருவுக்கு அப்போது சீடனின் பெயர் தெரியாத குழப்பத்தால் என்னவென்று கேட்பது என்று புரியாமல் "என் சிஷ்யன் எங்கே?" என்று விசாரித்தான்.

அவர்கள் விழித்தார்கள். குரு அடையாளம் சொன்னான். கடைசியில் அவர்கள் ரொம்ப அலட்சியமாக "அவன் நேற்றே எங்கோ போய்விட்டானே" என்றார்கள்.

"அவன்தான் நமக்கெல்லாம் குரு!" என்றான் குரு.

"அப்படியா!" என்று அவர்கள் ஆச்சரியம் கொண்டனர்.

அதுபற்றி அவனது வேதாந்தமான விளக்கத்தை, அவர்கள் எதிர்பார்த்து நின்றனர். ஆனால், இவன் ஒன்றும் பேசவில்லை. அதன் பிறகு, ஒன்றுமே பேசவில்லை. எழுந்து நடந்தான்.

சந்தைத் திடலிலும் ஊரின் தெருக்களிலும் சீடனாகி வந்த அந்த குருவைத் தேடித் திரிந்தான் இவன். சீடனைக் காணோம். இவன் சிரித்தான். தேடுவதை விட்டு விட்டான்.

இப்போதெல்லாம் சந்தைத் திடலில் அழுக்கும் கந்தையும் உடுத்தி ஒவ்வொருவரிலும் எதையோ தேடுவது மாதிரியான கூர்த்த பார்வையுடன் இவன் திரிந்து கொண்டிருக்கிறான். இவனை யாரும் விரட்டுவதில்லை. குழந்தைகள் இவனைப் பார்த்துச் சிரித்து விளையாடுகின்றன. பெண்களும்

www.t.me/tamilbooksworld

ஆண்களும் இவனை வணங்கி இவனுக்கு எதையாவது வாங்கித் தந்து அன்புடன் உபசரிக்கிறார்கள்.

அந்தச் சீடனிடம் என்ன கற்றானோ அதனை இவன் எல்லாரிடத்தும் எல்லாவற்றிலும் காண்கிற மாதிரி நிறைவோடு சிரித்துச் சிரித்துத் திரிந்து கொண்டிருக்கிறான்.

(எழுதப்பட்ட காலம்: 1970)

நன்றி: குருபீடம் (சிறுகதைத் தொகுப்பு), ஜெயகாந்தன் - ஏழாம் பதிப்பு: 1995 - மீனாட்சி புத்தக நிலையம், மதுரை - 1
----------
*உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப*

## 22. டீக்கடைச் சாமியாரும் டிராக்டர் சாமியாரும்

வேதகிரி முதலியார் தபால் பார்த்து வருவதற்காக பஸ்ஸை எதிர்நோக்கிப் போகிறார். காலை வெயில் சுரீர் என்று அடிக்கிறது. வீதியில் ஒரு நிழல் இல்லை. இன்னும் கொஞ்ச நாழியில் தெரு மண் பழுக்கிற மாதிரி காய ஆரம்பித்துவிடும். இது ஒன்றும் கோடை இல்லை. என்றாலும் அப்படி ஒரு வெயில். தெருவில் ஒரு பக்கம் மட்டும் ஓர் ஆள் ஒண்டி நடக்கிற அகலத்துக்கு நிழல். சில உயரமான வீடுகளின் ஓரத்தில் கொஞ்சம் நின்று இன்னொருவரோடு பேசுவதற்கு ஏற்ற அகலமான நிழல். சில வீட்டின் முன்னால் எச்சில் இலை கிடக்கிறது. தெருவில் நடமாட்டமே இல்லை. பகலிலேயே இந்த அமைதி. தூரத்தில் செக்கு ஆடுகிற சத்தம் 'ஙொய்' யென்று ரீங்காரம் செய்தாலும் கிராமத்து அமைதிக்கு அது சுருதியே தவிர பங்கம் இல்லை. அதே மாதிரி குடியானத் தெருவில் 'மாக்கு மாக்' கென்று நெல்லோ மாவோ இடிக்கிற சத்தம் பூமி அதிர்கிற மாதிரிக் கேட்கிறது.

அதிலும் அமைதி கெடவில்லை. எதிரே ஆள் வராவிட்டாலும் இந்த நிழலில் போட்டிக்கு ஒரு நாய் வருகிறது. சாதாரண கிராமத்து நாட்டு நாய்தான். ஊர் வழக்கப்படி அதைச் சொன்னால் இப்போதெல்லாம் சண்டைக்கு வந்துவிடுகிறார்கள். 'பறை, பள்ளு' என்கிற வார்த்தைகள் மனசால் கூடத் தீண்டப்படாததாக மாறிவிட்ட பிறகு நாயைக்கூட அப்படிப் பட்டம் கட்டி அழைக்க முடிவதில்லை. ஆனால் இது சரியான ஹரிஜனப் பகுதி நாய்தான். நிழலை மறித்துக்கொண்டு அது நிற்கிறது. அது நிச்சயம் வழிவிட்டு விலகாது. விலகப் போவதில்லை என்கிற தீர்மானம் அதன் திடீரென உயர்ந்த காதுகளிலும் 'உம்'மென்று வயிற்றுக்குள் அடங்கி ஒலிக்கும் பொருமலிலும் தெரிகிறது. காரணம், நடுவில் இலை கிடப்பதுதான்.

அப்போதுதான் நினைத்தார் வேதகிரி முதலியார்: பொறப்படும் போதே அந்தக் கெழம் - அம்மாதான் - சொல்லிச்சு, 'குடையை எடுத்துக்கிட்டுப் போடா, வெயில் கொளுத்துது'ன்னு...

பட்டணத்திலிருந்து கிராமத்துக்கு வந்திருக்கும் இந்த மூன்று மாத காலமாக வேதகிரி முதலியார் வெளியே போவதற்குப் புறப்படுகிற போதெல்லாம் அவரது தாயார் செல்லத்தம்மாள் குடை எடுத்துச் செல்லுமாறும் வெயிலின் கொடுமை குறித்தும் ஒரு பாட்டுப் பாடாமலிருப்பதே இல்லை. சில சமயங்களில் அவளே கொண்டு வந்து அவரிடம் கொடுப்பாள். இருப்பத்தஞ்சு

வருஷத்துக்கு முன்பு திருக்கோவிலூருக்கு திருவிழாவுக்குப் போனபோது ஆறு ரூபாய்க்குத் தான் அந்தக் குடையை வாங்கினதையும், அதற்குப் பிறகு ஐந்து வருஷத்துக்கு முன்னால் ஒரு கம்பியும் புதிசாக மேலே வெள்ளைத் துணியும் போட்டுத் தைப்பதற்குத் தான் மூணு ரூபாய் செலவழித்ததையும் குறைந்தது ஒரு பத்துத் தடவையாவது இதுவரை சொல்லி இருப்பாள்.

சரி, நாய்க்குப் பயந்து எத்தனை நாழி இப்படியே நிற்பது? ஒன்று இவர் வெயிலைப் பொருட்படுத்தாமல் ஒதுங்கிப் போக வேண்டும், அல்லது அதை விரட்டி விட்டு இவர் தன் வழியே தொடர்ந்து நடக்க வேண்டும். இரண்டையும் செய்யாமல் இவர் நின்றிருந்தால் அதுவும் நின்றிருக்குமா என்ன? அதுவோ நாய், அதுவும் காய்ந்து வரண்ட சேரி நாய். எதிரே இலை, இவர் விரட்டமாட்டார், தயங்குகிறார், பயப்படுகிறார் - என்று தெரிந்ததும் அது இவரை விரட்டுகிற தோரணையில் கொஞ்சம் குரலெடுத்து லேசாகப் பற்களை வெளிக்காட்டி 'உர்'ரென்கிறது.

வேதகிரி முதலியாருக்கு நிஜமாகவே உதறல். மிகுந்த மரியாதையோடு பத்து அடி நிழலிருந்து விலகி வீதியின் நடுவே வெயிலில் வந்து அரைவட்டமாக ஒதுங்கி நாயைக் கடந்து மீண்டும் நிழலில் ஏறி நடந்தார். தான் நாய்க்குப் பயந்து இப்படி வந்ததை யாரும் பார்த்திருப்பார்களோ என்று திரும்பிப் பார்த்தார். ம்ஹீம் யாருமில்லை. அந்த நாய்கூடப் பார்க்கவில்லை. பார்த்தால் என்ன? 'பட்டணத்துக்காரன் நாயைக் கண்டு பயப்படறான்' என்று பரிகாசம் பண்ணுவார்களே என்கிற பயம் வேதகிரி முதலியாருக்கு.

அதிலும் அந்த சுப்பராம ஐயர் இருக்கிறாரே, சமயத்தில் அவர் பண்ணுகிற பரிகாசத்தில் முதலியாருக்குக் கோபம் கூட வந்துவிடுகிறது. கோபத்தைக் காட்டிக் கொண்டால் இன்னும் மானக்கேடாகப் போகும். அவரோடு சேர்ந்து கொண்டு முதலியாரின் தாயாரும் சிரிக்கிறாள்.

யோசித்துப் பார்த்தால் கிராமத்து மனிதர்கள் பார்த்துச் சிரிக்கிற மாதிரிதான் இருக்கிறது பட்டணத்துப் பழக்கங்கள் என்று முதலியாரின் மனசுக்குப் புரிகிறது. இருந்தாலும், பழக்கம் எளிதில் போகிறதா?

கிராமத்துக்கு வந்து இந்த மூன்று மாதமாக முதலியார் சட்டையே போடவில்லை. அவருடைய 'புஷ்' ஷர்ட்டுகளும், ஸ்லாக்குகளும் கிராமத்துப் பெரிய மனிதர்கள் - கொஞ்சம் மரியாதையை எதிர்பார்க்கிற வயதுடையவர்கள் - போடுகிற பாஷனாக இல்லை. அதுமட்டுமில்லாமல் ஷர்ட் போட வேண்டிய அவசியமும் அவருக்கு இங்கே நேரவில்லை.

காலையில் எழுந்து குளத்திலோ, கிணற்றடியிலோ குளிக்கிற போது, இவர் பிரஷால் பல் விளக்குவதையேப் பக்கத்து வீட்டு வேலியோரமாய் நின்று குழந்தைகள் வேடிக்கை பார்க்கிறார்கள். அந்த ஒரு பழக்கத்தை மட்டும் இவரால் விட முடியவில்லை. ஒருநாள் பல்பொடி போட்டு விரலால் தேய்த்து ஏற்பட்ட கொப்புளம் ஆறித் தோல் உறிந்த வடு இப்போதும் தெரிகிறது. வெட்கக்கேட்டை எங்கே போய்ச் சொல்வது?

வந்த நாளிலிருந்து ஒவ்வொரு நாளும் பட்டணத்திலிருந்து அவர் வருகையைக் கோரி வரும் தனது மகனின் கடிதத்துக்காகத்தான் தினசரி வீட்டிலிருந்து ஒரு மைல் தூரத்தில் கிராமத்துக்கு வடக்கே உள்ள டிரங்க்ரோடு வரை நடந்து வந்து காத்திருக்கிறார் முதலியார். அங்கே தான் பஸ் வரும். ஒரு டீக்கடை இருக்கிறது. பெரிய திண்ணை. பஸ்ஸில் தபாலும் பத்திரிகையும் வரும்.

www.t.me/tamilbooksworld

நாள்தோறும் முதலியாருக்கு ஆங்கிலத் தினசரியும் மகனிடமிருந்து ஒரு கடிதமும் வரும்.

அவருக்கு தினசரி கடிதம் வருவதை டீக்கடைச் சாமியாரும், தபால் ரங்கசாமியும் கேலியாகப் புகழ்வார்கள். நல்லவேளை, கடிதம் ஆங்கிலத்தில் எழுதப்படுவதால் இவர் இங்கே வந்து சிக்கிக் கொண்டிருப்பதற்கான ரகசியம் இன்றுவரை அவர்கள் அறியாமல் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. இல்லாவிட்டால் இன்னொருவருக்கு வருகிற கடிதமாயிற்றே அதை நாம் படிக்கலாகாது, 'என்ன எழுதியிருக்கிறது கடிதத்தில்?' என்று அநாவசியமாக துளைக்கக் கூடாது என்கிற 'பட்டணத்து மிதப்பு' எல்லாம் இவர்களுக்குத் தெரியாது.

ஒவ்வொரு நாளும் ஏதாவது கற்பனையான சமாசாரங்களைக் கடிதத்திலிருந்து 'மொழி பெயர்த்து' அவர்களை ஏமாற்றுவதற்குள் முதலியாருக்குப் போதும் போதும் என்றாகிவிடும்.

அவரும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். 'ஒண்ணும் முக்கியமான சமாசாரம் இல்லீங்க. நான் வரும்போது பையன்கிட்டே சொல்லிட்டு வந்தேன், தினம் எனக்கு ஒரு கடுதாசி எழுதிப் போட்டுக்கிட்டு இருன்னு. அதான் வேற ஒண்ணும் இல்லீங்க."

ஆனால், அவர்கள் இவரை அவ்வளவு சுளுவில் விடுவதில்லை. "இருக்கட்டும் முதலியாரே - முக்கியமான விஷயமா இருந்துதான் தெரிஞ்சி நாங்க என்ன செய்யப் போகிறோம். என்ன தான் எழுதி இருக்குதுன்னு சொல்லுங்க."

அதிலும் டீக்கடைச் சாமியார் இருக்கிறாரே - அவர் தான் மட்டுமில்லாமல் போகிற வருகிற ஆட்களையெல்லாம் கூப்பிட்டுக் கூட்டமும் சேர்த்துக் கொள்ளுவார். சாமியார் தஞ்சாவூர்ப் பக்கம். அவர் பேசுவதே பரிகாசம் போல் இருக்கும். "ஏலே, நின்னு கேட்டுட்டுப் போலே... பட்டணத்துச் சமாசாரம்... நீங்க படிங்க மொதலியாரே... அவுங்க அப்படித்தான்... பேசிக்கிறதே இங்கிலீசுதான்... ஏங்க - தம்பி பி.ஏ. வா? எம்.ஏ. வா?"

அப்போது மட்டும் வேதகிரி முதலியாருக்கு ஏகப் பெருமையா இருக்கும்.

"பி.ஏ.!" என்பார்.

சாமியார் குரலை அடக்கிக் கேட்பார்:

"மொதலியாரே எது பெரிசு? எம்.ஏ. வா? பி.ஏ. வா?"

"பெரிசு என்ன, பெரிசு! எல்லாம் ஒரு கழுதைதான். வேலை கெடச்சா மதிப்பு, இந்த படிப்புக்கு... நான் அந்தக் காலத்து இன்டர்தான். இப்ப பி.ஏ. படிச்சுட்டு எத்தினி பேர் நம்மகிட்ட கிளார்க்காயிருக்கான்! அதுகூடக் கிடைக்காமல் பாவம், எத்தினி புள்ளைங்க கண்டக்டர் வேலை செய்யுதுங்க..." என்பார் முதலியார்.

"மொதலியாருக்குப் பட்டணத்திலே என்னாங்க உத்தியோகம்?"

"ஒரு வெள்ளைக்கார கம்பெனியிலே மானேஜர் உத்தியோகம்."

"இப்பவும் வெள்ளைக்காரங்க இருக்கிறாங்களா?"

www.t.me/tamilbooksworld

"கம்பெனிங்க இருக்குது."

"என்னா சம்பளங்க?"

இதெல்லாம் கேட்பது நாகரிகக் குறைச்சல் என்று அவர்களுக்குத் தெரியாது. டீக்கடைச் சாமியாருக்குக் கொஞ்சம்கூடத் தெரியாது.

"எல்லாம் சேத்து ஆயிரத்து இருநூறு ரூபா..."

"அடி சக்கைன்னானாம்" என்று சாமியார் நாக்கைக் கடித்துத் துள்ளிக் குதிப்பார்.

அதன் பிறகு, முதலியார் இல்லாத சமயத்திலும் மற்றவர்களிடமும் பெருமையாகச் சொல்லுவார்: "இங்க வந்து நம்ம கடைத் திண்ணையிலே உக்காந்து டீ குடிச்சிட்டு பேப்பர் படிச்சிக்கிட்டு இருந்தாரே, மொதலியாரு... சாதாரண ஆளுன்னு நெனச்சிக்காதே; பட்டணத்திலே பெரிய ஆபிசரு. பங்களா என்னா, காரு என்னா... பையன்களும் அதே மாதிரிப் பெரிய பெரிய படிப்புப் படிச்சவங்க. வீடே வெள்ளைக்காரங்க பாஷன்லேதான். சும்மா - சொந்த கிராமங்கிற பாசம் - இப்படி வந்து சொக்காக்கூட போட்டுக்காம நம்ம டீக்கடையிலே உக்காந்து இருக்கறதிலே ஒரு சந்தோஷம் மொதலியாருக்கு. அவருக்கு எம்மாம் சம்பளம் தெரியுமா? சொல்லேன் பாப்பம்" என்று தாடியை நிமிண்டிக் கொள்வார்.

"ஐந்நூறு ரூபா இருக்குங்குளா - சாமி?" என்று பெருந்தொகையாகக் கேட்பான் ஒருவன்.

சாமியார் 'ஓ'வென்று சிரித்து அவனை முட்டாளாக்குவார்! "அடபோடா, அறிவு கெட்ட இவனே... ஆயிரம் ரூபாடா... ஆயிரம் ரூபா மாசம் மாசம் - கால் காணி நெலம் வாங்கலாம். என்னலே, வாயைப் பொளக்கறே; ஆயிர ரூபா பார்த்திருக்கியா, நீ? கலப்பெதான் பாத்திருப்பே. கலப்பே!" என்று சம்பந்தமில்லாமல் யாரையாவது சாக்கு வைத்துத் தன்னைத்தானே திட்டிக் கொள்வார் சாமியார்.

"உத்தியோகத்துக்கும் சம்பாதனைக்கும்தான் சாமியார் கிட்டேகூட மதிப்புபோல இருக்கு" என்பார் முதலியார்.

"பின்ன என்னங்க? இந்த சாமியார் பொழப்பு ஒரு பொழப்பா? உத்தியோகம் சம்பாதனை எதுவுமில்லாததனாலேதான் ஊருக்குக் கெவுருவமா இந்தத் தாடி, நம்ம மூஞ்சியெக் காப்பாத்துது. தாடி வெச்சவனுக்கு உங்க பட்டணக் கரையிலே பிச்சைக்காரன்னு பேரு. இங்கே சாமியாருன்னு பேரு. வவுறுன்னு ஒண்ணு இருக்குதுங்குளே. சாமியார்னு பேரு வெச்சிக்கினு காட்டுக்கா பூட்டோ ம்? நமக்கும் அஸ்கா போட்ட டீ வேணும்னுதே! டீ சாப்பிடுங்க" என்று பேசிக்கொண்டே கண்ணாடி கிளாஸ்களில் டீயை ஊற்றி எல்லோருக்கும் தந்து - முதலியாருக்கு மட்டும் 'தகதக'வென்று விளக்கிய வட்டா செட்டில் டீ கொண்டு வந்து வைப்பார்.

"ஆமா, மொதலியாரே, ஆயிரமும் இரண்டாயிரமுமா சம்பாதிச்சுக்கிட்டு மகன் நீங்க இருக்கிறீங்க... வயசான காலத்திலே உங்கள் தாயார் மட்டும் ஏன் இங்கே கெடந்து அவதிப்படணும்? இப்ப பாத்துக்கற சுப்பராம ஐயரு - அப்ப மட்டும் வெவசாயத்தைப் பாத்துக்க மாட்டாரா?" - இதுமாதிரி சில நாட்களுக்கு முன் சாமியார் ஏதோ சொல்லும் போது பக்கத்தில் நின்றிருந்த சுப்பராம ஐயர் திடீர்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்.

"ஓய் சாமியாரே! நான் மட்டும் எவ்வளவு நாளைக்கு ஐயா காட்டையும் மேட்டையும் கட்டிண்டு நிப்பேன். என் பையன், அவளையும் அழைச்சுண்டு டில்லிக்கே வந்துடச் சொல்லி ஒவ்வொரு தடவையும் எழுதறான். நம்ப கோரை வாய்க்கால் கரை நஞ்சைக்கும் - நல்லாந்தோப்புக்கும் யாராவது நல்ல விலை குடுத்தா நாளை ரயிலுக்கே ஏறிடுவேன்... நீர்தான் பாருமே - இருபதினாயிர ரூபா - ஜாடா எல்லா அய்ட்டத்தையும் இப்பவே குடுத்துடறேன்."

"இந்தாங்க ஐயரே, யாரும் ஆளு இல்லேன்னு நீங்க பாட்டுக்குப் பேசிக்கிட்டே போறீங்களே... நானே இருபதினாயிரத்துக்கு உங்க சொத்துக்களையும் வாங்கிட்டுப் பேசாம கிராமத்திலேயே 'டிக்கானா' போட்டாலும் போட்டுடுவேன்..." என்று சொல்லி வைத்தார் முதலியார்.

"நான் இப்பவே ரெடி! சாமியாரே நீர் சாட்சி" என்று கையடித்துச் சொன்னார் சுப்புராம ஐயர்.

"என்னாங்க மொதலியாரே... எதாவது நடக்கிற காரியமா பேசுங்க. ஐயரு வேற யாருக்காவது தன் நிலத்தைக் குடுத்துட்டுப் போனாவே, உங்க நிலத்தெப் பாத்துக்க ஆள் வேணும்... இந்த லெச்சணத்திலே அவுரோட நிலத்தெயும் நீங்களே வாங்கிக்கினு ஆயிரரூபா உத்தியோகத்தையும் உட்டுட்டு இந்தக் கிராமத்திலே நெரந்தரமா நீங்க இருக்கப் போறீங்களாக்கும்?" என்று சிரித்தார் சாமியார்.

தான் கிராமத்துக்கு வந்து இந்த மூன்று மாதமாய் அடைந்து கிடக்கிற ரகசியம் தெரியாத சாமியாரை நினைத்து முதலியார் சிரித்துக் கொண்டார்.

விஷயத்தை சொன்னால் சாமியார் மூச்சடைத்துச் செத்துப் போகமாட்டாரோ?

வேதகிரி முதலியாருக்கு வேலை போய்விட்டது. இப்போது உத்தியோகம் இல்லை. ஆறு மாசமாயிற்று. மேலிடத்தில் என்னமோ காரணம் கூறித் திடீரென இவருக்குச் சேரவேண்டிய தொகை இருபதினாயிரம் ரூபாயைக் கையிலே கொடுத்து வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள்.

முதலில் இந்தச் செய்தியை முதலியார் தன் மனைவியின் காதில் மட்டும் தான் போட்டு வைத்தார். அவள் அப்படியே இடிந்து போனாள். பிறகுதான் முதலியாருக்கு அவள் சமாதானம் கூறினாள்.

"இப்ப என்ன கெட்டுப் போச்சு! விடுங்க. இதுவே பத்து வருஷத்துக்கு முன்னேன்னா ரொம்ப கஷ்டப்பட்டுப் போயிருப்போம். இப்பதான் பெரியவனும் சம்பாதிக்கிறான். பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணியாச்சு. சின்னவங்க ரெண்டு பேருக்கும் இந்த வருஷம் காலேஜ் படிப்பைப் பல்லைக் கடிச்சிக்கிட்டு முடிச்சுட்டோ ம்னா நம்ப கவலை விட்டது..." என்று எவ்வளவோ கூறினாள் அவர் மனைவி மங்களம்.

"எத்தனை பிள்ளைகள் சம்பாதிச்சாலும் அவனவன் சம்பாதிக்கிற வரைக்கும் தான் அவனுக்கும் அவன் பெண்டாட்டிக்கும் மதிப்பு இருக்கும்" என்று அவர் மனமொடிந்து போனார்.

தனக்கு வேலை போய்விட்ட செய்தியையும் அதனால் ஏற்பட்ட

வருத்தத்தையும் அவர் மனைவியிடம் மட்டும் ஒரு ரகசியம் போல் சொல்லி வைத்திருந்தார்.

ஆனாலும் மறுநாளிலிருந்து முதலியாரைப் போனிலும் நேரிலும் துக்கம் விசாரிக்கும் நண்பர்களின் தொல்லையால் அவரது பிள்ளைகளுக்கும் விஷயம் தெரிந்துவிட்டது. சில பேர் வீட்டுக்கு வந்து - ஏதோ வேதகிரி முதலியாரை வேலை நீக்கம் செய்த அந்த முதலாளிமார்களே இந்த வீட்டில் இருப்பதாக பாவித்துக் கொண்டு, 'ஓ' வென்று கூக்குரலிட்டனர்.

"இது என்னங்க நியாயம்! கேள்வி முறை கிடையாதா? இதை நீங்க சும்மா விடக்கூடாது, இது சட்டவிரோதமானது - நோட்டீஸ் விடுங்க" என்றெல்லாம் யோசனை கூறினார்கள்.

"ஆமாம்பா - அதெச் செய்யலாம் - சும்மா விடக் கூடாது" என்று முதலியாரின் பெரிய மகனும் அப்பாவுக்கு அனுசரணையாகப் பேசினான்.

வீட்டில் எல்லோருமே அவரவர்கள் சந்தோஷங்களைக் கூட அப்பாவுக்கு வேலை இல்லை என்ற காரணத்தை நினைத்து விலக்கி வைத்தனர்.

வீட்டில் நல்ல சாப்பாடுகூட சமைப்பதற்கு மங்களத்துக்கு நாட்டமில்லை: "என்ன வேண்டிக் கிடக்கு? அவருக்கோ வேலை இல்லை!"

ரேடியோவைச் சின்னவன் திருப்பினால், பெரியவன் வந்து நிறுத்திவிட்டு ரகசியமாய்ச் சொல்லுவான்: "ஸ்!... போடா அப்பா பாவம், வேலை போச்சேன்னு வருத்தப்பட்டுக்கிட்டிருக்கிறார். மியூசிக் என்ன மியூசிக்?"

உள்ளூரிலேயே இருக்கிற பெண்ணை வீட்டுக்கு அழைப்பதற்குக்கூட 'அப்பாவுக்கு வேலை இல்லை' என்கிற காரணம் தடுத்துவிட்டது.

நூறு ரூபாய் சம்பளத்துக்குப் பத்து வருஷமாய் இவர்கள் வீட்டில் எல்லா வேலையும் செய்த டிரைவர் லோகநாதனையும் நிறுத்தியாகி விட்டது.

நோயில் படுத்து விட்டவனை வந்து பார்த்துச் செல்வது மாதிரி தினசரி மாலை நேரங்களில் ஆபீஸ் ஊழியர்கள் கோஷ்டி கோஷ்டியாக வந்து பார்க்கலாயினர்.

வீட்டில் சும்மா இருக்க முடியாமலும், தேக ஆரோக்கியம் கருதியும் அவர் தோட்ட வேலை செய்ய ஆரம்பித்தார். இரண்டு நாட்களில் தோட்டக்காரனும் நின்று விட்டான். காம்பவுண்டுக்குள் காய்கறிகளும், பூச்செடிகளும் காய்த்துப் பூக்கிற சீஸன் ஆனபடியால் அக்கம்பக்கத்திலுள்ள பெண்கள் வழக்கமாக எட்டணா பத்தணாவுக்குத் தோட்டக்காரனிடம் பேரம் பேசி பூ வாங்கிச் செல்கிற மாதிரி இப்போதும் வந்தனர். அவர்களிடம் தமாஷாகவும் பொழுது போக்காகவும் பேரம் பேசி பூ விற்க ஆரம்பித்த முதலியாரை தாங்கொணா வறுமையின் கொடுமையாக பார்ப்பவர்கள் சிந்திக்க ஆரம்பித்தனர். அவர் மனைவி 'தலை குனிவாகப் போகிறது. உங்களுக்கு என்ன இப்படி புத்தி?" என்று ஒரு நாள் அழுதாள். 'அப்பாவுக்கு வேலை போனதிலிருந்து தாழ்வு மனப்பான்மை வந்துவிட்டது, புத்தியே கெட்டுப் போய்விட்டது' என்று பிள்ளைகள் தலையிலடித்துக் கொண்டு பின்னால் வருத்தமாகவும் கேலியாகவும் பேச ஆரம்பித்தனர்.

வேதகிரி முதலியாருக்கு இந்தச் சூழ்நிலையில்தான் பயித்தியம்

www.t.me/tamilbooksworld

பிடித்துவிடும்போல் வேதனைகள் பிடுங்கின.

கடைசியில்தான் முடிவு செய்தார்: "பேசாமல் கிராமத்துக்குப் போய் அம்மாவோடு கொஞ்சநாள் இருந்து விட்டு வருவது என்று. அதற்குள் ஏதாவது செய்து அப்பாவுக்கு அந்த வேலையையே மீண்டும் வாங்கித் தருவதோ, அல்லது வேறு வேலை பார்ப்பதோ தன் பொறுப்பு என்று பெரிய மகன் வாக்குறுதி தந்தான். அவர் கிராமத்துக்கு வந்து சேர்ந்தார். வருஷத்துக்கு ஒருமுறை எப்போதாவது காரில் குடும்ப சகிதமாகக் காலையில் வந்து தாயாரைப் பார்த்து மாலையில் போனதைத் தவிர சென்னைக்குப் போன இந்த முப்பது ஆண்டுகளில் ஒரு தடவை கூட இங்கு வந்து இராத் தங்கியதில்லை அவர். அதற்குள்ளாக அவர் மனைவி மங்களம் "கிராமம் 'போர'டிக்கிறது" என்று முணுமுணுக்க ஆரம்பித்து விடுவாள்.

செல்லத்தம்மாள் கிராமத்தின் எல்லையைத் தாண்டி காலடி வைப்பதே அபூர்வம்.

பட்டணத்துக்கு வந்து ஒரு பத்து நாளைக்கி இருக்க அழைத்தால் கூட அவள் சம்மதிக்க மாட்டாள். இந்த எண்பது வயதில் ஒற்றைத் தனி மனுஷியாக அந்த வீட்டில் வாழ்ந்து எல்லாக் காரியங்களையும் நிர்வகித்து வருகிற அம்மாவை, உடன் இருந்து பார்க்கப் பார்க்க வேதகிரிக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

அவள் பொழுது விடியுமுன் எழுந்திருக்கிறாள். பச்சைத் தண்ணீரில் குளிக்கிறாள். பழையதும் தயிரும் சாப்பிடுகிறாள். கண்ணாடியில்லாமல் அரிசியில் கல் பொறுக்குகிறாள். நாள் முழுவதும் வேலை செய்கிறாள். அவளைப் பார்த்துத் தன் மனைவியையும் நினைப்பார். அவளுக்கு ஆஸ்த்துமா. பச்சைத் தண்ணீரை நினைத்தாலே உதறல். உட்கார்ந்த இடத்தில் காய்கறி நறுக்கிச் சமையல்காரிக்குக் கொடுப்பதற்குள் இடுப்பு போய்விடுகிறதாம். மாதத்துக்கு இரண்டு தடவை டாக்டர் வர வேண்டும்; மூன்று வேளையும் மருந்து, டானிக், கண்ணாடி இல்லாமல் பூசணிக்காய் கூடத் தெரியாது. மன நிம்மதிக்காகச் சினிமா, சங்கீதம் எல்லாம் வேண்டும். தாயோடு மனைவியை ஒத்திட்டுப் பார்த்தால், தன் மனைவிக்குப் பிறகுகூட இவள் இருப்பாள் போல் தோன்றுகிறது அவருக்கு.

தனக்கு வேலை போய்விட்ட சமாசாரத்தை அவர் தாயிடம் கூடச் சொல்லவில்லை. சும்மா ரெண்டு மாசம் லீவு போட்டு விட்டுக் கிராமத்தில் தங்க வேண்டும் என்கிற விருப்பத்தில் வந்திருப்பதாகத்தான் கூறினார்... அதைக் கேட்டுக் கிழவிக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. தன் மகன் வந்து தன்னோடு தங்கியிருக்கிற செய்தியை ஊர் முழுதும் தமுக்கடித்து விட்டாள். டவுனுக்குப் போய் காப்பிக் கொட்டை வாங்கி வரச் சொல்லித் தினசரி மகனுக்காகக் காப்பி வேறு போடுகிறாள். மத்தியானத்தில் வகை வகையான டிபன் செய்கிறாள்.

வேதகிரி முதலியாருக்குத்தான் பொழுதே போகவில்லை. காலையில் காப்பி சாப்பிட்டபின் தபால் பார்க்கிற சாக்கில் புறப்பட்டுச் சாமியார் டீக்கடைக்கு வந்து மத்தியானம் வரைக்கும் பேப்பர் படித்துக் கொண்டு இருப்பார். மத்தியானம் சாப்பாட்டுக்குப் பின் தூங்கி எழுந்து கடிதம் எழுதுவார். சாயங்காலம் சுப்பராம ஐயருடன் தோப்பு துரவு சுற்றுவார். மாலையில் தாயாருடன் உட்கார்ந்து கொண்டு, பழைய கதைகளைப் பேசுவார். தப்பித் தவறிக் கூட வேலை போய்விட்ட சமாச்சாரம் வாயில் வந்துவிடாதபடி ஜாக்கிரதையாக இருப்பார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அவர் வந்திருக்கும் இந்த சீஸனில் கிராமத்திலேயே வேலை இல்லை. அடுத்த மாதம் தான் உழவு தொடங்கும். அதற்குப் பிறகு சில மாதங்கள் நல்ல வேலை இருக்குமாம். இப்போதும் கூடச் சில நாட்களில் தென்னந்தோப்பில் காய் பறிப்பும், வாழைத்தார் விலை பேசலும் - வேலைகள் நடக்கிறது. முதலியாருக்கு அதுபற்றிய விவரங்கள் தெரியாததால் சுப்பராம ஐயருடன் 'அப்பரண்டிஸ்' மாதிரி வந்து நின்று கவனிப்பார்.

முதலியாருக்கு சில சமயங்களில் வாழ்க்கை ரொம்ப நிறைவாக இருக்கிறது. தன் வீட்டில் நிலத்தில் விளைந்த அரிசியும், தோட்டத்துக் காயைச் சாப்பிடுவதும், சுத்தமான காற்றைச் சுவாசிப்பதும் சுதந்திரமாக இருக்கிறது. இந்த நிறைவில் தான் தன் தாய் கவலையற்று எண்பது வருஷச் சுமையோடு இவ்வளவு நிறைவுடன் இங்கே இருக்கிறாள் என்றும் தோன்றுகிறது.

முப்பது வருஷத்தில் ஊர் கொஞ்சம் மாறி இருப்பது உண்மைதான். 'எலெக்ட்ரிஸிடி' வந்திருக்கிறது. சில வீடுகளில் ரேடியோ பாடுகிறது. பம்ப்செட் தண்ணீர் இறைக்கிறது. பண்ணை வேலை செய்கிற சில பேர் சட்டை போட்டுக்கொண்டு கண்ணில் தென்படுகிறார்கள். ஊரில் ஒரு ஹைஸ்கூல் ஏற்பட்டு இருக்கிறது. பெண் குழந்தைகள் அதிகம் படிக்கின்றன. பட்டணத்து நாகரிகம் சில வாத்திமார் உருவில் பஸ்ஸில் வந்து இறங்கி ஏறிச் செல்கிறது.

ஆனாலும் உலகம் ஓடுகிற வேகத்தில் அதன் கையைப் பிடித்துக் கொள்ளத் தவறி, அநாதையாய் நின்றுவிட்ட மாதிரிதான் இந்தக் கிராமம் இன்னமும் இருக்கிறது.

அதோ தபால் வருகிற பஸ் வந்துவிட்டது. வேதகிரி முதலியார் கொஞ்சம் நடையை எட்டிப் போட்டு தார் ரோட்டில் ஏறினார். செருப்பில் மண்டியிருந்த புழுதியைப் போக்குவதற்காகப் பாதங்களை 'தட் தட்'டென்று இரண்டு முறை தார் ரோட்டில் மிதித்தார். புழுதி பறந்தது.

"முதலியார் ஐயா, நமஸ்காரம்" என்று டீக்கடைச் சாமியாரின் குரல் ஒலித்தது.

ரங்கசாமி தபால்களைச் சரிபார்த்து அடுக்கிக் கொண்டே திரும்பி "ஐயா வாங்க" என்று வரவேற்றான்.

பஸ், பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு போயிற்று.

பஸ்ஸில் இருந்து இறங்கியவர்கள் அஞ்சாறு பேர். அதில் மூணு பேர் - இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணுமான ஹைஸ்கூல் டீச்சர்கள். ஊருக்குள் போகிற மண்சாலையில் இறங்கி நடந்தனர்.

ரங்கசாமி தந்த கடிதத்தையும் பத்திரிகையையும் வாங்கி முதலில் கடிதத்தைப் பிரித்தார் முதலியார்.

"பிள்ளை இன்னிக்கு என்ன எழுதியிருக்கார் - படியுங்க" என்று பாய்லரிலிருந்து டிக்காஷனுக்காக கொதிக்கிற தண்ணீரைத் திறந்து பிடித்த சாமியார் -

"இருங்க. அதோ ஐயர் வராரு. வாங்க ஐயிரே - நமஸ்காரம்" என்று மீண்டும் கூவினார்.

www.t.me/tamilbooksworld

முதலியார் கடிதத்தை ஒருமுறை மனசுக்குள் தாம் மட்டும் படித்துக் கொண்டார். அப்போதுதானே கற்பனை மொழி பெயர்ப்புக்கு வசதி.

கடிதத்தைப் படிக்கும்போது முதலியாரின் முகத்தில் ஏற்படுகிற மாற்றத்தை மூவரும் கவனித்தனர்.

"என்னமோ முக்கிய சமாசாரம்போல எனக்குத் தோணுது" என்றார் சாமியார்.

"ஒண்ணும் முக்கியம் இல்லே... நாளைக்கி எல்லோருமாய் பொறப்பட்டுக் காரிலேயே வராங்களாம்... உடனே நானும் அவங்களோட பொறப்படணுமாம். வேலை கெடச்சுட்டுதாம்." என்று உளறிய பின், அதற்காக நாக்கைக் கடிந்து கொண்டார் முதலியார்.

"வேலை கெடச்சிருக்கா? யாருக்கு?" என்று பிடித்துக் கொண்டார் சாமியார். முதலியார் பாவம், ஒரு விநாடி திக்குமுக்காடிப் போனார். கடைசியில் ஒருவாறாகச் சமாளித்தார்.

"நம்ப கடைசிப் பயல் - ஒரு இடத்தில் ஏதோ மனு எழுதிப் போட்டான். அது கெடச்சிருக்கும் போல இருக்கு."

"அப்படியா! சந்தோஷம் - அந்தத் தம்பியும் வருதுங்களா?" என்றார் சாமியார்.

"அவன் எப்படிங்காணும் வருவான்? அவனுக்குத்தான் வேலை கெடைச்சிருக்கு இல்லே" என்று அகாரணமாய் அவர்மீது எரிந்து விழுந்தார் சுப்பராம ஐயர்.

"மொதலியாரே, வாரும் போகலாம். போயி, பெரியம்மா கிட்டே, விஷயத்தைச் சொன்னாத்தான் நாளைக்கே பொறப்படறதுக்கு ஏற்பாடு பண்ணுவாங்க" என்று முதலியாரை இழுத்தார் ஐயர்.

"அவங்க என்ன ஏற்பாடு பண்ண இருக்கு?" என்று தயங்கினார் முதலியார்.

"உமக்கு ஒண்ணும் தெரியாது - சரியான பட்டணம் நீர்! - மூணு மாசம் வந்து தங்கி இருக்கீர். நாளைக்கு வீட்லே எல்லாரும் வரா. உங்களை எல்லாரையும் பெரியம்மா வெறுங் கையோட அனுப்பிச்சுடுவாளா? ரெண்டு முறுக்குப் பிழிஞ்சு குடுத்தனுப்புவா... இப்பவே போய்ச் சொன்னாதான் நனைச்சு வைப்பா. வாரும் வாரும்..."

"மொதலியார் ஐயா, இப்பவே சொல்லிட்டேன். பட்டணத்துக்குப் போயி எனக்கு ஏதாவது ஒரு பியூன் வேலை பார்த்துக் குடுங்கோ - தாடியெ எடுத்திட்டு ஓடி வந்துடறேன்" என்று சிரிப்பிடையே கூவிச் சொன்னார் சாமியார்.

*****டிடிடிடிடிடி*****டிடிடிடிடிடி*****

காலையிலே இருந்து வேதகிரி முதலியார் வீட்டின் முன் அந்தக் கறுப்புக் கார் நின்றிருந்தது. கால் சராயும் ஷர்ட்டும் அணிந்து கண்ணாடியுடன் நின்றிருக்கும் முதலியாரின் மூத்த மகனைத் தெருச் சிறுவர்கள் வேடிக்கையாகப் பார்த்துச் சிரிக்கிறார்கள்.

உள்ளே கூடத்தில் மாமியாருக்காக வாங்கி வந்திருக்கும் புடவையையும் ஒரு கம்பளிப் போர்வையையும் எடுத்துப் பிரித்துக் காண்பித்துக்

கொண்டிருக்கிறாள் முதலியாரின் மனைவி மங்களம்.

"இரு, இதோ வந்துட்டேன். உலை கொதிச்சிருக்கும்" என்று கிழவி எழுந்தபோது மங்களம் இடைமறிக்கிறாள்.

"இன்னிக்கு ஒரு நாள் நீங்க இருங்க, நான் பாத்துக்கறேன்."

கிழவி சிரிக்கிறாள்: "ஐய, என் அருமை மருமகளே - போதும் போதும்! 'இன்னிக்கு ஒரு நாளு'ன்னு ஜாக்கிரதையாச் சொல்லிக்கறியே! ஒரு நாளைக்கு நீ செய்தால் போதுமா? மீதி நாளைக்கு யார் செய்யறதாம்? நீயே இருந்து எப்பவும் பார்த்துக்கறதானா உன் அதிகாரத்தை நான் பறிக்கல்லே. ஒரு நாளுன்னா வேண்டாண்டி அம்மா! நான் பாத்துக்கறேன்..." என்று விளையாட்டாகவும் காரியமாகவும் சொல்லிக் கொண்டே எழுந்து போகிறாள் செல்லத்தம்மாள்.

"என்ன, அம்மா சொல்றமாதிரி இங்கேயே இருந்துடலாமா?" என்று கண்களைச் சிமிட்டியவாறு மங்களத்தைக் கேட்கிறார் வேதகிரி.

"ஐயோடி, என்னாலே ஆகாதம்மா" என்கிறாள் மங்களம்.

வேதகிரி விஷமமாய்ச் சிரித்துக் கொள்கிறார்.

அப்போது உள்ளே வந்த அவரது மகன் சொன்னான்:

"ரெண்டு மணி நேரத்துக்கு மேலே தொரைகிட்டே நான் விவாதம் பண்ணினேன். கொஞ்சத்திலே அவன் மசியல்லே அப்பா... என்னென்னமோ சொன்னான். ஒரு மாசத்துக்கு மேலே இழுத்தடிச்சான். ஆனா, எனக்குத் தெரியும், 'ஹி வில் ரீகன்ஸிடர்'னு"

வேதகிரி மௌனமாகப் பெருமூச்செறிந்தார்.

அப்போது சுப்பராம ஐயர் வந்தார். "நமஸ்காரம் அம்மா! சௌக்கியமா?" என்று மங்களத்தம்மாளை விசாரித்தவாறே அங்கிருந்த பெஞ்சில் உட்கார்ந்தார். மங்களத்தம்மாள் எழுந்து நின்று கொண்டாள்.

"உடனே பொறப்படணும்னு எழுதி இருந்தேள். எப்பவோ வர்றவா ரெண்டு நாளு இருந்துட்டுப் போகப் படாதோ?"

"இல்லே, அப்பாவுக்கு வேலை இருக்கு" என்றான் பையன்.

"ஆமா, பட்டணத்திலே இருக்கிறவங்க எல்லாரும் வேலை இருக்கறவங்க. இங்கே கிராமத்திலே இருக்கறவங்க எல்லாம் சும்மா வேலையத்து இருக்கிறவங்க. என்ன ஐயரே அப்படித்தானே? அதனாலே தான் நீங்களும் போகப் போறீங்க, இல்லே?"

எல்லாரும் முதலியாரைப் பார்த்தனர். முதலியார் சொன்னார்:

"நான் இனிமே இங்கேதான் இருக்கப் போறேன். கண்டவன் காலிலேயும் விழற மாதிரி பல்லிளிச்சி நிக்கிற உத்யோகப் பெருமை போதும் - எனக்கு அது வேணாம். அந்த ஆயிரம் ரூபாய்க்கு இங்கே சம்பாதிக்கிற நூறு ரூபாய் சமம். ஐயரே, இன்னிக்கே ரூபாய் இருபதினாயிரம் தர்றேன்... உம்ம கோரை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வாய்க்கால்கரை நஞ்சையையும் நல்லாந்தோப்பையும் என் பேருக்குக் கிரயம் பண்ணி வச்சிடும்... இனிமே எனக்கு இங்கே நிறைய வேலை இருக்கு."

"அது முதலியாரே..." என்று இழுத்தார் ஐயர்.

"அதெல்லாம் சொல்லப்படாது - சாமியார் சாட்சி" என்று முதலியார் சொல்லிக் கொண்டிருக்கும்போது, "அம்மா, நமஸ்காரம் - சௌக்கியமா" என்று கேட்டவாறே படியேறிக் கொண்டிருந்தார் டீக்கடைச் சாமியார். அவர் கையில் ஒரு சீப்பு பேயன் பழம் இருந்தது.

"சாமியாரே, நீர் சாட்சி" என்று முதலியார் சொன்னதும், சாமியார் சிரித்தார். பிறகு முதலியாரே சொன்னார்:

"நிச்சயம் சுப்பராம ஐயர் வாக்குத் தவற மாட்டார். அவர் இன்னும் பட்டணவாசி ஆகலியே!"

இப்போதெல்லாம் டீக்கடைச் சாமியார் - ஆயிரம் ரூபாய் தருகிற உத்தியோகத்தையும் பெண்டாட்டி பிள்ளைகளையும் பட்டணவாசத்தையும் உதறிவிட்டுத் தாய்க்கு உதவியாக கிராம வாசத்தைத் தேர்ந்தெடுத்து, சட்டை கூட அணியாமல் டிராக்டர் வைத்து உழுது விவசாயம் பார்க்கிற வேதகிரி முதலியாரை 'டிராக்டர் சாமியார்' என்று அழைத்துச் சிரித்துக் கொண்டிருக்கிறார்.

(எழுதப்பட்ட காலம்: 1969)

நன்றி: குருபீடம் (சிறுகதைத் தொகுப்பு), ஜெயகாந்தன் - ஏழாம் பதிப்பு: 1995 - மீனாட்சி புத்தக நிலையம், மதுரை - 1
----------
_உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப_

---

## 23. நிக்கி (1970)

செம்படவக் குப்பம். இரண்டு நாளாக மழை வேறு. ஒரே சகதி. ஈரம்.

ஒரு தாழ்ந்த குடிசையின் பின்புறம். இரண்டு குடிசைகளின் நடுவேயுள்ள இடைவெளியில் அவ்விரு கூரைகளின் ஓலைகளும் அந்த இடத்தில் சேர்ந்து ஒரு கூரையாகி, ஒரு சிறு திட்டில் ஈரம் படாமல் காய்ந்த மிருதுவான புழுதி மண்ணைக் குவித்து நடுவில் குழி பரத்தியது போன்ற இடத்தில் இரண்டு நாட்கள்வரை ஐந்து நாய்க்குட்டிகளை பிரசவித்த ஒரு குப்பத்து நாய் மடியைத் தரையில் தேய்த்துக் கொண்டு தாய்மை பெருமிதத்துடன் 'பாரா' கொடுத்துத் தன் குட்டிகளைப் பாதுகாவல் செய்தவாறு கிடந்தும் திரிந்தும் அலைந்து கொண்டிருந்தது. காலையிலிருந்து காணோம்!

இனிமேல் அந்த நாய் வராது என்று செய்தியைக் குப்பத்துச்சிறுவன் ஒருவன் எல்லோருக்கும் அறிவித்தான்.

" ஐஸவுஸாண்டே பஸ்லே அடிபட்டு அந்த நாய் கூய் கூயாப் பூட்ச்சி."

இந்த அறிவிப்புக்குப் பிறகு குப்பத்துச் சிறுவர்கள் தைரியமாக இந்த குட்டிகளைத் தேடி வந்தனர். ஆளுக்கு ஒரு குட்டியை எடுத்துக் கொண்டபின்

கடைசியாக ஒன்றைமட்டும் எல்லோரும் நிராதரவாக விட்டுப் போய்விட்டார்கள். அதன் நிறம் கறுப்பு, இரண்டு காதுகளிலும் வாலிலும் மட்டும் வெள்ளைத் திட்டுக்கள். "சீ! அது பொட்டடா!" என்று அதனை அவர்கள் ஜாதிப்பிரஷ்டம் செய்வதுபோல் விட்டுச் சென்றனர்.

அந்தப் பெட்டை நாய்க்குட்டி ஒரு புழுமாதிரி நாளெல்லாம் சிணுங்கியவாறு புழுதியிலும் சகதியிலும் நெளிந்து ஊர்ந்து கொண்டிருந்தது. கண்ணைத் திறந்து முதல் முறையாக உலகைப் பார்த்தது. பசியால் சிணுங்கிச் சிணுங்கி அழுதது. தான் கவனிக்க யாருமில்லாத அநாதை நாய் என்று புரிந்து கொண்டுவிட்டது மாதிரி, நடக்கக்கூடப் பயிலாத அந்த நாய்க்குட்டி கால்களைத் தரையில் இழுத்து இழுத்து நடை பழகியபோதே தனது ஜீவித யாத்திரையை மேற்கொண்டது. அந்தத் தாழ்ந்த இரண்டு குடிசைகளின் நடுவே இருந்து வெளியே வந்து ஈரமும் சகதியுமான குப்பத்துத் தெருவில் அது புரண்டு புரண்டு நடந்த காட்சியைச் சிறுவர்கள் கூடி ரசித்தனர்.

அது தனக்கு ஓர் எஜமானனை அவர்கள் மத்தியில் யாசிப்பது மாதிரி அவலமாக அழுதது. அவர்களும் அதற்குப் பரிதாபப்பட்டனர். ஒரு குடிசையின் திண்ணையில் அதற்குப் புகலிடம் தந்து கஞ்சித் தண்ணீர், சோறு, டீ என்று படிப்படியாகத் தங்களின் தரித்திரத்தை அதற்கும் அறிமுகம் காட்டினர்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு சிறுவர்களுக்கு இந்த நாய் விளையாட்டுச் சலித்துப் போயிற்று. அந்தக் குடிசைக்குச் சொந்தக்காரி இந்த நாயைக் கண்டு, அதன் மீது பூசிக் கிடக்கும் சேறும் சகதியும் அதற்கே சொந்தம் போன்றும், அது அந்தத் திண்ணையின் மூலையை அசுத்தப்படுத்துகிறது என்றும் கோபித்து, விளக்குமாற்றால் குப்பையைக் கூட்ட வந்தவள் நாயையும் சேர்த்துக் கூட்டித் திண்ணையிலிருந்து தெருவுக்குத் தள்ளினாள். அது கத்தி அலறியவாறு தலைகீழாகப் புரண்டு திண்ணையிலிருந்து தெருவில் வீசி விழுந்தது.

விழுந்த வேகத்தில் வசமாக அடிபட்டது. நாய்க்குட்டி பெருங்குரலில் அழுதவாறு புரண்டு எழுந்து ஒரு காலை மட்டும் நொண்டி நொண்டி இழுத்தவாறு தனது பயணத்தைத் தொடர்ந்தது.
கொஞ்ச தூரம் நடந்ததும் கத்துவதை நிறுத்திக் கொண்டு, விதியை நொந்துகொண்டு போவது மாதிரி மௌனமாய் - காலை இழுத்துக் கொள்ளாமல் கொஞ்சம் சரியாகவே - நடக்க ஆரம்பித்தது. பயந்து பயந்து குடிசை மண் சுவரை ஆதாரமாகக் கொண்டு நடந்து குப்பத்தின் எல்லைக்கும் மெயின் ரோட்டுக்கும் குறுக்கே உள்ள நாற்றச் சாக்கடைப் பாலத்தருகே வந்து விட்டது. அதற்கு மேல் திசை புரியாமல் அரை நாள் யோசனையில் அங்கேயே கிடந்து உறங்கி விழித்துக் கத்திக் கத்திக் குரல் தேய்ந்த பிறகு தைரியமாகப் பாலத்தைக் கடந்து மெயின் ரோட்டுக்கு வந்தது.
பெரிய கட்டிடங்கள் நிறைந்த வீதி. ராட்சஸத்தனமாய்ப் பஸ்களும் லாரிகளும் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஜன சந்தடி மிகுந்திருக்கிறது. அந்தச் சின்னப் பெட்டை நாய் தைரியமாக வீதியின் குறுக்கே நடந்தது. இவ்வளவு பெரிய பிரபஞ்சத்தில் மனிதன் என்ன என்ன சாகசங்களை எவ்வளவு ஆர்வத்தோடு நடத்திக் காட்டுகிறான்! இந்த நாய் இந்தத் தெருவில் நடக்கக்கூட கூடாதா என்ன? நடந்தது.

ஒரு மாடி பஸ் வந்தது. அந்த டிரைவர் நல்ல மனுஷன். இந்தச் சிறிய நாய்க்காக அந்த பெரிய பஸ்ஸையே சில விநாடி நிறுத்தினான். அது குறுக்கே நடந்து போனபிறகு, ' எவ்வளவு சின்ன நாய்! அடிகிடிபட்டுச் சாகப்போகுது. நமக்கு

www.t.me/tamilbooksworld

ஏன் அந்தப் பாவம்!" என்று அதற்காக விசனம் கொண்டவன் மாதிரி அதைப்பார்த்துக் கொண்டே அந்தப் பெரிய பஸ்ஸைத் திருப்பினான.

நாய் ரோட்டைக் கடந்துவிட்டது. பிறகு எங்கே போவது? எங்காவது போகவேண்டியதுதானே? போயிற்று.

மெயின் ரோட்டைக் கடந்து குப்பம் மாதிரி இல்லாத ஆனால் குப்பத்துத் தெரு போன்றதேயான ஒரு குறுகிய தெருவில் நடக்கையில் அதன் எதிரே ஒரு இலை வந்து விழுந்தது. இலை விழுந்ததும் அதற்காகப் பாய்ந்தோடுவதற்கான அநுபவமோ அறிவோ அதற்கு இன்னும் வராததனால் 'பொத்' தென்ற சத்தத்துக்குப் பயந்து பின்னால் பதுங்கியது அது. பதுங்கியதோ, பிழைத்ததோ!

ஒரு பெரிய நாய் அந்த இலையை நோக்கி நாலு கால் பாய்ச்சலில் வந்து கொண்டிருந்தது. இந்தக் குட்டிக்கு அது தன் இனத்தைச் சேர்ந்தது என்று புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு அது பெரிதாகவும் மூர்க்கமாகவும் இருந்ததனால் இது பதுங்கிக்கொண்டு அதை அச்சத்தோடு பார்த்தது. அந்த இலையில் இருப்பது சாப்பிடத் தகுந்தது என்பதைச் சுவரோரமாகப் பதுங்கிக்கொண்டு பார்த்ததனால் இந்தக் குட்டி புரிந்துகொண்டது.

ஆனாலும் இந்தக் குட்டிக்குப் பசி வந்தபோது எதிரே இலை விழுந்தும், இலை விழுந்தபோதெல்லாம் போட்டிக்கு மூர்க்கமாக மோதிச் சாடிக்கொண்டு பெரிய நாய்கள் வந்ததனால், இலையில் இருப்பதைச் சாப்பிடலாம் என்று அறிவு வந்தும் அதை அநுபவமாக்கிக் கொள்ள வாய்ப்பு வரவில்லை.

ஆனால் பசி மட்டும் வந்துகொண்டே இருந்தது.

மழையிலும் குளிரிலும் முனகி அழுதவாறு தெரு ஓரங்களில் ஓடும் சாக்கடை அருகே போட்டிக்கு யாரும் இல்லாததனால் பொறுக்கித் தின்று உழன்றுகொண்டே அந்தக் குறுகிய தெருவில் சில நாட்கள் இந்த நாய் வாழ்ந்தது.

பின் ஒரு நாள் வெயிலடித்தபோது உடம்பின் ஈரம் காய்ந்து, அழுகலையும் கழிவையும் தின்று உடம்பில் ஏறிய பலத்தால் கொஞ்சம் தெம்பும் வளர்ச்சியும் பெற்றிருந்த இந்தக் குட்டி அந்தக் குறுகிய தெருவிலிருந்து வேறொரு பெரிய தெருவுக்கு தனது யாத்திரையைத் தொடங்கிற்று.

அந்த நாளை இந்த நாய்க்கு ஒரு சோபன தினம் என்று சொல்ல வேண்டும்.

அழுது அடம் பிடித்த ஒரு குழந்தையை அதன் தாய் மல்லுக்கட்டி எங்கேயோ தூக்கிக்கொண்டு போகிறாள்.

குழந்தை பிடிவாதமாய் அவள் பிடியில் அடங்காமல் திமிறித் திமிறித் தாயின் இடுப்பிலிருந்து நழுவி நழுவி வழிகிறது.

ஒரு கையில் சிலேட்டும் பையும் வைத்துக்கொண்டு அந்தத் தாய் அந்தக் குழந்தையை ஒரு கையால் சமாளிக்க முடியாமல் வைது அடிக்கிறாள். அடம் பிடித்த குழந்தை அலறி அழுகிறது. அழுகிற குழந்தையை அவள் சமாதானம் செய்து கொஞ்சுகின்ற வேளையில் இந்தக் குட்டி அங்கே போய் சேர்ந்தது. இந்த நாயை வேடிக்கை காட்டி அந்தக் குழந்தையைத் தாய் சமாதானப்படுத்தினாள்.

www.t.me/tamilbooksworld

இப்போது அந்தக் குழந்தை இந்த நாய் வேண்டுமென்று அடம் பிடித்தது.

அந்த மனித நேசத்தைப் புரிந்துகொண்ட இந்த அநாதை நாய் குழைந்து வாலை ஆட்டிற்று.

நல்ல வேளை. மழையில் நனைந்தும் வெயிலில் உலர்ந்தும் இது சுத்தமாக இருந்தது. நேற்றுவரை இது தின்ற அழுகலும் கழிவும் மனிதர்களுடையதுதானே! நாய்க்குட்டியை எடுத்து முத்தம் கொடுத்துக் குழந்தையிடம் கொஞ்சி அதன் கையில் கொடுத்தாள் தாய்.

இந்த நாய் ஜென்ம சாபல்யம் அடைந்தது.

சிலகாலம் அந்த வீட்டின் திண்ணை தூணில் சணல் கயிற்றால் கட்டப்பட்டுக் குழந்தையின் காட்சிப் பொருளாகவும் விளையாட்டுச் சாமானாகவும் அது வளர்ந்தது. அதற்கு அந்தக் குழந்தை தன் மழலையில் 'பப்பி' என்றோ 'நிக்கி' என்றோ பேரிட்டது.

இப்போது பார்வைக்குப் பெரிய நாய் மாதிரி உருவம் கொண்டிருந்த அந்தப் பெட்டை நாய் நிக்கி, ஒரு நாள் அந்த வீட்டு எஜமானி வெளியில் போனபோது நன்றியுணர்ச்சியுடன் அவளைத் தொடர்ந்து ஓடிற்று. அவள், "வீட்டுக்குப் போ!" என்று எத்தனையோ முறை விரட்டியும் குழந்தைமாதிரி போக்குக் காட்டியும் ஒளிந்து ஒளிந்தும் அவளைத் தொடர்ந்து வாலை ஆட்டிக் கொண்டு துள்ளித் துள்ளி ஓடிற்று. அப்படி அவள் தன்னை விரட்டுவதும் அவள் விரட்டியவுடன் சில அடிகள் ஓடிப் பின்பு திரும்பிப் பார்த்து, அவளைத் தொடர்ந்து ஓடிப் பிடிப்பதும் நிக்கிக்கு ஆனந்தமான விளையாட்டாக இருந்தது. அந்த அம்மாவுக்கு வேலை இல்லையா என்ன? கடைசியில் 'வீட்டுக்குப் போய்விடும்' என்ற நம்பிக்கையோடு அவள் பஸ்ஸில் ஏறிப் போய்விட்டாள். கொஞ்சதூரம் பஸ்ஸைத் தொடர்ந்து நாலுகால் பாய்ச்சலில் ஓடிற்று நிக்கி. அந்த நெடிய சாலையில், பிடிக்க முடியாத, எட்ட முடியாத வேகத்தோடு விலகி விலகி எஜமானியோடு வெகுதூரத்தில் போய் - கடைசியில் அந்தத் திருப்பத்தில் பார்வைக்கும் மறைந்து விட்டது பஸ். ஏதோ ஒரு குருட்டு நம்பிக்கையில் பஸ் மறைந்த பிறகும் அந்தத் திருப்பம் வரைக்கும் ஓடிற்று நிக்கி.

பஸ்ஸைக் காணோம்! வேறு வேறு பஸ்களும் கார்களும் மனிதர்களுமாகப் பெரும் சந்தடி நிறைந்திருந்தது அந்த வீதியில். வீட்டுக்குத் திரும்ப மனம் கொண்டு நிக்கி வந்த வழியே ஓடி வரலாயிற்று. வரும் வழியில் ஒரு சிறிய சந்து.

அங்கேயிருந்து மசால்வடை வாசனை எண்ணெய்க் கமறலுடன் வீசிற்று. நிக்கி சற்று நின்று காதுகளை உயர்த்தி, வேர்வையின் ஈரம் துளித்த நாசி விரிய வாடை பிடித்தது. மகிழ்ச்சியுடன் ஒரு துள்ளலில் சந்துக்குள் நுழைந்தது.

ஒரு கிழவி, மரத்தடியில் அடுப்பைச் சுற்றிலும் தகர அடைப்பு வைத்து வடை சுட்டுக் கொண்டிருக்கிறாள். பக்கத்திலுள்ள குப்பை மேட்டில் ஏறிப் படுத்துக்கொண்டு மிகுந்த சுவாரசியத்துடன் வடை வாசனையை வாயில் நீரொழுக அநுபவித்துக் கொண்டிருந்தது நிக்கி. எப்போதாவது ஒரு வடையில் கொஞ்சம் பிய்த்துத் தன்னிடம் எறிய மாட்டாளா என்ற கற்பனையோடு அவளையே தன் எஜமானியாகப் பாவித்து வாலாட்டிற்று.

ஏதோ ஒரு சமயம் அவளும் ஒரு சிறு துண்டு வடையை நிக்கியிடம் வீசி

www.t.me/tamilbooksworld

எறிந்தாள். சந்தோஷம் தாங்கவில்லை நிக்கிக்கு. ஒரு சுற்றுச் சுற்றிப் பரவச நடனம் ஆடிற்று. அந்த வடைத் துண்டைத் தின்னாமல் தரையில் போட்டு, இரண்டடி பின்னால் நகர்ந்து அதன் அழகை ரசிப்பது மாதிரி பார்த்துக் கொண்டிருந்தது. அதற்குள் யாரோ அந்த வடைத் துண்டை அபகரிக்க வந்துவிட்ட அவசரத்தோடு, அந்தக் கற்பனை எதிரியிடம் போட்டி போட்டுக் கொண்டு ஓடி வந்து தன்னுடைய பொருளை ஸ்வீகரிக்கும் அவசரத்தோடு அதைக் கவ்வியது. மறுபடியும் போட்டியில் ஜயித்த ஆனந்தத்தில் வாயில் கவ்விய அந்த வடைத் துண்டைக் கீழே போட்டுச் சுற்றிச் சுற்றிப் பரவச நடனமாடிச் சுழன்றது.

திடீரென மழை பெய்தது. கிழவி அடுப்பையும் பிற சாமான்களையும் அவசர அவசரமாகத் தூக்கிக் கொண்டு பக்கத்திலிருந்த வீட்டின் திண்ணைக்கு ஓடினாள். நிக்கியும் மழைக்காக அந்தத் திண்ணையோரமாக ஒதுங்கி நின்றது. நல்ல மழை சடசடத்துப் பெய்து சற்று நேரத்தில் ஓய்ந்தது. மழை நின்ற பின் தெருவில் ஜனங்கள் நடமாடினார்கள். பள்ளிக்கூடத்திலிருந்து பிள்ளைகள் திரும்பின.

நிக்கிக்குத் தன் எஜமானியும் தனக்குப் பேரிட்ட அந்தப் பாப்பாவும் நினைவுக்கு வந்தனர். பாப்பாவின் நினைவு வந்ததும் அதற்கு ஒரு விநாடி கூட அங்கே கால் தரிக்கவில்லை. பாய்ந்து பாய்ந்து ஓடிற்று. பாதைகள் பல திசைகளில் பிரிந்தன. வந்த வழி எதுவென்று அதற்குப் புரியவில்லை. எந்த திசையில் பாப்பாவின் வீடு இருக்கிறதென்று பிடிபடவில்லை. நாலு திசையும் ஓடிற்று. எஜமானியின் பின்னால் ஓடி வந்தபோது அந்த அவசரத்திலும் பல இடங்களில் உட்கார்ந்து திரும்பி வருவதற்கு வழி தெரியும் பொருட்டுச் சிறுநீர் கழித்திருந்தது நிக்கி. சற்று முன் பெய்த நல்ல மழையில் தெருவெல்லாம் சுத்தமாகியிருந்தது.

நிக்கி நம்பிக்கை இழக்காமல் ஓடிக் கொண்டிருந்தது. பொழுதும் இருட்டிப் போயிற்று. தெரு விளக்குகளெல்லாம் எரிய ஆரம்பித்தன. நிக்கிக்குப் பயம் பிறந்தது. தன் எஜமானியையோ பாப்பாவையோ பார்க்கவே முடியாதோ என்ற ஏக்கத்தில் அது வானத்தைப் பார்த்து அழுதது. இரவெல்லாம் அழுது அழுது ஏதோ ஒரு தெருவில் எங்கோ ஒரு மூலையில் படுத்து உறங்கி விழித்து அடுத்த நாள் காலை மறுபடி அனாதையாயிற்று!

தெருவில் போகிறவர்களையெல்லாம் தன் எஜமானியோ என்று நினைத்து நினைத்து ஓடி அவர்களால் விரட்டியடிக்கப்பட்டுப் பரிதாபமாகத் திரும்பியது நிக்கி.

இப்போதெல்லாம் தெருவில் எச்சிலை விழுகிறபோது பெரிய நாய்களுக்குப் பயப்படாமல் பாய்ந்து அவற்றோடு சண்டையிட்டுத் தன் பங்கை எடுத்துக் கொள்ளுகிற அளவுக்கு நிக்கி வளர்ந்திருந்ததனால் அதன் வயிற்றுப் பிரச்னை ஒருவாறு தீர்ந்துவிடுகிறது.

ஆனாலும் வாழ்க்கையின் பிரச்னை வயிறு மட்டுமா? அதற்கு மனித நேசம் பசிக்கு உணவு மாதிரி ஓர் அவசியத் தேவையாயிற்று.! அந்தப் பாப்பாவையும் எஜமானியையும் எண்ணி எண்ணி எல்லா இரவுகளிலும் தனிமையில் 'ஓ' வென்று அழுதது நிக்கி.

ரோட்டில் சங்கிலியால் பிணித்துக் கையில் ஒய்யாரமாகப் பிடித்துக் கொண்டு நடக்கும் எஜமானர்களின் பின்னால் ஓடுகிற சிங்கார நாய்களையும்,

www.t.me/tamilbooksworld

சங்கிலியால் பிணைப்புண்டு மதர்ப்போடு எஜமானர்களையே இழுத்துக் கொண்டு முன்னால் செல்கின்ற கம்பீர நாய்களையும், கார்களில் எஜமானர்களோடு சமதையாக வீற்றிருந்து வெளியே தலைநீட்டிப் பார்க்கிற செல்ல நாய்களையும் பொறாமையோடும் கவலையோடும் பார்த்து அழுதது நிக்கி.

சில சமயங்களில் அந்த நாய்கள் நிக்கி தங்களைப் பார்ப்பதைக் கண்டு, பற்கள் வெளித் தெரிய உறுமியவாறு பாய வரும். அப்போதெல்லாம் அந்த எஜமானர்கள் நிக்கியைத்தான் கல்லெடுத்து அடிக்கிற மாதிரி பாவனை காட்டி விரட்டுவார்கள்.

அப்போதெல்லாம் தொலைவில் வந்து திரும்பிப் பார்த்து ஒரு முறை குரைத்த பின் ஓடிப்போகும் நிக்கி.

ஒருநாள் மத்தியானம். பங்களாக்கள் நிறைந்த ஒரு தெரு. ஜனசந்தடியே இல்லை. நல்ல வெயில். பகலெல்லாம் ஓடி ஓடி, ஊரெல்லாம் பொறுக்கித் தின்று வயிறு புடைத்துக் கொண்டிருந்தது நிக்கிக்கு. எங்காவது சுகமான இடம் தேடி, ஒரு நிழலில் படுத்துக் கிடக்கும் உத்தேசத்துடன் ஓடிக் கொண்டிருந்தது.

யாரோ தன்னைக் கூப்பிடுவது மாதிரி குரலோ சிணுங்கலோ கேட்டது. ஓடிக் கொண்டிருந்த நிக்கி நின்று திரும்பிக் காதுகளை உயர்த்திப் பார்த்தது.

ஒரு பங்களாவின் பூட்டிய கேட்டுக்குப் பின்னால் ஒரு நாய் முன்னங்கால்களைத் தூக்கி இரும்பாலான அந்தக் கேட்டின்மீது வைத்து எம்பி நின்றுகொண்டு நிக்கியை அழைத்தது.

அதன் உடம்புதான் என்ன வெள்ளை! சடை சடையாய் வெள்ளி மாதிரி சுருள் முடி வழிகின்றது. அது நின்ற நிலையில் ஆண் நாய் என்று தெரிகிறது. நிக்கி சற்று நின்றது. கம்பியைப் பிறாண்டிச் சிணுங்கிச் சிணுங்கி அது தன்னை அழைக்கும் தவிப்பை ரசித்துப் பார்த்தது. நிக்கியைப் பார்த்துக் குரைக்காமல், கூப்பிடுகிற முதல் நாயே இதுதான்.

நிக்கி லேசாக வாலை ஆட்டிற்று. நிக்கியின் சம்மதம் தெரிந்த அந்த ஜாதி நாய் முன்னிலும் மும்முரமாகக் கதவுகளைப் பிறாண்டித் தாவியது. தரைக்குக் கேட்டுக்கும் இடையே உள்ள சந்தில் நுழைந்து வெளியில் வர முயன்றது. ம், நடக்கவில்லை! அந்தச் சந்தில் நுழைய முடியாத அளவு அது பருமனாக இருந்தது. ஜாதி நாய் பரிதாபமாகக் கொஞ்சியது.

நிக்கிக்கும் அதன் அருகில் போகவேண்டும் போலிருந்தது. அந்த ஜாதி நாய், தான் மனித நேசத்துக்காகத் தவிக்கிற மாதிரி, இன்னொரு நாயின் நேசத்துக்காகத் தவிப்பதை நிக்கி புரிந்து கொண்டது. அது தனக்காகத் தவிக்கிறது என்பதைப் புரிந்து கொண்டு மகிழ்ந்தது. அதுவும் இவ்வளவு பெரிய இடத்து உயர்ந்த ஜாதி நாயின் நேசம் கிடைக்கும்போது ஓர் ஆதரவுமின்றித் தெரு நாயாக அலையும் நிக்கியால் எப்படி இந்தக் காதல் மிகுந்த அழைப்பை மீறிப்போக முடியும்?

போயிற்று. கேட்டுக்குக் கீழே இருந்த இடைவெளி வழியாக அந்த ஜாதி நாய்தான் போக முடியவில்லை. எனினும் இந்தத் தெரு நாய் நுழைந்து உள்ளே வர முடியும் என்று கனக்கிட்டு வைத்ததுபோல் அந்த ஜாதி நாய் நிக்கியை 'இதன் வழியாக வா' என்று கூறுவது போல் நிக்கியின் முன்னங்கால்களில்

ஒன்றைப் பிடித்து இழுத்தது.

நிக்கிப் பங்களாக் காம்பவுண்டுக்குள் ஓடிப் போய் விட்டது. இரண்டும் மகிழ்ச்சிப் பெருக்கில் ஒன்றன்மீது ஒன்று தாவிப் புரண்டு கவ்வி விளையாடின. நிக்கி அதன் பிடிகளிலிருந்து விலகித் திமிறி ஓடி ஓடி ஆனந்த நடனம் ஆடியது. இதனுடைய ஆட்டத்தைச் சற்று விலகி இருந்து அநுபவித்த ஜாதி நாய் சமயம் பார்த்துக் கொண்டிருந்தது. திடீரென்று நிக்கியின் மீது தாவியது. அவ்வளவுதான்; அந்தப் பிடியிலிருந்து அசைய முடியாமல் கட்டுண்டு கண் கிறங்கியது.

பங்களா வீட்டினுள்ளிருந்து நாயைக் காணோமே என்று கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த வீட்டு எஜமானி, ' ஏ... சீ! சர்தார்!... சர்தார்!' என்று இரண்டு தடவை கூப்பிட்டாள். அதற்குள் இந்தப் பிணைப்பு பிரிக்க முடியாததாகப் போகவே, தன்னை யாராவது கவனித்தார்களா என்று சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு உள்ளே போய்க் கதவை மூடிக் கொண்டாள் எஜமானி.

இப்போதெல்லாம் நிக்கி எங்கே போனாலும் எல்லோருமே விரட்டுகிறார்கள். எந்த வீட்டின் அருகேயும் யாரும் அதனை நெருங்க விடமாட்டேனென்கிறார்களே!

எங்கேயாவது இந்தத் தெரு நாய், குட்டி போட்டு வைத்துவிடுமோ என்ற அச்சத்தினாலேயே அவர்கள் விரட்டுகிறார்கள் என்று நிக்கிக்குப் புரியவே இல்லை. விரட்டுவதும் ஓடுவதும் அதற்குப் புதிதா என்ன? ஆனாலும் இப்போதெல்லாம் ஓடுவது சிரமமாக இருக்கிறதே, இந்த அநுபவந்தான் அதற்குப் புதிதாக இருந்தது.

சுத்தமான திண்ணையிலும் காம்பவுண்டுகளிலும் இந்த அசுத்தம் பிடித்த நாய்க்கு இடம் தர மறுத்து விரட்டியபின் கடைசியில் ஒருநாள் இரவில் மிகுந்த வேதனையோடும் விரக்தியோடும் அசுத்தம் பிடித்த ஒரு சேரிக்குள் நுழைந்தது நிக்கி.

அது பிறந்ததே, அந்த மாதிரி இன்னொரு குப்பம்.

ஈரம், சகதி. ஒரு குடிசையின் பின்னால் உள்ள மூலையில் சுகமான புழுதி மண்ணில் ஐந்து அழகிய நாய்க் குட்டிகளைப் பிரசவித்தது நிக்கி.

எல்லோரும் வந்து அந்தக் குட்டிகளின் அழகைப் புகழ்ந்தார்கள். ஏதோ ஜாதி நாயின் கலப்பு என்று பெருமையாகப் பேசிக்கொண்டார்கள். சில நாட்களில் அவை அனைத்தும் நிக்கியிடமிருந்து பறிபோயின.

வாழ்வும் தாழ்வும், பெருமையும் வீழ்ச்சியும், மகிழ்ச்சியும் துயரமும் நாயின் வாழ்க்கையிலும் மாறி மாறித்தான் வரும் போலும்!

காரில் போகிற, சங்கிலியால் பிணித்துக் கையில் இழுத்துக் கொண்டு போகிற ஜாதி நாய்களைப் பார்த்து இப்போது நிக்கி ஓடுகிறது. ஒருவேளை, தனது குட்டியை அது தேடுகிறதோ? நிக்கி பெற்றதாகவே இருந்தாலும் அவை நிக்கியின் ஜாதியாகிவிடுமா, என்ன?

அதோ, பங்களா நாயையோ அல்லது இன்னுமொரு குப்பத்து நாயையோ தேடித் தெரு நாயாக நிக்கி அலைந்து கொண்டிருக்கிறது. அதற்கு இப்போது

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஒரு நாயின் தேவையை நாடுகிற ஸீஸன். தேவை என்று வந்து விட்டால் ஜாதியையா பார்க்கத் தோன்றும்?

(எழுதப்பட்ட காலம்: 1970)

நன்றி: குருபீடம் (சிறுகதைத் தொகுப்பு), ஜெயகாந்தன் - ஏழாம் பதிப்பு: 1995 - மீனாட்சி புத்தக நிலையம், மதுரை - 1

----------

*உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப*

---

## 24. ஒரு வீடு பூட்டிக் கிடக்கிறது (1969)

வேப்ப மரத்தடியில் நிற்கும் பசுவின் பின்னங் கால்களைக் கட்டி விட்டு மடியைக் கழுவுவதற்காகப் பக்கத்திலிருந்து தண்ணீர்ச் செம்பை எடுக்கத் திரும்பிய சுப்புக் கோனார்தான் முதலில் அவனைப் பார்த்தான். பார்த்த மாத்திரத்திலேயே கோனாருக்கு அவனை அடையாளம் தெரிந்து விட்டது. அதே சமயம் அவன் மார்புக்குள் 'திக்'கென்று என்னமோ உடைந்து ஒரு பயமும் உண்டாயிற்று. அடையாளம் தெரிந்ததால் தனக்கு அந்த பயம் உண்டாயிற்றா அல்லது அவனைக் கண்ட மாத்திரத்திலேயே தன்னைக் கவ்விக் கொண்ட அந்தப் பயத்தினால்தான் அவனை அடையாளம் கண்டுகொள்ள முடிந்ததா என்று நிச்சயிக்க முடியாத நிலையில் அவனை அடையாளம் கண்டதும் அச்சம் கொண்டதும் சுப்புக் கோனாருக்கு ஒரே சமயத்தில் நிகழ்ந்தன.

அது பனிக்காலம்தான். இன்னும் பனிமூட்டம் விலகாத மார்கழி மாதக் காலை நேரம்தான். அதற்காக உடம்பு திடீரென்று இப்படி உதறுமா என்ன? பாதத்தின் விரல்களை மட்டும் பூமியில் ஊன்றி, குத்திட்டு அமர்ந்திருந்த கோனாரின் இடது முழங்கால் ஏகமாய் நடுங்கிற்று. எழுந்து நின்று கொண்டான். உடம்பு நடுங்கினாலும் தலையில் கட்டியிருக்கும் 'மப்ள'ருக்குள்ளே திடீரென வேர்க்கிறதே!

முண்டாசை அவிழ்த்துத் தலையை நன்றாகச் சொறிந்து விட்டுக் கொண்டான் கோனார்.

காலனி காம்பவுண்டின் இரும்பாலான கதவுகளை ஓசையிடத் திறந்து பெரிய ஆகிருதியாய் உள்ளே வந்து கொண்டிருந்த அவன், தன்னையே குறி வைத்து முன்னேறி வருவது போலிருந்தது கோனாருக்கு.

அவன் கால் செருப்பு ரொம்ப அதிகமாகக் கிறீச்சிட்டது. அவன் கறுப்பு நிறத்தில் கட்டம் போட்ட லுங்கி அணிந்திருந்தான். உள்ளே போட்டிருக்கும் பனியனும், இடுப்பிலணிந்த நான்கு விரற்கடை அகலமுள்ள தோல் பெல்ட்டும், அந்த பெல்ட்டிலே தொங்குகின்ற அடர்ந்த சாவிக் கொத்தின் வளையத்தை இணைத்து இடுப்பில் செருகி இருக்கும் பெரிய பேனாக் கத்தியும் தெரிய அணிந்த மஸ்லின் ஜிப்பா; அதைப் பார்க்கும்போது சாவிக் கொத்திலே இணைத்த ஒரு பேனாக் கத்தி மாதிரி தோன்றாமல் கத்தியின் பிடியிலே ஒரு சாவிக் கொத்தை இணைத்திருப்பது போல் தோன்றும் அளவுக்கு அந்தக் கத்தி பெரிதாக இருந்தது.

www.t.me/tamilbooksworld

அவன் சுப்புக் கோனாரைச் சாதாரணமாகத்தான் பார்த்தான். தான் வருகிற வழியில் எதிரில் வருகிற எவரையும் பார்ப்பதுபோல்தான் பார்த்தான். போதாதா கோனாருக்கு? ஓடவும் முடியாமல், நிற்கவும் முடியாமல், பால் கறக்கவும் முடியாமல், பசுவின் காலை அவிழ்க்கவும் முடியாமல் தன்னைக் கடந்து செல்லும் அவனது முதுகைப் பார்த்தவாறு உறைந்து போய் நின்றிருக்கும் கோனாரைப் பார்த்து வேப்ப மரத்தில் கட்டிப்பட்டிருந்த அந்தக் கன்றுக்குட்டிக்கு என்ன மகிழ்ச்சியோ? ஒரு துள்ளுத் துள்ளிக் கட்டை அவிழ்த்துக் கொண்டு பசுவின் மடியில் வந்து முட்டியதைக் கூட அவன் பார்க்கவில்லை.

வழக்கம்போல் படுக்கையிலிருந்து எழுந்ததும் பசுவின் முகத்தில் விழிப்பதற்காக ஜன்னல் கதவைத் திறந்த முதல் வீட்டுக் குடித்தனக்காரரான குஞ்சுமணி இந்த மஸ்லின் ஜிப்பாக்காரனின் - காக்கை கூடு கட்டிய மாதிரி உள்ள கிராப்பையும், கிருதாவையும் பார்த்து முகம் சுளித்துக் கண்களை மூடிக் கொண்டார். கண்ணை மூடிக் கொண்ட பிறகுதான் மூடிய கண்களுக்குள்ளே அவனை அவருக்கு அடையாளம் தெரிந்தது. மறுபடியும் கண்களைத் திறந்து பார்த்தார். அவனேதான்!

அவனைத் துரத்திக் கொண்டு யாராவது ஓடி வருகிறார்களா என்று பார்ப்பதற்காகக் குஞ்சுமணி வெளியில் ஓடி வந்தார்.

அப்போது அவன் அவரையும் கடந்து மேலே போய்க் கொண்டிருந்தான். வெளியில் வந்து பார்த்த குஞ்சுமணி, பசுவின் காலைக் கட்டிப்போட்டு விட்டுத் தன் கால்களையும் பயத்தால் கட்டிப் போட்டுக் கொண்டு நிற்கும் சுப்புக் கோனாரைப் பார்த்தார். கோனாருக்குப் பின்னால் காம்பவுண்டு 'கேட்'டுக்கு வெளியே நின்றிருந்த அந்த ஜட்கா வண்டியிலிருந்துதான் இவன் இறங்கி வருகிறானா என்று குஞ்சுமணியால் தீர்மானிக்க முடியவில்லை.

ஏனெனில் - தெருவோடு போகிற வண்டி தானாகவே அதன் போக்கில் நின்றிருக்கலாமென்று தோன்றுகிற விதமாக அந்த ஜட்கா வண்டியின் குதிரை, பின்னங்கால்களை முழங்கால் வளையப் பூமியில் உந்தி விறைத்துக் கொண்டு புழுதி மண்ணில் நுரை கிளம்பச் சிறுநீர் கழித்த பின், கழுத்துச் சலங்கை அசைய அப்போதுதான் நகர ஆரம்பித்திருந்தது. காலையில் தனக்கு வரிசையாகக் காணக் கிடைக்கின்ற 'தரிசன'ங்களை எண்ணிக் காறித் துப்பினார் குஞ்சுமணி. துப்பிய பிறகுதான் 'அவன் திரும்பிப் பார்த்துவிடுவானோ' என்று அவர் பயந்தார். அந்தப் பயத்தினால், தான் துப்பியது அவனைப் பார்த்து இல்லை என்று அவனுக்கு உணர்த்துவதற்காக "தூ! தூ! வாயிலே கொசு பூந்துட்டது" என்று இரண்டு தடவை பொய்யாகத் துப்பினார் குஞ்சுமணி.

அவன் அந்தக் காலணியின் உள்ளே நுழைந்து இரண்டு பக்கமும் வரிசையாய் அமைந்த அந்தக் குடியிருப்பு வீடுகளை ஏறிட்டுக் கூடப் பார்க்காமல், அவற்றின் உள்ளே மனிதர்கள் தான் வாழுகிறார்களா என்றூ அறியக் கூட சிரத்தையற்றவனாய், தனது இந்த வருகையைக் கண்டபின் இங்கே உள்ள அத்தனை பேருமே ஆச்சரியமும், அச்சமும், கவலையும், கலக்கமும் கொள்வார்கள் என்று தெரிந்தும், அவர்களின் அந்த உணர்ச்சிகளைத் தான் பொருட்படுத்தவில்லை என்று காட்டிக் கொள்ளுகிற ஓர் அகந்தை மாதிரி, 'இங்கே இருக்கும் எவனையும் போல் எனக்கும் இங்கு நடமாட உரிமை உண்டு' என்பதைத் தனது இந்தப் பிரசன்னத்தின் மூலம் ஒரு மௌனப் பிரகடனம் செய்கின்ற தோரணையில், பின்னங் கைகளைக் கட்டிக் கொண்டு, பின்புறம்

கோத்த உள்ளங்கைகளைக் கோழிவால் மாதிரி ஆட்டிக் கொண்டு, 'சரக் சரக்' என்று நிதானமாய், மெதுவாய், யோசனையில் குனிந்த தலையோடு மேலே நடந்து கொண்டிருந்தான்.

அந்த அகந்தையும், அவனது மௌனமான இந்தப் பிரகடனத்தையும்தான் குஞ்சுமணியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஆனால், தாங்கிக் கொள்ளாமல் வேறென்ன செய்வது? ஏற்கனவே ஒரு பக்கம் பயத்தால் படபடத்துக் கொண்டிருக்கும் அவர் மனத்துள், அவனது இந்த நடையைப் பார்த்ததும் கோபமும் துடிதுடிக்க ஆரம்பித்தது. ஆனால், அறிவு நிதானமாக வேலை செய்தது அவருக்கு.

"இவன் எதற்கு இங்கு வந்திருப்பான்! இவன் நடையைப் பார்த்தால் திருடுவதற்கு வந்தவன் மாதிரி இல்லை. எதையோ கணக்குத் தீர்க்க வந்து அதற்காகக் காத்துக் கொண்டிருக்கிற நிதானம் இவன் நடையில் இருக்கிறதே.... ஆள் அப்போ இருந்ததை விட இப்போ இன்னும் கொஞ்சம் சதை போட்டிருக்கான். அப்போ மட்டும் என்ன.... சுவரேறிக் குதிச்ச வேகத்திலே கீழே விழுந்து, முழங்காலை ஒடிச்சுக்காமல் இருந்திருந்தான்னா அத்தனை பேரையும் அப்படியே அள்ளித் தூக்கித் தூர எறிஞ்சுட்டு ஓடிப் போயிருப்பான்... அன்னிக்கு முழங்கால்லேருந்து கொட்டின ரத்தத்தையும், பட்டிருந்த அடியையும் பார்த்தப்போ, இவனுக்கு இன்னமே காலே விளங்காதுன்னு தோணித்து எனக்கு. இப்போ என்னடான்னா நடை போட்டுக் காட்டறான், நடை! அது சரி! இப்போ இவன் எதுக்கு இங்கே வந்திருக்கான்?... என்ன பண்ணினாப் போவான்?... இவன் வந்திருக்கறது நல்லதுக்கில்லைன்னு தோணறதே. இன்னிக்கு யார் மொகத்திலே முழிச்சேனோ? சித்தமின்னே இவன் மொகத்திலே தான் முழிச்சேனோ?..." என்ற கலவரமான சிந்தனையோடு சுப்புக் கோனாரைப் பரிதாபமாகப் பார்த்தார், குஞ்சுமணி. அந்தப் பார்வையில் சுப்புக் கோனாரின் உடம்பையும், அந்த 'அவனு'டைய உடம்பையும் ஒப்பிட்டு அளந்தார்.

'கோனாருக்கு நல்ல உடம்புதான்... தயிர், பால், வெண்ணெய், நெய்யில் வளர்ந்த உடம்பாச்சே! சரிதான்! ஆனால், அடி தாங்குமோ? அவனுக்கு அன்னிக்கு முழங்காலிலே அடி படாமல் இருந்திருந்தா, இந்த சுப்புக் கோனார், கீழே விழுந்திருந்த அவன் முதுகிலே அணைக்கயத்தாலே வீறு வீறுன்னு வீறி இருப்பானா! அந்தக் கயறே ரத்தத்திலே நனைஞ்சு போயிடுத்தே!... அடிபட்டு ரத்தம் கொட்டற அந்த முழங்காலிலே ஒண்ணு வச்சான். அவ்வளவுதான்! பயல் மூர்ச்சை ஆயிட்டான். அதுக்கப்புறம் பொணம் மாதிரின்னா அவனை இழுத்துண்டு வந்து, வேப்பமரத்தோட தூக்கி வச்சுக் கட்டினா... அப்புறம் அவன் முழிச்சுப் பார்த்தப்போன்னா உயிர் இருக்கறது தெரிஞ்சது... 'தண்ணி தண்ணி'ன்னு மொனகினான். நான்தான் பால் குவளையிலே தண்ணி கொண்டு போய்க் குடுத்தேன். குடுத்த பாவி அத்தோடே சும்மா இருக்கப் படாதோ! 'திருட்டுப் பயலே! உனக்குப் பரிதாபப் பட்டா பாவமாச்சே!'ன்னு பால் குவளையாலேயே கன்னத்திலே ஓங்கி இடிச்சேன்... தண்ணி குடிச்ச வாயிலேருந்து கொடகொடன்னு ரத்தம் கொட்டிடுத்து... அவன் கண்ணைத் திறந்து கறுப்பு முழியைச் சொருகிண்டு என்னைப் பார்த்தான். அதுக்கு அர்த்தம் இப்போன்னா புரியறது...'

'எலே பாப்பான், இருடா வந்து பாத்துக்கறேன்'ங்கற மாதிரி அன்னிக்கே தோணித்து. இப்போ வந்திருக்கான்... நான் தண்ணி குடுத்தேனே... அதை மறந்திருப்பானா என்ன? எனக்கென்ன - மத்தவா மாதிரி 'ஒருத்தன் வகையா மாட்டிண்டானே, கெடைச்சது சான்ஸ்'னு போட்டு அடிக்கற ஆசையா?

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

'இப்படித் திருடிட்டு, ஓடிவந்து, இவா கையிலே மாட்டிண்டு, அடி வாங்கி, தண்ணி தண்ணின்னு தவிக்கறயே... நோக்கென்னடா தலையெழுத்து?'ன்னு அடிச்சேன். இல்லேங்கல்லை... அடிச்சேன்... அவனுக்கு அடிச்சது மட்டும்தான் ஞாபகம் இருக்கும். இப்போ திருப்பி அடிக்கத்தான் அவன் வந்திருக்கான். எனக்கு நன்னாத் தெரியறது. அவன் நடையே சொல்றதே! நன்னா, ஆறு மாசம் ஜெயில் சாப்பாட்லே உடம்பைத் தேத்திண்டு வந்திருக்கான். வஞ்சம் தீக்கறதுக்குத்தான் வந்திருக்கான்... பாவம்! இந்த சுப்புக் கோனாரைப் பார்க்கறச்சேதான் பாவமா இருக்கு.. அப்படியே சிலை மாதிரி நின்னுட்டானே? இவன் கணக்குத்தான் அதிகம். என்னமா அடிச்சான்! அடிக்கறச்சே மட்டும் நன்னா இருந்ததோ?... இப்போ திருப்பி தரப் போறான்... நேக்கும்தான்... என் கணக்கு ஒரு அடிதான்... ஆனால், அதை நான் தாங்கணுமே!.. இந்தக் காலனிலே இருக்கிறவாள் எல்லாருமே ஆளுக்கு ஒரு தர்ம அடி போட்டா... அப்படி இவன் என்ன மகா சூரன்? எல்லாரையுமா இவன் அடிச்சுடுவான்?" என்ற எண்ணத்தோடு மறுபடியும் சுப்புக் கோனாரின் உடம்பை அளந்து பார்த்தார் குஞ்சுமணி. அவன் உடம்போடு தன் உடம்பையும் - ஏதோ இலங்கைக்குப் பாலம் போடும்போது அணில் செய்த உதவி மாதிரி தன் பலத்தையும் கூட்டி அதன் பிறகு தானும் சுப்புக் கோனாரும் சேர்ந்து போடுகிற கூச்சலில் வந்து சேருவார்கள் என்று நம்புகிற கூட்டத்தின் பலத்தையும் சேர்த்துப் பெருக்கிக் கொண்ட தைரியத்தோடு குஞ்சுமணி பலமாக ஒருமுறை - இருமினார்! அவர் என்னமோ அவனை மிரட்டுகிற தோரணையில் கனைத்து ஒரு குரல் கொடுக்கத் தான் நினைத்தார். அப்படியெல்லாம் கனைத்துப் பழக்கமில்லாத காரணத்தினாலோ, அல்லது நாள் முழுவதும் அந்த நடராஜா விலாஸில் சரக்கு மாஸ்டராக அடுப்படிப் புகையில், கடலை எண்ணெயில் உருட்டிப் போட்ட புளி உருண்டை தீய்கிற கமறலில் இருமி இருமி நாள் கழிக்கிற பழக்கத்தினாலோ கனைப்பதாக நினைத்துக் கொண்டு அவரால் இருமத்தான் முடிந்தது.

அவன், அவரையோ, அவர் இருமலையோ கொஞ்சம்கூட லட்சியம் செய்யாமல் பூட்டிக் கிடக்கும் அந்த வீட்டு வாசற்படிகளில் ஏறினான்.

"நல்ல இடம்தான் பார்த்திருக்கான். திண்ணையிலே உக்காந்துக்கப் போறான். பக்கத்திலே இருக்கிற குழாயடிக்கு எப்படிப் பொம்மனாட்டிகள் வந்து தண்ணி பிடிப்பா?... இதோ! இன்னும் சித்த நாழியிலே எங்க அம்மா ரெண்டு குடத்தையும் கொண்டு வந்து திண்ணையிலே வச்சுட்டு, 'குஞ்சுமணிக் கண்ணா! என் கண்ணோல்லியோ? ரெண்டே ரெண்டு குடம் தண்ணி கொண்டு வந்து குடுத்துடுடா'ன்னு கெஞ்சப் போறாள். பாவம். அவளுக்கு உக்காந்த இடத்திலே சமைச்சுப் போடத்தான் முடியும். தண்ணிக் குடம் தூக்க முடியுமா என்ன? ரெண்டு குடத்தையும் எடுத்துண்டு நான் குழாயடிக்குப் போகப் போறேன். அப்படியே அலாக்கா என்னைத் திண்ணை மேலே தூக்கி... சொல்லிடணும்.... 'ஒரு அடி தாம்பா தாங்க முடியும். அதோட விட்டுடணும்... அவ்வளவுதான் என் கணக்கு'ன்னு சொல்லிடணும். நியாயப்படி பார்த்தா அவன் முதல்லே சுப்புக் கோனாரைத்தானே அடிக்கணும்? இந்தக் கோனாருக்கு அவனை அடையாளம் தெரியலியோ?..."

"ஏய், சுப்பு! பாத்துண்டு நிக்கறீயே... ஆளை உனக்கு அடையாளம் தெரியலையா?" என்று குரலைத் தாழ்த்திச் சுப்புக் கோனாரை விசாரித்தார், குஞ்சுமணி.

"அடையாளம் எனக்குத் தெரியுது சாமி. என்னையும் அவனுக்குத் தெரிஞ்சிருக்குமோன்னுதான் யோசிக்கிறேன்" என்று முணுமுணுத்தான்

www.t.me/tamilbooksworld

சுப்புக் கோனார்.

அந்த நேரம், கையில் பால் செம்புடன் வெளியில் வந்த குஞ்சுமணியின் தாயார் சீதம்மாள், சுப்புக் கோனார் பாலைக் கறக்காமல் தன் பிள்ளையாண்டானுடன் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். அதுவும் அவன் ரகசியமாகப் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து, அதைத் தானும் அறிந்து கொள்ளும் ஆர்வத்துடன், காதை மறைத்திருந்த முக்காட்டை எடுத்துச் செவி மடலில் செருகிக் கொண்டு வேப்பமரத்தடிக்கு வந்தாள்.

சாதாரணமாகக் குஞ்சுமணி யாருடனும் பேசமாட்டார். காலையில் எழுந்தவுடன் ஜன்னல் வழியாகப் பசுவைத் தரிசனம் செய்துவிட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்துகொண்டு வெற்றிலை சீவல் போட ஆரம்பிப்பார். சீதம்மாள் பாலை வாங்கிக் கொண்டு போய், காப்பி கலந்து, அவரைக் கூப்பிடுவதற்கு முன் இரண்டு தடவையாவது வெற்றிலை போட்டு முடித்திருப்பார் குஞ்சுமணி. காப்பி குடித்த பிறகு இன்னொரு முறை போடுவார். வெற்றிலை, சீவல், புகையிலை அடைத்த வாயுடன் இரண்டு குடங்களையும் தூக்கிக் கொண்டு குழாயடிக்கு வருவார். அவர் அதிகமாகப் பேசுகின்ற பாஷையே 'உம்', 'ம்ஹீம்' என்ற ஹீங்காரங்களும் கையசைப்பும்தான். அப்படிப்பட்ட குஞ்சுமணி காலையில் எழுந்து வெற்றிலை கூடப் போடாமல் இந்தக் கோனாரிடம் போய் ஏதோ பேசுகிறார் என்றால், அது ஏதோ மிக அவசியமான, சுவாரசியமான விஷயமாய்த்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்த சீதம்மாள், மோப்பம் பிடிக்கிற மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு நாலு புறமும் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு வேப்பமரத்தடிக்கு வந்தாள். அவ்விதம் அவள் பார்க்கும்போது அந்தப் பூட்டிக் கிடக்கும் வீட்டின் முன்னால் நின்றிருக்கும் அவன், இவர்கள் மூவரையும் திரும்பிப் பார்த்தான்.

"இங்கேதான் பார்க்கறான்... அம்மா, நீ ஏன் அங்கே பார்க்கறே?" என்று பல்லைக் கடித்தார் குஞ்சுமணி.

"யார்ரா அவன்? பூட்டிக் கிடக்கற வீட்டண்ட என்ன வேலை? கேள்வி முறை கிடையாதா? யாரு நீ?" என்று அவனைப் பார்த்த மாத்திரத்தில் குரலை உயர்த்திச் சப்தமிட்டவாறே பால் செம்புடன் கையை நீட்டி நீட்டிக் கேட்டுக்கொண்டு, அவனை நோக்கி நடந்த சீதம்மாளின் கையைப் பிடித்து இழுத்து நிறுத்தினார் குஞ்சுமணி.

"அவன் யாரு தெரியுமோ? முன்னே ஒரு நாள் காலையிலே எங்கேயோ திருடிட்டு, அவா துரத்தறச்சே ஓடி வந்து நம்ப காம்பவுண்டுச் சுவரிலே ஏறிக் குதிச்சுக் காலை ஒடிச்சிண்டு, இந்தக் கோனார் கையிலே மாட்டிண்டு அடிபட்டானே...."

"சொல்லு..."

"பத்து மணிக்குப் போலீஸ்காரன் வரவரைக்கும் வேப்பமரத்திலே கட்டி வச்சு, போறவா வரவா எல்லாரும் ஆளுக்கொரு தர்ம அடி போட்டாளே..."

"ஆமா..."

"நான் கூடப் பால் குவளையாலே கன்னத்திலே ஓங்கி இடிச்சேனே... அவன்தான் - அந்தத் திருடன்தான் வந்திருக்கான்... திருடறதுக்கு இல்லே. எல்லாருக்கும் திருப்பிக் குடிக்கறத்துக்கு..."

"குடுப்பான்... குடுப்பான். மத்தவா கை பூப்பறிச்சுண்டிருக்குமாக்கும்... திருடனைக் கட்டி வச்சு அடிக்காம கையைப் பிடிச்சு முத்தம் குடுப்பாளாக்கும்...? என்ன கோனாரே! இந்த அக்கிரமத்தைப் பாத்துண்டு நிக்கறீரே? மரியாதையா காம்பவுண்டை விட்டு வெளியே போகச் சொல்லும்... இல்லேன்னா போலீஸைக் கூப்பிடுவேன்னு சொல்லும்" என்றூ அந்தக் காலனியையே கூட்டுகிற மாதிரி 'ஓ' வென்று கத்தினாள் சீதம்மாள்.

அவளுடைய கூக்குரல் கிளம்புவதற்கு முன்னாலேயே அந்தக் காலனியில் ஓரிருவர் பால் வாங்குவதற்காகவும், குழாயடியில் முந்திக் கொள்வதற்காகப் பாத்திரம் வைக்கவும் அங்கொருவர், இங்கொருவராய்த் தென்படலாயினர்.

இப்போது சீதம்மாளின் குரல் கேட்ட பிறகு, எல்லாருமே அந்தப் பூட்டி இருக்கும் வீட்டுத் திண்ணையின் மேல் வந்து உட்கார்ந்திருக்கும் அந்த அவனைப் பார்த்தனர்; பார்த்ததும் அடையாளமும் கண்டனர். சுப்புக் கோனார் மாதிரியும், குஞ்சுமணி மாதிரியும் அவனது பிரசன்னத்தைக் கண்டு அவர்களும் அஞ்சினர்.

கூட்டம் சேர்ந்த பிறகு கோனாருக்குக் கொஞ்சம் தைரியம் வந்தது. 'என்ன இவன்?... பெரிய இவன்!... திருட்டுப் பயல்தானே? அன்னிக்கு வாங்கின அடி மறந்திருக்கும். என்ன உத்தேசத்தோட வந்திருப்பான்னுதான் யோசிச்சேன்...'

மப்ளரை உதறித் தோளில் போட்டுக் கொண்ட கோனார், பலமாக ஒரு கனைப்புக் கனைத்தான்.

'ம்...' என்று குஞ்சுமணி அந்தக் கனைப்பை மனசுக்குள் சிலாகித்துக் கொண்டார்.

கோனார், தைரியமாக, கொஞ்சம் மிரட்டுகிற தோரணையுடனேயே அவன் உட்கார்ந்திருந்த அந்தத் திண்ணையை நோக்கி நடந்தான். அவனுக்குத் துணையாக - ஏதாவது நடந்தால் விலக்கி விடவோ, அல்லது கூச்சலிடவோ ஒரு ஆள் வேண்டாமா? அதற்காக - குஞ்சுமணியும் கோனாரின் பின்னால் கம்பீரமாக நடந்து சென்றார்.

"எலே!... உன்னை யாருன்னு இங்கே எல்லாருக்கும் தெரியும்... இடம் தெரியாம வந்துட்டே போல இருக்கு. வேறே ஏதாவது தகராறு வரதுக்கு முன்னாடி இந்தக் காம்பவுண்டை விட்டு வெளியே போயிடு" என்று கோனார் சொல்லும் போது -

"ஆமாம்பா... தகராறு பண்ணாம போயிடு... நோக்கு இடமா கிடைக்காது?" என்று குஞ்சுமணியும் குரல் கொடுத்தார்.

அவன் மௌனமாக ஜிப்பா பாக்கெட்டிலிருந்து ஒரு பீடியை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான். பின்னர் சாவதானமாய் இடுப்பை எக்கி பெல்ட்டோ டு தைத்திருந்த ஒரு பையைத் திறந்து, நான்காய் மடித்து வைத்திருந்த ஒரு காகிதத்தைக் கோனாரிடம் கொடுத்துவிட்டு, அதிலிருந்து ஒரு சாவியைத் தேடி எடுத்து, அந்தப் பூட்டிய வீட்டின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனான்.

கோனார் அந்தக் காகிதத்தைக் குஞ்சுமணியிடம் கொடுத்தான். குஞ்சுமணி அதை வாங்கிப் பார்த்ததும் வாயைப் பிளந்தார்.

www.t.me/tamilbooksworld

"என்னய்யா கோனாரே... முதலியார் கிட்டே இரண்டு மாச அட்வான்ஸ் ஐம்பது ரூபாய் கட்டி, ரசீது வாங்கிண்டு வந்திருக்கானய்யா..." என்று ஏக்கத்தோடு பெருமூச்சு விட்டார்.

"நன்னா இருக்கே, நாயம்! சம்சாரிகள் இருக்கற எடத்துலே திருட்டுப் பயலைக் கொண்டு வந்து குடி வெக்கறதாவது? இந்த முதலியாருக்கென்ன புத்தி கெட்டா போயிடுத்து? ஏண்டா குஞ்சுமணி! நானும் இந்த வீடு காலியான பதினைந்து நாளா சொல்லிண்டு இருக்கேனோன்னோ? நம்ப சுப்புணி பிள்ளை பட்டம்பி இங்கே ஏதோ 'கோப்பரேட்டி' பரீட்சை எழுத வரப் போறேன்னு கடிதாசி எழுதினப்பவே சொன்னேனே.... 'அந்த முதலியார் மூஞ்சியிலே அம்பது ரூபாக் காசை 'அடுமாசி'யா விட்டெறிஞ்சுட்டு இந்த இடத்தைப் பிடிடா'ன்னு சொன்னேனோன்னோ?... நேக்கு அப்பவே பயம்தான்... வயசுப் பொண்கள் இருக்கற எடத்துலே எவனாவது கண்ட கவாலிப் பயல் வந்துடப்படாதேன்னு... பாரேன்.... அவனும் அவன் தலையும்.... கட்டால போறவன்... பீடி வேறே பிடிச்சுண்டு... என்ன கிரகசாரமோ?" என்று முடிவற்று முழங்கிக் கொண்டிருந்த சீதம்மாளை வாயைப் பொத்தி அடக்குவதா, கழுத்தை நெரித்து அடக்குவதா என்று புரியாத படபடப்பில் பல்லைக் கடித்துக் கொண்டு அவள் முகத்துக்கு நேரே இரண்டு கையையும் நீட்டி -

"அவன் காதுலே விழப் போறது. வாயை மூடு.... அவன் கையால எனக்கு அடி வாங்கி வெக்கறதுன்னு கங்கணம் கட்டிண்டு நிக்கறயா? எவனும் எங்கேயும் வந்துட்டுப் போறான். நமக்கென்ன?" என்று கூறிச் சீதம்மாளின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு தன் வீட்டை நோக்கி நடந்தார் குஞ்சுமணி.

"நேக்கு என்னடா பயம்? நோக்கு பயமா இருந்தா, நீ ஆத்துக்குள்ளே இரு... புருஷாள்ளாம் வெளிலே போயிடுவேள்; நாங்க பொம்மனாட்டிகள்னா வயத்துலே நெருப்பைக் கட்டிண்டு இங்கே இருக்கணும்... இப்பவே குழாயடியிலிருந்த தவலையைக் காணோம்... கொடியிலே உலர்த்தியிருந்த துணியைக் காணோம்... போறாக்குறைக்கு திருடனையே கொண்டு வந்து குடி வச்சாச்சு... காதுலே மூக்கிலே ரெண்டு திருகாணி போட்டுண்டிருக்கற கொழந்தைகளை எப்படித் தைரியமா வெளிலே அனுப்பறது? ஓய்.... கோனாரே, பேசாம போய் போலிசுலே ஒரு 'கம்ப்ளேண்டு' குடும். இதே எடத்துலே இவனைப் பிடிச்சுக் குடுத்திருக்கோம்" என்று வழி நெடுக, வாயைப் பொத்துகிற மகனின் கையைத் தள்ளித் தள்ளிப் புலம்பியவாறு வீட்டுக்குள் சென்ற சீதம்மாள், உள்ளே இருந்தும் உரத்த குரலில் அந்தத் தெருவுக்கே அபாய அறிவிப்புக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

இதற்கிடையில், சுப்புக் கோனார், வேப்ப மரத்தடியில் கட்டியிருந்த பசுவின் மடியில் பாலை ஊட்டிக் கொண்டிருந்த கன்றுக் குட்டியைப் பார்த்துவிட்டுக் கோபமாக வைது கொண்டு ஓடி வந்தான். பசுவின் மடியில் கொஞ்சங்கூட மிச்சம் வைக்காமல், உறிஞ்சிவிட்ட எக்களிப்பில், வாயெல்லாம் பால் நுரை வழியத் துள்ளிக் கொண்டிருந்தது கன்றுக் குட்டி. பசு, கோனாரைக் கள்ளத்தனமாகப் பார்த்தது. ஆத்திரமடைந்த கோனார் பசுவின் காலைக் கட்டியிருந்த அணைக் கயிற்றை அவிழ்த்துச் 'சுரீர்' என்று ஒன்று வைத்தான். அடுத்த அடி கன்றுக் குட்டிக்கு. பசுவும் கன்றும் ஒன்றை ஒன்று துரத்திக் கொண்டு காம்பவுண்டு கேட்டைத் தாண்டி ஓடின.

கையில் பால் செம்புடன் வெளியில் வந்த சீதம்மாளைப் பார்த்துச் சுப்புக் கோனார் கத்தினான்: "பாலுமில்லை ஒண்ணுமில்லை, போங்கம்மா... கன்னுக்குட்டி ஊட்டிப்பிடுத்து... இந்தத் திருட்டுப் பய முகத்திலே

www.t.me/tamilbooksworld

முழிச்சதுதான்" என்று சொல்லிக் கொண்டே இது தான் சந்தர்ப்பமென்று அவனும் அங்கிருந்து நழுவினான்.

திண்ணையில் உட்கார்ந்து வெற்றிலை சீவல் போட்டுக் கொண்டிருந்த குஞ்சுமணி, "மத்தியானத்துக்கு கொஞ்சம் சீக்கிரமா வந்துடு" என்று குரல் கொடுத்தார். 'அதற்குள்ளே இங்கு என்னென்ன நடக்கப் போகிறதோ?' என்று எண்ணிப் பயந்தார்.

சற்று நேரத்திற்கெல்லாம் அந்தக் காலனி முழுவதும், ஆறு மாதத்துக்கு முன் ஒரு நாள் விடியற்காலையில், எங்கோ திருடிவிட்டு, தப்பி ஓடிவந்து, சுவரேறிக் குதித்து, இங்கே சிக்குண்டு, எல்லோரிடமும் தர்ம அடி வாங்கி, போலீசில் ஒப்படைக்கப்பட்டு, ஆறு மாதம் சிறை தண்டனையும் பெற்ற ஒரு பழைய கேடி, இங்குள்ள, இத்தனை நாள் காலியாக இருந்த, இதற்கு முன் ஒரு கல்லூரி மாணவன் தங்கிப் படித்துக் கொண்டிருந்த அந்தக் கடைசிப் போர்ஷனில் குடி வந்திருக்கிறான் என்கிற செய்தி பரவிற்று.

திண்ணையில் உட்கார்ந்திருந்த குஞ்சுமணி, வெற்றிலையை மென்று கொண்டே, அந்தத் திருடனைப் பற்றிய பயங்கரக் கற்பனைகளை வளர்த்துக் கொண்டிருந்தார். அந்தக் காலனியிலே திரிகின்ற ஒவ்வொரு மனிதரையும் அவர் அவனோடு சம்பந்தப்படுத்திப் பார்த்தார். ஆமாம். அவர்கள் எல்லோருக்குமே அவனுடன் ஏதோ ஒரு விதத்தில் சம்பந்தம் இருந்திருக்கிறது. பால் குவளையால் அவன் கன்னத்தில் ஓங்கி இடித்ததன் மூலம் அவனோடு குறைந்த பட்சம் சம்பந்தம் கொண்டவர் தான் மட்டுமே என்பதில் அவருக்கு கொஞ்சம் ஆறுதல் இருந்தது. மற்றவர்களெல்லாம் அவனை எவ்வளவு ஆசை தீர, ஆத்திரம் தீர அடித்தனர் என்பதை அவர் தனது மனக் கண்ணால் கண்டு, அந்த அடிகள் எல்லாம் அவர்களுக்கு வட்டியும் முதலுமாகத் திரும்பக் கிடைக்கப் போவதைக் கற்பனை செய்து அவர்களுக்காகப் பயந்து கொண்டிருந்தார்.

'அந்த பதினேழாம் நம்பர் வீட்டிலே குடி இருக்கானே, போஸ்டாபீஸிலே வேலை செய்யற நாயுடு - சைக்கிளிலே வந்தவன் - சைக்கிளிலே உக்காந்தபடியே, ஒரு காலைத் தரையில் ஊணிண்டு எட்டி வயத்துலே உதைச்சானே... அப்படியே எருமை முக்காரமிடற மாதிரி அஞ்சு நிமிஷம் மூச்சு அடைச்சு, வாயைப் பிளந்துண்டு அவன் கத்தினப்போ, இதோட பிழைக்க மாட்டான்னு நெனைச்சேன்... இப்போ திரும்பி வந்திருக்கான்! அவனை இவன் சும்மாவா விடுவான்? இவன் வெறும் திருடனாக மட்டுமா இருப்பான்? பெரிய கொலைகாரனாகவும் இருப்பான் போல இருக்கே...' என்ற அவரது எண்ணத்தை ஊர்ஜிதம் செய்வது மாதிரி, அவன் அந்தக் கடைசி வீட்டிலிருந்து கையில் கத்தியுடன் இறங்கி வந்தான். இப்போது மேலே அந்த மஸ்லின் ஜிப்பாகூட இல்லை. முண்டா பனியனுக்கு மேலே கழுத்து வரைக்கும் மார்பு ரோமம் 'பிலுபிலு'வென வளர்ந்திருக்கிறது. தோளும் கழுத்தும் காண்டா மிருகம் மாதிரி மதர்த்திருக்கின்றன.

'ஐயையோ... கத்தியை வேற எடுத்துண்டு வரானே... நான் வெறும் பால் குவளையாலேதானே இடிச்சேன்... இங்கேதான் வரான்!' என்று எண்ணிய குஞ்சுமணி, திண்ணையிலிருந்து இறங்கி, ஏதோ காரியமாகப் போகிறவர் மாதிரி உள்ளே சென்று 'படா'ரென்று கதவைத் தாளிட்டு கொண்டார். அவர் மனம் அத்துடன் நிதானமடையவில்லை. அறைக்குள் ஓடி ஜன்னல் வழியாகப் பார்த்தார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அவன் வேப்ப மரத்துக்கு எதிரே வந்து நின்றிருந்தான். வேப்ப மரம் குஞ்சுமணியின் வீட்டுக்கு எதிரே இருந்தது. எனவே, அவன் குஞ்சுமணி வீட்டின் எதிரிலும் நின்றிருந்தான்.

'ஏண்டாப்பா... எவன் எவனோ போட்டு மாட்டை அடிக்கிற மாதிரி உன்னை அடிச்சான். அவனையெல்லாம் விட்டுட்டு என்னையே சுத்திச் சுத்தி வரயே?... இந்த அம்மா கடன்காரி வேற உன் ஆத்திரத்தைக் கிளப்பி விட்டுட்டா... நேக்குப் புரியறது... மனுஷனுக்கு ரோஷம்னு வந்துட்டா பழிக்குப்பழி தீத்துக்காம அடங்காது. அதுவும் உன்னை மாதிரி மனுஷனுக்கு ஒண்ணுக்கு ஒன்பதாத் தீத்துக்கத் தோணும். நான் வேணும்னா இப்பவே ஓடிப் போயி, அந்தக் கோனார் கிட்டே பால் குவளையை வாங்கிண்டு வந்து உன் கையிலே குடுக்கறேன். வேணுமானா அதே மாதிரி என் கன்னத்திலே 'லேசா' ஒரு இடி இடிச்சுடு. அத்தோட விடு... என்னத்துக்குக் கையிலே கத்தியையும் கபடாவையும் தூக்கிண்டு அலையறே?' என்று மானசீகமாக அவனிடம் கெஞ்சினார் குஞ்சுமணி.

அந்தச் சமயம் பார்த்து, போஸ்ட் ஆபீசில் வேலை செய்கிற அந்தப் பதினேழாம் நம்பர் வீட்டுக்காரன், சைக்கிளை எடுத்துக் கொண்டு வாசலில் இறங்குவதையும் பார்த்தார். 'அடப் போறாத காலமே! ஆத்துக்குள்ளே போயிடுடா. உன் காலை வெட்டப் போறான்!' என்று கத்த வேண்டும் போலிருந்தது குஞ்சுமணிக்கு.

'எந்த வீட்டுக்கு எவன் குடித்தனம் வந்தால் எனக்கென்ன?' என்கிற மாதிரி அசட்டையாய் சைக்கிளில் ஏறிய பதினேழாம் நம்பர் வீட்டுக்காரன், வேப்ப மரத்தடியில் கையில் கத்தியோடு நிற்கும் இவனைப் பார்த்ததும் பெடலைப் பின்புறமாகச் சுற்றினான் - சைக்கிளின் வேகத்தை மட்டுப் படுத்தினான்; குஞ்சுமணியின் கண்கள் அவன் கைகளில் இருந்த கத்தியையே வெறித்தன. அவன் அந்தக் கத்தியில் எதையோ அழுத்த, 'படக்'கென்று அரை அடி நீளத்துக்கு 'பளபள'வென்று அதில் மடிந்திருந்த எஃகுக் கத்தி வெளியில் வந்து மின்னிற்று. நடக்கப்போகிற கொலையைப் பார்க்க வேண்டாமென்று கண்களை மூடிக் கொண்டார் குஞ்சுமணி. அந்தப் பதினேழாம் நம்பர் வீட்டுக்காரன் சைக்கிளைத் திருப்பி ஒரு அரைவட்டம் அடித்து வீட்டுக்கே திரும்பினான்.

குஞ்சுமணி மெள்ளக் கண்களைத் திறந்து, பதினேழாம் நம்பர் வீட்டுக்கார நாயுடு, சைக்கிளோடு வீட்டுக்குள் போவதைக் கண்டார்: 'நல்ல வேளை! தப்பிச்சே... ஆத்தை விட்டு வெளிலே வராதே... பலி போட்டுடுவான், பலி!'

அவன் வேப்பமரத்தடியில் நின்று கைகளால் ஒரு கிளையை இழுத்து வளைத்து ஒரு குச்சியை வெட்டினான். பின்னர் அதிலிருக்கும் இலையைக் கழித்து, குச்சியை நறுக்கி, கடைவாயில் மென்று, பல் துலக்கிக் கொண்டே திரும்பி நடந்தான். அவன் பார்வையிலிருந்து மறைந்ததும், குஞ்சுமணி தெருக் கதவைத் திறந்து கொண்டு வந்து திண்ணையில் அமர்ந்து வெற்றிலை போடத் தொடங்கினார்.

அவனும் தன் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து கொண்டு வெகு நேரம் துலக்கினான். அவன் வேப்ப மரத்தடியில் நின்றிருந்த சமயம், சில பெண்கள் அவசர அவசரமாக அந்தக் கடைசி வீட்டருகே இருந்த குழாயில் தண்ணீர் பிடித்துக் கொண்டு ஓடினார்கள். அவன் மறுபடியும் திண்ணையில் உட்கார்ந்து கொண்டதும் குழாயடியில் தண்ணீர் நிரம்பி வழிந்து

www.t.me/tamilbooksworld

கொண்டிருக்கும் குடத்தை எடுக்கக் கூட யாரும் வராததைக் கண்டு அவனே எழுந்து உள்ளே போனான்.

அங்குள்ள அத்தனை குடித்தனக்காரர்களும் தண்ணீர் பிடித்துக் கொண்டு குழாயடியைக் காலி செய்கிற வரைக்கும் அவன் வெளியே தலை காட்டவே இல்லை.

அந்த நேரத்தில்தான் குஞ்சுமணி ஒவ்வொரு வீடாகச் சென்று எல்லோரையும் பேட்டி கண்டார். அவர்கள் எல்லோருமே, சிலர் தன்னைப் போலவும், சிலர் தன்னைவிட அதிகமாகவும், மற்றும் சிலர் கொஞ்சம் அசட்டுத் தனமான தைரியத்தோடும் பயந்து கொண்டிருப்பதைக் கண்டார். ஒவ்வொருவரையும், "வீட்டில் பெண்டு பிள்ளைகளைத் தனியே விட்டு விட்டு வெளியில் போக வேண்டாம்" என்று கேட்டுக் கொண்டார் குஞ்சுமணி.

"ஆமாம் ஆமாம்" என்று அவர் கூறியதை அவர்கள் ஆமோதித்தார்கள். சிலர் தங்களுக்கு ஆபீசில் லீவு கிடைக்காது என்ற கொடுமைக்காக மேலதிகாரிகளை வைது விட்டு, போகும்போது வீட்டுக்குள் பாதுகாப்பாக இருக்கும்படி வீட்டிலுள்ளவர்களிடம் சொல்லிவிட்டுப் பயந்து கொண்டே ஆபீசுக்குப் போனார்கள்.

அப்படிப் போனவர்களில் ஒருவரான தாசில்தார் ஆபீஸ் தலைமைக் குமாஸ்தா தெய்வசகாயம் பிள்ளை, தமது நண்பரொருவர் உள்ளூர் போலீஸ் ஸ்டேஷனில் ரைட்டராக இருப்பது ஞாபகம் வரவே, ஆபீசுக்குப் போகிற வழியில் ஒரு புகாரும் கொடுத்துவிட்டுப் போனார்.

காலை பதினொரு மணி வரை அவன் வெளியிலே வரவில்லை. குழாயடி காலியாகி மற்றவர்களுக்கு அங்கு வேலை இல்லை என்று நிச்சயமாகத் தெரிந்த பிறகு, அவன் குளிப்பதற்காக வெளியிலே வந்தான்.

வீட்டைப் பூட்டாமலேயே திறந்து போட்டு விட்டு, அந்தக் காலனி காம்பவுண்டுச் சுவரோரமாக உள்ள பெட்டிக் கடைக்குப் போய்த் துணி சோப்பும், ஒரு கட்டு பீடியும் வாங்கிக் கொண்டு வந்தான்.

இடுப்பில் துண்டைக் கட்டிக் கொண்டு, லுங்கி, பனியன், ஜிப்பா எல்லாவற்றையும் குழாயடி முழுதும் சோப்பு நுரை பரப்பித் துவைத்தான். துவைத்த துணிகளை வேப்பமரக் கிளைகளில் கட்டிக் காயப்போட்டான்.

காலனியில் ஆளரவமே இல்லை. எல்லோரும் அவரவர் வீடுகளுக்குள்ளே அடைந்து கிடந்தனர். துணிகளைக் காயப் போட்டுவிட்டு வந்த அவன், குழாயடியில் அமர்ந்து 'தப தப'வென விழும் தண்ணீரில் நெடுநேரம் குளித்தான்.

திடீரென்று,

"மாமா... உங்க பனியன் மண்ணிலே விழுந்துடுத்து..." என்ற மழலைக் குரல் கேட்டுத் திரும்பிப் பார்க்கையில், நாலு வயதுப் பெண் குழந்தையொன்று அரையில் ஜட்டியோடு மண்ணில் கிடந்த அவனது பனியனைக் கையிலே ஏந்திக் கொண்டு நின்றிருந்தது.

அப்போதுதான் அவன் பயந்தான்.

www.t.me/tamilbooksworld

தன்னோடு இவ்வளவு நெருக்கமாக உறவாடும் இந்தக் குழந்தையை யாராவது பார்த்து விட்டார்களோ? என்று சுற்று முற்றும் திருடன் மாதிரிப் பார்த்தான்.

"நீதான் இங்கே திருட வந்திருக்கிற புது மாமாவா?... உன்னைப் பார்க்கக் கூடாதுன்னு அம்மா அறையிலே போட்டு மூடி வச்சிருந்தா... அம்மா கூடத்துலே படுத்துத் தூங்கிண்டிருக்கறச்சே நான் மெதுவா வந்துட்டேன். எனக்கு மிட்டாய் வாங்கித் தரயா? திருடிண்டு வந்துடு... அந்தப் பொட்டிக் கடையிலே நெறைய இருக்கு..."

அவன் சிரித்தான். அந்தக் குழந்தையின் கன்னத்தைத் தொட்டபொழுது அவனுக்கு அழுகை வந்தது. அவசர அவசரமாக உடம்பைத் துடைத்துக் கொண்டு இடுப்பில் கட்டிய துண்டோ டு பெட்டிக் கடைக்குப் புறப்பட்டான்.

அவன் போகும்போது அவனது இடுப்புத் துண்டைப் பிடித்து இழுத்து ரகசியமாகச் சொல்லிற்று, குழந்தை: "அம்மா பாத்தா அடிப்பா... சுருக்கப் போய் அவனுக்குத் தெரியாம மிட்டாயை எடுத்துண்டு ஓடி வந்துடு! நான் உங்காத்திலே ஒளிஞ்சிண்டிருக்கேன்..."

அவனும் ஒரு குழந்தை மாதிரியே தலையை ஆட்டிவிட்டுக் கடைக்கு ஓடினான்.

ஒரு நொடியிலே ஓடிப் போய், கை கொள்ளாமல் சாக்லெட்டை மடியில் கட்டிக் கொண்டு அவன் வந்தான்.

திருடன் என்கிற ரகசியத்தைப் பகிர்ந்து கொள்ள ஒரு துணை கிடைத்து விட்ட சந்தோஷம் போலும் அவனுக்கு! 'இது உன் வீடு' என்ற உரிமையை இந்தச் சமூகமே அந்தக் குழந்தை உருவில் வந்து தந்துவிட்ட ஒரு குதூகலம் அவனுக்கு.

அந்த மகிழ்ச்சியில் ஓடி வந்த அவன், வீட்டுக்குள் குழந்தையைக் காணாமல் ஒரு நிமிஷம் திகைத்தான். 'யாராவது வந்து அடித்து இழுத்துக் கொண்டு போய் விட்டார்களோ?' என்ற நினைப்பில் அவன் நெஞ்சு துணுக்குற்றது.

"பாப்பா... பாப்பா" என்று ஏக்கத்தோடு இரண்டு முறை அழைத்தான்.

'உஸ்' என்று உதட்டின் மீது ஆள்காட்டி விரலைப் பதித்து ஓசை எழுப்பியவாறு கதவுக்குப் பின்னால் ஒளிந்து, காத்துக் கொண்டிருந்த குழந்தை வெளியே வந்தது.

"இங்கேதான் இருக்கேன்... வேற யாரோ வந்துட்டாளாக்கும்னு நினைச்சு பயந்துட்டேன். உக்காச்சிக்கோ" என்று அவனை இழுத்து உட்கார வைத்துத் தானும் உட்கார்ந்து கொண்டது குழந்தை.

குழந்தையின் கை நிறைய வழிந்து, தரையெல்லாம் சிதறும்படி அவன் சாக்லெட்டை நிரப்பினான்.

"எல்லாம் எனக்கே எனக்கா?"

"ம்..."

இரண்டு மூன்று சாக்லெட்டுகளை ஒரே சமயத்தில் பிரித்து வாயில் திணித்துக் கொண்ட குழந்தையின் உதடுகளில் இனிப்பின் சாறு வழிந்தது.

"இந்தா! உனக்கும் ஒண்ணு" என்று ரொம்ப தாராளமாக ஒரு சாக்லெட்டை அவனுக்கும் தந்தபோது -

"ராஜி... ராஜி" என்ற குரல் கேட்டதும் குழந்தை உஷாராக எழுந்து நின்று கொண்டது.

"அம்மா தேடறா..." என்று அவனிடம் சொல்லி விட்டு "அம்மா! இங்கேதான் இருக்கேன்" என்று உரத்துக் கூவினாள் குழந்தை.

"எங்கேடி இருக்கே?"

"இங்கேதான்... திருட வந்திருக்காளே புது மாமா! அவாத்திலே இருக்கேன்."

அவனுக்குச் சிரிப்பு வந்தது. சாக்லெட்டை அள்ளிக் குழந்தை கையிலே கொடுத்து, "அம்மா அடிப்பாங்க. இப்போ போயிட்டு அப்புறமா வா" என்று கூறினான் அவன்.

"மிட்டாயெ எடுத்துண்டு போனாதான் அடிப்பா... இதோ! மாடத்திலே எல்லாத்தையும் எடுத்து வச்சுடு. நான் அப்புறமா வந்து எடுத்துக்கறேன். வேற யாருக்கும் குடுக்காதே. ரமேஷீக்குக் கூட..."

குழந்தை போன சற்று நேரத்துக்கெல்லாம் வேப்ப மரத்தில் கட்டி உலரப் போட்டிருந்த துணிகளை எடுத்து உடுத்திக் கொண்டு அவன் சாப்பிடுவதற்காக வெளியே போனான்.

மத்தியானம் இரண்டு மணிக்கு சாப்பிட்டுவிட்டு வந்த அவன் வாசற்கதவை விரியத் திறந்து வைத்துக் கொண்டு தலைமாட்டில் சாவிக் கொத்து, கத்தி, பீடிக் கட்டு, பணம் நிறைந்த தோல் வார்ப்பெல்ட்டு முதலியவற்றை வைத்து விட்டுச் சற்று நேரம் படுத்து உறங்கினான்.

நான்கு மணி சுமாருக்கு யாரோ தன்னை ஒரு குச்சியினால் தட்டி எழுப்புவதை உணர்ந்து, சிவந்த விழிகளை உயர்த்திப் பார்த்தான். எதிரே போலீஸ்காரன் நிற்பதைக் கண்டதும் எழுந்து நின்று வணங்கினான்.

குழாயடிக்கு நேரே குஞ்சுமணி, கோனார், சீதம்மாள் ஆகியவர்கள் தலைமையில் ஒரு கூட்டமே நின்று கொண்டிருந்தது.

போலீஸ்காரரை வணங்கிய பின் தன்னுடைய பெல்ட்டின் பர்ஸிலிருந்து ஒரு ரசீதை எடுத்து நீட்டினான் அவன்.

"தெரியும்டா... பொல்லாத ரசீது... ஐம்பது ரூபாக் காசைக் கொடுத்து அட்வான்ஸ் கட்டினால் போதுமா? உடனே யோக்கியனாயிடுவியா, நீ? மரியாதையா இன்னைக்கே இந்த இடத்தைக் காலி பண்ணனும். என்ன? நாளைக்கும் நீ இங்கே இருக்கறதா சேதி வந்ததோ, தொலைச்சுப்பிடுவேன், தொலைச்சு... என்னைக்கிடா நீ ரிலீஸானே?" என்று மிரட்டினான் போலீஸ்காரன்.

"முந்தா நாளுங்க, எஜமான்" என்று கையைக் கட்டிக் கொண்டு, பணிவாகப் பதில் சொன்ன அவனது கண்கள் கலங்கி இருந்தன.

அப்போது தெரு வழியே வண்டியில் போய்க் கொண்டிருந்த அந்தக்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

காலனியின் சொந்தக்காரர் சோமசுந்தரம் முதலியார், இங்கு கூடி நிற்கும் கூட்டத்தைப் பார்த்து, வண்டியை நிறுத்தச் சொன்னார்.

முதலியாரைக் கண்டதும் குஞ்சுமணி ஓடோ டி வந்தார்.

"உங்களுக்கே நன்னா இருக்கா? நாலு குடித்தனம் இருக்கற எடத்துலே ஊறறிஞ்ச திருடனைக் கொண்டு வந்து குடி வைக்கலாமா?"

'வாக்கிங் ஸ்டிக்'கைத் தரையில் ஊன்றி, எங்கோ பார்த்தவாறு மீசையைத் தடவிக் கொண்டு நின்றார் முதலியார்.

"அட அசடே! அவனைப் பத்தி அவருக்கென்னடா தெரியும்? திருடன்னு தெரிஞ்சிருந்தா வீடு குடுப்பாரா? அதான் போலீஸ்காரன் வந்து இப்பவே காலி பண்ணனும்னு சொல்லிட்டானே, அதோட விடு... அவர் கிட்டே என்னத்துக்கு புகார் பண்ணிண்டிருக்கே?" என்று குஞ்சுமணியைச் சீதம்மாள் அடக்கினாள்.

முதலியாருக்குக் கண்கள் சிவந்தன. அந்தக் கடைசி வீட்டை நோக்கி அவர் வேகமாய் நடந்தார். அவர் வருவதைக் கண்ட போலீஸ்காரன் வாசற்படியிலேயே அவரை எதிர் கொண்டழைத்து சலாம் செய்தான்.

"இங்கே உனக்கு என்ன வேலை?" என்று போலீஸ்காரனைப் பார்த்து உறுமினார் முதலியார்.

"இவன் ஒரு கேடி, ஸார். ஸ்டேஷனுக்கு வந்து புகார் கொடுத்திருந்தாங்க. அதனாலே காலி பண்ணும்படியா சொல்லிட்டுப் போறேன்."

முதலியார் அவனையும் போலீஸ்காரனையும் மற்றவர்களையும் ஒரு முறை பார்த்தார்.

"என்னுடைய 'டெனன்டை' காலி பண்ணச் சொல்றதுக்கு நீ யார்? மொதல்லே 'யூ கெட் அவுட்'!"

முதலியாரின் கோபத்தைக் கண்டதும் போலீஸ்காரன் நடுநடுங்கிப் போனான்.

"எஸ், ஸார்" என்று இன்னொரு முறை சலாம் வைத்தான்.

"அதிகாரம் இருக்குன்னா அதை துஷ்பிரயோகம் செய்யக் கூடாது. திருடினப்போ ஜெயிலுக்குப் போனான்; அப்புறம் ஏன் வெளியிலே விட்டாங்க? திருடாதப்போ அவன் எங்கே போறது? அவன் திருடினா அப்போ வந்து பிடிச்சிக்கிட்டுப் போ" என்று கூறிப் போலீஸ்காரனை முதலியார் வெளியே அனுப்பி வைத்தார்.

"ஓய், குஞ்சுமணி! இங்கே வாரும். உம்ம மாதிரிதான் இவனும் எனக்கு ஒரு குடித்தனக்காரன். எனக்கு வேண்டியது வாடகை. அதை நீர் திருடிக் குடுக்கிறீரா, சூதாடிக் குடுக்கறீராங்கறதைப் பத்தி எனக்கு அக்கறை இல்லை. அதே மாதிரிதான் அவனைப் பத்தியும் எனக்குக் கவலை இல்லை. நீர் ஜெயிலுக்குப் போன ஒரு திருடனைக் கண்டு பயப்படறீர். நான் ஜெயிலுக்குப் போகாத பல திருடன்களைப் பாத்துக்கிட்டிருக்கேன். அவன் அங்கேதான் இருப்பான். சும்மாக் கெடந்து அலட்டிக்காதீர்." என்று குஞ்சுமணியிடம் சொல்லிவிட்டுக் கோனாரின் பக்கம் திரும்பினார்.

www.t.me/tamilbooksworld

"என்ன கோனாரே... நீயும் சேர்ந்துகிட்டு யோக்கியன் மாதிரிப் பேசிறியா?... நாலு வருஷத்துக்கு முன்னே பால்லே தண்ணி கலந்ததுக்கு நீ பைன் கட்டின ஆளுதானே?..." என்று கேட்டபோது கோனார் தலையைச் சொறிந்தான்.

கடைசியாகத் தனது புதுக் குடித்தனக்காரனிடத்தில் முதலியார் சொன்னார்:

"இந்தாப்பா... உன் கிட்டே நான் கை நீட்டி ரெண்டு மாச அட்வான்ஸ் வாங்கி இருக்கேன். கையெழுத்துப் போட்டு ரசீது கொடுத்திருக்கேன். யாராவது வந்து உன்னை மிரட்டினா எங்கிட்டே சொல்லு. நான் பாத்துக்கறேன்..." என்று கூறிவிட்டு வண்டியை நோக்கி நடந்தார் முதலியார்.

அன்று நள்ளிரவு வரை அவன் அங்கேயே இருந்தன். அவன் எப்போது வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியே போனான் என்று எவருக்கும் தெரியாது.

காலையில் பால் கறக்க வந்த கோனார் அவன் உள்ளே இருக்கிறான் என்ற பயத்துடனேயே பால் கறந்தான்.

குஞ்சுமணி, இன்றைக்கும் அந்தத் திருட்டுப் பயலின் முகத்தில் விழித்துவிடக் கூடாதே என்ற அச்சத்தோடு ஜன்னலைத் திறந்து பசுவைத் தரிசனம் செய்தார்.

குழாயடிக்குத் தண்ணீர் பிடிக்க வந்த பெண்கள் மட்டும், அந்த வீடு பூட்டிக் கிடப்பதைக் கண்டு தைரியமாக, அவனைப் பற்றியும் முதலியாரைப் பற்றியும் விமரிசனம் செய்து பேசிக் கொண்டார்கள். சீதம்மாளின் குரலே அதில் மிகவும் எடுப்பாகக் கேட்டது.

அந்த வீடு பூட்டிக் கிடக்கிறது என்பதை அறிந்த கோனாரும், குஞ்சுமணியும், நேற்று இரவு அடித்த கொள்ளையோடு அவன் திரும்பி வரும் கோலத்தைப் பார்க்கக் காத்திருந்தார்கள்.

மத்தியானமாயிற்று; மாலையாயிற்று. மறுநாளும் ஆயிற்று...

இரண்டு நாட்களாக அவன் வராததைக் கண்டு, கோனாரும் குஞ்சுமணியும், அவன் திருடப் போன இடத்தில் மாட்டிக் கொண்டிருக்கக் கூடுமென்று மிகுந்த சந்தோஷ ஆரவாரத்தோடு பேசிக் கொண்டார்கள்.

அந்த நான்கு வயதுக் குழந்தை மட்டும் ஒருநாள் மத்தியானம் அந்தப் பூட்டி இருக்கும் வீட்டுத் திண்ணை மீது ஏறி, திறந்திருக்கும் ஜன்னல் வழியே உள்ளே பார்த்தது.

மாடம் நிறைய இருந்த சாக்லெட்டுகளைக் கலங்குகிற கண்களோடு பார்த்தது.

"ஏ, மிட்டாய் மாமா! நீ வரவே மாட்டியா?" என்று கண்களைக் கசக்கிக் கொண்டு தனிமையில் அழுதது குழந்தை.

(எழுதப்பட்ட காலம்: 1969)

நன்றி: அனைத்திந்திய நூல் வரிசையில் நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, புது டெல்லி, 1973ல் வெளியிட்டு, இதுவரை பல பதிப்புகள் வெளிவந்துள்ள,

www.t.me/tamilbooksworld



தெரஸா கூறிய வார்த்தைகள் ஒன்றுகூடக் கடுமையானதல்ல. அவற்றைச் சொல்லும்போது அவள் குரல்கூடக் கடினமாக இல்லை.

மென்மையான சுபாவமுடைய தெரஸாவின் மிருதுவான குரலில் வெளிவந்த அந்த வார்த்தைகளில் இன்னும் கூட மரியாதை கலந்திருந்தது. அவரைப் பற்றி அவளுக்கு வருத்தம்தான் மிகுந்திருந்ததே தவிர, அவரை அவமதிக்கவேண்டும் என்ற எண்ணமோ, விரோதமோ அவள் முகபாவத்தில் தெரியவில்லை.

'சீ' என்று அவள் காறித் துப்பியோ அல்லது 'யூ டாமிட்' என்று கத்தியோ தன்னை அவமதித்திருந்தால் கூடத் தேவலாம் போலிருந்தது நாகராஜனுக்கு. அவ்வித அனுபவங்கள் அவருக்கு ஏற்பட்டதுண்டு.

அது மாதிரி சந்தர்ப்பங்களில் தன்னை எப்படிக் காப்பாற்றிக்கொள்வது என்று நாகராஜனுக்குத் தெரியும். அவருடைய அதிகாரம், செல்வாக்கு, தோரணை, வயது, சமூக அந்தஸ்து இவை எல்லாமோ, அல்லது இவற்றில் ஏதாவது ஒன்றோ அவருக்குத் துணை நிற்கும். 'என்ன நின்று என்ன? பட்ட அவமானம் பட்டதுதானே! எவ்வளவு பட்டும் எனக்குப் புத்தி வரவில்லையே!' என்று தன்னையே தன் மனத்துள் கடிந்துகொண்டபோது, அவரது கண்கள் வெட்கமற்றுக் கலங்கின. அவர் அவமானத்தாலும், தன் மீதே ஏற்பட்ட அருவருப்பாலும் தலைகுனிந்து உட்கார்ந்து, தன்னைப் பற்றிக் கசப்புடன் யோசித்தார்.

'சீ..! நான் என்ன மனுஷன்! வயது ஐம்பது ஆகப் போகிறது. தலைக்கு உயர்ந்த பிள்ளையும், கல்லூரியில் படிக்கும் பெண்ணும்... அவர்களுக்குக் கல்யாணம் செய்து வைத்திருந்தால் இந்நேரம் நான்கு பேரக் குழந்தைகளுக்குத் தாத்தாவாகி இருப் பேன்! சீ..! நான் என்ன மனுஷன்?'என்று பல்லைக் கடித்துக்கொண்டார். இரண்டு கைகளையும் கோட்டுப் பாக்கெட்டுக் குள் நுழைத்து, விரல்களை நெரித்துக்கொண்டார். கண்களை இறுக மூடி, நாற்காலியில் அப்படியே சாய்ந்து, தன்னை அறி யாமல், 'வாட் எ ஷேம்!' என்று முனகியவாறே, தலையை இடமும் வல மும் உருட்டினார். அவ ருக்கு என்ன செய்வது என்று புரியவில்லை.

தெரஸாவின் அந்த முகமே அவர் நினைவில் வந்து வந்து நின்றது.

சற்று முன்...

ரத்தமாகச் சிவந்து, நெற்றியில் சிகை புரள, உதடுகள் தீப்பட்டவை போல் சிவப்புச் சாயம் கலைந்து துடிதுடிக்க, கண்களிலிருந்து கலங்கிச் சுரந்த கண்ணீருடன், "ப்ளீஸ்... லீவ் மீ! ஐ ரிக்ரெட்... ஃபார் எவ்ரிதிங்..." என்று அவரிடமிருந்து திமிறி விலகிச் சென்று, உடல் முழுவதும் நடுநடுங்க அவள் நின்ற தோற்றம்...

அவள் கண்களிலிருந்து பெருகிய நீர், அவள் தனது ஸ்கர்ட் பாக்கெட்டிலிருந்து கர்ச்சீப்பை எடுத்துத் துடைப்பதற்குள் 'பொட்'டென்று அவரது டேபிளின் மீது... இந்தக் கண் ணாடி விரிப்பின் மேல் விழுந்து, இதோ இன்னும் உலராமல்சிதறிக் கிடக்கிற இரண்டு நீர் முத்துக்கள்...

www.t.me/tamilbooksworld

அவர் எதிரே நின்று தான் அழுதுவிட்ட நாகரிகமற்ற செயலுக்கு வருந்தி, "...ஆம் ஸாரி" என்று தனக்குள்ளேயே விக்கியவாறு, கர்ச்சீப்பில் முகம் புதைத்துக் கொண்டு அங்கிருந்து தனது அறைக்கு ஓடினாளே... அதோ, அவளது ஸ்லிப்பர் சப்தம் இப்போதுதான் ஓய்ந்து, 'பொத்'தென அவள் நாற்காலியில் விழுகிற ஓசை...

அவர் காதில் அவளது வார்த்தைகளும்... அவர் நினைவில், அவமானமும் துயரமும்கொண்டு ஓடினாளே அந்தக் காட்சியும்தான் இந்தச் சில நிமிஷங்களில் திரும் பத் திரும்ப வந்து நிற்கின்றன.

அவள் எவ்வளவு பெருந்தன்மையானவள்! எவ்வளவு உயர்ந்த, மென்மையான இயல்புகள் கொண்டவள் என்பதை உணர் கையில் அவருக்கு நெஞ்செல்லாம் வலிக்கிறது.

'நான் அவளிடம் இப்படி நடந்துகொள்வேன் என்று அவள் கனவுகூடக் கண்டிருக்க மாட் டாள்' என்பது புரிகையில், தன்னைத்தானே இரு கூறாகப் பிளந்துகொள்ளலாம் போலிருக்கிறது அவருக்கு. ஒரு நிமிஷத்தில் தான் அடைந்துவிட்ட வீழ்ச்சியை எண்ணி எண்ணி அவர் நெஞ்சைப் பிசைந்துகொள்கிறார்.

'தெரஸாவுக்கு எப்படிச் சமாதானம் கூறுவது? இந்த மாசை எப்படித் துடைப்பது? மறுபடியும் அவள் மனதில் தனது பழைய கௌரவத்தை எவ்விதம் நிலை நிறுத்துவது?'

'ம்..! அவ்வளவுதான். எல்லாம் போச்சு! கொட்டிக் கவிழ்த்தாகி விட்டது! எவ்வளவு பெரிய நஷ்டம்?' - நாகராஜன் நினைத்து நினைத்துப் பெருமூச்சு விடுகிறார். நெற்றி வியர்க்க வியர்க்கத் துடைத்துக்கொள்கிறார். எங்கா வது போய் அழலாம் போல் தோன்றுகிறது.

தான் சில நாட்களாகவே அவள்பால்கொண்ட சபலங்களுக்கு அவளது நடவடிக்கைகள், புன்சிரிப்பு, உபசரிப்பு... எல்லாவற் றுக்கும் மேலாகத் தனது வயதை யும், தான் அவளிடம் காட்டுகிற பரிவையும் உத்தேசித்து ஒரு தகப்பனிடம் தெரிவிப்பதுபோல் அவள் தனது வாழ்க்கையின் அவலங்களையும் ஏமாற்றங்களை யும் கூறி மனம் கலங்கியது முதலிய வற்றைச் சாதகமாகக்கொண்டு, அவளுக்குத் தன் மீது நாட்டம் என்று நம்பிய தனது கேவலத்தை எண்ண எண்ண, உள்ளமெல்லாம் குமட்டுகிறது அவருக்கு.

அப்படியரு அசட்டு நம்பிக்கையில்தான், அவள் தடுக்கமாட்டாள் என்ற தைரியத்தில் அவர் அவளிடம் அப்படி நடந்துகொண்டார்.

இந்தப் பத்து நாட்களாய், வழக்கமாகச் சாப்பாடு பரிமாற வருகிற அந்தக் கன்னையா சொல்லிக்கொள்ளாமல் ஓடிப் போனானே, அந்தத் தேதியிலிருந்து ஒவ்வொரு நாளும் 'லஞ்ச்' டயத்தில் தெரஸாவும் நாகராஜனும் ஒன்றாகத்தான் உட்கார்ந்து சாப்பிடுகிறார்கள்.

மத்தியானத்தில் ஆபீஸிலேயே சாப்பிடுகிற வழக்கத்தை உண்டாக்கியவன் கன்னையாதான். அவன் அவர் வீட்டோடு வந்து சேருவதற்கு முன்... இரண்டு வருஷத்துக்கு முன்னால் வரை, அவர் லஞ்ச்சுக்கு மத்தியானத்தில் வீட்டுக்குப் போய்த்தான் வரு வார். ஆனால், வீட்டுக்குப் போனால் 'சாப்பிட்டோம், வந் தோம்' என்று முடிகிறதா? கொஞ்சம் இளைப்பாற வேண்டும்; படுக்க வேண்டும்; சிறு தூக்கம் போட வேண்டும். திரும்ப ஆபீஸ§க்கு வர, நாலு மணி ஆகிவிடுகிறது.

நாகராஜன் எத்தனை மணிக்கு வேண்டுமானாலும் ஆபீஸ§க்கு வரலாம்; போகலாம். அவரை யாரும் கேட்க மாட்டார்கள். அந்தக் கம்பெனியின் முதலாளிக்கு அடுத்தபடி அதிகாரம் உள்ளவர் அவர்தான். சில விஷயங்களில் முதலாளிக்கும் கொஞ்சம் மேலே என்று சொல்லுகிற அளவுக்குப் பொறுப்பும் உடையவர். இருபத்தைந்து வருஷ காலமாக இந்தத் தலைமை ஆபீஸில் இருந்துகொண்டே மாகாணம் முழுவதும் பல கிளைகளைத் தோற்றுவித்து, இன்றிருக்கும் நிலைக்கு இந்த ஸ்தாபனத்தை உயர்த்தியவர் நாகராஜன் என்றால், அவர் அந்த அளவுக்குப் பொறுப்பும், முதலாளிகளின் நம்பிக்கையையும் பெற்றிருப்பதனால்தானே முடிந் திருக்கிறது!

கன்னையா தன் வீட்டோடு வந்த பிறகு, ஆபீஸ§க்குச் சாப்பாடு கொண்டுவந்து, தானே அவருக் குப் பரிமாறிவிட்டுப் போக ஆரம்பித்தான். அவர் முக்கியமாக வீட்டுக்குப் போய்ச்

சாப்பிடுவதற் கான காரணம், தானே போட்டுக் கொண்டு சாப்பிடப் பழகாதது தான். அது அவருக்குப் பிடிப்பது இல்லை.

கன்னையா, நாகராஜன் வீட்டு வேலைக்காரனோ சமையற் காரனோ என்றுதான் எல்லோரும் நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், அவன் அவரது சொந்த அத்தை மகன் என்பதும், சம வயதுடைய பால்ய கால நண்பன் என்பதும் ரொம்பப் பேருக்குத் தெரியாது. தெரியும்படி அவன் நடந்துகொள்ளவும் மாட்டான்.

அவனுக்குக் குடும்பம், கல்யாணம், வீடு, உறவு என்றெல்லாம் ஒன்றுமே ஏற்படவில்லை. சொந்தக்காரர்கள் வீடுகளில்... அவனைச் சொந்தக்காரன் என ஏற்றுக்கொள்கிற வீடுகளில் வந்து கொஞ்ச நாள் தங்குவான். தங்கி இருக்கிற காலத்தில், அந்த வீட்டுக்கு அவன் ஒரு பலமாக விளங்குவான்.

குழந்தைகளுக்குத் தாதி மாதிரியும், கூப்பிட்ட குர லுக்கு ஓடி வரும் சேவகனாகவும் இருப்பான். தோட்டங்கள் கொத் துவான்; துணி துவைப்பான்; கடைக்குப் போவான்; கட்டை பிளப்பான்; சுமை தூக்குவான்; சுவையாகப் பேசிக்கொண்டும் இருப்பான்.

'சொல்லிக்கொள்ளாமல்கூட ஓடிப் போனானே அந்த ராஸ்கல்!' என்று இப்போது பற்களைக் கடிக்கின்ற நாகராஜன், சற்று முன்னால், தான் செய்த காரியத்துக்குக்கூட அவன்தான் பொறுப்பு என்று சுற்றி வளைத்துப் பழியை அவன் தலையில் சுமத்த முயல்கிறார்.

'அந்தப் பயல் ஒழுங்காக வந்து மீல்ஸ் ஸெர்வ் பண்ணி இருந்தால், இவள் இவ்வளவு நெருக்கமாக வந்திருக்க மாட்டாளே!' என்று நினைத்தபோது, கன்னையாவைப் பற்றிய நினைவுகள் அவருக்கு மிகுந்தன.

இரண்டு வருடங்களுக்கு முன்பு, ஒரு நாள் இரவு எட்டு மணிக்கு வீட்டுக்குத் திரும்பிய நாகராஜன், காரை ஷெட்டில் நிறுத்துவதற்காகத் திரும்பியபோது, ஷெட்டின் ஒரு மூலையில் தாடியும் மீசையுமாய் ஒரு பரட்டைத் தலையன் எழுந்து நிற்பதைப் பார்த்து, கார் விளக்கை அணைக்காமல் வெளியே தலை நீட்டி, "யாரது, அங்கே?" என்று மிரட்டுகிற தோரணையில் கேட்டார்.

அவன் அருகில் ஓடிவந்து, "நான்தான் கன்னையா. என்னைத் தெரியலியா மாப்பிளே?" என்று ரகசியம் போல் அறிமுகப்படுத்திக்கொண்டபோது, நாக ராஜனுக்கு மனசை என்னவோ செய்தது.

"என்னடா இது கோலம்? வா... வா!" என்று அழைத்து வந்து, வீட்டில் உள்ளவர்களுக்குப் பரிச்சயம் செய்து வைத்து, அங்கேயே தங்கி இருக்கச் சொன்னார். கொஞ்ச நாட்களில் அவரது குடும்பத்துக்கு அவன் மிகவும் தேவைப்பட்ட மனிதனாக மாறி இருந்தான்.

ஆரம்பத்தில், அவனை வீட்டில் சேர்த்துக்கொண்டதற்காக மற்ற உறவினர்கள் எல்லாம் நாகராஜனையும் அவன் குடும்பத் தினரையும் மிகவும் எச்சரிக்கை செய்தவாறு இருந்தனர். ஆனால், நாகராஜன் அவற்றைப் பொருட்படுத்தவில்லை. அவனைச் சேர்த் துக்கொள்வது தனது கடமை என்று அவர் நினைத்தார். எனினும், அந்தக் காரணங்களை அவர் யாரிடத்தும் இதுவரை பகிரங்கப்படுத்திக்கொண்டது இல்லை.

அந்தப் பழைய பால்ய அனுபவங்களின் நினைவுகளை, எப்போதாவது தனியாக இருக்கையில் அவனோடு பகிர்ந்துகொண்டு மகிழ்வார் நாகராஜன்.

அந்தக் காலத்தில் இந்தக் கன்னையா ரொம்ப நல்ல பிள்ளை யாக இருந்தான். ஒன்றுமே தெரி யாத அவனை புகை பிடிக்கப் பழக்கியதும், மதுவருந்தச் செய்த தும், அந்த மாதிரியான விளை யாட்டுகளில் ஈடுபடுத்தியதும் நாகராஜன்தான். அவற்றை அவர் மறக்கவில்லை. அதன் பிறகு, அவை யாவும் ஏதோ ஒரு பருவத் தின் கோளாறு என்று ஒதுக்கி - அல்லது, உண்மையிலே ஒரு பருவத்தின் கோளாறுகளாக அவை இவரிடமிருந்து நீங்கிய பின், இவரால் பழக்கப்படுத்தப் பட்ட அந்தக் கன்னையன் அவற்றிலேயே வீழ்ந்து அழுந்தி மூழ்கிக்கொண்டு இருப்பதாகக் கேள்விப்பட்ட காலங்களில், நாகராஜன் குற்ற உணர்வினால் உறுத்தப்பட்டிருக்கிறார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

நாகராஜனைப் பொறுத்தவரை அந்தப் பழக்கங்கள் யாவும் மகா பாவங்கள் என்று கருதுகிற ஒழுக் கக் கண்ணோட்டம் எதனாலும் அவனுக்காக அவர் வருந்த வில்லை. இந்தப் பழக்கங்களுக்கு அடிமையாகி ஒருவன் வாழ்க்கை யின் சகல மரியாதைகளையும் இழப்பது பரிதாபகரமான வீழ்ச்சி என்பதனால், அவனிடம் அவர் அனுதாபம்கொண்டார்.

இப்போதும்கூட நாகராஜன் எப்போதாவது பார்ட்டிகளிலும், சில சமயங்களில் வீட்டிலேயேகூட மது அருந்துவது உண்டு. அது யாருக்கும் தெரியாது. நாகராஜ னும் புகை பிடிக்கிறார்; பெண்களை இச்சையோடு பார்க்கிறார்.

எல்லாவற்றுக்கும் ஒரு அத்தும் அளவும் இல்லாதபோதுதானே மனிதன் தலைகுப்புற வீழ்ந்து விடுகிறான்!

அப்படி வீழ்ந்துவிட்டவன் கன் னையா. அவன் அப்படி விழக் காரணம், ஏதோ ஒரு வகையில் தானே என்று நினைக்கையில், அவனைப் பார்த்துப் பெருமூச் செறிவார் நாகராஜன்.

பிறர் பார்வையிலும் சமூக அந்தஸ்திலும் அவன் வீழ்ந்து விட்டவன்தான் என்றாலும்கூட, அவனைத் தனது அந்தரங்கத்தில் சமமாகவே பாவித்தார் நாக ராஜன். அவனும் அதே மாதிரி அந்த எல்லை மீறாது அவரோடு சமத்துவம்கொண்டான்.

எப்போதாவது, தான் மது அருந்தும்போது அவனையும் அழைத்து, அவனுக்கும் கொடுப்பார். தனக்கு மகுடாபிஷேகம் நடந்த மாதிரி களி கொள்வான் அவன். அப்போதும்கூட மிகவும் வெட்கத்தோடு, கையில் தம்ளருடன் ஒரு மூலையில் போய்த் திரும்பி நின்றுகொண்டு, மறை வாகக் குடிப்பான். "போதும்... போதும்" என்று சொல்லித் தம்ளரை வைத்துவிட்டு ஓடி விடுவான். கேட்டால், "நமக்கு இந்தச் சரக்கெல்லாம் சரிப்பட்டு வராது. ரெண்டு ரூபா பணம் குடு மாப்பிளே, எதுக்கு இதெ வேஸ்ட் பண்றே?" என்று பணத்தை வாங்கிக்கொண்டு போனால், இரவில் எந்நேரம் வந்து அவன் ஷெட்டில் படுத்துக்கொள்கிறான் என்று யாருக்கும் தெரியாது.

யாருக்கும் தெரியாமல் அந்தச் செலவுக்காக வாரத்தில் இரண்டொரு தடவை அவர் அவனுக்குப் பணமும் கொடுப்பார்.

அவன் சாப்பாடு பரிமாறிச் சாப்பிடுவது, அவருக்கு எப்போ தும் ரொம்பத் திருப்தியாக இருக்கும். வீட்டில் இருக்கும்போது கூடச் சில சமயங்களில் அவன்தான் அவருக்குப் பரிமாறுவான். நாகராஜனின் மனைவி ஸ்தூல சரீரி. அவளுக்கு உடம்புக்கு நோய் வந்துவிடும். ஈஸிசேரிலிருந்து அவளை எழுந்து வரச் செய்வதைக் கூடியவரை தவிர்க்கவே விரும்புவார் அவர்.

சில சமயங்களில் டிரைவர் இல்லாதபோது, கன்னையாவோடு தனியே காரில் செல்கையில், அவனோடு தமாஷாகச் சமத்துவமாய் பழைய காலம் மாதிரி பேசி மகிழ்வார் நாகராஜன். அது மாதிரிச் சமயங்களில் அவனும் தன்னை மறந்து 'டா' போட்டுக் கூடப் பேசுவான். அது ரொம்ப இயல்பாக, சுருதி பிசகாமல் இருக்கும்.

"டேய், கன்னையா..! நம்ம செக்ரட்டரி அம்மா எப்படி இருக்கா?" - புடவை கட்டாத அந்தச் சட்டைக்காரி எதிர்ப்படும்போது, அவன் நாணிக்கோணி நிற்பதை அவர் பல தடவை கண்டிருக்கிறார். அதனால்தான் கேட்டார். அந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் முதலில் அவன் சிரிப்பான்.

"சொல்லு, உனக்கு என்ன தோணுது அவளைப் பார்த்தா?"

"எனக்கு என்ன தோணுது?" - மார்பில் முகவாய் படிகிற மாதிரி தலை குனிந்துகொண்டான் கன்னையா. கொஞ்சம் நேரம் கழித்து ஒரு அசட்டுச் சிரிப்புடன், "நீ விட்டு வெச்சிருப்பியா மாப்பிளே! எனக்குத் தெரியும்டா!" என்று முழங்கையால் இடித்துக் கொண்டு, கிளுகிளுத்துச் சிரித்தான்.

www.t.me/tamilbooksworld

"சீ... சீ! அதெல்லாம் இல்லை. நீ முன்ன மாதிரியே என்னை நெனைச்சிக்கிட்டு இருக்கியா? வயசாச்சே!" என்பார் நாகராஜன்.

"அப்படின்னா அவளுக்கு உம்மேலே ஒரு கண்ணு இருக்குது. அது தெரியுது!" என்று கண்களைச் சிமிட்டி, அவரைக் குஷிப்படுத்தினான் அவன்.

'அந்தப் பாவிதான் இந்த எண்ணத்துக்கு முதல் பொறி வைத்தவனோ?'

இவ்வளவும் அந்தரங்கமாய்ப் பேசுவானே தவிர, அவள் முன்னிலையில் இடுப்பில் கட்டிய துண்டை அவிழ்க்காமல், தலை நிமிர்ந்து பார்க்காமல், அவருக்குச் சாப்பாடு பரிமாறுவான். தட்டைப் பார்த்து, எது வாய்க்கு ருசிக்கிறது என்று அறிந்து, கேட்குமுன் பரிமாறுவான்.

அவன் பரிமாறுவதையும், அவருக்குப் பணிவிடை புரிவதையும் தெரஸா பார்த்திருக்கிறாள்.

அதனால்தான், அவன் வராமல் அன்று அந்த டிரைவரே அவருக்குப் பரிமாறத் தெரியாமல், இவர் போட்ட சத்தத்தில் பயந்து, கையில் உள்ளதைக் கீழே போட்டு, இவர் ஒன்றுமே சாப்பிடாமல் 'எடுத்துக்கொண்டு போ!' என்று கத்திவிட்டு, அன்று ஓட்டலில் இருந்து டிபன் வரவழைத்துச் சாப்பிட்டதை எல்லாம் கவனித்த தெரஸா, அடுத்த நாள் மத்தியானம் அவர் தானே பரிமாறிக்கொள்ள முனைகையில்...

"உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால், நான் பரிமாறலாமா?" என்று விநயத்துடன் ஆங்கிலத்தில் கேட்டாள்.

அப்போது நாகராஜனுக்குக் கன்னையா நினைவு வந்தது. 'அவளுக்கு உம்மேலே ஒரு கண்ணு இருக்குது. அது எனக்குத் தெரியுது!'

நான்கு வருஷமாகத் தன்னிடம் ஸ்டெனோவாகப் பணியாற்றும் தெரஸாவை அன்றுதான் அவர் அப்படி ஒரு பார்வை பார்த்தார். "யூ லுக் நைஸ் டுடே!" என்று அவள் அழகைப் புகழ்ந்தார்.

"தாங்க் யூ" என்று அவள் நன்றி கூறினாள்.

அன்று தெரஸாவையும் தன்னோடு அமர்ந்து சாப்பிடச் சொன்னார் நாகராஜன்.

முதலில், தான் டிபன்பாக்ஸில் கொண்டுவந்து இருக்கும் எளிய உணவை அவரோடு உட்கார்ந்துசாப் பிட, அவள் தயங்கினாள். ஆனால், அவர் மிகவும்வற் புறுத்தவே, அவளும் அவர் எதிரே அமர்ந்து, ஒரே மேஜையில்சாப்பிட்டாள்.

சாப்பிடும்போது கன்னையாவைப் பற்றிக் கேட்டாள். "வேர் இஸ் தட் மேன்?"

"அந்த ராஸ்கல் ஐந்நூறு ரூபாய் பணத்தைத் திருடிக்கொண்டு, சொல்லாமல் கொள்ளாமல்ஓடிப் போய்விட்டான்" என்று ஆத்தி ரமாகக் கூறினார் நாகராஜன்.

“ஐந்நூறு ரூபாயா? பணத்தை அவ்வளவு அஜாக்கிரதையாக வேலைக்காரர்கள் கண்படவைக் கலாமா?”

"அவன் வேலைக்காரன் அல்ல; என்னுடைய கஸின்!"

"ஓ! ஐ ஆம் ஸாரி!"

www.t.me/tamilbooksworld

"பரவாயில்லை. திருட்டுப் பயலுக்கு வேலைக்காரன் பட்டமே கொஞ்சம் அதிகம்தான்!"

"புவர் மேன்!" என்று அவள் அவனுக்காக வருத்தப் படுவது அவருக்கு ஆச்சர்யமாக இருந்தது. 'ஹி வாஸ் வெரி நைஸ் அண்ட் ஹெல்ப்ஃபுல்!" என்று முனகிக் கொண்டாள்.

நாகராஜனும் பெருமூச்செறிந்தார். தனக்கு வந்திருந்த உணவு வகைகளை அவளோடு பகிர்ந்து கொண்டார். அவள், அவர் அன்போடு தருவதை நன்றியோடு ஏற்றுக்கொண்டாள். அவளும் கன்னையா மாதிரி மிகவும் பரிவோடும், ருசி அறிந்தும் பரிமாறி னாள். மிகுந்த உரிமையோடு அவளது டிபன்பாக்ஸ் உணவையும் அவர் கேட்டு வாங்கிச் சாப்பிடுவார்.

ஆபீஸ் விஷயம் தவிர வேறெதுவும் பேசாத அவர் கள், இந்த 'லஞ்ச் அவரில்' பொது விஷயங்களையும், சொந்த விஷயங்களையும் பரிமாற்றம் செய்துகொள்ள ஆரம்பித்தனர்.

முன்பெல்லாம் அந்த 'ஏர் கண்டிஷன்ட்' அறையில் அவருக்காக உள்ள ஈஸிசேரில், சாப்பிட்ட பிறகுசற்றுப் படுத்துக் கண்ணயர்வார். இந்தப் பத்து நாட்களாக, ஈஸிசேரில் சாய்ந்து, மேஜையருகே உட்கார்ந்திருக்கும் தெரஸாவுடன் ஏதாவது பேசிக்கொண்டே இருந்தார் நாகராஜன்.

அவள் தன்னைப் பற்றி எதையுமே மறைக்காமல், நம்பிக்கைக்குரிய ஒரு பெரிய மனிதரின் பரிவுக்குக் காட்டுகிற நன்றியுணர்ச்சி போலும், இத்தகைய ஒரு கனவான் தன்பால் காட்டுகிற ஈடுபாட்டுக்குக்கொள்ளும் பெரு மிதம் போலும் மனம்விட்டுப்பேசி னாள். குழந்தை மாதிரி சிரித்தாள். தனது சிரிப்பாலும் பேச்சாலும் அவர் மிகவும் மகிழ்ச்சியுறுகிறார் என்பதால், இவரை மகிழ்ச்சி யூட்டவே அவள் சிரித்தும் கல கலப்பாகப் பேசியும் ஒரு நல்ல உடனிருப்பாய்த் திகழ்ந்தாள். அவர் அவளது பேச்சை மாத்திரம் அல்லாது, அவளையே முழுமை யாய் ரசித்தார். அவளது சிரிப்பை யும் பரிவையும் கலகலப்பையும் மோகனமான சாகஸமாகக் கருதி, தன்னை ஒவ்வொரு நாளும் முழுமையாய் இழக்க முனைந்தார்.

சில தினங்களுக்கு முன் அவள் அடுத்த வாரம் வரப்போகும்தனது பிறந்த தினத்துக்கு வீட்டுக்கு வர வேண்டும் என்று அவரை அழைத் தாள். இந்த நான்குஆண்டுகளாக அவருக்கு ஒரு ஸ்வீட் தந்து ஆசி பெறுவதைத் தவிர, அவரை விருந்துக்கு அவள்அழைத் ததில்லை. அதற்குக் காரணம், இந்த நான்கு ஆண்டுகளாய்அவர் அவளுக்கு எஜமான் ஸ்தானத்தில் இருக்கிற ஒருவராக இருந்துஇப் போதுதானே ஒரு நல்ல நண்ப ராகவும் மாறியிருக்கிறார் என்கிற இயல்பான காரணத்தை விடுத்து இல்லாத ஏதோ ஒன்றைக் கற்பித் துக்கொண்டார் நாகராஜன்.

"வில் இட் பி எ காக்டெயில் பார்ட்டி" என்று கண்களைச் சிமிட்டியவாறு அவர் கேட்ட போது...

"அஃப்கோர்ஸ்! என் தந்தை- தாய் இருவருமே பர்மிட் ஹோல் டர்கள்" என்று அவள் கூறினாள்.

"நீ ஏன் ஒரு பர்மிட் வாங்கிக் கொள்ளக் கூடாது?" என்றார் நாகராஜன்.

"நோ! நான் குடிப்பதில்லை" என்றாள் தெரஸா.

"உன் பிறந்த தினத்தன்று நான்உன்னைக் குடிக்க வைக்கப் போகிறேன் பார்!" என்றார் நாகராஜன்.

அவள் சிரித்துக்கொண்டே, "அது மாதிரியான விசேஷ சந்தர்ப்பங்களில் 'பார் கம்பெனி'ஸ் ஸேக்' கொஞ்சம் ருசி பார்க்கிறது உண்டு" என்று சொல்லித் தொடர்ந்து அவள் ஆங்கிலத்தில் எப் படிக் கிறுஸ்துமஸ்ஸின்போது அவளது தந்தை வீட்டிலிருக்கும் குழந்தைகளுக்கு எல்லாம் ஓயின் தருவார் என்று விளக்கினாள்.

www.t.me/tamilbooksworld

தங்களது கலாசாரப்படி குடிப்பதும், ஆண்களும் பெண்களும் இணையாக நடனமாடுவதும் எவ்வளவு பரவசமிக்கது என்பதைத் தன்னை மறந்த லயத்துடன் அவள் அவருக்குச் சொன்னாள். அவ்வி தம் சொல்லிக்கொண்டு இருக்கையில் அவள் தனது போன வருஷப் பிறந்த தின வைபவத்தின் நிகழ்ச்சிகளை நினை வில்கொண்டாள். அந்த நினைவில், அப் போது அவளது நம்பிக்கைக்கும் காத லுக்கும் பாத்திரமாய் இருந்து, பின்னர் அவளிடமிருந்து விலகிப்போன ஒரு பாய்ஃப்ரெண்டைப் பற்றியும் அவரிடம் விவரித்தாள். அப்போது அவள் சற்று உணர்ச்சிவயமானாள். பிறகு தானே சமாளித்துக்கொண்டு புன்னகை செய்தாள்.

இவை எல்லாவாற்றையுமே நாகராஜன் வேறு ஒரு கோணத்திலிருந்து புரிந்து கொண்டார்.

அதன் விளைவுதான் சற்று நேரத்துக்கு முன் வழக்கம் போல் உல்லாசமாகச்சாப் பிட்டு முடிந்ததும் அவள் மேஜைஅருகே அமர்ந்து தனது கைப் பையிலிருந்து சிறு கண்ணாடியை எடுத்து உதட்டுச் சாயத்தை சரி செய்துகொண்டு இருக்கையில் டவலில் கைத் துடைத்துக்கொண்டே அவள் பின்னால் வந்து நின்ற நாகராஜன்...

சற்று முன்...

ரத்தமாய்ச் சிவந்த முகத்தில் சிகை புரள, உதடுகள்தீப்பட்டவை போல் சிவப்புச் சாயம் கலைந்து துடிதுடிக்க, கண்களி லிருந்து கலங்கிச் சுரந்த கண்ணீ ருடன் "ப்ளீஸ் லீவ் மீ! ஐ ரிக்ரட் ஃபார் எவ்ரி திங்..." என்று அவரி டமிருந்து திமிறி விலகி,உடல்முழு வதும் நடுநடுங்க அவள் நின்ற தோற்றம்...

தெரஸாவின் அந்த முகமே அவர் நினைவில் வந்து நிற்கிறது.

மணி இரண்டு.

மத்தியான இடைவேளைக்குக் கலைந்து போன ஆபீஸ் ஊழியர் களின் நடமாட்டமும் டைப் ரைட்டர்களின் இயக்கமும் மந்தமாக அந்த ஏர்- கண்டிஷன்ட் அறைக்குள் கேட்கிறது.

நாகராஜன் ஒரு மணி நேரத் துக்குள் ஏழு, எட்டு சிகரெட்டு களை ஊதித் தீர்த்திருந்தார்.

தெரஸாவை அழைக்கின்ற 'காலிங்' பெல்லின் பொத்தானை அழுத்தினார்.

அடுத்த விநாடி தெரஸாஅவர் எதிரே வந்து நின்றாள். நாகராஜ னால் தலை நிமிர்ந்து அவளைப் பார்க்க முடியவில்லை. அவர் தலை குனிந்தே இருந்தது.

"ஐ ஆம் ஸாரி... தெரஸா!"

அவள் என்ன பதில் கூறினாள் என்று அவருக்கு விளங்கவில்லை. அவள் இன்னும் அழுதுகொண்டு அதே கோலத்தில்தான் நிற்கி றாளோ? தனது ராஜிநாமாக் கடிதத்தை முகத்தில் விட்டெறியப் போகிறாளோ? என்ற குழப்பத் துடன் அவர் தலை நிமிர்ந்துஅவ ளைப் பார்த்தார்.

அவள் எப்போதும் போல எதுவுமே நடக்காதது போன்று சற்றுமுன் கர்ச்சிப்பில் முகம் புதைத்துக்கொண்டு ஓடியது, தானல்லாதது போல ஒரு புன்முறுவலும், கையில் ஷார்ட் ஹாண்ட் நோட்ஸ் எடுக்கும் ஒரு சிறு புத்தகமும் பென்சிலுமாய் வந்து நின்றிருந்தாள்.

இவள் ராஜிநாமா செய்யப் போவதில்லை என்று அவருக்குப் புரிந்தது. அவள் வந்துநின்ற கோலம் தனது டிக்டேஷனை எடுத்துக்கொள்ளக் காத்திருப்பது போல் தோன்றியது. அன்று பல வேலைகள்- பல கடிதங்கள்எழுத வேண்டிய வேலைகள் இருப்பது அவளுக்குத் தெரியும். எல்லா வற்றுக்கும் முன்னால் ஒரு கடிதம் டிக்டேட் செய்ய வேண்டும்என்ற எண்ணம் திடீரென இந்த நிமிஷம்தான் அவருக்குத் தோன்றியது.

www.t.me/tamilbooksworld

சில நேரங்களில் கடிதங்களை இவர் எழுந்து நடந்துகொண்டே டிக்டேட் செய்வார். அது போல அவர் எழுந்து தனது நாற்காலிக் குப் பின்னால் தலையைக் குனிந்தவண்ணம் நடந்தார்.பிறகு அவளைப் பார்த்து "ப்ளீஸ் ஸிட் டௌன்" என்றதும் தெரஸாஅவரது மேஜைக்கு முன்னால் இருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

"டியர் மிஸ் தெரஸா" என்ற அவரது குரல் கேட்டு..."எஸ்ஸார்" என்று நிமிர்ந்தாள் தெரஸா.

"புட் டவுன்! திஸ் இஸ் எ லெட்டர்" 'இது கடிதம், எழுதிக் கொள்' என்று அவர் சொல்லவும் அவள் மௌனமாகத் தனது கடமையென எழுத ஆரம்பித்தாள். அவர் முகம் திரும்பித் தன் முதுகு மட்டுமே அவளுக்குத் தெரிய நின்றுகொண்டு ஆங்கிலத் தில் சொன்னார்.

"மிஸ் தெரஸா, ஒரு மகளைப் போல் கருதி அன்பு காட்டவேண் டிய உன்னிடம் முறைகேடாக நடந்துகொண்டதற்காக, நான் வெட்கப்படுகிறேன். என்னைப் மன்னித்துவிடுவதும், அல்லது தண்டிப்பதும் உனது மனோ பாவத்தைப் பொறுத்தது. நான் உன் கணிப்பில் இருந்து, தரத்தி லிருந்து, உயரத்திலிருந்து ஒரு விநாடியில் வீழ்ச்சியுற்றுவிட் டேனே, இதுதான் எனக்குத் தண்டனை.

தெரஸா நான் ஏன் அப்படிச் செய்தேன் என்று எண்ணி எண் ணிப் பார்க்கிறேன்.

இது- இப்படி நான் நடந்து கொள்வது இதுவே முதல் தடவை அல்ல. உன்னிடம் என் பல வீனத்தை ஒளிவின்றி ஒப்புக் கொள்வதன் மூலம், அப்படி ஒப்புக்கொள்கிற பக்குவம் இந்த நிமிஷம் எனக்கு ஏற்படுவதன் மூலம், என்னைப் பிடித்திருந்த ஒரு வியாதி, ஒரு விகாரம் என்னிடமிருந்து விலகுகிறது என்ற நம்பிக்கையோடு இதனை உன்னிடம் சொல்கிறேன். நீ வயதில் எவ்வளவு இளைய வளாக இருப்பினும், பெருந் தன்மை மிகுந்தவள்; கண்ணியமா னவள் என்று நான் உணர்ந்தி ருக்கிறேன். எனவேதான் பாவ மன்னிப்பு போல் உன்னிடம்'கன் பெஷன்' செய்துகொள்கிறேன்.

உன்னிடம் நடந்துகொண்டது போல் முறைகேடாக நான் பல சந்தர்ப்பங்களில் நடந்துகொண் டிருக்கிறேன்.

'பிரயாணங்களிலும் தியேட் டரிலும் ஏற்படுகிற நெருக்கத்தைப் பயன்படுத்திக்கொண்டு நான் முறைகேடாக நடந்தது உண்டு. அப்போது, அவர்கள் ஏதோ ஒரு அச்சத்தாலும் அவமானத்துக்கு அஞ்சியும், நாகரிகம் கருதியும் அமைதியாய் இருப்பதை, நான் சம்மதம் எனக் கருதி ஏமாந்திருக் கிறேன். பின்னர் அதற்காக வருந் தியதும் உண்டு. நான் இப்போது தான் அறிகிறேன். இது ஒரு நோய். இதிலிருந்து உனது பெருந் தன்மையால் நான் குணமடை கிறேன். நீ இதை மறந்து ஒரு தந்தை உங்கள் மரபுப்படி ஒரு மகளை அன்பு காரணமாய் முத்தமிட்டதாகக்கொள்ள வேண்டுகிறேன். அல்லது இந்தக் குற்றத்துக்காக எனது இந்த வீழ்ச்சி மாத்திரம் போதாது எனின், நீ தருகிற எந்தத் தண்ட னையையும் ஏற்கச் சித்தமாயிருக் கிறேன்." என்று கூறிச் சுமை இறக்கிய வழிப்போக்கன் மாதிரி ஆச்வாசத்துடன் அவளைப் பார்த்தார் நாகராஜன்.

தெரஸா கண்களைக் கர்ச்சீப் பால் இரண்டு முறை ஒத்திக் கொண்டாள். அவளது முக்கும் கன்னங்களும் கன்றிச் சிவந்திருந் தன.

"அதைப் டைப் செய்து கொண்டு வா" என்று அவளை அனுப்பிய பின்,ஒரு சிகரெட் டைப் பற்ற வைத்துக்கொண்டு தனது இருக்கையில் அமர்ந்தார் நாகராஜன். தெராஸாவின் அறை யில் டைப்ரைட்டரின் ஓசை படபடத்தது.

தெரஸா டைப் செய்த காகிதங்களை கொணர்ந்து, அவர் முன் மேஜை மீது வைத்துவிட்டு, அவர் முகத்தை பார்த்தவாறு நின்றாள். அவர் கண்ணாடியை எடுத்து அணிந்து கடிதத்தின் முதல் வரியைப் "மரியாதைக்குரிய நண்பரே!" என்னும் ஆங்கில வார்த்தைகளை உச்சரித்தவாறே அவளைப் பார்த்தார்.

அவள் பணிவுடன் தலை கவிழ்ந்தாள்.

அவர் தொடர்ந்து அதைப் படிக்கலானார். "நீங்க என்னிடம் டிக்டேட் செய்து, டைப் செய்து கொண்டுவரப் பணித்த உங்கள் கட்டளையை நிறைவேற்றாமல் வேறோரு கடிதத்தைக் கொண்டு வந்து உங்களிடம் தருகிற என் செயலை முதலில் மன்னிப் பீர்களாக. நீங்கள் மனம் திறந்து பேச ஒரு வாய்ப்பாகத்தான் அதை ஒரு கடிதமாக டிக்டேட்

www.t.me/tamilbooksworld

செய்திருக்கிறீர்கள். என்னிடம் மன்னிப்புக்குக் கோருகிற ஒரு கடிதத்தை என்னைக்கொண்டே எழுத வைத்தது உங்களுடைய வெள்ளை மனத்துக்கு மேலும் ஒரு சான்று. கடிதம் என்றுசொல் லப்படுகிற உங்கள் மனம் திறந்த பேச்சில் மிகவும் சத்தான என் எண்ணத்தை அப்படியே பிரதி பலித்த வாசகம், 'ஒரு தந்தை உங்கள் மரபுப்படி ஒரு மகளை அன்பு காரணமாய்' என்று கூறி னீர்களே அதுதான். நான் அப்படிக் கருதிச் சமாதானமுற்றப் பிறகு நீங்களும் அவ்விதம் சொன் னது எனக்கு அளவில்லா ஆனந் தம் தருகிறது. இது உங்கள்வீழ்ச்சி அல்ல. இது ஒரு சறுக்கல்..."

இந்த இடத்தில் அந்த ஆங்கிலச் சொற்களை அவளைப் பாராட்டுகிற தோரணையில் "ஜஸ்ட் எ ஸ்லிப், நாட் ஏ ஃபால்" என்று ஒரு முறை வாய்விட்டு உச்சரித்துக் கொண்டே அவளைப் பார்த்த பின் கடிதத்தைத் தொடர்ந்தார் நாகராஜன்.

"நீங்கள் கூறுகிற மாதிரி அது ஒரு வியாதியெனில் அதற்குத் தண்டனையல்ல, சிகிச்சையே தேவை. அப்படிப்பட்ட முறை கேடான நடத்தைகள் தவறுகள் தான். ஆனால், குற்றங்கள் அல்ல. குற்றங்கள்தான் தண்டிக்கப்படு வன. தவறுகள் திருத்தப்படுவன. மன்னிக்கப்படுவன. நான் உண் மையான கிறிஸ்துவப் பெண். மன்னிக்கிறவர்களே மன்னிக்கவும் படுவார்கள். நான் உங்களை மன் றாடிக் கேட்டுக்கொள்கிறேன். இதனை மறந்து, இதற்காக வருந் துவதை விடுங்கள்.

நமது ஒப்பந்தப்படி நீங்கள் என் பிறந்த தின விருந்துக்கு வரு கிறீர்கள். உங்கள் நலனுக்காக நான் குடிப்பேன். உங்கள் உண்மையுள்ள...."

"தெரஸா! நீ எவ்வளவு உயர்வான ஆத்மா!"

இரவு எட்டு மணிக்கு வீடு திரும்பிய நாகராஜன் காரை ஷெட்டில் விடுவதற்காகத் திரும் பியபோது ஷெட்டின் ஒருமூலை யில், தாடியும் மீசையுமாய்ப்பரட் டைத் தலையுடன் உட்கார்ந்திருந்த கன்னையா எழுந்து நின்றான். சிறிது நேரம் விளக்கை அணை காமல் அவனைக் கூர்ந்து பார்த் தார். வெளிச்சத்தாலோ வெட்கத் தாலோ கூசிக் குறுகி முகத்தை மூடிக்கொண்டான் கன்னையா.

வராந்தாவில் நாகராஜனின் மகளும் மனைவியும் கன்னை யாவை உள்ளே வரவிடாமல் தடுப்பதற்காகத் துவார பாலிகை களாக நின்றிருந்தனர்.

"அவன் வந்தால் உள்ளே நுழைய விடாதீங்க" என்று நாக ராஜன் உத்தரவிட்டிருந்தார்.

நாகராஜன் காரிலிருந்து இறங் கியதும் கன்னையா அவரருகே வந்து அழுதான்.

"மாப்பிள்ளே, என்னமோ தெரியாம செஞ்சுட்டேன். ஏன் செஞ்சேன்னு தெரியல்லே. அதைச் செஞ்ச அடுத்த நிமிஷத் திலேருந்து ஒவ்வொரு நிமிஷமும் வருத்தப்பட்டேனே ஒழிய சந்தோ ஷமாகவே இல்லே, மாப்பிளே.. அறிவுகெட்டவன் நான்" என்று நெற்றியில் அடித்துக்கொண்டு அவன் அழுதான்.

நாகராஜன் மௌனமாக 'டை' யைத் தளர்த்திக்கொண்டு வராந்தாவில் கிடந்த பிரம்பு நாற்காலிகளில் ஒன்றில் அமர்ந்தார்.

அவர் மகளும், மனைவியும் உள்ளே போயினர். கன்னையா வெளிச்சத்தில் வந்து அவர் எதிரே நின்றான்.

அவன் மௌனமாகத் தலை குனிந்து நின்றதைப் பார்க்க அவருக்குப் பரிதாபமாக இருந்தது. அவர் நினைத்தார்.

'இவன் வெறும் திருடன் என் றால், இப்போது ஏன் திரும்பி வர வேண்டும்? இந்த வீட்டில் உழைக்கிற உழைப்பை எங்கே தந்தாலும் இவன் வயிற்றுக்குச் சோறு கிடைத்துவிடுமே. எனவே பிழைப்புக்காக இவன் திரும்பி வந்திருக்கிறான் என்று நினைப்பது பேதமை.

www.t.me/tamilbooksworld

இதோ எதிரே நேற்றி லிருந்து பூக்க ஆரம்பித்திருக்கிறதே இந்த மல்லிக்கைச் செடி, இதைக் கொண்டுவந்து நட்டு, நீர் வார்த்த பாசம் அவனைத் திரும்பி வர இழுத்திருக்கிறதா? ஒவ்வொரு வேளை சாப்பிடும்போதும், நான் அவளை நினைக்கிற மாதிரியே அவனும் என்னை நினைத்திருக்க மாட்டானா? பின் ஏன் அப்படி அந்தப் பணத்துக்குஆசைப் பட்டு அதை எடுத்துக்கொண்டு ஓடினான்..?

"ஏன்டா, என்னைக் கேட்டால், உனக்கு நான் பணம் தந்திருக்க மாட்டேனா? ஏன் திருடன் மாதிரி இப்படிச் செய்தே?" வீட் டிலிருந்தும் மற்றவர்களின் திருப்திக்காகச் சற்று உரத்த குரலில் விசாரித்தார் அவர்.

"அதான் யோசிச்சு யோசிச்சுப் பார்க்கறேன். பணத்தை அந்த 'ஷெல்ப்'லே பார்த்தப்போ... வேற யாருமே இல்லே. 'யாருமே இல்லாத இடத்தில் பணத்தை பார்த்தா எடுத்துக்கணும்கிற திருட்டுப் புத்தியிலே எடுத்திட் டேன். இது முதல் தடவையா? எத்தனையோ தடவை இந்த மாதிரி, சீ!" அவன் தன்னைத் தானே நொந்துகொண்டான்.

இன்று மத்தியானம் இதே நிலையில் தான் இருந்ததை நாக ராஜன் எண்ணிப் பார்த்தார்.

"அது ஒரு வியாதிடா" என் றார்.

"அமாம். வியாதிதான்" என்று தலையில் அடித்துக்கொண்டான் கன்னையா. "நீ என்ன தண்டனை குடுத்தாலும் ஏத்துக்கறேன், மாப் பிளே.." என்று கைகளைப்பிசைந்து கொண்டு கண்ணீர் உகுத்தான்.

நாகராஜன் நிர்மலமாய்ச் சிரித் தார்.

"வியாதிக்கு சிகிச்சைதான் தேவை, தண்டனை இல்லே" என்று சொல்லும்போது அவ ருக்கே கண் கலங்கிற்று.

"உன் வியாதி நீங்கிப் போச்சு... மனப்பூர்வமா மன்னிக்கறது தான் இதுக்குச் சிகிச்சை. இந்தச் சிசிச்சையை உனக்கு யாருமே இது வரை செய்ததில்லே. இனிமே சரியாயிடும். போ, உள்ளே! நீ செய்தது தப்புத்தான்... தண்டனை தர வேண்டிய குற்றமில்லே" என்ற அவர் சொல்வதைக்கேட்டுக் கூடத்தில் உட்கார்ந்திருந்த அவரது மகளும் மனைவியும் "எவ்வளவு பெருந்தன்மை மிக்க மனிதர் இவர்! என்று நாக ராஜனைப் பற்றி எண்ணிப் பெருமிதம் கொண்டனர்.

அவர்களுக்கு என்னதெரியும்?

மன்னிக்கப்பட்டவர்களே மன்னிக்கிறார்கள் என்பது.

# அந்த உயிலின் மரணம்

வேணுகோபாலன் அந்த வீட்டின் கூடத்தின் நடுவில் கூன்விழுந்த முதுகை வளைத்துக் கொண்டு தனியாக அமர்ந்திருந்தார். அவர் தலைக்கு மேலே ஒரு பக்கமாக அவர் சாய்ந்திருக்கிறரே அந்தத் தூண், மிக உயரத்தி லிருக்கும் மச்சு முகட்டை நோக்கி முடிவற்று நீண்டு செல்வது போல் அந்த மாடத்து விளக்கின் சுவர் தேய்க் கின்ற இருளிலே மாயம் காட்டுகிறது. அந்தக் கூடத்தில் அது மாதிரி எட்டுத் தூண்கள் இரண்டு வரிசையாக நிற் கின்றன. மாடத்து விளக்கு வெளிச்சத்தில் இரண்டு தூண்களே தெரிகின்றன.

அது ரொம்பப் பழைய வீடு. வேணுகோபாலனின் முப்பாட்டனார் கட்டிய வீடாம். கட்டியபொழுது இருந்த மாதிரியே இப்பொழுதும் அந்த வீட்டுக்கு மின்சார விளக்கு கிடையாது. வீட்டின் முன்புறமும் அந்தக் கூடத்துப் பகுதியும் தவிர பின்னம் பக்கத்தில் பெரும் பகுதி இடிந்து போயிருக்கிறது. அந்த இடிபாடுகளிடை யே, வேணுகோபாலன் கூப்பிட்ட குரலுக்கு வந்து ஏவல் செய்கிற சில ஏழைகள் பொங்கித் தின்றும், புழுதியைத் தட்டிச் சில நேரம் படுத்துக்கிடந்தும் அங்கே குடும்பம் நடத்துகிறார்கள்.

பின்கட்டு இருளிலிருந்து ஒரு சிறிய விளக்குச் சுடர், பூவின் இதழ் ஒன்று மிதந்து வருகிற மாதிரி கொஞ்சங் கொஞ்சமாக முன்னேறி வந்தது. வேணு கோபாலன் கூனல் முதுகை நிமிர்த்தாமல் தலையை மட்டும் திருப்பி அந்த வெளிச்சத்தைப் பார்த்தார். ஒரு பத்து வயதுச் சிறுமி கையில் ஏந்திய அம்மன் விளக்கு காற்றில் அணைந்து விடாமல் தனது சின்னக் கையால் மறைத்த வாறு பாவாடை தடுக்கி விடாமல் செய்து மெதுவாய்

www.t.me/tamilbooksworld

Scanned by CamScanner

www.t.me/tamilbooksworld



நடந்து வந்தாள். கூடத்துச் சுவரில் மாட்டியிருந்த நாற்பது வருஷத்திற்கு முன்பு எழுதிய—போன மாசச் செத்துப்போன—வேணுகோபாலனின் மனைவி வள்ளியம்மையின் படத்தருகே உள்ள மர ஸ்டாண்டில் விளக்கை வைத்த பின் விழுந்து நமஸ்கரித்து எழுந்த சிறுமியை யார் என்று அறிந்து ொாள்வதற்காக—

''யாரது?...செங்கோணி மவளா?'' என்று புருவத்தின் மீது மறைத்த கையோடு கேட்டார் கிழவர்.

''இல்லே தாத்தா. சுப்பு மவ ராசாத்தி நானு...''

இந்த ஒரு வார காலமாக வள்ளியம்மை வழி உறவுக்காரர்கள் சிலர் இங்கே வந்திருந்து, அந்த உறவும் தீர்ந்து போய்விட்டது என்ற தீர்மானத்திலே போய்விட்டார்கள். இப்போது அவரது தயவில் அந்த வீட்டின் பின்னம்பக்க இடிபாடுகளில் குடும்பம் நடத்திக் கொண்டிருக்கிற—உறவில்லாத அந்நியர்களான அந்த யாரோ சிலரின் தயவில் தான் தனது அனாதரவான அந்திம காலத்தை அவர் கழிக்க நேர்ந்திருக்கிறது. அவருக்கு வெந்நீர் கொடுக்கவும், இரண்டு வேளை எதையாவது பொங்கித் தரவும், இரவில் பால் காய்ச்சிக் கொடுக்கவும்...

வேணுகோபாலன் தனிமையில் தனக்குள் சிரித்துக் கொண்டார்

அப்போது அவருக்கு அந்த வலி வந்தது.

''சீ! திருட்டு நாயே! உனக்கு இனிமே மரியாதை கிடையாது'' என்று வாய்விட்டு முனகினார். அவர் வழக்கம் போல் தனது கையால் மார்பின் இடதுபுறத்தைப் பிசைந்து கொள்ளவில்லை. ஒரு வினாடி கண்களை மூடி ஆழ்ந்து சுவாசிப்பாரே அது மாதிரி சுவாசிக்கவில்லை. உதட்டைக் கடிக்கவில்லை. தட்டுத் தடுமாறி எழுந்து போய்த் தண்ணீர் குடிப்பாரே அது மாதிரி எழுந்து போகவில்லை. எந்தவிதச் சலனமும் இல்லாமல் அப்படியே



உட்கார்ந்திருந்தார். ஆனால் அந்த வலிதான் என்ன மாதிரி அவர் இதயத்தைப் பிளக்கிறது! பிசைகிறது! இடது புறத்திற்கு அருகாமையில், விலாவுக்கு மேலே, மார்பு எலும்புகளின் இடைவெளியில் அவர் இதயம் தான் என்னமாய் இடித்துத் துடிக்கிறது! அந்தச் சில வினாடிக்குள்ளே உடம்பெல்லாம் என்னமாய் வேர்த்து நனைகிறது

அப்போது அந்த சுப்பு மகள் ராசாத்தி அவருக்குப்பால் கொணர்ந்தாள். வேணுகோபாலன் இப்போதெல்லாம் இரவில் பால் மட்டுமே சாப்பிடுகிறார். சில சமயங்களில் ஒரு வாழைப் பழமும் சாப்பிடுவார். கொண்டு வந்த பால் பாத்திரத்தை அந்த ஸ்டாண்டின் கீழே வைத்துவிட்டு, ''தாத்தா பால் கொண்ணாந்திருக்கேன்...சூடா இருக்கு. கொஞ்சம் பொறுத்துக் குடிங்க'' என்று சொல்லிவிட்டு அந்த சுப்பு மகள் ராசாத்தி ஒரு தூணிலிருந்து மறு தூணுக்கு அரை வட்டமாய்ச் சுற்றித் தாவி விளையாட ஆரம்பித்தாள். 'என்ன வேகமாகச் சுற்றுகிறாள்! ஒரு காரியமும் இல்லாமல் மூச்சு இளைக்க இளைக்க எப்படி உடம்பைப் போட்டு வருத்திக் கொள்கிறாள்! என்ன அப்படி ஒரு விளையாட்டு? விளையாட்டு என்றாலே அப்படித்தான்; ஒரு காரியமுமில்லாமல் உடலை வருத்திக் கொள்வது அப்படி வருத்திக் கொள்வதன் மூலம் மகிழ்ச்சி அடைவதும். அடி பெண்ணே! அதெல்லாம் இப்போது தெரியாது என்று அவள் விளையாட்டைப் பார்த்து மனசுக்குள் பேசிக் கொள்கிறார் வேணுகோபாலன்.

தூணுக்குத் தூண் தாவி விளையாடிக் கொண்டிருந்த சிறுமி, அந்த விளையாட்டிலே சலிப்புற்று இப்போது தாழ்வாரத்திலிருந்து முற்றத்தில் குதிக்கிறாள். ஒரு கையில் பாவாடையையும் தூக்கிப் பிடித்துக் கொண்டு, முற்றத்தில் குறுக்காக ஓடி எதிர்ப்புற தாழ்வாரத்தில் ஏறியபின் கூடத்து இரண்டு தூண்களை ஓடி ஓடித் தொடுகிறாள். மறுபடியும் இந்தப் பக்கமாய் வந்து முற்றத்தில் குதித்து... மூச்சு இளைக்க இளைக்க...என்ன விளையாட்டோ?

Scanned by CamScanner

www.t.me/tamilbooksworld



முடியாது. வெற்றிலையிலிருந்து இரும்புப் பெட்டி வரை விநியோகம் செய்கிற கமிஷன் ஏஜண்டாக அவர் அலைந்து கொண்டிருந்தார்.

அவருக்கு அப்படியொரு முகராசியும், வாக்குச் சாதுரியமும் உண்டு. எந்த ஊருக்குப் போனாலும் அந்த ஊர் பாஷையில் அவனைத் தூக்கியடிக்கிற விதமாகப் பேசுவார். ஆங்கிலம் தவிர அவருக்கு எல்லா முக்கிய இந்திய பாஷைகளும் சுத்தமாகவே தெரியும். அந்தந்தப் பகுதியின் விசேஷ முத்திரைகளோடு அவர்களது பழமொழிகள் மரபுகளோடு தெரியும். இவ்வளவும் எப்படிக் கற்றார் என்று எவருக்கும் தெரியாது. அவர் பேச ஆரம்பித்தாரானால் முக்கால்வாசிப் பாஷை அவரது சிரிப்புத்தான். அவரது தொழிலின் பிரதான மூலதனமே அந்தச் சிரிப்புத்தான். அவருக்கு உடன்பாடு இல்லாத கொள்கையே கிடையாது. எதிராளி என்ன நினைத்துப் பேச ஆரம்பிக்கிறானோ அந்த நினைப்பையும், அதற்கு மேலும் அப்படியே பிரதிபலித்து அவன் நினைக்காத அளவுக்கு அந்தக் கொள்கையிலே உடன்பாடு காணுவதில் அவர் சமர்த்தர். அதே மாதிரி அந்தக் குறிப்பிட்ட ஒரு கொள்கைக்கு எதிரான ஒருவரிடமும் அவரால் உடன்பாடு காணமுடியும். முரண்பட்ட கொள்கைகள் உள்ள இருவர் மோதிக் கொள்ளும் போதும் அந்த இருவருக்கும் தகுந்த விதமாய் இருவர் கொள்கையும் பழுதுபடாமல் நூலில் விழுந்த சிக்கைப் பிரிப்பது மாதிரி சிக்கெடுத்து இரண்டு பேருடைய பாராட்டுதலையும் பெற்று இடையிலே நுழைந்து நழுவி வந்து விடுகின்ற கலையிலே அவர் வல்லவர். ஏனெனில் அவருக்கு என்று பிடிவாதமான தனிக் கொள்கைகள் எதுவும் கிடையாது.

அவரை யாரும் துன்புறுத்தவோ, வருத்தவோ முடியாது. எல்லோருடைய சந்தோஷத்திலும், ஆனந்தத்திலும் தனக்குப் பங்கிருப்பதாக அவர் நினைத்துக்கொ ஞ.



வார். எல்லோரையும் சந்தோஷப்படுத்துவது தன் கடமை என்றும் அவர் நம்பி இருந்தார் நாடகத்தில் சினிமாவில் வருகிற காமெடியன் எப்படி சிரிப்பு மூட்டுவதற்கு மட்டும் இருக்கிறானோ அது மாதிரி வாழ்க்கையில் அவர் இருந்து வந்தார். அப்படி இருப்பதை வாழ்வின் லட்சியம் போல் அவர் கடைப்பிடித்து வந்தார்.

இப்படிப்பட்ட சஞ்சாரங்களில் வீடு தங்காமல் நாடு முழுவதும் சுற்றி அப்படியொன்றும் பிரமாதமாக அவர் செல்வங்களைக் குவித்து விடவில்லை. அதற்காக அவர் முயன்றிருந்தால் எவ்வளவோ சேர்த்திருக்க முடியும். ஆனால் அவர் எல்லோருக்கும் நல்லவராக வாழ்க்கையை ஒரு சுவாரஸ்யமான சம்பாஷணையாகக் கழிப்பதற்காக மனிதர்களைத் தேடிச் செல்கிற மாதிரித் திரிவதிலேயே திருப்தி கண்டார்.

வேணுகோபாலனுக்குக் குழந்தைகள் அதிகமில்லா விட்டாலும் பொறுப்புகள் நிறைய இருந்தன. அக்காலத்தில் ஒரு விதவைத் தமக்கை, அவளது இரண்டு பெண் குழந்தைகள், பத்து வருஷத்துக்கு முன்னால் ஒரே வருஷத்தில் ஒருவர் பின் ஒருவராய் இறந்துபோன அவரது தாய் தந்தையர், அவரது ஒரு பெண்ணும் பையனும் வீடு நிறைந்து இருந்தார்கள்! அந்தத் தைரியத்தில் அந்தச் சூழலில் – வீட்டைப் பற்றிக் கவலையே இல்லாமல் ஊர் சுற்றிக் கொண்டிருந்த வேணுகோபாலனைத் திடீரென்று சிறகை வெட்டிக் கூண்டில் அடைத்தது மாதிரி வீட்டைவிட்டு வெளியேறாதபடிப் படுக்கையில் முடக்கிப் போட்டுவிட்டார்கள் டாக்டர்கள்.

பிரயாணம் போவதையும், கூட்டம் கூட்டமாய் ஜனங்களைப் பார்ப்பதையும், பல்வேறு பாஷை பேச்சுகூடிய பல வேறுபட்ட மனிதர்களோடு தன்னை இணைத்துக் கொண்டு சொந்தம் கொண்டாடுவதையும் வாழ்க்கையின் பயனாக அனுபவித்துக் கொண்டிருந்த ஒரு மனிதனுக்கு

Scanned by CamScanner

www.t.me/tamilbooksworld



அது எவ்வளவு கொடிய தண்டனை! எல்லோரையும்
சிரிக்கவைப்பதையே தன் லட்சியமாய்க் கொண்டிருந்த
வேணுகோபாலன் சிரிக்கவே தெரியாத மனிதராகி
விட்டார்

ஒவ்வொரு நாளையும் ஒரு திருவிழா மாதிரி அனுப
வித்துக் கொண்டிருந்த வேணுகோபாலனுக்கு வாழ்க்கை
யின் மிக மிகத் துன்பகரமான ஓர் இறுதி உண்மை,
யானை மாதிரி எதிரில் வந்து நின்று மிரட்டியது. தப்ப
மார்க்கமில்லாமல் தனித்த பாதையின் வழியை அடைத்து
அது நின்றது துதிக்கையில் பிடித்துச் சுருட்டிய இறுக்
கத்தில் அவர் விழிபிதுங்கக் காலடியில் போட்டு இறுதியாக
ஒரே மிதியில் அவரது இருதயம் நசுங்கத் தேய்க்கப்
போகிறது அது.

'ஓ! என்ன வலி!—நெஞ்சைப் பிசைந்து கொண்டு'.

அப்போது அவர் திருச்சூரில் இருந்தார். ஏதோ
பாக்கு வியாபாரத்துக்குப் பேரம் பேச வந்திருந்தார்.
கோயிலுக்குப் போய் வரிசையாக நின்றிருந்த யானை
களைப் பார்த்து விட்டு வந்தார். வருகிற வழியில்
வெற்றிலை பாக்கு போட்டுக் கொண்டார். அந்தப்
பச்சைப் பாக்கு அவருக்கு ரொம்பப் பிடிக்கும். துவர்ப்பு
நெஞ்சில் அடைத்தது. பின் வலித்தது...வலி தாங்க
முடியவில்லை. டாக்டரிடம் போனார்.

வேணுகோபாலனுக்கு வலி வந்தபோது அது இதயத்
தில்தான் என்று முதலில் தெரியாது. மார்பிலே வலிப்ப
தாகத்தான் நினைத்துக் கொண்டார். அந்த டாக்டர்
அவரைப் பரிசோதித்த பிறகு, அவருக்கு இதயம் பலவீன
முற்றிருப்பதாகச் சொன்ன பிறகு, அவர் இப்படித் தனி
மையில் அலையக் கூடாதென்றும், அதிர நடக்கக் கூடா
தென்றும், அவருக்குஆலோசனை கூறப்பட்ட பிறகுதான்
அந்த வலி தனது இதயத்தில்என்பதை வேணுகோபாலன்



அந்த உயிலின் மரணம்
அறிந்தார். அதன் பிறகு இந்த இருபத்தைந்து வருட
காலமாய் எப்போதாவது வருகிற அந்த வலியையும்
அந்த வலி இல்லாத சமயத்தில் தனது பலவீனமான
இதயம் எந்த விநாடியும் நின்றுவிடலாம் என்கிற நினைப்
பையும் தவிர—அப்படி நின்றுவிட்டால், யார் யார் என்ன
செய்யவேண்டுமென்பதை அவரவருக்குச் சொல்லமுடி
யாத பயத்துடன் ஒவ்வொருவரையும் பார்த்துரகசியமாகச்
சில சமயங்களில் கண் கலங்குகிறவராகவே வாழ்ந்திருக்
கிறார்.

ஆரம்பத்தில், ரொம்ப காலம் வரைக்கும் அந்த இருதய
வலியைப்பற்றிய பயம் யானை மாதிரிப் பூதாகாரமாக
அவரைப் பயமுறுத்தி இருக்கிறது. நாளாக நாளாக அந்த
வலி வந்து வந்து 'இத்தோடு உன் கதை முடியப்
போகிறது ...முடியப் போகிறது' என்று ஏச்சங்காட்டி ஓட
ஓட, அந்தப் பூதாகாரமான யானை அவர் மனசில் 'ஒரு
திருட்டு நாய்' மாதிரி உருவகம் கொண்டது.

ரொம்ப அசிங்கமாக, எச்சில் ஒழுகும் நாக்கை நீட்டிக்
கொண்டு வெறி கலந்த கண்களை ஏறச் செருகியவாறு
ஆள் அசர்கிற நேரம் பார்த்து அவரது கையளவு பரிமாண
முள்ள, மிருதுவான, பூஞ்சையான, ஆனால் அவருக்கு
ரொம்ப முக்கியமான, அவரது வாழ்க்கையின் உணர்ச்சி
கள் எல்லாம், ரகசியங்களெல்லாம் துடித்துக் கொண்டிருக்
கிற, ரொம்ப உயர்வான அந்த இதயத்தை, கேவலம் ஒரு
கறித்துண்டு மாதிரிக் கவ்விக்கொண்டு ஓடுவதற்குக்
காத்து நின்று பம்மிப் பம்மி நெருங்கி வருகிற திருட்டு
நாய் மாதிரி...

இருபத்தைந்து வருஷமாக அந்தத் திருட்டு நாயை
விரட்டி விரட்டியே காலம் கழித்துக் கொண்டிருக்கிறார்
என்றாலும் ஏதோ ஒரு நேரத்தில் அவர் அசரப்போவதும்
அது அதைக் கவ்விக்கொண்டு ஓடப்போவதும் நடக்கப்

Scanned by CamScanner

www.t.me/tamilbooksworld



போகிற காரியம்தான் என்று நினைக்கிறபோது அவருக்கு உடம்பெல்லாம் வியர்வையால் நனைந்து போகிறது.

கடைசியாக அந்தப் பெரிய டாக்டர் மேனன், வேணு கோபாலனின் மனைவி வள்ளியம்மையிடம் சொன்னதை இவருக்குத் தெரியாது என்று ரகசியமாக அவளிடம் சொன்னதை – இவர் மறைவாக நின்று கேட்டார். அந்த டாக்டர் அவளிடம் இவருக்குத் தெரியாமல் ஏதோ சொல்லப் போகிறார் என்று தெரிந்து கொண்டு – அப்படிச் சொல்வதற்கு வசதியாக அவர்களுக்குத் தனிமை தந்து அறையிலிருந்து வெளியே போகிறவர் மாதிரி பாவனை காட்டி மூடிய கதவின் பின்னால் நின்று – அவர் சொன்னதை இவர் கேட்டார்.

அந்த டாக்டர் ரொம்பக் கறார் பேர்வழியாம். வீணான் நம்பிக்கைகள் தந்து இழுத்தடித்துக் கொண்டிருப்பவர் அல்லவாம். தன்னைப் பற்றி அவருக்கே அப்படி ஒரு நம்பிக்கை. அவர் வெட்டொன்று துண்டிரண்டாகச் சொல்லி விட்டார்.

"அம்மா, வீணாய் மருந்துக்கும் டாக்டருக்கும் செலவு செஞ்சுக்கிட்டு அலையாதீங்க. இது முடிஞ்ச கேஸ்! அவரை சந்தோஷமா வெச்சுக்குங்க. இஷ்டப்பட்டதை செய்யுங்க. எந்த நிமிஷமும் அவர் கதை முடிஞ்சு போகும் ...தைரியமா இதைத் தாங்கிக்கிட்டு அதுக்குத் தகுந்த மாதிரி நீங்க நடந்துக்கணும்னுதான் சொல்றேன்."

– அப்போது வேணுகோபாலனுக்கு ஐம்பத்தைந்து வயது.

வேணுகோபாலன் சாவதானமாக அந்தக் கதவைத் தள்ளித் திறந்துகொண்டு வந்தபோது எவ்வளவு பொய்யான புன்னகையோடு அந்த டாக்டர் இவரைப் பார்த்தார். வேணுகோபாலன், வள்ளியம்மையின் முகத்தைக் கூடப் பார்க்கவில்லை.



வேணுகோபாலனை எல்லா டாக்டர்களும் கைவிட்ட பின் அவரும் டாக்டர்களைக் கைவிட்டு விட்டார். வருகின்ற சாவை வலிமையுடன் சந்திப்பது என்று தீர்மானம் கொண்டார்; கூடியவரை அதை எதிர்த்து மனோதிடத்தோடு போராடி விடுவது என்ற வாழ்வின்மீது கொண்ட காதலால் அவர் வைராக்கியம் கொண்டார். அவர் மனசுக்கு அந்தத் திருட்டு நாய் ஜெயித்துவிடப் போகிறது என்று பட்டுவிட்டது.

மரணம் நெருங்கி வந்துவிட்டது என்று தெரிந்துவிட்ட பிறகு அவர் நிதானமாக யோசிக்க ஆரம்பித்தார். அதிகப்பட்சம் தான் இன்னும் ஓராண்டுக் காலம்தான் வாழமுடியும் என்ற முடிவுக்கு வந்தபின், தான் தன் வாழ்வில் நிறைவேற்ற வேண்டிய கடமைகளையெல்லாம் எண்ணிப் பார்த்தார். வாழ்க்கையை ஒரு பிரயாணமாகக் கொண்டு காலமெல்லாம் ஊர் சுற்றித் திரிந்துகொண்டிருந்த வேணு கோபாலன் இப்போது முடங்கிக் கிடக்கும் வீட்டையும், இதில் நெருக்கமாகத் தன்னோடு பிணைந்துவிட்ட சுற்றத்தையும் பற்றிக் கண்கலங்க யோசித்தார். அவர்கள் அவரிடம் காட்டுகின்ற அதிகபட்சக் கனிவுகளிலும், அன்பான வார்த்தைகளிலும் அவரிடம் அவர்கள் மறைத்து வைத்திருக்கிற அந்த ரகசியத்தை ஒரு கசந்த சிரிப்புடன் அவர் புரிந்து கொண்டார். தான் புரிந்து கொண்டதை அவர்கள் காணாத வண்ணம் தானும் ஒரு பொய்யில் ஒளிந்துகொண்டார்

யார் ஒளிந்தென்ன; யார் மறைந்தென்ன? அது வரப்போகிறது என்று தீர்மானமாய் நினைக்கையில் இந்த வீட்டின் பெரிய தூண்கள் நிறைந்த அந்த விசாலமான கூடத்தில் தன்னை ரோஜா மாலையிட்டுக் கிடத்தி வைத்திருக்கும் அந்தக் கோலத்தை ஒவ்வொரு அம்சமாய் நிதானமாகக் கண் முன்னால் கொணர்ந்து காட்சிகளாய்க் காண்பார் வேணுகோபாலன்...

Scanned by CamScanner

www.t.me/tamilbooksworld



வயதான தாயும், தந்தையும் இந்த வயதில்
ளுக்கு வராத சாவு இவனுக்கு வந்ததே என்று தங்க
துடிப்பதைப் பார்ப்பார். வள்ளியம்மை முட்டி மோதி கதறித்
வதைப் பார்ப்பார். தன் தமக்கை வாழ்க்கையில் அழு
ஏற்பட்ட இழப்புக்களின் சோகங்களையெல்லாம் தனக்கு
இழைத்துக்கொண்டு அழுவதைப் பார்ப்பார்... ஊரிலிருந்து இதிலே
பேரன், பேத்திகளோடு மகள் வருவாளே...மகனும், மரு
மகளும்—எல்லாம் வந்து நின்று துக்கம் கொண்டாடுவார்
கள்—என்றெல்லாம் நினைத்துக் கொள்ளும்போது இத்
தனை கும்பலின் நடுவே, இத்தனை சொந்தங்களின்
நெரிசலில் வாய்விட்டு அழவோ, மார்மீது விழவோ
சொந்தமில்லாமல் ரகசியமாய்த் தன்னுள்ளேயே மறுகி,
உரிமையற்று ஓர் ஓரமாய் ஒதுங்கி நிற்பாளே—அவள்!—
அவளையும் நினைத்து நினைத்து அவர் உருகுவார்...

அவளுக்கும், அவருக்கும் என்ன உறவு ?

உண்மையைச் சொல்வதென்றால்—அந்த டாக்டர்
மேனன் இவர் உயிரின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்
நிறைவேற்றி நான் எண்ணிக் கொள்ளும்படி வள்ளியம்மை
யிடம் சொன்னாரே, அப்போது வேணுகோபாலனுக்கு
வந்த முதல் நினைவே அந்த 'அவ'ளைப் பற்றித்தான்.
இந்த ரகசியம் அவளையும், இவரையும் தவிர இன்னொரு
வருக்குத் தெரியாது. இந்த உறவின் வயசு அப்போதே
முப்பதைக் கடந்துவிட்டது. இவர் வெளியூர் போவதும்
பெரும்பான்மை சமயங்களில் அவள் துணையோடு தான்.
அவளோடு போகாத சமயங்களில் ஒரு நாள் முன்னதாகவே
ஊர் வந்து சேர்ந்து அவள் வீட்டில் போய் ஒளிந்து
கொள்ளுவார். அவள் உறவை விடவும் இனிமையானது
வேறொன்று இல்லை என்று ஒப்புக்கொள்வது வள்ளியம்
மைக்குத் தான் செய்யும் துரோகம் என்றெண்ணிய அச்சத்
தால் தன்னைத்தானே அவர் ஏமாற்றிக் கொண்டிருந்
தார்.



அவர் எந்த நேரத்திலும் செத்துப் போய்விடலாம்
என்று டாக்டர் சொன்ன ரகசியத்தை அவர் ஓடோடிச்
சென்று அவளிடம்தான் முதலில் சொன்னார். அவள்
அழுதாள். அவருக்குத் தெரியாமல் அவரோடு ரத்தபந்த
முடையவர்களும், சுற்றத்தினரும் ஒருவருக்கொருவர்
பரிமாறிக் கொள்ளும் அந்த ரகசியத்தை அவளிடம்
அவரைத்தவிர வேறு யார் போய்ச் சொல்லப் போகிறார்
கள் ? எனவே தான் மற்றவர்களிடம் தானறியாத ரகசிய
மாகப் பாவனை செய்து கொண்டிருக்கும் அந்தச்
செய்தியை, அவரே ஓடிப்போய் அவளிடம் சொன்னார்.
ஐயோ ! அவள் எப்படி அழுதாள் !

"இல்லீங்க !...உங்களுக்கு முன்னே நான் செத்துப்
போயிடுவேன்" என்று அப்போதே அவள் தீர்மானமாகச்
சொன்னாள்.

'இது இவள் ஆசை' என்று புரிந்து கொண்டார் வேணு
கோபாலன். வெகுநேரம் அவள் அழுவதை மௌனமாகப்
பார்த்துக் கொண்டிருந்தார்.

அவரது மரணத்துக்காக அவர் வருந்துவதைவிட,
அந்த மரணத்துக்கான தன் துயரத்தைக்கூட அவள் பகி
ரங்கமாகக் காட்டிக்கொள்ள முடியாததற்கே வருந்து
கிறாள் என்பதையும் அவர் உணர்ந்தார்.

வேணுகோபாலனின் வீட்டுக்கு அவள் எப்போதாவது
வருவாள். இந்த வீட்டு மனிதர்களும், ஊராரும் அவள்
மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தனர். எவ்வளவோ
சொந்தமும், வசதிகளும் இருந்துகூட, வேணுகோபாலனை
ரகசியமாகச் சந்திக்கிற இந்த ஓர் உறவின் பொருட்டே
அவள் ஓர் ஏகாங்கி மாதிரி இங்கே தனிமையில் வசிக்
கிறாள் ! இவர்களின் ரகசியம் அம்பலமானால் அதனால்
பாதிக்கப்படப் போவது வேணுகோபாலன், அல்லது
அவள் என்ற அந்த இருவர் சம்பந்தப்பட்ட விஷயமாயிருப்

Scanned by CamScanner

www.t.me/tamilbooksworld



வன் அவர்கள் இருவருமே அந்த ரகசியம் அம்பலமாவது குறித்துக் கவலை கொண்டிருக்கமாட்டார்கள். இதில் அவர்கள் இருவரும் சம்பந்தப்பட்ட இரண்டு குடும்பங்களின் கௌரவமே அடங்கி இருக்கிறபடியால் அது ரகசியமாகவே புதைக்கப்பட வேண்டிய விதி என்று அவர்கள் இருவருமே தீர்மானம் செய்தனர். அது மாதிரி சந்திப்புகளின் போது அவர்களில் யாருக்கேனும் திடீரெனத் தோன்றும் :

எந்த வேளையிலும் அந்த மரணம் வரலாம் என்றாரே டாக்டர்? இந்த ரகசியமான சந்திப்பு வேளையில் அது வந்து இந்த மரணமே அந்த ரகசியத்தை அம்பலமாக்குகிற நிகழ்ச்சியாக அமைந்துவிட்டால்?...

இந்த நினைப்பு வந்த மாத்திரத்தில் அவர்கள் இருவரும் அவசர அவசரமாய்ப் பிரிந்துவிடுவார்கள். அப்படிப் பிரிந்து விலகி ஓடிவந்துவிட்ட பிறகும் உயிர் சுமந்து நிற்கிற அவலத்தை நினைக்க நினைக்க வேணுகோபாலனுக்குச் சிரிப்பு வரும்,

கடைசியில் ஒரு சமயம் வேணுகோபாலன் ஒரு முடிவுக்கு வந்தார்.

'வள்ளியம்மை மட்டும் யார்? என் மனைவிதானே? என் வாழ்வில் சமபங்கு கொண்டவர்கள் தானே? இவள் மீது அன்பு இல்லாததாலோ, இவளோடு வாழ்ந்த தாம்பத்தியத்தில் குறை கண்டதனாலோ இவளுக்குப் போட்டியாக ஏற்படுத்திக் கொண்ட உறவு அல்லவே இது? ஆனால் இதனை எப்படிப் புரிய வைப்பது? எவருக்கு இது புரியும்? ஆனால், எனது மரணம் வள்ளியம்மைக்கு மட்டுமாவது இதனைப் புரியவைக்கவேண்டும்' என்றெல்லாம் யோசித்து இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால், கடுமையாக இருதயவலி வந்த ஒருநாள் இரவெல்லாம்உட்கார்ந்து ஒரு உயில்எழுதினார்வேணுகோபாலன்.



நாலைந்து பக்கங்கள்தான் எழுதினார். அதற்குள் பொழுது விடிந்துவிட்டது அவ்வளவு யோசித்துயோசித்து அந்த உயிலை அவர் எழுதினார். தன் இருதயத்தையே திறந்து பிளந்து காட்டியமாதிரி எழுதிவிட வேண்டும் என்கிற ஆதங்கத்தோடு எழுதினார். தனக்கு தெரிந்த அளவு இலக்கிய நயத்தோடு எழுதினார். உண்மையை எழுதினாலே பாஷைக்கு எவ்வளவு வலிவு வந்துவிடும் என்று அவருக்குத் தெரியாததனால் வலிந்து வலிந்துபாஷையில் மெருகேற்றி அதை அவர் எழுதினார்

வள்ளியம்மை அதை எங்கே வைத்திருப்பாள்? என்று இப்போது யோசித்தார் வேணுகோபாலன்.

இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு, 'தான் செத்துப் போய்ட்டேன்னா முதல் காரியமா இதைத் திறந்து படிச்சுப்பாரு; அழறது எல்லாம் அப்புறமா வச்சுக்க' என்று சொல்லி அதை அவள் வசம் கொடுத்தபோது – இந்த ரகசியம் அவருக்குத் தெரிந்துவிட்டதே என்று அதிர்ந்து நின்றாள் வள்ளியம்மை.

''வள்ளி – நீ ரொம்ப தைரியசாலி! அழாதே...எல்லார் கதையும் முடிகிற கதைதானே?.. நான் உயிரோட இருக்கிற போது இதைத் திறந்து பார்க்கறதில்லேன்னு சத்தியம் பண்ணு'' என்று சத்தியம் வாங்கிக் கொண்டார் வேணுகோபாலன்.

அவருக்குச் சத்தியம் செய்து கொடுத்தபோது வள்ளியம்மையும் 'அவள்' மாதிரியே சொன்னாள். ''இதைத் தெறந்து பாக்கற நெலமை எனக்கு ஏற்படாம நான் சுமங்கலியா உங்களுக்கு முன்னாலே போயிடணும்...''

பின் கட்டிலிருந்து சிலபேர் பாய், தலைகாணிகளோடு கூடத்தைக் கடந்து திண்ணைக்குப் படுக்கப்போனார்கள். கூடத்தில் சுப்புமகள் ராசாத்தியும், வேறு இரு சிறுமிகளும் வேணுகோபாலனுக்கு எதிரே பாய் விரித்துப் படுத்துக் கொண்டார்கள்.

Scanned by CamScanner

www.t.me/tamilbooksworld



''தாத்தா...தாத்தா ஒரு கதை சொல்லுங்களேன்'' என்றாள் சுப்பு மகள்.

''முடிஞ்ச கதையா? முடியாத கதையா?'' என்று முனகிக் கொண்டார் கிழவர்

வேணுகோபாலன் சில சமயங்களில் அவர்களுக்குக் கதை சொல்லுவார். மீதியை நாளைக்குச் சொல்வதாக ஒவ்வொரு நாளும் பாதியில் நிறுத்தி விடுவார்.

வள்ளியம்மை இறநத ஒரு வார காலமாய் அந்தக் கதை சொல்லும் வழக்கம் நின்றிருந்தது.

''தாத்தா...சித்திரக்குள்ளன் கதை நீங்க முழுக்க சொல்லலியே ...அதுக்குள்ளே பாட்டி செத்துப் போயிட்டாங்க...'' என்று மற்றொரு சிறுமி, ஒரு வாரத்துக்கு முன்பு சொன்ன பாதிக் கதையை ஞாபகமூட்டினாள்.

''இன்னிக்கு ரொம்ப நாழி ஆயிடுச்சி. உசிரோட பொழச்சிக் கெடந்தா நாளைக்குச் சொல்றேன். இன்னிக்கிக் கொஞ்சம் வேலை இருக்கு'' என்று சொல்லியவாறே தூணருகே மாட்டியிருந்த அரிக்கேன் விளக்கை எடுத்துக்கொண்டு கூனல் முதுகுடன் கூடத்துஅறைக்குள் போனார் வேணுகோபாலன். அரிக்கேன் விளக்குடன் அவர் ஆடி நடக்கும்போது கூடத்துத் தூண்களின் நிழல்கள் பெரிதாய்க் குறுக்கும் மறுக்கும் விழுந்தன.

❖ ❖ ❖

அறைக்குள் சென்று வெகுநேரம் வரை எதை எதையோ குடைந்து, கடைசியாக வள்ளியம்மையின் பெரிய மரப்பெட்டி ஒன்றைத் திறந்து அரிக்கேன் விளக்குடன் அதனுள் குனிந்து, அந்தக் கவர் இருக்கிறதா என்று தேடினார். பழைய, நைந்த சரிகைப் புடவை ஒன்றில் மூட்டை கட்டி வைத்த ஒரு சந்தனப் பேழைக்குள்வெகு பத்திரமாக அதை அவள் பாதுகாத்து வைத்திருப்பதை வெகு சிரமத்



துக்குப் பின் கண்டெடுத்தார். பெட்டியை மூடிய பின் திரும்பி வந்து கூடத்துத் தூணருகே உட்கார்ந்து அந்த கவரைப் பிரிக்காமல் வெளிச்சத்தில் அதை வெறித்துப் பார்த்தார்.

'நான் எந்தச் சமயத்திலும் இறந்து விடலாம் என்று டாக்டர்கள் எல்லாரும் ஒருமுகமாகச் சொல்லிவிட்டார்கள். இந்த ரகசியம் என்னிடம் மட்டும் மறைத்து வைக்கப் பட்டிருக்கிறது. இதைத் தெரிந்து கொண்ட பிறகு –இந்த ரகசியம் எனக்குத் தெரிந்துவிட்ட காரணத்தினாலேயே இதனை நான் எழுதுகிறேன்' என்ற வாசகங்களோடு அந்த உயிலை எழுதஆரம்பித்ததாக அவருக்கு இப்போது நினைவு வருகிறது.

அதை எழுதி முடித்த பிறகு ஒரு முறை படித்துப் பார்க்கக்கூட அவருக்கு நேரமில்லை. அன்று அந்த அளவுக்கு அவரது நெஞ்சுவலி கடுமை கண்டிருந்தது. எனவே, அதை அவசர அவசரமாக ஒரு கவருக்குள் இட்டு மூடி ஒட்டினார். கவரின் மீது அவர் எழுதினார்.

''வள்ளியம்மைக்கு, நான் இறந்த உடனே, இறந்த பிறகுதான் இதைத் திறந்து படிக்கவேண்டும்'' என்று எழுதி, அந்த வாசகங்களுக்குக் கீழே பலமாக பட்டையாக இரண்டு கோடுகளை இழுத்திருந்தார்.

அப்போது அதிகாலை நேரம், வள்ளியம்மை தூங்கிக் கொண்டிருந்தாள். அந்த அறையில் அவள் பக்கத்தில் உட்கார்ந்துதான் இரவெல்லாம் அதை அவர் எழுதினார். அவர் எழுதிக் கொண்டிருக்கும்போது இரண்டொருமுறை அவள் தூக்கத்திலிருந்து விழித்து ''நீங்க தூங்கலையா? நாளைக்கு எழுதப்படாதா?'' என்று கேட்டாள்.

அவளுக்கென்ன தெரியும்? இதை எழுதி முடிப்பதற்குள்ளாகக்கூட அவர் கதை முடிந்து போகலாம் என்ற அச்சத்தோடே அவர் இதை எழுதினார் என்பது.

Scanned by CamScanner

www.t.me/tamilbooksworld



அந்த உயிலில் தன் மரணத்தைப்பற்றி மிகவும் துச்சமாக அவர் எழுதியிருந்தார். உண்மையில் சாவது குறித்து அவர் மிகவும் பயந்துதான் இருந்தார். ஆனால் அந்தப் பயத்துக்காக அவர் வெட்கப்பட்டார். எனவே, தான் பயப்படவில்லை என்றும், தைரியமாகவே தலைநிமிர்ந்து ஒரு வீரன் மாதிரி சாகப் போவதாகவும் அதில் அவர் எழுதியிருந்தார். சிரிக்கச் ‘சிரிக்கப் பேசுகின்ற தனது சுபாவத்தை இழந்துவிட்டதை ஈடுசெய்து கொள்கிற மாதிரி ஒரு நையாண்டியும் கேலியுமாக அவர் அதை எழுதியிருந்தார்.

''எந்த நிமிஷமும் இவன் கதை முடிஞ்சு போகலாம்'' என்று சொல்லிவிட்டார் டாக்டர் மேனன். இதைச் சொல்ல டாக்டர் எதுக்கு ? என் கதை முடியுமுன் இந்த டாக்டரின் கதைகூட முடிந்து போகலாம். மனுஷ ஜீவிதத்தின் கதையே அப்படித்தான். எவன் கதையும் எப்போதும் முடிந்து போகலாம். கதை முடிந்து போவதைப் பற்றிக் கவலை எதற்கு ? கதை நடந்துகொண்டிருக்கும் போதுதான் கவலையெல்லாம்...'' என்று எந்த நேரத்தில் எழுதினாரோ ?

அது வெறும் நையாண்டி அல்ல. அது எவ்வளவு சத்தியமான உண்மை ! வேணுகோபாலனின் கதை முடிவுக்கு காலம் கணித்த டாக்டர் மேனனின் பிரேத ஊர்வலம் இதே தெரு வழியாகப் போனதைத் திண்ணை மேலிருந்தவாறு அடுத்த வருஷமே இந்த வேணுகோபாலன் பார்த்தாரே...

அந்த உயிலை எழுதி யார் வசம் ஒப்புவித்தாரோ அந்த வள்ளியம்மையையும், அந்த உயிலில் யார் யாரைப் பற்றியெல்லாம் எழுதியிருந்தாரோ அவர்கள் எல்லோருமே போய்விட்டபிறகு, தான் இறந்த பிறகு திறந்து பார்க்கும் படித் தன் கையால் எழுதி ஒட்டிய அந்தக் கவரைத் தானே திறந்து பார்க்க நேர்ந்துவிட்ட விதியின் வேடிக்கையை எண்ணிப் பார்த்து அவர் சிரித்துக் கொண்டார்.



இதைத் திறக்கலாமா, வேண்டாமா என்று ஒரு விநாடி யோசித்தார். வேறு யாரிடம் இதை ஒப்படைப்பது? அதற்குக்கூட ஒரு சொந்தமில்லாத அநாதையாகிவிட்ட தனது வெறுமையை எண்ணிப் பெருமூச்சுவிட்டார்.

பின்கட்டிலிருந்த ராசாத்தியின் தாய் சுப்பு கூடத்துக்கு வந்தாள். கூடத்துச் சுவரோரமாகச் சுருட்டி வைக்கப் பட்டிருந்த படுக்கையைக் கொண்டு வந்து தட்டி உதறி முற்றத்தின் ஓரமாய்த் தாழ்வாரத்தில் காற்றுக்காக வேணுகோபலன் கோடை காலத்தில் படுக்கிற இடத்தில் —விரித்தாள்.

வள்ளியம்மை உடம்பு சுகமில்லாமல் ஒரு மாசம் படுத்த படுக்கையாக இருந்தபோது அவளுக்கு உதவியாக ஆரம் பித்த பழக்கத்தைத் தொடர்ந்து செய்து வருகிறாள் சுப்பு.

ஃ ஃ ஃ

கைத்தடியுடன் எழுந்து பின்பக்கம் போனார் வேணுகோபாலன். சுப்பு அவருக்கு உதவியாக அரிக்கேன் விளக்கை எடுத்துக்கொண்டு அவர் பின்னால் போனவள், பின்கட்டு வாசற்படியில் விளக்கை வைத்துவிட்டுத் திரும்பி வந்து முற்றத்திலிருந்த அண்டாவிலிருந்து ஒரு செம்பு தண்ணீரும் கொண்டுபோய் வாசற்படியண்டை வைத்தாள்.

அவர் கால் கழுவிக்கொண்டு வரும்போது அரிக்கேன் விளக்கின் வெளிச்சத்தில் அந்தப் பழைய காலத்து வீட்டின் இடிந்துபோன அந்தப் பகுதியைப் பார்த்தார். ‘தனக்குப் பின் இந்த வீட்டுக்கு உரிமை கொண்டாடப் போவது யார்?’ என்று யோசித்துப் பார்த்தார். மனத்துக்கு எட்டிய தூரத்தில் உறவுக்காரன் என்று எவரும் தோன்றவில்லை. ‘பேசாமல் இந்த சுப்புவுக்கோ, அவள் மகளுக்கோ எழுதி வைத்துவிடலாமா ?’ என்று யோசனை வந்ததும் நாக்கைக் கடித்துக்கொண்டார்.

Scanned by CamScanner

www.t.me/tamilbooksworld



'வேண்டாம்' என்று மனசுள் தோன்றியது. 'உயில் எழுதினால் இவர்களும்கூட எனக்குமுன் போய்விடுவார்கள். என் ஜாதகம் அப்படி...

கைத்தடியைச் சப்தமெழ ஊன்றியவாறு, உள்ளே வந்து முற்றத்துத் தாழ்வாரத்தில் விரித்திருந்த தனது படுக்கையில் உட்கார்ந்து கொண்டார்.

''சுப்பம்மா...பெட்ரூம் லைட்டை எத்தி இங்கே வச்சுட்டு இந்த அரிக்கன் விளக்கை நிறுத்திடு. அந்தப் பால் பாத்திரத்தையும் கொண்ணாந்து தலைமாட்டிலே வச்சுட்டு நீ போ...''

மணி பதினொன்றுக்கு மேல் ஆகியிருந்தது.

சுப்பு போன பிறகு அந்த பெட்ரூம் விளக்கு வெளிச்சத்தில் அந்தக் கவரைப் பிரித்து, உள்ளே இருந்த உயிலை எடுத்து விளக்கருகே பிடித்துப் பார்த்தார்.

பார்வை மங்கிவிட்டதால் எழுத்துக்கள் ஒன்றும் தெரியவில்லை.

தன் மரணத்துக்குப் பின் ஆயிரம் சொந்தங்களின் பேரில் தன்மீது கவிந்து கிடக்கும் நெரிசலினால் மறைக்கப்பட்டு மனம் விட்டு அழவோ, மார்பின் மீது விழவோ உரிமையற்று ஓர் ஓரமாய் ஒதுங்கி நிற்பாளே 'அவள்' அவளுக்கும், எனக்கும் உள்ள உறவை வெறுப்போ, கோபமோ இல்லாமல் புரிந்துகொண்டு அவளையும் அருகே அழைத்துக்கொண்டு வரவேண்டும் என்று வள்ளியம்மையை வேண்டிக்கொண்டு எழுதினாரே ..

இரண்டு வருஷத்துக்குப் பின் அவளது சொந்தங்கள் குழுமி இருந்த நெரிசலின் நடுவே அவளைக் கிடத்தி வைத்திருந்தபோது இவர் போய் எந்த உரிமையும் இல்லாமல் எவனோ மாதிரி ஒரு பக்கம் ஒதுங்கி நின்று ரகசியமான கண்ணீரை மேல் துண்டினால் மறைத்துக்கொண்டு வந்தாரே ..



அன்றைக்கு இரவுகூட அந்த மானங்கெட்ட மார்பு வலி வந்தது.

திடீரென்று அவருக்குத் தோன்றியது: 'இந்த இருபத்தைந்து வருஷங்களை நான் வீணடித்து விட்டேனே... சாகிறவன் எங்கே செத்தால் என்ன? அதற்குப் பயந்து வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்து.. சீ!'

'அவள்' இறந்த அன்று வேணுகோபாலன் இந்த உயிலை வள்ளியம்மையிடமிருந்து வாங்கிக் கொள்ளலாமா என்றுகூட நினைத்தார். 'இருக்கட்டுமே! நான் செத்த பிறகாவது வள்ளியம்மைக்கு இந்த ரகசியம் தெரியட்டுமே' என்று விட்டுவிட்டார்.

தன் மகனைப் பற்றி, மகளைப் பற்றி எல்லாம் கூட அந்த உயிலில் எழுதி வைத்திருந்தார். அவரது மகள் ஆறாவது பிரசவத்திலும், அந்த அல்பாயுசு மகன் நாற்பத்தைந்து வயசில்ஏதோ ஒரு நோயினாலும்.. அந்த உயிலில் யார் யாரை குறிப்பிட்டிருந்தாரோ எல்லோருமே காலமான பின் இந்த உயிலுக்கு மட்டும் என்ன உயிர் இருக்கிறது?

வேணுகோபாலன் அந்த உயிலின் கடைசிப் பக்கத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''நான் இறந்து போனால் யாரும் அழவேண்டாம். பாசம் கொண்டவர்களுக்கு இது கஷ்டம்தான். இருந்தாலும் இது எதிர்பார்த்த மரணம் என்பதால் அழுதுஅழுது பொய்யான உணர்ச்சிகளை வளர்த்துக்கொள்ள வேண்டாம். வள்ளி, நீ ஒன்று செய்யவேண்டும். நம்ப வீட்டு கிராமபோன் பெட்டியிலே ராஜரத்தினம் பிள்ளையோட நாதஸ்வரப் பிளேட்டை போட்டுக் கல்யாண ஊர்வலம் மாதிரி மங்கலகரமாக என் பிணத்தை எடுத்துக் கொண்டு போக ஏற்பாடு செய்யணும்' என்று எழுதி இருந்த அந்த வரிகளைச் சிரமப்பட்டு படிக்கிற மாதிரி, அந்த காகிதங்களை வெறித்த பார்வையோடு நினைவுபடுத்திக் கொண்டார்.

Scanned by CamScanner

www.t.me/tamilbooksworld

வேணுகோபாலன் பரிதாபமாகப் பெருமூச்செறிந்தார்.

இப்போது இவர் இறந்து போனால் அழுவதற்கு யார் இருக்கிறார்கள்?

'யாரும் அழவேண்டாம்' என்று எழுதி வைத்த இந்த உயில் அல்லவா இன்று பொருள் அற்று, ஆவசியமற்று இறந்து போய்விட்டது!

வேணுகோபாலனுக்குச் சிரிப்பு வந்தது. கூடத்தில் வள்ளியம்மையின் படத்தருகே அம்மன் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

வேணுகோபாலன் கொட்டாவி விட்டார். தூக்கம் வந்துவிட்டது. பாலைக் குடிப்பதற்காகக் கைப்பிடி உள்ள அந்த 'வால் கப் பை எடுத்தார். பால் ஆறிப் பச்சைத் தண்ணீர் மாதிரி இருந்தது.

கையிலிருந்த காகிதங்களை பெட்ரூம் லைட்டில் நீண்டு எரியும் சுடருக்கு மேலே பிடித்தார்.

காகிதம் சுருண்டு கரிந்து 'குபுக்' கென்று எரிந்தது. எரிகிற காகிதங்களை ஒரு கையிலும் மற்றொரு கையில் அந்தக் ஜ்வாலைமீது அந்த 'வால் கப்'பையும் ஏந்திப் பிடித்துப் பாலைச் சூடாக்கினார் வேணுகோபாலன்.

''தாத்தா என்ன செய்யறீங்க? நான் தான் பாலைச் சூடு பண்ணித் தர்ரேன்னு சொன்னேனே...'' என்று சொல்லிக்கொண்டே சுப்பம்மாள் வந்தாள்.

வேணுகோபாலன் அவளைப் பார்த்துச் சிரித்தார். □

Scanned by CamScanner

# விதியும் விபத்தும்

அந்த மாட்டுக்காரச் சிறுவன் ஓர் எருமையின் முதுகின் மீது கவிழ்ந்துபடுத்துக் கொண்டு மாம்பழம் தின்று கொண்டிருந்தான். அந்த எருமை சாவதானமாக நடைபோட்டுக் கொண்டிருந்தது. அதன் முதுகில் குறுக்குவாட்டில் கவிழ்ந்து படுத்துத் தொங்கிய வண்ணம் அந்தச் சிறுவன் சுவாரசியமாய் மாங்கொட்டையைப் பல்லால் சுரண்டிக் கொண்டிருந்தான்

சுத்தமாக, கொஞ்சங்கூட மஞ்சள் பசை இல்லாமல் வெண்மையாகும்படி அந்த மாங்கொட்டையை நக்கிச் சுவைத்த பிறகு அதற்குமேல் அதை என்ன செய்வதென்று அவனுக்குத் தெரியவில்லை. சற்றுத் தொலைவில் மாந்தோப்பின் வேலி ஓரமாக ஓடுகிற சாக்கடைக்கு பக்கத்தில் உள்ள காணிக்கல் மீது ஒரு மைனாக் குருவி பறந்து வந்து உட்கார்ந்தது. மாட்டுக்காரச் சிறுவன் மாட்டின் முதுகிலிருந்து இறங்கி நின்று மாங்கொட்டையால் மைனாக் குருவியைக் குறி பார்த்தான். அவனுக்குத் தன் சாமர்த்தியத்தில் நம்பிக்கை உண்டு நிச்சயமாக அந்த இடத்தை அவனால் குறிபார்த்து அடிக்க முடியும்!

அவனுக்குக் குருவிகளின் சாமர்த்தியமும் தெரியும். எவ்வளவுதான் வேகமாக வீசி எறிந்தாலும் அந்தக் கல் இலக்கை அடைவதற்குள் எப்படியோ தெரிந்துகொண்டு, அந்தக் குருவி பறந்துபோகும். என்ன நஷ்டம் – இலக்கில் மோதிய கல் சிதறும். அது மாதிரி இந்த மாங்கொட்டை சிதறப்போகிறது, அவ்வளவுதான்.

வெறும் கல் சிதறினால் பரவாயில்லை. ஆனால், இது ஒரு உயிருள்ள விதை. இதை நட்டால் மரம் முளைக்கும். அந்த மரம் பூக்கும்; காய்க்கும். தன் ஆயுட்காலத்தில்

www.t.me/tamilbooksworld

Scanned by CamScanner

எத்தனையோ ஆயிரம் பழங்களை அந்த மரம் தரும். இந்த ஒரு விதை பல்லாயிரக்கணக்கான விதைகளுக்கு மூலாதாரமாகும். பல்லாயிரக்கணக்கான விதைகளிலிருந்து அனந்த கோடி விளைச்சல் வரும். உயிரின் தத்துவமே உயிர்ப்பெருக்கம்.

மாட்டுக்காரச் சிறுவனுக்கு மாப்பழத்தின் ருசிதான் தெரியும். அடுத்தபடியாக, மைனாக்குருவியை அடிக்கப் போகும் விளையாட்டில்தான் அவனுக்குக் குறி—காற்றில் மாங்கொட்டை 'விர்'ரெனப் பறந்தது.

நல்லவேளை! குறியும் தப்பிற்று, குருவியும் தப்பிற்று. காணிக்கல்லின் தலைக்குமேலே ஓர் அங்குல உயரத்தில் பறந்து சென்ற மாங்கொட்டை அந்த நாற்றச் சாக்கடையில் விழுந்து, சகதியில் அழுந்தி மூழ்கிற்று. மாங்கொட்டை அழுந்தியவுடன் அதனை மூடிக் கவிந்த சேற்றின் மீது குமிழிகள் கிளம்பின.

அந்தக் குமிழிகளினூடே ஏதோ ஒரு செடியின் வேர் மாதிரி, அந்த வேர் உயிர்பெற்று அசைவது மாதிரி, ஒரு அசட்டுத்தனமான சிவப்பு நிறத்தோடு ஒரு நீளமான புழு - இந்த மாங்கொட்டை, வந்து விழுந்த வேகத்தில் விளைந்த அதிர்ச்சியினால்—தாபச நித்திரை கலைந்து, தனது தலையற்ற உடலை மேலும் கீழும் நெளித்து அந்த மாங்கொட்டையைத் தொடர்ந்து தானும் சேற்றில் அழுந்தி அதனை எட்டிப் பிடித்து அதன்மீது ஊர்ந்தது.

எநதப் பிடிப்பும் இல்லாமல் நீரிலும் சேற்றிலும் நெளிந்து கொண்டிருந்த அந்தப் புழு இந்த மாங் கொட்டையை ஆதாரமாகப் பற்றி, அதன்மீது சுருண்டு கொண்டது.

மாங்கொட்டை மிக உறுதியாய் இருந்தது. அந்தக் காணிக்கல்லில் மோதிச் சிதறாமல் எந்த விதி அதனைக் காப்பாற்றியதோ அதே விதி இந்தப் புழுவின் அரிப்புக்கு இளகாத உறுதியை அதற்குத் தந்திருந்தது.

வெகுநேரம் அந்தப் புழு அந்த மாங்கொட்டையைத் துளைக்க முயன்று தோற்றுப்போனது.

அப்போது சாக்கடை நீரின் ஓட்டத்தில் உருண்டு கொண்டு வந்த ஒரு வெம்பிய பழம் இதன் அருகே வந்து ஒதுங்கிற்று. உறுதியான இந்த மாங்கொட்டையோடு மோதிக் கொண்டிருப்பதைக் காட்டிலும் அந்த வெம்பிய பழத்தோடு உறவு கொள்வது அந்தப் புழுவுக்குச் சுலபமாயிற்று.

மாங்கொட்டை பிழைத்தது.

தன்னைச் சுற்றி என்ன நிகழ்கிறது என்று பிரக்ஞையே இல்லாத யோகத்தில் அந்த மாங்கொட்டை வெகுகாலமாக ஆழ்ந்து கிடக்கிறது. தனியாயிருந்தபோதும், மாட்டுக்காரன் கையிலே அகப்பட்டபோதும், அவனால் விசி எறியப்பட்டுக் காற்றிலே மிதந்தபோதும் அது உருவ மாற்றமும் இடமாற்றமும் பெற்றதே ஒழிய அந்த உயிரின் யோகம் கலையாதிருந்தது. பிரக்ஞைதான் இல்லாமல் இருந்ததே தவிர உயிர் இருந்தது.

மாங்கொட்டையாகட்டும், நெல்மணியாகட்டும், மனித அறிவுக் கண்ணின் கணிப்புப்படி ஓரறிவு படைத்த உயிர்களின் ஆதாரம் அனைத்துக்கும் வாழ்க்கை என்பதே பிரக்ஞை அற்றுக் கிடக்கும் ஒரு யோகம்தான்.

பிரக்ஞையற்றுக் கிடப்பது சாவு என்று நினைப்பது பேதமை, பிரக்ஞையுமில்லாமல் வளர்ச்சியுமில்லாமல் கிடப்பதே மரணம். உயிரின் ரகசியமே பிரக்ஞையற்றுக் கிடக்கும் ஊமை நிலையில்தான் அடங்கிக் கிடக்கிறது. அந்த யோகத்தின் உள்ளே நிகழும் இயக்கம் நுட்பமானது, ஆரவாரமில்லாதது. புறச்சக்திகள் அந்த விதையை மோதி அழிக்காது ஒரு விதியினால் காப்பாற்றப் பட்டதன் விளைவாக அதன் உள்ளே இருந்து முளைத்த உயிர் அந்த விதையைக் கிழித்துக்கொண்டு வெளியே வந்தது, சில நாட்களுக்குப் பிறகு.

அழிவும் ஆபத்தும் இதற்கு எந்த நிலையிலும் உண்டு; இந்த நிலையிலும் உண்டு. அழிவது விபத்து! அழியாமல் காப்பாற்றப்பட்டால் விதி.

இந்த மாங்கொட்டையைப் பொறுத்தவரைக்கும் இதுவரை ஒரு விபத்து மாதிரி விதி காப்பாற்றி வருகிறது. எல்லா உயிர்களுக்கும் இது பொது. விதி என்பது ஒரு விபத்தும், விபத்து என்பது ஒரு விதியுமாகும்.

சில பருவங்களுக்குப் பிறகு மாஞ்சோலைக்கு வெளியே அந்த வேலி ஓரத்தில் உள்ள சாக்கடையில் வேரூன்றி ஒரு பெரிய மாமரமே வளர்ந்திருக்கிறது!

அது துளிர்த்து, பூத்து, சூல்கொண்டு, காய்த்து, கனிந்து சோபிதம் கொண்டது.

இதிலிருந்து பறிக்கப்பட்ட கனிகள் கூடைகளில் குடியேறித் தலைச் சுமையாகவும், விரைந்து செல்லும் வாகனங்களிலும், விண்ணில் திரியும் விமானங்களிலும் வாழ்க்கைப் பயணத்தை மேற்கொண்டன.

ஏதேதோ நாடுகளில் - அது பிறந்த மண்ணிலிருந்து பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் இருக்கின்ற நாடுகளிலும்-இந்த ஒரு மரத்தின் பழங்கள் ஒன்றிலிருந்து ஒன்று இவ்வளவு தூரம் விலகிய பிறகு—அழகிய காகிதங்களில் சுற்றப்பட்டுக் கடைகளில் அமர்ந்தன. சில மனிதர்களின் கைகளில் சில பட்டு அவர்களின் நாசி அருகே அன்போடு உறவாடின. சில கடவுள் சந்நிதானத்திலே அமர்ந்து ஆராதனை பெற்றன, சில கைபடாமலேயே நறுக்கப்பட்டு யந்திரங்களின் உதவியோடு வெறொரு உப பொருளைத் தயாரிக்க உதவின.

அதில் ஒன்று இதனுடைய மூல விதையைப் போலவே ஒரு மாட்டுக்காரச் சிறுவனின் கையிலே எச்சிற்பட்டு, கடிபட்டு உறிஞ்சப்பட்டு, வெறும் மாங்கொட்டையாக உருவம் பெற்று அவன் விட்டெறிந்த வேகத்தில் காற்றிலே

www.t.me/tamilbooksworld

Scanned by CamScanner

'விர்' ரென்று சுழன்று, புழுத்து நெளிகின்ற ஒரு நாற்றச் சாக்கடையில் வந்து விழுந்து தன் பயணத்துக்கு முடிவு கண்டது.

ஜீவித நாடகத்தில் முடிவு என்பது ஏது? இதன் கூடப் பிறந்த கனிகளில் சில இப்போதும் கூட அந்தப் பயணத்தில் தொடர்ந்து போய்க்கொண்டோ அல்லது ஏதோ ஓர் இடத்தில் அமர்ந்துகொண்டோ இருக்கின்றன. கடையிலோ ஒரு கட்டில் அறையில் உள்ள தட்டிலோ, ஒரு குளிர்ச்சாதனப் பெட்டியிலோ எங்கே இருந்தாலும் அதன் உள்ளே உள்ள உயிர் யோகம் கலையாமல்தான் இருக்கிறது. வெறும் மாங்கொட்டையாக விட்டு எறிகிறார்களே அது இந்த யாத்திரையின் முடிவு அல்ல. அது ஒரு முடிவு எனின் ஓர் 'ஆரம்பத்தின் முதல்நிலை' என்று அதற்குப் பொருள்.

மாங்கொட்டைக்கு இந்த ஞானம் இல்லை. ஞானமற்றிருப்பது அஞ்ஞானம் இல்லை. எனவே மாங்கொட்டை ஞானியும் அல்ல; அஞ்ஞானியும் அல்ல மாங்கொட்டைக்கு ஞானமல்ல, உயிர்தான் முக்கியம்.

மாங்கனியின் விதி மாங்கொட்டை ஆவதும், மாங்கொட்டையின் விதி மரம் ஆவதும் இயற்கை என்னும் ரகசியத்தைப் பற்றிய பிரக்ஞை இல்லை என்பதால் அந்த மாங்கொட்டை முளைக்காமல் போய்விடுமா என்ன? விதி இருந்தால் முளைக்கும்; விபத்து நேர்ந்தால் அழியும்.

மாங்கொட்டை மட்டும்தான் விளையுமா? புழுவும் விளையும்.

அந்தப் புழு மாங்கொட்டையின்மீது ஊர்ந்தது. 'நீ எங்கே போனால் என்ன? இறுதியில் இங்கேதானே வர வேண்டும்?' என்பதுபோல அந்த மாங்கொட்டையை நெருடி நெருடி அதன் யோகத்தைக் கலைக்க முயன்றது புழு.

www.t.me/tamilbooksworld

Scanned by CamScanner

மாங்கொட்டையைவிடப் புழுவுக்கு அறிவு அதிகம். மாங்கொட்டையின் இந்த நிலையை அது வீழ்ச்சியாகக் கருதியது.

இது வீழ்ச்சி எனில் என்ன?

அந்தப் புழுவின் அரிப்புத் தாங்காமல் மாங்கொட்டை யோகம் கலைந்து விழிப்புற்றது.

ஓ! இந்த விழிப்புதான் மரணம்.

"இந்தப் புழுவின் உறவை மறுத்து, இறுக்கம் கொண்டு,யோகம் கலையாதிருந்து, முளைத்து,கிளைத்து, துளிர்த்து, பூத்து, காய்த்து, பழுத்து என்ன ஆகி என்ன பயன்? இறுதியில் இந்த வீழ்ச்சிதானே!'' என்று ஒரு குறிப்பிட்ட நிலையை மட்டும் தனித்துப் பிரித்துக் கோடு கிழித்துக்கொள்வது பேதைமை. இதை வீழ்ச்சி என்று கருதுகிற மாங்கொட்டையாகட்டும், புழுவாகட்டும், மனிதனே ஆகட்டும், வீழ்ந்து போகவேண்டிய விபத்துக்கு இரையாக வேண்டியதுதான்.

மாங்கொட்டைக்கு விபத்து நேர்ந்துவிட்டது.

மாங்கொட்டை, மாங்கொட்டையாக இருத்தல் வேண்டும். மாங்கொட்டைப் பிறவி, புழுப் பிறவியோடு தன்னை ஒப்பிட்டுப் பார்க்கலாகாது. அவ்விதம் பார்க்கையில் புழுப் பிறவி மேலாகத் தோன்றுகிறது மாங்கொட்டைக்கு.

அந்தப் புழு, தனது வாழ்க்கையைச் சுதந்திரமாக அனுபவிக்கிறது அல்லவா? மாங்கொட்டைக்கு அது சாத்தியமில்லை.

கொஞ்சங் கொஞ்சமாய் முன்பு ஒரு சமயம் ஒரு மாங்கொட்டையோடு உறவு கொள்ளத் துடியாய்த் துடித்துத் தோல்வி கண்ட புழு இப்போது உறுதியற்றிருந்த இந்த மாங்கொட்டையின் உள்ளே குடைந்து குடைந்து இடம் பிடித்துக்கொண்டது. மிகவும் நெருக்கமுற்ற பின் அதனுள் அந்தரங்கமாய் அது பெருமை கொண்டு துள்ளி

www.t.me/tamilbooksworld

Scanned by CamScanner

யது "என்னால் என் இஷ்டப்படி அசைய முடிகிறது. என்னோடு சேர்ந்ததனால்தான் நீயும் அசைகிறாய்" என்று அந்த மாங்கொட்டையை அசைத்து அசைத்துக் காட்டிற்று புழு. அசையாதிருந்த யோகம்போய், அசைகின்ற மரணம் சம்பவித்தது அந்த மாங்கொட்டைக்கு

முன்பு உறுதியாயிருந்த மாங்கொட்டை அசையாது கிடந்த யோகத்தால் அழுந்தி, முழுகி வளர்ந்தது! இப்போது மாங்கொட்டையின் உள்ளே புகுந்து அதன் உயிரைத் தின்ற அந்தப் புழுவின் அசைவில் உயிரற்ற இந்த விதையின் சடலம் ஆடுகிறது.

அந்த மாங்கொட்டையின் யோகம் விதி!

இந்த மாங்கொட்டையின் மரணம் விபத்து! □

www.t.me/tamilbooksworld

Scanned by CamScanner

www.t.me/tamilbooksworld

**புது செருப்புக் கடிக்கும்**

அவள் முகத்தில் அறைகிற மாதிரி கதவைத் தன் முதுகுக்குப் பின்னால் அறைந்து மூடிவிட்டு வெளியில் வந்து நின்றான் நந்தகோபால். கதவை மூடுகிறவரை எங்கு போகவேண்டும் என்றோ, எங்காவது போக வேண்டுமா என்றோவெல்லாம் அவன் நினைக்கவே இல்லை. அவள்மீது கொண்ட கோபமும், தன்னை அவமதிக்கிற மாதிரி தனது உணர்ச்சிகளை அசட்டை செய்துவிட்டுச் சுவரோரமாகத் திரும்பிக் கொண்டு தூங்குகிற அவளுக்குத் துணையாக விழித்துக்கொண்டிருக்கிற – 'ஏன் படுக்கவில்லையா?' என்று அவள் கேட்க வேண்டும் என்று எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கிற – அவமானம் தாங்கமாட்டாமல்தான் அவன் வெளியில் வந்து கோபமாகக் கதவை அறைந்து மூடினான்.அவள் நிஜமாகவே தூங்கியிருந்தால் இந்தச் சத்தத்தில் விழித்திருக்க வேண்டும். இந்தச் சத்தத்தில் பக்கத்துப் போர்ஷன்காரர்கள் யாரேனும் விழித்துக் கொண்டுவிட்டார்களோ என்று தன் செய்கைக்காக அவன் அவமானத்தோடு அச்சம் கொண்டு இருள் அடர்ந்த அந்த முற்றத்தில் மூடியிருக்கும் எதிர் போர்ஷன் கதவுகளைப் பார்த்தான்.

உள்ளே விடிவிளக்கு எரிவது கதவுக்கு மேலுள்ள 'வென்டிலேட்டர்' வழியாய்த் தெரிந்தது. டேபிள்ஃபேன் சுற்றுகிற சத்தம் 'கும்'மென்று ஒலித்தது. மணி பதினொன்று இருக்கும். கைக்கடிகாரத்தைப் பார்த்தான். இருட்டில் தெரியவில்லை. எங்காவது போய்விட்டு விடிந்த பிறகு வந்தால் என்ன என்று அவனுக்குத் தோன்றியது. எப்படிக் கதவைத் திறந்து போட்டுவிட்டுத் தனிமையில் இவளை விட்டுப் போவது என்ற தயக்கமும் ஏற்பட்டது. அவள் வேண்டுமென்றே அடமாகப் படுத்துக் கொண்டு அழும்பு செய்கிறாள் என்று மனத்துக்குப் புரிந்தது.அவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. தன் மீதே ஒரு பரிதாப உணர்ச்சி தோன்றியது. இதெல்லாம் தனக்கு வீண் தலைவிதிதானே என்று மனம் புழுங்கிற்று. தானுண்டு, தன் வேலையும் சம்பாத்தியமும் உண்டு என்று சுதந்திரமாகத் திரிகிற வாழ்க்கையின் சந்தோஷத்தை அல்லது வெறுமையை அனுபவித்துக் கொண்டிருந்தவனை, அப்படியே வாழ்ந்து விடுவது எனத் தீர்மானித்திருந்தவனை இந்தக் கல்யாணம், பெண்டாட்டி, குடும்பம் என்றெல்லாம் இதில் ஏதேதோ பெரிய சுகம் இருப்பதாகவும், மனுஷ வாழ்க்கையின் அர்த்தமே அதில் அடங்கி இருப்பதாகவும் கற்பித்துக் கொள்கிற பைத்தியக்காரத்தனத்தில் சிக்க வைத்த அந்தச் சைத்தானின் தூண்டுதலை எண்ணிப்பார்த்த பெருமூச்சுடன் வீட்டிற்குள் போகாமல் வாசற்படியில் அமர்ந்து ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டு இருளும் நட்சத்திரமும் கவிந்த வானத்தைப் பார்த்தான்.

'அந்தச் சைத்தான்' என்ற முனகலில் அவனுக்குக் கிரிஜாவின் நினைவு வந்தது. அவள் எவ்வளவு இனியவள். இங்கிதம் தெரிந்தவள். சைத்தானைக் கட்டிக் கொண்டு வந்து வீட்டில் வைத்துக்கொண்டு அவளைப் போய்ச் சைத்தான் என்று நினைக்கிறேனே- என்று அந்த நினைவைக் கடிந்து கொண்டான் நந்தகோபால். ஆனாலும், தான் கல்யாணம் செய்து கொண்டு குடும்பம் நடத்தக் காரணமாக இருந்தவள் அந்த கிரிஜாதான் என்பதால் தனக்கு அவள் மீது வருகிற இந்தக் கோபத்துக்கு நியாயம் இருப்பதாக நினைத்தான் அவன்.'இப்போது, இந்த நேரத்தில் அவளைப் போய்ப் பார்த்தால் என்ன?' என்ற எண்ணம் வந்தது அவனுக்கு. அவளை எப்போது வேண்டுமானாலும் போய்ப் பார்க்கலாம். இந்த ஆறுமாத காலமாக – கல்யாணமாகி ஒவ்வொரு நாளும் இவளோடு மனஸ்தாபம் கொண்டு 'ஏன் இப்படி ஒரு வம்பில் மாட்டிக் கொண்டோம்' என்று மனம் சலிக்கிற போதெல்லாம் அவன் கிரிஜாவை நினைத்துக் கொள்ளுவது உண்டு. என்றாலும் அங்கே போகலாம் என்ற எண்ணம் இப்போதுதான் தோன்றியது.

'தான் இவளைக் கல்யாணம் செய்து கொள்ளுவதற்கு முன்பு எப்படியெல்லாம் இருந்தபோதிலும், இப்போது இவளை இங்கு தனியே விட்டுவிட்டு, அங்கே போவது

இவளுக்குச் செய்கிற துரோகமில்லையா?' என்று நினைத்துப் பார்த்தான். இவள் என்னதான் சண்டைக்காரியாக இருந்தாலும், இவள் மீது தனக்கு எவ்வளவுதான் கோபம் இருந்தபோதிலும், தன் மீதுள்ள வெறுப்பினால், அதற்கு ஆறுதலாக இருக்கும் பொருட்டு, இவள் அந்த மாதிரி ஏதாவது செய்தால் அதைத் தன்னால் தாங்க முடியுமா என்றும் எண்ணி அந்த எண்ணத்தையே தாங்க முடியாமல் நெற்றியைத் தேய்த்துக் கொண்டான்.கடிகாரத்தின் ஒற்றை மணியோசை கேட்டது. மணி இன்னும் ஒன்றாகி இருக்காது. மூடியிருந்த கதவை லேசாகத் திறந்து கைக்கடிகாரத்தை உள்ளே இருந்து வீசும் வெளிச்சத்தின் ஒரு கீற்றில் பார்த்தான். இவனது வாட்சில் மணி பதினொன்றரை ஆகவில்லை. அடித்தது பதினொன்றரைதான் என்ற தீர்மானம் கொண்டு கதவின் இடைவெளி வழியாக அவளைப் பார்த்தான். அவள் அசையாமல் புரண்டு படுக்காமல் முன் இருந்த நிலையிலேயே முதுகைத் திருப்பிக் கொண்டு படுத்திருந்தாள். இவனுக்குக் கோபம் வந்தது. எழுந்து போய் முதுகிலே இரண்டு அறையோ, ஓர் உதையோ கொடுக்கலாமா என்று ஆங்காரம் வந்தது.

"சீ" என்று தன்னையே அப்போது அருவருத்துக் கொண்டான் அவன்.அப்படிப்பட்ட குரூரமான ஆபாசமான சம்பவங்களை அவன் சிறுவயதில் அடிக்கடி சந்தித்திருக்கிறான். திடீரென நள்ளிரவில் அவனுடைய தாயின் தீனமான அலறல் கேட்கும். விழித்தெழுந்து உடலும் உயிரும் நடுங்க இவன் நின்றிருப்பான். இவனுடைய தந்தை வெறி பிடித்தாற்போல் ஆவேசம் கொண்டு இவனுடைய தாயை முகத்திலும் உடலிலும், காலாலும் கையாலும் பாய்ந்து பாய்ந்து தாக்க, அவள் "ஐயோ பாவி சண்டாளா…" என்று அழுதுகொண்டே ஆக்ரோஷமாகத் திட்டுவாள். இவள் திட்டத் திட்ட அவர் அடிப்பார்… அந்த நாட்கள் மிகக் குரூரமானவை. மறுநாள் ஒன்றுமே நடவாத மாதிரி அவர்கள் இருவரும் நடந்து கொள்ளுவது – அவள் அவருக்குப் பணிவிடை புரிவதும், அவர் அவளைப் பேர் சொல்லி அழைத்து விவகாரங்கள் பேசுவதும் – இவனுக்கு மிக ஆபாசமாக இருக்கும். இதெல்லாம் என்னவென்றே புரியாத அருவருப்பைத் தரும்.பதினைந்து வயது வரைக்கும் இந்த வாழ்க்கையை அனுபவித்திருக்கிறான் அவன். அவர்களது சண்டையை விடவும் அந்தப் பெற்றோரின் சமாதானங்கள் அவன் மனசை மிகவும் அசிங்கப்படுத்தியிருக்கின்றன. அவன் தகப்பனாரை மனமார வெறுத்திருக்கிறான்.

'குடும்ப வாழ்க்கையும் தாம்பத்தியம் என்பதும் மிகவும் அருவருப்பானவை' என்ற எண்ணம் இள வயதிலே அவனுக்கு ஏற்பட இந்த அனுபவங்கள் காரணமாயின போலும்.இப்போது அவன் தகப்பனார் இல்லை. அவனுடைய விதவைத் தாய் வயோதிக காலத்தில் கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறாள். தான் சாகுமுன் இவனுக்குக் கல்யாணம் செய்து பார்த்துவிட வேண்டும் என்ற தன் ஆசையை இவனிடம் தெரிவிக்கும் போதெல்லாம் அவளது வாழ்க்கையைச் சுட்டிக் காட்டித் தாயைப் பரிகாசம் செய்வான். அவளுக்கு அப்போது வருத்தமாகவும் கோபமாகவும் கூட இருக்கும். விட்டுக் கொடுக்காமல், 'நான் வாழ்ந்ததற்கு என்ன குறை?' என்று பெருமை பேசுவாள். கடைசியில் ' கலியாணம் பண்ணிக்க முடியாது' என்று அவள் முகத்தில் அடித்துப் பேசிவிட்டு வந்துவிடுவான் நந்தகோபால்.பட்டனத்தில் உத்தியோகம் பார்த்துக் கொண்டு தனி வாழ்க்கைக்குப் பழகி இப்படியே முப்பது வயது கடத்திவிட்ட அவனுக்குக் கல்யாண ஆசையையும் குடும்பத்தைப் பற்றிய சுய கற்பனைகளையும் வளர்த்து அதற்குத் தயாராக்கியது கிரிஜாவின் உறவுதான். கிரிஜாவுக்கு முன்னால் அவனுக்கு அது மாதிரியான உறவு வேறு எந்தப் பெண்ணோடும் ஏற்பட்டிருந்ததில்லை.

அவளுக்கு இவன் மிகவும் புதியவனாக இருந்தான். ஆனால், அவள் அப்படியல்ல என்று இவனுக்கு மாத்திரமல்லாமல் வேறு பலருக்கும் பிரசித்தமாகி இருந்தது. அவளும் அதையெல்லாம் ���றைக்கக் கூடிய நிலையில் இல்லை. எனினும் இவனோடு இருந்த நாட்களில் அவள் மிகவும் உண்மையாகவும் அன்பாகவும், ஒரு பெண்ணின் உடனிருப்பும் உறவும் ஓர் ஆணுக்கு எவ்வளவு இன்பமானது, வசதியானது என்பதை உணர்த்துகின்ற முறையிலும் வாழ்ந்தாள். அந்த இரண்டு மாத காலம் மிக மேன்மையான இல்லறம் என்று இந்த நிமிஷம் – இவனை அவமதித்தும் புறக்கணித்தும் வாசற்படிக்கு வெளியே இந்த நள்ளிரவில் நிறுத்தி வைத்துவிட்டு இறுமாப்போடு படுத்துக் கொண்டிருக்கிறாளே, அவள் மீது பற்றிக்கொண்டு வருகிற கோபத்தில் – நினைத்துப் பெருமூச்சும் கண்ணீருமாய்ப் பரிதாபமாக மறுபடியும் உள்ளே திரும்பிப் பார்த்தான் நந்தகோபால்.நிச்சயம் அவள் எழுந்திருக்கவோ சமாதானமுறவோ போவதில்லை. இந்த ஆறு மாத அனுபவத்தில் இந்த மாதிரி நிகழ்ச்சிகள் அவனுக்குப் பழக்கமாகிப் போனதால் இதன் தொடக்கமும் இதன் போக்கும் இதன் முடிவும் அவனுக்கு ஒவ்வொரு தடவையும் முன் கூட்டியே தெரிகிறது. என்றாலும் இதனைத் தவிர்க்கத்தான் முடியவில்லை. பிறகு யோசித்துப் பார்க்கையில் அவனது அறிவுபூர்வமான எந்த நியாயத்துக்கும் இந்தச் சச்சரவுகள் ஒத்து வருவதில்லை.

நாளுக்கு நாள் இந்த வாழ்க்கை அவமானகரமானதாகவும் துன்பம் மிகுவதாகவும் மாறிக்கொண்டே இருப்பதை எப்படித் தாங்குவது என்று புரியவில்லை.உள்ளே மங்கிய விளக்கொளியில், கொடிகளில் கிடக்கும் துணிகளும், நிழலில் தெரிகிற சமையலறையினுள் பாத்திரங்களின் பளபளப்பில் அவை இறைந்து கிடக்கிற கோலமும் மிகச் சோகமாய் அவனுக்குத் தெரிந்தன.ஒரே அறையும் அதைத் தொடர்ந்து கதவில்லாத ஒரு சுவரால் பிரிகிற சிறு சமையல்கட்டும் அதனுள்ளேயே அடங்கிய தொட்டி

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

முற்றமாகிய பாத்ரூம் உள்ள அந்தப் போர்ஷனுக்கு நாற்பத்தைந்து ரூபாய் வாடகை. குடும்பச் செலவுக்கு மாதம் நூற்றைம்பது ரூபாய் ஆகிறது. நந்தகோபாலுக்கு சம்பளம் கிட்டத்தட்ட முந்நூறு ரூபாய். மனமொத்து வாழ்ந்தால் இந்த நெருக்கடி ஒரு துன்பமல்ல. ஆறேழு பேர் சேர்ந்து ஆளுக்கு நூறு ரூபாய் கொடுத்து எல்லா வசதிகளோடும் வாழ்ந்த அந்த 'மெஸ்' வாழ்க்கைக்கு இப்போது மனசு ஏங்க ஆரம்பிப்பதன் பரிதாபத்தை நினைத்து அவன் மனம் கசந்தான்.ஒரு பெருமூச்சுடன் எழுந்தான். கிரிஜாவைப் போய்ப் பார்த்துவிட்டு இரவை அவளுடன் கழிப்பது மனதுக்கு ஆறுதல் தரும் என்று தோன்றியது.

'வேறு எதற்காகவும் இல்லை' என்ற நினைப்பில் இதைப் பற்றிய உறுத்தலை உதறி ' அவளோடு பேசிக்கொண்டிருப்பது எனக்கு நிம்மதியைத் தரும்' என்கிற சமாதானத்தோடு புறப்பட்டான். உள்ளே போய் சட்டையை எடுத்துப் போட்டுக் கொண்டான். நைட்லாம்ப் எரிந்து கொண்டிருந்த மங்கிய வெளிச்சத்துடன் நாற்பது வோல்ட் விளக்கையும் போட்டவுடன் வெளிச்சம் கண்ணைக் கூசிற்று."ஏய்!..." என்று அவளை மெல்லத் தட்டினான். அவள் அசையவில்லை."இப்ப உன்னை கொஞ்சறதுக்கு எழுப்பலே; நான் வெளியே போறேன். கதவைத் தாப்பாப் போட்டுக்க" என்று அவள் புஜத்தைக் கொஞ்சம் அழுத்தி வலிக்கிற மாதிரிப் பிடித்து முரட்டுத்தனமாகத் திருப்பினான்.அவள் எழுந்து உட்கார்ந்து அவனை வெறுப்புடன் முகம் சுளித்த எரிச்சலுடன் பார்த்தாள்.இவ்வளவு நேரம் எழுந்திருக்காதவள், தான் போகிறோம் என்றதும் கதவைத் தாழிடத் தயாராய் எழுந்து உட்கார்ந்திருப்பது அவனுக்குக் கோபத்தை உண்டாக்கியது.'இந்த நேரத்தில் எங்கே போகிறீர்கள்' என்று கேட்பதுதானே நியாயம்? ஆனால், அவள் கேட்கவில்லை. 'போறதானால் தொலைய வேண்டியதுதானே... நான் நிம்மதியாகப் படுத்துக் கொள்ளுவேன்' என்கிற மாதிரி அவள், அவன் சட்டையை மாட்டிக்கொண்டு நிற்பதைப் பொருட்படுத்தாமல் எழுந்து எரிச்சலுடன் கட்டிலில் உட்கார்ந்திருந்தாள். அவன் கட்டிலுக்கடியில் குனிந்து ��ருப்பைத் தேடினான். கட்டிலின் விளிம்பில் தொங்கிக் கொண்டிருக்கிற அவளது சேலையின் நிழலோ காலின் நிழலோ மறைத்தது.

தான் கட்டிலுக்கடியில் குனிந்து செருப்பைத் தேடும்போது அவள் இப்படி மறைத்துக் கொண்டு – தான் மறைக்கிற விஷயம் அவளுக்குத் தெரியாது என்றும் அவனுக்குத் தெரிந்தது – கட்டிலின் மேல் உட்கார்ந்து கொண்டிருக்கிற காரியம் அவமரியாதை என்று அவனுக்குத் தோன்றியது. அந்தக் கோபத்துடன் அவன் செருப்பைத் தேடி எடுத்துக் கொண்டு நிமிரும்போது கட்டிலின் விளிம்பில் தலையை இடித்துக் கொண்டான். கண்ணில் தண்ணீர் வருகிற மாதிரி வலித்தது. அவள் கொஞ்சம்கூடப் பதட்டம் காட்டாதிருந்தாள். இதே மாதிரி ஒரு சந்தர்ப்பத்தில் அவளுக்கு இப்படித் தலையில் ஓர் இடியோ, விரலில் ஒரு காயமோ ஏற்பட்டால் தன்னால் பதட்டமுறாமலிருக்க முடியாதே என்று எண்ணிய நினைப்பில் அவன் தன்னிரக்கத்தோடு முகம் திருப்பிக் காலில் செருப்பை மாட்டிக்கொண்டு புறப்பட்டான்.திறந்த கதவை மூடாமல் நிதானமாக அவன் முற்றத்தில் நடந்து தாழ்வாரத்தில் தூணோரமாக நிறுத்தியிருந்த சைக்கிளின் 'லாக்'கைத் திறக்கையில் இருட்டில் நிற்கிற தன்னை அவள் பார்க்க முடியாது என்பதால் அவள் வெளியே தலை நீட்டிப் பார்க்கிறாளா என்று கவனித்தான். அவன் மனம் சோர்வு கொள்ளத் தக்க வண்ணம் அவள் கதவைப் பட்டென்று மூடித் தாழிட்டுக் கொண்டாள். அவள் வெளியே தலை நீட்டிப் பார்க்காதது மிகவும் வருத்தம் தந்தது இவனுக்கு. அறைக்குள் எரிந்த நாற்பது வோல்ட் வெளிச்சம் அணைந்து நைட்லாம்பின் வெளிச்சம் வெண்டிலேட்டர் வழியே தெரிந்தது.

நந்தகோபால் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு நடந்தான். வாசற்புறத்தில் முறைவாசல் செய்கிற கிழவி தன் படுக்கையில் உட்கார்ந்து இருமிக்கொண்டிருந்தவள், அவன் வெளியே சென்றதும், 'திரும்பி எப்போ வருவே அப்பா' என்று கேட்டு, இவன் 'இல்லை' என்று சொன்னதும் பிறகு கதவைத் தாழிட்டாள். வெளியில் வந்து நின்று ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டபோது, தெரு விளக்குகள் திடீரென அணைந்தது. டைனமோ வெளிச்சம் பளீரென்று வழிகாட்ட அவன் சைக்கிளில் ஏறி மிதித்தான்.—ஃஃஃ—ஃஃஃ—ஃஃஃ—ஃஃஃகிரிஜாவின் வீடு மேற்கு மாம்பலத்தில் குண்டும் குழியும் சாக்கடையும் எருமை மாடும் நிறைந்த ஒரு தெருவில் இருக்கிறது. தெருப்புறம் மாடிப் படியுள்ள ஒரு வீட்டின் மேல் போர்ஷனில் அவள் சுதந்திரமாக வாழ்கிறாள். அவளுக்குத் தாய் இருக்கிறாள். அவள் எங்கோ ஒரு பணக்காரர் வீட்டில் ஆயாவாக வேலை செய்கிறாள். எப்போதாவது வந்து மகளைப் பார்த்துவிட்டு அசைவச் சாப்பாடு சாப்பிட்டு விட்டுப் போவாள். அவள் வேலை செய்கிற வீட்டில் அது கிடைக்காதாம். கிரிஜாவுக்கு இருபத்தைந்து வயதான தம்பி ஒருவன் உண்டு. அவனுக்கு ஏதோ ஒரு சினிமாக் கம்பெனியில் வேலை. அவனும் எப்போதாவது தான் வருவான். அவள் பத்தாவதுவரை படித்திருக்கிறாள்.

நிரந்தரமாக இல்லாவிட்டாலும் டெம்ப்ரரியாகவே அவள் ஒவ்வோரிடமாக வேலை செய்து கொண்டிருக்கிறாள். முப்பது வயதாகிறது. இப்படியொரு நிராதரவான நிலையற்ற வாழ்க்கையிலும் அவள் நிறைவோடும் மலர்ச்சியோடும் இருக்கிறாள்.நந்த கோபால் வேலை செய்கிற காஸ்மெடிக்ஸ் கம்பெனியார் எக்ஸிபிஷனில் ஒரு ஸ்டால் போட்டிருந்தார்கள். அங்கு அவள் வேலை செய்து கொண்டிருந்தபோது தான் போன டிசம்பரில் அவளை இவன் சந்திக்க நேர்ந்தது. அவளைப் பார்த்தவுடன் அவளை இதற்கு

www.t.me/tamilbooksworld

முன்பு எங்கோ பார்த்த மாதிரியானதொரு இணக்கம் அவள் முகத்தில் இவனுக்குத் தோன்றியது. இந்த ஸ்டாலில் விற்பனைப் பணிப் பெண்ணாக வேலை செய்வதற்காகக் கொண்ட முகபாவமோ அது என்றுதான் முதலில் அவன் நினைத்தான். பிறகுதான் தெரிந்தது; அவன் டெஸ்பாட்சிங் கிளார்க்காக வெலை செய்யும் அந்த க���ஸ்மெடிக்ஸ் கம்பெனியில் நாள்தோறும் பார்சல் பார்சல்களாக அனுப்பப்படுகிற அந்தப் பவுடர் டின்களின் மேல் இருக்கின்ற உருவமே அவளுடையதுதான் என்று. இரண்டு மாத காலம் மாலை நேரத்தில் மட்டும் 'பார்ட் டய' மாக அவனும் எக்ஸிபிஷனிலே வேலை செய்த காலத்தில் அவளுடன் ஏற்பட்ட நட்பின்போது அவளைப் பற்றி அவன் தெரிந்து கொண்டான்.

ஒரு கௌரவமான நிரந்தர உத்தியோகத்துக்காக அவள் ஒவ்வொருவரிடமும் சிபாரிசு வேண்டியபோது இவன் அவளுக்காகப் பரிதாபப்பட்டான். ஆனாலும் அவளுக்கு உதவும் காரியம் தனது சக்திக்கு மீறியது என்று அவளைப் பற்றிய கவலையிலிருந்து ஒதுங்கியே நின்றான்.அவள் எல்லோருடனும் கலகலவென்று பேசுவாள். இவனை அவள்தான் முதலில் டீ சாப்பிட அழைத்தாள். இவனோடு பேச்சுக் கொடுத்தாள். இரவு பதினொரு மணிக்கு வீடு திரும்பும்போது சில நாட்களில் அந்த ஸேல்ஸ் மானேஜர் தான் காரில் போகும் வழியில் இவளை இறக்கிவிடுவதாகக் கூறி அழைத்துச் செல்வார். அவரைப் பற்றி ஆபிசில் ஒரு மாதிரி பேசிக் கொள்வார்கள். அவருடன் அவள் போவது இவனுக்கு என்னமோ மாதிரி இருக்கும். ஒருநாள் அதுபோல் மானேஜர் தன்னுடன் அவளை அழைத்தபோது அவள் நந்தகோபாலைக் காட்டி, " மிஸ்டர் நந்தகோபால் எங்க வீட்டுக்குப் போற வழியிலேதான் சார் இருக்காரு. நாங்க பேசிக்கிட்டே போயிடுவோம் சார்... என்னாங்கோ மிஸ்டர்?" என்று இவனைப் பார்த்துச் சிரித்தபோது இவனும் சம்மதித்தான்.அவள் பேசுவது இவனுக்கு வேடிக்கையாக இருக்கும். 'என்னாங்கோ, சரீங்கோ... ஆமாங்கோ..' என்று அவள் கொஞ்சம் நீட்டிப் பேசுவாள். அவள் வீட்டில் பேசுகிற பாஷை தெலுங்கு என்று பின்னால் தெரிந்தது இவனுக்கு. படித்ததெல்லாம் தமிழ்தான். தெலுங்கு என்றால், மெட்ராஸ் தமிழ் மாதிரி மெட்ராஸ் தெலுங்காம்.- 'அவள் எப்படிச் சிரிக்கச் சிரிக்கப் பேசுவாள்!' என்று நினைத்துக் கொண்டு சைக்கிளை வேகமாய் மிதித்தான் நந்தகோபால்.அவள் நிஜமாகவே சந்தோஷமாக இருக்கிறாள் என்று, அவளோடு பழகிய பிறகுதான் இவன் தெரிந்து கொண்டான்.

எக்ஸிபிஷன் ஸ்டால் வேலை முடிந்த பிறகு டெலிபோன் சுத்தம் செய்து அதில் ஸென்ட் போடுகிற ஒரு கம்பெனியில் வேலைக்கமர்ந்து டெலிபோன் இருக்கிற வீடுகளிலும் கம்பெனிகளிலும் ஏறி இறங்கி வருகையில் ஒருநாள் தெருவில் அவளை இவன் பார்த்தான். இப்படி ஏதாவதொரு கௌரவமான உத்தியோகம் செய்து அவள் சம்பாதித்தாள். வயது முப்பது ஆவதால் இதற்கிடையில் நம்பிக்கை அல்லது தேவை காரணமாகச் சில ஆண்களோடு அவளுக்கு உறவு நேர்ந்திருக்கிறது என்றாலும் அதை ஒரு பிழைப்பாகக் கொள்ளும் இழி மனம் அவளுக்கு இல்லை என்று அவன் அறிந்தான்.எப்போதாவது இவன் அவளைத் தேடிக் கொண்டு போவான். இருவரும் பேசிக்கொண்டு இருப்பார்கள். இவனுக்கு அவள் காபி மட்டும் தருவாள். அவள் சினிமாப் பத்திரிகைகள் எல்லாம் வாங்குவாள். கையில் காசு இருக்கும் போதெல்லாம் சினிமாவுக்குப் போவாள். நேரம் இருக்கும்போதெல்லாம் சினிமாக்களைப் பற்றியும் சினிமா சம்பந்தப்பட்டவர்கள் பற்றியும் ரொம்பத் தெரிந்தவள் மாதிரி சுவாரஸ்யமாக அரட்டை அடிப்பாள். சினிமா கம்பெனியில் வேலை செய்கிற அவளுடைய தம்பி ' நீ என்ன வேணும்னாலும் செய்... ஆனா சினிமாவிலே சான்ஸ் குடுக்கறேன்னு எவனாவது சொன்னா – அத்தெ நம்பிக்கினு மட்டும் போயிடாதே... நான் அங்கே இருக்கறதுனாலே என் மானத்தெக் காப்பாத்தறதுக்கோசரம் அந்தப் பக்கம் வராதே' என்று எப்போதோ சொல்லி வைத்திருந்ததைத் தான் உறுதியாகக் கடைபிடிப்பதை இவனிடம் அவள் ஒரு முறை கூறினாள்.- அவளோடு அவன் இரண்டு மாதம் வாழ்ந்திருக்கிறான். அதை நினைக்கையில் இப்போதும் மனசுக்குச் சுகமாக இருக்கிறது.

அருமையாக நேர்ந்த அந்த வாழ்க்கையை விடுத்து வேறு வாழ்க்கைக்கு ஆசைப்பட்ட குற்றத்துக்கான தண்டனைதானோ இப்போது தான் அனுபவிக்கிற வேதனைகளும் அவமானங்களும் என்று எண்ணியவாறே அவன் சைக்கிளை மிதித்தான். இன்னும் ஒரு மைலாவது இருக்கும்.தொடர்ந்து ஒரு வேலையும் கிடைக்காமல் இருந்த ஒரு சந்தர்ப்பத்தில் நந்தகோபால் வேலை செய்யும் இடத்துக்கு இவனைத் தேடி வந்தாள் கிரிஜா. ஆபீஸ் முடிகிற நேரமானதால் இவளைக் கொஞ்ச நேரம் காத்திருக்கச் செய்த பின் இவளுடனே அவனும் வெளியில் வந்தான். இருவரும் ஒட்டலுக்குப் போயினர். அவள் மிகவும் களைத்திருந்தாள். இவன் இரண்டு காபிதான் சொல்ல இருந்தான். அதை எப்படியோ புரிந்து கொண்டு அவள் சொன்னாள்: "எனக்கு வெறும் காபி மட்டும் போதாதுங்கோ... எதனாச்சும் சாப்பிடணுங்கோ"அவள் மனசின் வெண்மை இவனைக் கனிய வைத்தது. அன்று அவளை மிகுந்த அன்போடு இவன் உபசரித்தான். பகல் முழுதும் அவள் சாப்பிடாதிருந்தாள் என்றும் இப்போது வேலை இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறாள் என்றும் தெரிந்தபோது அவளுக்காக மனம் வருந்தினான். அவள் அவனிடம் ஏதாவது வேலைக்குச் சிபாரிசு செய்யச் சொன்னாள். நம்பிக்கை இல்லாமலே அவன் அவளுக்கு வாக்குறுதி தந்தான். மாலையில் அவளுடன் அவனும் அவள் வீடுவரைச் சென்று சமையலுக்கான பொருள்களைக் கூட இருந்து வாங்கி, அதற்கு இவன் பணம்

கொடுத்தான். அன்றிரவு இவனை இவள் தன்னுடன் வீட்டில் சாப்பிடச் சொன்னாள்.அவள் சமையல் செய்கிற அழகைப் பக்கத்திலிருந்து அவன் பார்த்துக் கொண்டிருந்தான்.

இரவு அங்கு அவன் சாப்பிட்டான். அவனுக்குத் தன் தாயின் பரிவும் அவள் கைச் சமையலின் ருசியும் நினைவுக்கு வந்தது. அவள் தன் சமையல் அவன் ருசிக்கு ஏற்கிறதா என்று மிகவும் பக்தி சிரத்தையுடன் வினவி வினவிப் பரிமாறினாள்.அன்றிரவு இவன் அங்கே தங்க நேர்ந்தது. அந்த இரவில் தான் அவள் தன்னைப் பற்றியும் தன் தாய் தம்பி வாழ்க்கை நிலைமைகளைப் பற்றியெல்லாம் இவனோடு மனம் விட்டுப் பேசினாள். திடீரென்று தோன்றிய ஒரு யோசனையை அவனிடம் அவள் வெளியிட்டாள். அவள் சொன்னாள்: "நீங்க மெஸ்ஸீக்குக் குடுக்கிற பணத்தை இங்கே கொடுத்தால் உங்களுக்கும் சமைச்சுப் போட்டு நானும் சாப்பிடுவேன்... என்னாங்கோ- உங்களுக்கு சௌகரியப்படுமாங்கோ?..."அவன் வெகுநேரம் யோசித்த பிறகு சம்மதித்தான். இதுவரை அவர்களிடையே வெறும் நட்பாக இருந்த உறவு அன்று அவனுக்கொரு புதிய அனுபவமாயிற்று. அது வாழ்க்கையிலேயே அவனுக்குப் புதிது. அதே மாதிரி ஒரு புதிய மனிதனைச் சந்திப்பது அவளுக்கும் முதலும் புதிதுமான அனுபவம்.தான் எதனாலோ வெறுத்தும் பயந்தும் ஒதுக்கி வைத்த குடும்ப வாழ்க்கை என்பது, ஒரு பெண்ணுடன் சேர்ந்து வாழ்தல் என்பது எவ்வளவு சுகமான, சுவையான, அர்த்தமுள்ள அனுபவம் என்பதை அவன் கண்டு மயங்கினான்.அந்த வீடும் அந்த வாழ்க்கையும் மிக மிக எளிமையானது. மாடியின்மீது கூரை போட்ட ஒரே அறையில் தான் சமையல், படுக்கை எல்லாம்.

குளிப்பதற்குக் கீழே வரவேண்டும். குண்டும் குழியுமான தரையில் பாய் விரித்துப் படுக்க வேண்டும். அவளுடைய அம்மாவோ, தம்பியோ – அவர்கள் பகலில்தான் வருவார்கள் – அப்போது அங்கே இருக்க நேர்ந்தால் இப்போதுதான் வந்ததுபோல் நடிக்க வேண்டும். இதெல்லாம் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.தான் கல்யாணமே வேண்டாம் என்று பயந்திருந்த காரணங்களை அவளிடம் சொன்னபோது அவள் சிரித்தாள். "உங்க நைனா, அம்மாவைக் கொடுமைப்படுத்தினாருன்னா பயந்துகினு இருந்தீங்கோ? ஒரு பொண்ணுக்கு இந்த பயம் வந்தா நாயம்... ஆம்பளைக்கு இதிலே என்னாங்கோ பயம்?... அவரை மாதிரி நீங்க உங்க பெண்சாதியே அடிக்காம இருந்தா சரியாப்பூடுது..."அவன் அவளிடம் கல்யாணத்தைப் பற்றியும், ஊரிலிருந்து அம்மா எழுதுகிற கடிதங்களைப் பற்றியும் பேசினான். இருவரும ஒன்றாக வாழ்ந்துகொண்டு தான் இன்னொருத்தியைக் கல்யாணம் செய்து கொள்கிற விஷயமாக அவன் அவளிடம் பேசுவதும், அதற்கு உடன்பாடாக அவளும் அவனை வற்புறுத்துவதும் முரண்பாடான விஷயமாகவோ பொருத்தமற்றதாகவோ இருவருக்குமே தொன்றவில்லை.

தனித்தனியாக இருக்கிற நேரத்தில் மனசின் ஆழத்தில் அந்த முரண்பாடு தோன்றியதன் காரணமாகவே அவர்கள் அது குறித்து மிகச் சாதாரணமாகவும் அதிகமாகவும் பேசினார்கள் போலும்.கடைசியில் ஒருநாள் நந்தகோபால் தன் தாய் வற்புறுத்திச் சொல்கிற, தனது சொந்தத்துப் பெண்ணும், பத்தாவது படித்தவளும், மிகச் செல்லமாக வளர்க்கப்பட்டவளும், இதற்கு முன்னால் இவனே பார்த்து அழகிதான் என்று ஒப்புக் கொள்ளப்பட்டவளுமான வத்ஸலாவைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதம் தெரிவித்துக் கடிதம் எழுதியபின் அந்தச் செய்தியை கிரிஜாவிடமும் கூறினான்.அவள் மனத்தினுள் அவளே உணராத வண்ணம் ரகசியமான ஏமாற்றமும் வருத்தமும் அடைந்தாலும் மனம் நிறைந்த சந்தோஷத்துடனும் சிரிப்புடனும் அவனைப் பாராட்டினாள். 'புது மாப்பிள்ளை புது மாப்பிள்ளை' என்று பரிகாசம் செய்தாள். என்னென்னவோ புத்திமதிகள் கூறினாள். அவனைவிட அனுபவமும் முதிர்ச்சியும் உடையவள் என்பதால் அவனுக்கு நிறையவும் கற்றுத் தந்தாள். அதற்காக அவன் அவளிடம் மிகுந்த நன்றி பாராட்டினான். பெண் என்றாலே பயந்தும் வெறுத்தும் ஓடிய தன்னைக் கல்யாணத்துக்கும், குடும்ப வாழ்க்கைக்கும் தயார்ப்படுத்திய பொறுப்பு அவளுடையதுதான் என்று அவன் நம்பியது மாத்திரமல்லாமல் அவளிடமே அதைத் தெரிவித்தான். அப்போதெல்லாம் என்னவென்று விளங்காத ஓர் உணர்ச்சியுடன் வாய்க்குள் அவள் சிரித்துக் கொள்வாள்.அவளோடு சேர்ந்து இவன் இருந்த அந்த இரண்டு மாத காலத்தில், பக்கத்திலுள்ள ஒரு நர்சரி பள்ளியில் 'அன்ட்ரெயின்ட்' டீச்சராக, ஒரு டெம்பரரி வேலையும் அவள் சம்பாதித்துக் கொண்டிருந்தாள்.

மாலை நேரங்களில் தையல் கிளாசுக்குப் போனாள். ஏற்கனவே அவளுக்கு டெய்லரிங் கொஞ்சம் தெரியுமாம்.அவனுடைய கல்யாணத்துக்குத் தேதி குறிக்கும்வரை அவன் அவளோடுதான் இருந்தான். பின்னர் அவளேதான் கூறினாள். "நான் சொல்றேன்னு தப்பா நெனைச்சுக்காதீங்கோ. இன்னும் ஒரு மாசம் தான் இருக்கிறது கல்யாணத்துக்கு. நீங்க உங்க மெஸ்ஸீக்கே போயிடுங்கோ. உடம்பெ நல்லாப் பாத்துக்குங்கோ... நல்லாச் சாப்பிடுங்கோ... கல்யாணத்துக்கு அப்பாலே ஒரு ஃபிரண்டு மாதிரி வந்து பாருங்கோ. எனக்குச் சந்தோஷமா இருக்கும்."- அப்போது அவள் கண் கலங்கியதை எண்ணி இப்போது மனம் பொருமிய நந்தகோபால் அவள் வீட்டு வாசலில் சைக்கிளை நிறுத்திப் பூட்டிவிட்டு மாடியை அண்ணாந்து பார்த்தான். மாடி மீதுள்ள கூரையின் சிறிய ஓட்டைகளினூடே

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

உள்ளே விளக்கு எரிவது தெரிந்தது. தீக்குச்சியைக் கிழித்து வாட்சில் மணி பார்த்தான். பன்னிரண்டு.திடீரென்று தன்னைப் பார்க்கும் அவளுடைய ஆச்சரியத்தை எண்ணிக்கொண்டு, அவளைப் பார்க்கப் போகிற ஆவலில் நெஞ்சு படபடக்க அவன் படியேறினான்.மேல் படியிலிருந்து அவன் தலை தெரியும்போது காலடிச் சத்தம் கேட்டுத் தையல் மிஷின் அருகே ஸ்டூலில் உட்கார்ந்து, எதையோ ஊசியால் பிரித்துக் கொண்டிருந்த கிரிஜா, “யாரது?” என்ற அதட்டல் குரலுடன் எழுந்தாள்.“நான் தான்” என்று இவன் பேரைச் சொல்லுவதற்கு முன் அவள் சந்தோஷம் தாங்க முடியாமல் “ஹை! நீங்களா! வாங்கோ” என்று வரவேற்றாள்.

அவனைத் தழுவிக் கொள்ளப் பரபரத்த கைகளின் விரல்களைத் திருகித் திருகி நெட்டி முறித்துக் கொண்டே, “என்ன இந்த நேரத்திலே? உக்காருங்கோ. சாப்பாடெல்லாம் ஆச்சா?” என்று பலவாறு கேட்டுக்கொண்டே பாயை எடுத்து விரித்து உட்காரச் சொன்னாள்.“திடீர்னு உன்னைப் பார்க்கணும்னு தோணிச்சு– வந்தேன்” என்றான். அவள் கலவரமடைந்தாள். அது அவனுக்குத் தெரியாத வண்ணம் சமாளித்துச் சிரித்தாள். “தாகத்துக்குச் சாப்பிடுங்கோ” என்று தம்ளரில் தண்ணீர் எடுத்துக் கொடுத்தாள்.இருவருக்குமே திகைப்பும் படபடப்பும் அடங்கச் சற்று நேரம் பிடித்தது. அவன் அந்தப் புதிய தையல் மிஷினைப் பார்த்து அதைப் பற்றி விசாரித்தான். அவள் தான் டெய்லரிங் பாஸ் பண்ணியதையும், இன்ஸ்டால்மெண்டில் இதை வாங்கி இருப்பதையும், இதில் நிறையச் சம்பாதிப்பதையும், இந்த மாதம் மூணு பவுனில் ஒரு செயின் வாங்கிப் போட்டுக் கொண்டதையும் காட்டி – “ஸ்கூல் வேலையை விட்டுடலீங்கோ” என்று கூறித் தனது நல்ல நிலைமையை விளக்கி அவனைச் சந்தோஷப்படுத்தினாள். அவன் மனசுக்கு அவள் கூறியவை மிகவும் இதமாக இருந்தன. அவன் ரொம்ப மகிழ்ச்சியடைந்தான்.“நீங்க எப்படி இருக்கிறீங்கோ?… உங்க ‘வய்ப்’ நல்லா இருக்காங்களாங்கோ?” என்று குதூகலமாய் அவள் விசாரித்தபோது அவன் பெருமூச்சுடன் அவளைப் பார்த்து வருத்தமாகச் சிரித்தான்.அவள் தையல் மிஷின் மீது குவிந்து கிடந்த தைத்த, தைக்க வேண்டிய, வெட்டிய, வெட்ட வேண்டிய புதுத்துணிகளையெல்லாம் எடுத்துப் பிரித்து ஒவ்வொன்றாக ஒரு பெட்டியினுள் மடித்து வைத்து இவனோடு பேசிக் கொண்டிருப்பதற்காக வேலைகளை ‘ஏறக் கட்டி’க் கொண்டிருந்தாள். அவன் ஏதோ வருத்தத்தில் இருக்கிறான் என்று அவளுக்குப் புரிந்தது. அதற்காகத்தான் அவன் சந்தோஷப்படத்தக்க விஷயங்களை முந்திக்கொண்டு அவள் சொன்னாள்.

இதனை புத்திசாலித்தனத்தால் செய்ய வில்லை; நல்லியல்பால் செய்தாள். எனவே இப்போது அவன் வருத்தம் அறிவுக்குப் புரிய, தானும் வருந்தினாள்.அவன், ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டு நெஞ்சு நிறையப் புகையிழுத்துக் கூரையை நோக்கி நீளமாக ஊதிவிட்டான். சிகரெட்டின் சாம்பலை மிகக் கவனமாக விரலிடுக்கில் உருட்டி தட்டிக்கொண்டே அவள் முகத்தைப் பாராமல் வருத்தம் தோய்ந்த குரலின் சொன்னான்: “நான் உனக்குச் செஞ்ச பாவத்துக்கு இப்ப அனுபவிக்கிறேன். நான் உன்னையே கல்யாணம் பண்ணிக் கிட்டிருக்கலாம். ஓ! இப்ப என்ன பண்றது?” என்று புலம்பிக்கொண்டிருந்தவனின் அருகே வந்து உட்கார்ந்து கொண்டாள் கிரிஜா.கல்யாணம் முடிந்து தன்னோடு புறப்பட்டபோது அவள் ஆரம்பித்த அழுகையை இன்னும் நிறுத்தவில்லை என்றும், அவளுக்குத் தன்னோடு வாழ்வதில் சந்தோஷமில்லை என்றும், தன்னை அவள் அவமதிப்பதையும், இன்று கூடத் தலையில் அடித்துக் கொண்டதையும் அவன் வாய் ஓயாமல் வத்ஸலாவைப் பற்றிப் பேசித் துயரத்தை அதிகப்படுத்திக் கொண்டிருந்தான்.தையல் மிஷினுக்குப் பக்கத்திலிருந்து எண்ணெய் போடுகிற ‘ஆயில் கேனை’ எடுத்துக் கால் பெருவிரலுக்கும் அடுத்த விரலுக்கும் இடையேயுள்ள புண்ணுக்கு எண்ணெய் விட்டுக்கொண்டே, அவன் புலம்புவதையெல்லாம் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள் கிரிஜா.“பாவங்கோ அது. அறியாப் பொண்ணு தானேங்கோ?” என்று அவள் சொன்னதைக் கேட்டு அவன் ஒன்றும் புரியாமல் தலைநிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

“உங்களைக் கல்யாணம் பண்ணிக்கினதுனாலேயே உங்களுக்குச் சமமா ஆயிடுவாங்களாங்கோ அவுங்க?… அப்பா அம்மாவுக்கு ரொம்பச் செல்லப் பொண்ணுன்னு நீங்க தானேங்கோ சொல்லியிருக்கீங்கோ? எல்லாரையும் விட்டுட்டு வேற ஒரு ஊரிலே தனியா உங்களேட வந்து வாழறப்ப அந்தக் கொழந்தை மனசு எப்படிங்கோ இருக்கும்? அதெப் புரிஞ்சு நீங்கதான் – அட்ஜஸ்ட் பண்ணி நடக்கணும். நீங்க ‘டிரெய்ன்ட்’ இல்லீங்களா? ஒரு ஆம்பிளைங்கறதே அவுங்களுக்குப் புதுசு இல்லீங்களா? பயமா இருக்கும்ங்கோ; அருவருப்பாகூட இருக்கும்ங்கோ… நான் உங்ககிட்ட அப்படியெல்லாம் இருந்தேன்னா அதுக்குக் காரணம் என்னாங்கோ? நான் ‘எக்ஸ்பீரியன்ஸ்ட்’ இல்��□□ங்களா? யாருங்கோ ‘வய்ஃபா’ இருக்கிறதுக்கு டிரெய்ன்ட் ஹாண்ட் கேக்கறாங்கோ? இப்ப சொல்றீங்களே – என்னையே கல்யாணம் பண்ணி இருக்கலாம்னு – அப்ப ஏங்க அது தோணலே? நான் ஏற்கனவே ‘டிரெய்ன்ட்’ங்கற ‘டிஸ்குவாலிஃபிகேஷன்’ தாங்கோ அதுக்குக் காரணம்! அதனாலே, உங்க வய்ஃபை விட நீங்க அனுபவஸ்தர்ங்கிறதை நெனைப்பிலே வெச்சிக்கணும். அவுங்க கொழந்தைன்னு புரிஞ்சுக்கணும். நான் உங்ககிட்டே இருந்த மாதிரி நீங்க அவுங்ககிட்டே இருக்கணும். அப்படித்தான் போகப் போக எல்லாம் சரியாப் போயிடுங்கோ…” என்று அவள் எல்லாவற்றையும் லேசாக்கி விட்டதை நினைத்து அவன் ஆச்சரியப்பட்டான்.

இவளிடம் வரவேண்டுமென்று தான் நினைத்தது எவ்வளவு சரியானது என்று எண்ணினான்.அவன் இவ்வளவு நேரம் பேசிக்கொண்டிருந்ததால் நிறுத்தியிருந்த – கால் விரலிடுக்கில் எண்ணெய் விடுகிற – காரியத்தில் மறுபடியும் முனைந்தாள்."என்ன காலிலே?" என்று அவள் அருகே நகர்ந்து குனிந்து பார்த்தான் அவன்."போன வாரம் புதுசா செருப்பு வாங்கினேன். கடிச்சிடுச்சுங்கோ. மிஷின் தைக்கறதிலே விரல் அசையறதனாலே சீக்கிரம் ஆற மாட்டேங்குது" என்று சொல்லிக் கொண்டே இருந்தவள் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்து ஒரு சிரிப்புடன் சொன்னாள்: "பார்த்தீங்களாங்கோ... செருப்புக்கூடப் புதுசா இருந்தா கடிக்குதுங்கோ... அதுக்காகப் பழஞ்செருப்பை யாராவது வாங்குவாங்களாங்கோ?"அவள் சிரித்துக் கொண்டுதான் சொன்னாள். அவன் அவள் கைகளைப் பிடித்துக்கொண்டு அழுதுவிட்டான்.

(Maximum characters: 1000) You have 1000 characters left.

Write reCAPTCHA code *

17748654

கருத்தை பதிவுசெய்க

இயல்பாக நீங்கள் டைப் செய்யும் எழுத்துக்கள் Space bar அழுத்தியவுடன் தமிழில் தோன்றும். உங்கள் எழுத்துக்கள்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# எங்கோ யாரோ யாருக்காகவோ...

நானும் நண்பரும் 'பா'ரில்—கவுண்ட்டருக்கு அருகே போடப்பட்டிருந்த உயரமான முக்காலிகளில் ஏறி உட்கார்ந்து பீர் குடித்துக் கொண்டிருந்தோம். காலையிலிருந்து இதுவரை ஆளுக்கு மூன்று பாட்டில் பீர் குடித்திருக்கிறோம். கொஞ்சம் வெயிலில் போய் நின்று எதிரேயுள்ள சமுத்திரத்தை வேடிக்கை பார்ப்பது; வந்து பீர் குடிப்பது—இப்படியே இந்தக் கோடை வெப்பத்தை குதூகலமாய்ப் பயன்படுத்திக் கொள்ளத் திட்டம். நண்பருக்கு ஒன்றுக்குப் போக வேண்டும்போல இருக்கிறது. பீர்குடித்தாலே இப்படித்தான். சிரமப்பட்டு ஸ்டூலிலிருந்து இறங்கிப் பின்புறம் செல்கிறார். ஷூஸ் அணிந்த எங்கள் பாதங்கள் தரைக்கு மேலே இரண்டடி உயரத்தில் தொங்கத் தகுந்த உயரம் அந்த ஸ்டூல்களுக்கு. அவர் போனபின் நான் சுற்றும் முற்றும் பார்க்கிறேன். எங்கள் எதிரே பார்வெண்டருக்குப் பின்னால் முதுகுப் புறத்தில் வரிசை வரிசையாக வெளிநாட்டுத் தயாரிப்பும், உள்நாட்டு வடிப்புகளுமான வகை வகையான மதுக்கலசங்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

மத்தியான நேரம். பன்னிரண்டு மணி இருக்கும். நல்ல வெயில். கோடை. 'பா'ரில் அதிகக் கூட்டம் இல்லை. ஒரு மூலையில் இரண்டு பச்சை நிறப் பிரம்பு நாற்காலிகளில் உட்கார்ந்து ஒரு வெள்ளைக்காரனும் வெள்ளைக்காரியும் நுரை வழிகிற பீர் தம்ளர்களை வேடிக்கை பார்த்துக்கொண்டு மெதுவான குரலில் சம்பா

Scanned by CamScanner

ஷித்துக் கொண்டிருந்தனர். பிரெஞ்சுக்காரர்களோ, பிரிட்டிஷ்காரர்களோ, அமெரிக்கர்களோ, ரஷ்யர்களோ — ஒன்றும் தெரியவில்லை. இருவருமே தொடைக்குப்பாதியளவு நெருக்கிப் பிடித்த அரைக்கால் சட்டை அணிந்திருந்தனர். இங்கே இருந்து பார்க்கிறபோது எங்களுக்கு அவள் தான் நேரே தெரிந்தாள். அவனுடைய முதுகுப்புறமும் கால்மேல் கால் போட்டு வலதுபுறம் நீண்ட இடது பாதமும் தெரிந்தது. காலில் ஒரு சாதாரண செருப்பு. அவளுக்கு உடம்பு அளவு பருமன் ஒவ்வொரு தொடையும் ஒரு வேளை உட்கார்ந்திருக்கும் நிலையில் அப்படித் தெரிந்ததோ என்னவோ! கழுத்தில் வைலட் கலரில் ஒரு குறத்தி மாலை; கறுப்பு நிறத்தில் அவள் அணிந்திருந்த கால் சட்டையில் பிதுங்கிக்கொண்டு தெரியும் தொடைச் சதையையே நான் பார்த்துக் கொண்டிருந்தேன். அவள் கறுப்புக் கண்ணாடியைக் கழற்றவில்லை. அதனால் அவள் என்னைப் பார்க்கிறாளா என்று நான் கவனிக்க முடியவில்லை. எதற்கு நான் இவர்களை இப்படி முறைத்துக் கொண்டிருக்கிறேன் என்று என்னையே மனத்துள் கண்டித்துக்கொண்டு 'டக்'கென்று வேறுபுறம் திரும்பி வெளியே பார்த்தேன்.

வெளியே சாலையின் மறுபுறம் கடல் கொந்தளிக்கிற சப்தம். நீல ஆகாசம் தெரிந்தது. காற்று வீசுகையில் சற்று வெப்பம் அசைந்து கலைகிறது. எனக்குப் பின்னால் திடீரெனச் சிரிக்கும் அந்த வெள்ளைக்காரியின் பெண்மைக் குலுக்கல் கேட்டது. என்னைப் பற்றித்தான் எதுவும் சொல்லிச் சிரிக்கிறாளோ என்று நினைத்துக் கொண்டேன். சிரிக்கட்டுமே!

வெளியில் ஜன்னலுக்கு நேரே எங்கள் கார் வெகு நேரமாய் வெயிலில் பழுக்கக் காய்ந்து கொண்டிருந்தது. அதன் நிக்கல் பிளேட்டில் பட்ட வெளிச்சம் 'டால்' அடித்து முகத்தில் பட்டுக் கண்களைக் கூசச் செய்ததால்



நான் சற்று நகர்ந்தேன். அப்போது கார் ஓரத்தில் சிவப்புப் புடவையின் முந்தானை காற்றில் பறக்கக் கண்டு எழுந்து வந்து வெளியே பார்த்தேன்.

சுவரோரமாக இருந்த அரை அடி நிழலில் ஒதுங்கி நின்று அவள் வேர்க்கடலை கொறித்துக்கொண்டிருந்தாள். தரையில் சிமெண்ட் பிளாட்பாரத்தில் கிடந்த சுண்ணாம்புக் காரைக் கட்டியை வலது காலின் பெருவிரலால் அழுத்தி நொறுக்கி விரலாலேயே ஒரு சதுரம் வரைந்து அதன் நடுவே ஒரு பெருக்கல் குறி வரைந்து மீண்டும் மீண்டும் அதன்மேல் கால்பெருவிரலால் வரைந்தவாறு நின்றிருந்தாள். நான் அவளைப் பார்ப்பதைக்கூட அவள் கவனிக்கவில்லை. நான் அவளை நன்றாகப் பார்த்தேன். எடுத்த எடுப்பில் அவள் ஒரு கூலிக்காரியாகவோ, அல்லது தலைச் சுமையாகக் கூடையில் ஏதேனும் கொண்டு வந்து தெருவில் கூவி விற்பார்களே அது மாதிரி ஏதோ ஒரு தொழில் செய்கிறவளாகவோ அவளை நினைக்க அது மாதிரியானவர்களின் நினைவு எனக்கு வந்தது. நல்ல கறுப்பாக இருந்தாள், குள்ளம். பதினெட்டுக்கு மேலே இருப்பத்திரண்டுக்குள் ஏதோ ஒரு வயது. அவள் கண்கள் எங்கோ சோம்பலுடன் வெறித்தவாறிருந்தன. அவள் விரலால் நிமிண்டி நிமிண்டித் தள்ளிய வேர்க்கடலையின்தோல் காற்றில்பறந்து வந்தது. 'இவள் ஒரு 'தொழில்காரி'யாக இருப்பாளா?'

என்று பீர் போதையில் வசதியாக யோசித்தேன்.

அப்போது பாத் ரூமுக்குள் போயிருந்த நண்பரும் வந்து என் பின்னால் நின்று என் பார்வை வழியே நின்று அவளைப் பார்த்து.

''என்ன 'ஸனகோட்டா'?'' என்று கேட்டார். இந்த வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்று உலகத்துப் பாஷைகளில் எல்லாம் தேடினாலும் கிடைக்காது. என்னை அந்தரங்கமாகத் தெரிந்த எனது அத்யந்த நண்பர்களுடன்

www.t.me/tamilbooksworld
Scanned by CamScanner

பகிரங்கமாக எங்கே வேண்டுமானாலும் உரையாடுவதற்காக நானே கண்டுபிடித்த பாஷை இது வார்த்தையை உச்சரிக்க வேண்டிய முறை; 'ஸன Gote. ஆ—வினா; இதற்குப் பொருள் இடத்திற்கேற்ப மாறிவரும் இதுமாதிரி சந்தர்ப்பங்களில் இதற்குப் பொருள்; 'பிராஸ்ட்டிட்யூட்டா?' என்பது.

''ஐ ஆம் நாட்ஷ்யர்!'' என்று சொல்லிவிட்டு நான் மறுபடியும் கவுண்டர் ஸ்டூலுக்கு வந்து ஏறி உட்கார்ந்து கொண்டு பீர் தம்ளரில் ஒரு'ஸிப்' பண்ணினேன். தம்ளரில் நுரை அடங்கி இருந்தது. பக்கத்தில் பாட்டிலில் மீதி இருந்த பீரை எடுத்து பார்வெண்டர் என் கிளாஸில் ஊற்றினான். நண்பர் ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொள்ளும் முன்னர் என்னிடமும் நீட்டினார். நான் பொதுவாக சிகரெட் பிடிப்பதில்லை; குடிக்கிறதும் இல்லை. குடித்தால் குடிக்கிறபோது சிகரெட் பிடிக்கிறதும் உண்டு. இது மாதிரி முகமறியாத ஓர் ஊரில் வந்து ஓய்வாகச் சில நாட்களை இஷ்டப்படியெல்லாம் கழிப்பது என்கிற தீர்மானத்தில் பை நிறையப் பணத்தையும் நிரப்பிக்கொண்டு வந்திருக்கும்போது என்ன செய்தால் தான்என்ன? இதில் எல்லாம்ஏற்படுகிற'எக்ஸைட்மெண்ட்' தானே இன்பம்? ஒரு சிகரெட்டை நானும் பற்றவைத்துக் கொண்டேன்

நண்பர் பாத்ரூமுக்குப் போவதற்கு முன்னால் என்னிடம் சொல்லிக்கொண்டிருந்த அவரது அமெரிக்க வாழ்க்கை அனுபவங்களைத் தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தார். என் கவனமெல்லாம் ஜன்னலுக்கு வெளியே காற்றில் பறக்கும் சிவப்புப் புடவையிலும், எங்கள் காரில் தெரிகிற அவளது விசித்திரமான பிம்பத்திலும்தான். நண்பர் அமெரிக்க நினைவுகளில் ஆழ்ந்து போயிருந்தார்.

அவர் அமெரிக்காவில் தனக்கிருந்த ஒரு நீக்ரோ சிநேகிதியைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார்.



சிகாகோ நகரிலும், வேறு பலதென் மாநிலங்களிலுமுள்ள நிறவேற்றுமையின் கண்மூடித்தனத்தைப் பற்றியும்மிகவும் உணர்ச்சி வசப்பட்டுச் சொல்லிக் கொண்டிருந்தார். முதன் முதலில் இவர் போய் அமெரிக்காவில் காலூன்றிய வுடனே தனக்கு ஏற்பட்ட 'வரவேற்பு' குறித்து அவர் கூறிய போது கண் கலங்கிப் போனார் நண்பர்.

சிகாகோ நகரில் அமைதியான பார்க்கை ஒட்டிய அழகான பெரிய சாலையாம். அப்போது பனிக் காலம். ஆளரவமற்ற அமைதியானநெடியசாலையில் ஆங்காங்கே ஜோடி ஜோடியாகவும் தனித்தும் ஒரு சிலர் மெதுவாக நடந்து கொண்டுமிருக்கின்றனர். மேலங்கிகளையும் குல்லாய்களையும் வைத்து மனிதர்களை அடையாளம் காண முடியவில்லையாம்.

எதிரே ஓர் இளம் அமெரிக்க மாதும் அவள் கையைப் பற்றிக்கொண்டு இரண்டரை அல்லது மூன்று வயசுச் சிறுமியும் வருகிறார்களாம். அந்தக் குழந்தை பனிக் குல்லாயும் ஃபர் உடையும் அணிந்து, நீலக் கண்களை உருட்டி உருட்டிப் பார்த்தவாறு வருவது நண்பரை அதனிடம் மண்டியிட வைத்ததாம் குனிந்து 'குட் மார்னிங்...' என்று வாழ்த்தினாராம்.

பதிலுக்கு அந்தக் குழந்தை 'தூவென்று துப்பிவிட்டு வேறுபுறம் திருப்பி நடந்ததாம். அந்தத் தாயும் அதற்காகக் குழந்தையைத் திருத்தவோ, அவரிடம் மன்னிப்புக் கேட்கவோ கூட இல்லையாம்.

''பல சமயங்களில் நான் ஒரு நீக்ரோ என்று கருதப் பட்டேன். 'நான் நீக்ரோ அல்ல' என்று மறுத்து ஓர் இந்தியனுக்குரிய மரியாதையைக் கேட்டுப் பெற்றுக்கொள்ள நான் விரும்பவில்லை. நான் நீக்ரோக்களுடனே நெருக்கமாகப் பழகினேன். அவர்களைப் போன்ற உயர்ந்த ஜாதி மனிதர்கள் கிடையாது. நான் ஒரு நீக்ரோவாக மதிக்கப் பட்டதால் பெருமையும் கொள்ள ஆரம்பித்தேன்...'' என்று

www.t.me/tamilbooksworld
Scanned by CamScanner

ஆங்கிலத்தில் என் காதில் மட்டும் விழுகிறமாதிரி மிகவும் உணர்ச்சிவசத்தோடு கூறினார் நண்பர்.

என் பார்வை ஜன்னலுக்கு வெளியே காற்றில் பறக்கும் .. சிவப்புப் புடவையில் ..

நண்பர் ஓர் அமெரிக்கனின் கண்களுக்கு நீக்ரோ மாதிரித் தோன்றினால் ஆச்சரியப்படுவதிற்கில்லை. இந்திய தமிழ் நாட்டுத் தரத்தில் அவர் கறுப்பு அல்ல மாநிறம்தான். மாநிறமான, இந்தியத் தரச் சிவப்பு நிற மான நீக்ரோக்களும் உண்டாம். இவர் கிராப்பு மிகவும் குறுகத் தரித்துச் சுருட்டையானதாகவும் இருக்கும். ஒரு அமெரிக்க நீக்ரோ என்று நினைத்துக் கொண்டு பார்க்கையில் என் கண்களுக்கு இவர் இப்போது ஒரு நீக்ரோ மாதிரித் தான் தோன்றுகிறார்.

''ஸ்டேட்ஸில் நான் இருந்த பத்து வருஷங்களில் எத்தனையோ அமெரிக்க இளைஞர்களோடும் குடும்பத்தினரோடும் பெண்களோடும் பழகி இருக்கிறேன் என்றாலும் எனக்குப் பிடித்தவர்கள், என் மனதைக் கொள்ளை கொண்டவர்கள் நீக்ரோப் பெண்கள்தான் – எனக்குக் கறுப்பிகளைத்தான் பிடிக்கிறது '' என்றார் நண்பர்.

நண்பருக்குத் தமிழில் பேசவராது. தங்கு தடையின்றிப் பேசுவதற்கு அவரால் இங்கிலீஷில் தான் முடியும்

''வெளியில் நிற்கிறாளே, அந்தக் கறுப்பியை உங்களுக்குப் பிடிக்கிறதா ?'' என்று கேட்டேன் நான்.

நண்பர் சிரித்தார் : ''இப்பல்லாம் நோ செலக்ஷன்ஸ்? இதென்ன ஸ்டேட்ஸா ? கெடைக்கிறதே அபூர்வம். இதிலே தேர்வு என்ன? எனிதிங்! டார்க், பிரவுன், யெல்லோ, வய்ட் ஒண்ணும் வித்தியாசம் பார்க்கறதில்லே. ஆனா கெடைக்கறதுதான் கஷ்டமா இருக்கு நம்ம தேசத்திலே இது ரொம்ப பெரிய சிக்கலாகத்தான் இருக்கு. நான் ஒரு பெண்ணோட படுத்துக்கறதைப் பற்றிச்



சொல்லலே. பேசறது கூட இங்கே பெரிய விஷயம். ஒரு ஆண் குடிக்கறதே ! ஒரு குற்றம். பெண் குடிக்கிறது பாவமும் குற்றமும் ...ரெண்டு பேரும் சேர்ந்து குடிச்சுப் பேசறதை இங்கே யாரும் கற்பனைகூடப் பண்ண முடியாது... ''

நண்பர் கலியாணமாகாதவர், நாற்பதைக் கடந்தவர். முப்பது வயதிலிருந்து நாற்பது வயதுவரை பத்து ஆண்டுகள் சுதந்திரமாக அமெரிக்காவில் இருந்தவர். அவருடைய அங்கலாய்ப்பு எனக்குப் புரிகிறது.

இங்கு நாங்கள் வந்து இரண்டு நாட்களாகிறது. இரண்டு நாட்களாய்க் குடிப்பதும் சினிமா பார்ப்பதும், தெருவை வேடிக்கை பார்த்துக் கொண்டு சைக்கிள் ரிக்ஷாவில் உட்கார்ந்து ஊர் சுற்றுவதும், சாயங்கால நேரத்தில் கடற்கரையில் அந்தச் சிமெண்ட் சுவரின் மீது உட்கார்ந்து கொண்டு அரைக்கால் சட்டை அணிந்து திரியும் ஆசிரமத்துப் பெண்களை வேடிக்கை பார்ப்பதையும் தவிர அவரது தேவை பூர்த்தியாகிற காரியம் எதுவும் இதுவரை கைகூடவில்லை. எனக்கு அதில் நாட்டமில்லை. திட்டமிட்டதற்கு மேலே ஒரு நாளும் ஆகிவிட்டது. இன்று திங்கட் கிழமை. சாயங்காலமாவது புறப்பட்டுவிடவேண்டும். நண்பருக்கு நாளை நிச்சயம் ஆபீசில் இருந்தாக வேண்டும். இவருக்கு எவளாவது கிடைத்தால் எனக்கும் சந்தோஷம் தான். இது என்ன கடையில் கிடக்கிற சரக்கா ?

எங்கள் இருவரின் கிளாசும் காலியாகி விட்டன.

''ஒன் மோர் பாட்டில் பீர் !''

''ஓ எஸ் ! வேறு என்னதான் இருக்கிறது'' என்றார் நண்பர்.

''இங்கே 'ப்ரான்ஸ் ஃப்ரை' ரொம்பப் பிரமாதமாக இருக்கும். ரெண்டு பிளேட்டு கொண்டு வா'' என்றேன். வறுத்த இறால், எண்ணெய் மிளகாய் எதுவுமில்லாமல்

www.t.me/tamilbooksworld
Scanned by CamScanner

டிரை'யாக இரண்டு பிளேட்டுகளில் கொண்டு வந்து வைக்கப்பட்டது. நண்பர் ரொம்பப் பிரியமாகச் சாப்பிட்டார்...எங்கள் தம்ளர்களில் நுரைவழிய பீரை நிரப்பினான் அந்த ஆள். நான் பீர் கிளாஸ் வழியாக ஜன்னலை, வெளியே தெரியும் காரை, பழுக்கக் காயும் வெயிலை, பக்கத்தில் காற்றில் பறந்து காரில் பிரதிபலிக்கிற சேலையை எல்லாவற்றையும் மஞ்சளாகப் பார்த்தேன்.

நாலைந்து பாட்டில்கள் குடித்திருந்ததால் வயிறும் கனத்து, போதையும் நன்கு தலைக்கேறி இருந்தது காலை ஒன்பது மணிக்கு ஆரம்பித்தது : நாலரை மணி நேரமும் ஆகி இருந்தது மத்தியானச் சாப்பாடு நேரம் வந்துவிட்டது. ஆனால், பசி இல்லை, காலை ஸெஷனை இத்துடன் முடித்துக் கொள்ளலாம் என்ற தீர்மானத்தோடு 'ப்ரான்ஸ் ஃப்ரை'யுடன் பீரை முடித்தோம்

ஸ்டூலிலிருந்து இறங்கி நிற்கும்போது ரொம்ப சுகமாக இருந்தது. ஐம்பத்தி ஆறரை ரூபாய் 'பில்'லுமாகி இருந்தது. அறுபது ரூபாய் கொடுப்பதற்கு என்னிடம் சில்லரை இல்லை. நூறு ரூபாய்த் தாள் ஒன்றைத் தந்து ஒரு பாக்கட் சிகரெட்டும் நான்கு பத்து ரூபாய் நோட்டுகளும் பெற்றுக் கொண்டு நானும் நண்பரும் வெளியே புறப்படுகிறபோது அவள் ஜன்னலுக்குக் குறுக்காக எங்களைப் பார்த்துக் கொண்டே நடந்தாள். அப்படி அவள் பார்த்துக் கொண்டே நடக்கிறபோது லேசாகச் சிரித்தாள். நானும் சிரித்தேன். நான் சிரித்த பிறகு அவள் சிரித்தாளா, அவள் சிரித்ததால் நான் சிரித்தேனா என்று நிதானிக்க முடியவில்லை.

இருவரும் அவசர அவசரமாக வெளியே வந்தோம். சற்றுத் தூரத்தில் கடலை வெறித்துப் பார்த்துக்கொண்டு எதிர்ப்புற பேவ்மெண்ட்டில் போய் அவள் நின்று கொண்டு இருந்தாள். வீசியடிக்கிற காற்றில் அவள் சேலைத்



தலைப்பும், தலைமுடியும் தாறுமாறாய்ப் பறந்து கொண்டிருந்தது. அவற்றைச் சரிசெய்து சுருட்டிக் கொண்டு வெள்ளைப் பற்கள் பளீரிட எங்களைப் பார்த்தவள் சிரித்தாள்.

நண்பரிடம் நான் சொன்னேன் : "நீங்களும் போய் அங்கே நில்லுங்கள் ; நான் காரை எடுத்துக்கொண்டு வருகிறேன்."

நான் எப்போது இதைச் சொல்லுவேன் என்று காத்துக் கொண்டிருந்தவர் போல நண்பர் உடனே எதிர் பிளாட் பாரத்துக்கு ஓடி நடந்தார். இவர் வருவதைப் பார்த்ததும் அவள் மெல்ல இந்த பேவ்மெண்டில் கடலின் அலை வந்து மோதுகிற சிமெண்ட் சுவரோரமாகத் தெற்கு நோக்கி நடக்கவாரம்பித்தாள். நண்பரும் அவளைப் பின் தொடர்ந்து சிகரெட்டைப் பிடித்த வண்ணம் கூலிங் கிளாஸை மாட்டிக் கொண்டு பத்தடி பின் தங்கி நடக்கவாரம்பித்தார்.

வடக்கு நோக்கி நிறுத்தி இருந்த காரை நான் 'ரிவர்ஸ்' எடுத்துத் திருப்பி மெள்ள, கலியாண ஊர்கோலம் போகிற மாதிரி அவர்களுக்குப் பின்னால் சென்று கொண்டிருந்தேன். அவள் திரும்பிப் பார்த்துப் பார்த்து நடக்கிறாள். நண்பர் நான் வருகிறேனா என்று பார்த்துக் கொள்கிறார். நானும் யாராவது நம்மைக் கவனிக்கிறார்களா என்று பார்த்துக் கொண்டேன்.

பீச்ரோடு முழுவதும் நெடுக ஆள் சந்தடியே இல்லை. தூரத்தில் இரண்டொரு குப்பத்துச் சிறுவர்கள் பீடி குடித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஒரே ஒரு சைக்கிள் ரிக்ஷா; அதில் இரண்டு பேர் குடித்துவிட்ட குதூகலத்தில் 'ஓ' வென்று இரைந்து கூவ, அவர்கள் அட்டகாசத்தை ரசித்துச் சிரித்தவாறே சைக்கிள் ரிக்ஷாக்காரன் மிதித்துக் கொண்டு வந்தான் என்னைப் பார்த்து தனது கேலிச் சிரிப்பைப் பகிர்ந்து கொண்டான். அப்புறம் அதுவும் எங்களைக் கடந்து போய்விட்டது.

www.t.me/tamilbooksworld
Scanned by CamScanner

தென் கோடி வரைக்கும் அவள் நடந்து – அங்கே பாதை முடிந்து வலதுபுறம் திருப்புகிறது. இனிமேல் கடலை ஒட்டின பாதை இல்லை கவரோரமாகப் போய் சாய்ந்து நின்று கொள்கிறாள். எங்கள் பக்கம் திரும்பாமல் கடலையே பார்த்துக்கொண்டு கொஞ்சம் 'பிகு' பண்ணு கிறாள்.

நான் பத்தடி தூரத்தில் காரில் இருக்கிறேன், நண்பர் நல்ல வெயிலில், பாண்ட் பாக்கெட்டில் கையை நுழைத்துக் கொண்டு பத்தடி தூரத்தில் நின்று அவளையே வெறிக் கிறார். அவர் கொஞ்சம் நகர்ந்தார். நானும் நகர்ந்தேன். இன்னும் அவர் நெருங்கினார் நானும் காரிலிருந்து இறங்கி 'பேவ்மெண்டி'ல் நடந்தேன். அவளோடு வந்த வர் மாதிரி நெருக்கமாகப் போய் நின்று—இருவருக்கு மிடையே நாலு அடி தூரம் இருந்தது – பேசத் தைரியம் இல்லாமல் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு என் பக்கம் திரும்பி,

''சிகரெட் வேணுமா ?'' என்றார். இவர் முதுகுக்குப் பின்னால் அவள் என்னைப் பார்த்தாள் ; சிரித்தாள். நண் பரின் அருகே சென்று ஒரு சிகரெட்டை வாங்கிப் பற்ற வைத்துக் கொள்ள நான் மிகச் சிரமப்பட்டேன். காற்றில் தீக்குச்சிகள் நான்கு ஐந்து அணைந்து போயின.

நான் நண்பருக்கும் அவளுக்கும் நடுவே போய் நின்று கொண்டேன். அவளைத் திரும்பி நான் பார்த்தபோது அவள் என்னை நேருக்கு நேர் நன்றாகத் தெரிந்தவள் மாதிரி சொந்தத்தோடு பார்த்தாள்.

''எந்த ஊரு ;'' என்று அந்த ஊர் தொனியில் நான் கேட்டேன்.

''இந்த ஊருதான்...இப்ப. நீங்க என்னா மெட்றாஸா?'' என்று அவள் கேட்கும் போதுதான் நான் கணித்திருந்த வயசுக்கும் குறைவாகத்தான் இருப்பாள் இவள் என்று தோன்றுகிறது.



நான் தலையை ஆட்டினேன்.

''கார்லேயேவா வரீங்க !''

''ஆமாம்...'' என்றேன் நான்.

''நீங்க ரெண்டுபேருதானா !'' என்று இப்போதுதான் முதல் தடவையாக நண்பரையும் பார்த்து சிரித்து வைத் தாள்

''ஆமாம் ; ரெண்டு பேருதான்-நீ வரியா ?'' என்று எடுத்த எடுப்பில் கேட்டார் நண்பர்.

'ஐயையே ! ..பாரேன் கேக்கறதே'' என்று நாக்கைக் கடித்துக் கொண்டவள் சற்றுக் கழித்து என்னிடம் கேட் டாள் ;

''நானு வந்தா இட்டுக்கினு போறீங்களா ?''– நான் பதில் சொல்ல முடியாமல் இருந்தேன்.

''ஓ ! எஸ்...'' என்று உற்சாகமாய்ச் சொன்னார் நண்பர்.

''நான் அவரைக் கேக்கறேன்...வரேன். வந்தா கூட் டிக்கினு போறீங்களா ? என்று என்னிடம் திரும்பவும் கேட்டாள்.

''நீ அங்கே வந்து என்னா செய்வே ?'? என்றேன் நான்.

''நீங்க என்னா செய்யச் சொன்னாலும் செய்றேன் ; இல்லே அஞ்சு ரூவா காசி குடுத்து 'ஓடறி கழுதெ'ன்னீங் கன்னா பஸ் ஏறி 'இதான் என் தலை எழுத்து'ன்னு திரியும் இங்கியே வந்துடறேன்'' என்றாள்.

''கமான் ! இப்ப கார்லே ஏறிக்க – பேசிக்கினே போக லாம்'' என்று நண்பர் காரருகே வந்தார்.

அவளாகவே வந்து டிரைவிங் ஸீட்டுக்குப் பக்கத்துக் கதவை ''எப்படித் தெறக்கறது ?'' என்று கேட்டுக் கொண்டே திறந்தாள்...

www.t.me/tamilbooksworld
Scanned by CamScanner

''ம்''...உட்கார்ந்துக்கோ'' என்றேன் நான்.

நண்பர் பின் ஸீட்டில் உட்கார்ந்து கொண்டார். அவளை என் பக்கத்தில் அமர்த்திக்கொண்டு நான் காரை ஸ்டார்ட் செய்தேன்.

''அந்தப் பக்கம் வாணாம் இப்பிடித் திரும்பி ஒட்டுங்க...'' என்று என் கையைத் தொட்டுச் சொன்னாள் அவள்.

''உன் பேரு என்ன?'' என்று அவள் கழுத்தை விரலால் தொட்டாற்போல் இருக்கிறார் நண்பர்.

''எல்லாம் இப்பவே சொல்லணுமா? கொஞ்சம் தூரம் போங்க...இங்கே யாராவது தெரிஞ்சவங்க இருப்பாங்க.'' என்று காருக்குள் தலை வெளியே தெரியாமல் குனிந்து கொண்டாள் அவள்.

நகரத்தின் சந்தடிகளையெல்லாம் தாண்டுகிறவரைக்கும் அவள் தலை நிமிரவே இல்லை. தன் முழங்கால்களின் மீது முகத்தைப் புதைத்துக் கொண்டு வந்தவள் அதே நிலையில் என் பக்கம் முகத்தைத் திருப்பி கண்களை விரித்து என்னைப் பார்த்தாள். அவள் பார்க்கிற தினுசிலிருந்து இவள் நம்மை ரசிக்கிறாள் என்று நான் தெரிந்து கொண்டேன்.

ஒரு பெண்ணினால் ரசிக்கப்படுவது ரொம்ப சுகம் தான். அதுவும் ஒரு ஆண், பெண்ணை ரசிக்கிற மாதிரி ஒரு பெண் என்னை ரசிப்பது எனக்கு எப்போதுமே சுகமாகத்தான் இருக்கிறது. காரை ஓட்டிக்கொண்டே இருந்தவன் குறுக்கே ஒரு சைக்கிள் ரிக்ஷாக்காரன் புகவே திடீரென்று 'பிரே'க்கை மிதித்தேன்.

''யம்மாடி'' என்று கூவிக்கொண்டே அவள் முன்புறம் மோதிக் கைகளை ஊன்றிக் கொண்டு சிரித்தாள். அவள் சிரிக்கும்போது அந்தப் பற்களும் முகமும் ஒரு டூத்பேஸ்ட் விளம்பரக்காரியை நினைவூட்டியது.



நகரத்தின் எல்லையைத் தாண்டியதும் அதற்காகவே காத்துக் கொண்டிருந்த மாதிரி நண்பர் அவள் தோளைத் தொட்டுச் சொன்னார்:

''ஊரைத் தாண்டி வந்துட்டோம்...''

அவள் தலை நிமிர்ந்து பின்பக்கம் திரும்பி நண்பரைப் பார்த்துக் கலகலவெனச் சிரித்தாள்: ''எப்படா ஊரு தாண்டுவோம்னு காத்துகினு இருந்தீங்களா?'' என்றாள். நண்பர் சிரித்துக்கொண்டே சிகரெட் புகையை அவள் முகத்தில் ஊதினார். போலிருக்கிறது. ''ஐயோ தூ' என்று கையால் புகையை வீசி முந்தானையால் மூக்கை மூடிக் கொண்டு இந்தப்பக்கம் திரும்பி உட்கார்ந்து கொண்டாள். நண்பர் பின்னாலிருந்துஅவள் மோவாயைக் கையிலேந்தி மறுபடியும் அவள் எதிர்பாராத விதமாய் அவள் முகத்தில் புகையை ஊதிவிட்டார்

''பாருங்க...மூஞ்சியிலே புகை விடறதே?'' என்று என்னிடம் புகார் செய்தாள்.

நண்பர் மறுபடியும் புகையை ஊதினார்.

''ஐயே.. பாருங்க இவரை.. சும்மா சும்மா அதே மாதிரி புகையை உடறாரு.. எனக்கு வவுத்தப் பொரட்டுது ...நான் வாயல் எடுத்துடுவேன்'' என்று சிணுங்கியவாறே சிரித்தாள்.

நான் நண்பரைப் பார்த்தேன். அவர் பீர் போதை நன்கு ஏறி நல்ல குஷியில் இருக்கிறார் என்று தெரிந்தது.

''வேண்டாம். அவளைத் தொந்தரவு செய்து அவள் மூடை'க் கெடுத்து விடாதீர்கள்'' என்று நண்பரிடம் நான் ஆங்கிலத்தில் சொன்னேன்.

''நீங்க – இப்ப பேசனது என்ன பாஷை? பிரான்ஸா, இங்கிலீஸா?'' என்று கேட்டாள் அவள்.

''என் – உனக்குப் 'பிரான்ஸ்' தெரியுமா?'' என்று அவளை மாதிரி கேட்டேன்.

www.t.me/tamilbooksworld
Scanned by CamScanner

''எனக்குத் தெரியாது எங்க வூட்லே தெரியும்- அந்த ஆளு இங்கே போலீஸ் வேலை செய்யிது'' என்றாள்.

''உங்க வூட்லேன்னா உன் புருஷனா?'' என்று கேட்டார் நண்பர்.

''இல்லை'' என்று அவள் பலமாகத் தலையை ஆட்டினாள்; ''இவரு என்னை இட்டாந்துட்டாரு எம் புருஷங்காரன் வேற... அவுரு நெல்லிக்குப்பத்திலே இருக்காரு''

''நெல்லிக்குப்பம்? எங்கே இருக்கு?'' நண்பர் என்னைக் கேட்டார். அதுதான் எனக்கும் சொந்த ஊர். இருந்தாலும் அதை அவள் முன்னால் சொல்லுவதும் இந்த நேரத்தில் சொல்லுவதும் அவசியமில்லாதது என்று நினைத்துக் கொண்டேன்.

''இங்கேருந்து பன்னிரண்டு மைல் இருக்கும்'' என்று நண்பருக்கு விளக்கினேன்.

''அப்ப உனக்கு நெல்லிக்குப்பத்துக்குப் போகணுமா? அங்கே கொண்டுபோயி உடறோம்'' என்று அவளை உற்சாகப்படுத்துவது மாதிரி சொன்னார் நண்பர்.

''ஐயையோ... அந்தப் பக்கம் என்னெப் பாத்தா கொடுவாக் கத்தியாலே வெட்டிப் போட்டுவான் எங்க மாமன்—மாமனுக்குத்தான் கட்டிக் குடுத்தாங்க என்னை...சாமி! உங்களுக்குப் புண்ணியம் உண்டு; அங்கே எங்கனாச்சும் கொண்டு உட்டுடாதீங்க! நானு இங்கேயே வேண்ணாலும் எறங்கிக்கறேன்'' என்றாள் அவள்.

''சீ சீ! சும்மாத்தான்—உங்க ஊருன்னு சொன்னியேன்னு கேட்டோம். எங்களுக்கு என்ன ஆகனும், உன்னை அங்கே கொண்டுபோயி உட்டு?''......என்றார் நண்பர்.

சரி, எங்கே என்று தெரியாமல் ஏதோ ரோடில் நாம் போய்க்கொண்டே இருந்தால்—இதற்கு என்ன முடிவு? இவளை வேறு கூட ஏற்றிக்கொண்டு? நண்பர் இதைப்

www.t.me/tamilbooksworld



பற்றியெல்லாம் யோசிக்கிறதாகவே தெரியவில்லை. ஏதோ நம்மோடு ஊரிலிருந்தே உடன் வந்து கூடவே திரும்புகிற ஒருத்தியுடன் பேசுகிற பாவனையில் தன்னை மறந்து சம்பாஷித்துக் கொண்டு வந்தார்.

ஆளரவம் இல்லாத ஒரு புளிய மரத்தடியில் நான் காரை நிறுத்தினேன்.

''என்னா கார் நின்னுட்டது'' என்று கேட்டாள் அவள்.

''யாரும் பார்க்காத இடத்துக்கு வரணும்னு சொன்னே—கொண்டு வந்துட்டேன். இனிமே உன்பாடு, உன்னை இட்டாந்திருக்காரே இவுருபாடு'' என்று கதவைத் திறந்து கொண்டு கொஞ்சம் காற்றாட சாலையில் இறங்கி நின்று நானும் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தேன்.

''ஹை! பேச்சைப் பாரேன் பேச்சை.. இவுரு இட்டாந்தாராம்.. இவுரு கொண்ணாந்து உட்டுட்டாராம். இப்படி சொன்னாக்கா, இவுரு சும்மா 'டைவர்' மாதிரின்னு நான் நெனைச்சுக்குவேனாம் இந்த வெள்ளாட்டுஎல்லாம் எனக்குத் தெரியாதுன்னு நெனச்சுக்கினீங்களா?'' என்று சொந்தமாக என்னை அவள் பரிகாசம் செய்தாள். நான் சற்று நடந்து மரத்தடியிலே போய் ஒன்றுக்குப் போனேன்.

தூரத்தில் ஒரு கள்ளுக்கடை தெரிந்தது. இரண்டு பக்கமும் கம்மங் கொல்லையோ, சோளக் கொல்லையோ? உள்ளே ஆள் நுழைந்தால் தெரியாமல் மறைக்கிற அளவுக்கு உயர்ந்தும் அடர்ந்தும் செழித்தும் வளர்ந்திருந்தது.

வெயிலின் அனல் காய்ந்தாலும் அடிக்கடி குளிர்ந்த காற்று வீசியது. பக்கத்து மாமரத்திலிருந்து ஒரு ஆண் குயில் மிகச் சோகமாய்க் கூவிற்று.

Scanned by CamScanner

எங்கிருந்தோ மிக வேகமாக ஓடிவந்த—நெற்றியில் கண்களுக்கு மேல் இரண்டு புறமும் பழுப்பு நிறத்தில் பொட்டிட்டது மாதிரி வண்ணமுடைய ஒரு கருப்பு நாட்டு நாய் காரின் பின்பக்க டயரில் காலைத் தூக்கிக்கொண்டு மூத்திரம் அடித்துக் கொண்டு பாதியில் என்னைப் பார்த்து, நான் விரட்டாமலே பயந்து கொண்டு வேகமாய் என்னைப் பார்த்து, நான் விரட்டாமலே பயந்து கொண்டு வேகமாய் என்னைத் தாண்டி அரை வட்டமாக விலகி நடந்து மறுபடியும் வேகமாய் ஓடியது.

சற்றுத் தூரத்தில் போய் நின்று, தான் பயந்துவிட்டதைக் காரணமாய்க் கொண்டு என்னைப் பழிக்கிற மாதிரி அது குரைத்தது.

பீர் போதையினால் நான் இந்த அற்ப விஷயங்களைக் கூட இவ்வளவு கூர்ந்து கவனிக்கிறேனோ என்று நினைத்து எனக்கு நானே சிரித்துக் கொண்டேன்.

சீ ! எவ்வளவு நாழி மரத்தடியிலேயே நின்று கொண்டு? பீர் குடித்தாலே இப்படித்தான்...சரி இருக்கட்டும். நண்பர் அங்கு அவளோடு என்னவாவது பேசுவார் ஒரு சிகரெட் தீருகிற வரைக்கும் நான் இங்கேயே நின்று காற்று வாங்கிக் கொண்டிருந்தேன். நண்பர், என் பெயரில் உள்ள இரண்டு பதங்களின் முதல் ஆங்கில எழுத்துக்களை உச்சரித்து என்னை அழைத்தார்.

"She wants you அவளுக்கு நீங்கள் வேணுமாம்."

அவர் இங்கிலீஷில் கூறியது விளங்காமல் அவளும் இளித்துக் கொண்டு என்னைப் பார்த்தாள். நான் கூவிச் சிரித்துக் கொண்டே கார் அருகே போனேன். என் சிரிப்பிலிருந்து என்னவோ இவர்கள் குறும்பு செய்கிறார்கள் என்று புரிந்து கொண்டாள் அவள்.

"எதுக்கு சிரிக்கிறீங்க? இவுரு என்னா சொன்னாரு இங்கிலீஸ்லே" என்று என்னைக் கேட்டாள். திருப்பத் திரும்பக் கேட்டாள்.



"உனக்கு நான் வேணும்னு சொன்னியாமே..." என்று சிரித்துக் கொண்டே கேட்டேன்.

"ஐயோ" —இந்த 'ஐயோ'வைச் சொல்லாமலே அவள் வயிற்றை எக்கிக்கொண்டே தொண்டே வழியே காற்றை உள்ளுக்கு இழுத்து வாயைப் பொத்தி, எழுத முடியாத ஓர் ஓசை கிளப்பினாள். சில சமயம் அதன் பிறகோ, அதற்கு முன்போ 'ஐயோ'வென்று சொன்னாள்.

"பொய்யி - பொய்யி—அவுரு தனியா போயி நின்னுக்கினு இருக்காரே, எதனா நெனச்சிக்கப் போறாரு...கூப்பிடுங்கன்னு சொன்னதையா இப்படி சொல்றீங்க!—போங்க ம்ஹ்க்கும்..." என்று நண்பரின் கையைக் கிள்ளினாள் அவள்.

'ஆ ஆ' என்று நண்பரும் கத்தினார்.

நான் மரத்தடியில் போய் அந்தப் பக்கம் பார்த்துக் கொண்டிருந்த அந்த சின்ன நேரத்தில் இவர்களுக்குள் இந்த அன்னியோன்னியம் ஏற்பட்டுவிட்டது என்று நான் புரிந்து கொண்டு நண்பரின் கண்களை உற்றுப்பார்த்தேன் நண்பர் கண்களைச் சிமிட்டிக் கொண்டே "ஷி இஸ் ரியலி ஸ்வீட்!" என்று உதட்டைக் கடித்தார்.

"தமிழ்லே பேசுங்க – நீங்க என்னெப் பத்தி என்னவோ பேசுறீங்களோனு பயம்மா இருக்குது. நீங்க பேசறதெ நான் தெரிஞ்சிக்கக் கூடாதுன்னுதானே மறைச்சி மறைச்சி இங்கிலீஸ்லே பேசுறீங்க" என்று அவள் வெள்ளைச் சிரிப்புடன் பேதைமையோடு கேட்டது என்னவோ மாதிரி இருந்தது. இங்கிலீஸ் தெரியாத காலத்தில் நானும் இப்படிப்பட்ட உணர்ச்சியில் தவித்திருக்கிறேன். அதை நினைத்துக் கொண்டேன்.

"சீ சீ ! அப்படியெல்லாம் இல்லை. எங்களுக்குப் பழக்கம் அப்பிடி—அதனாலேதான்" என்று அவளுக்கு நான் சமாதானம் கூறினேன்.

www.t.me/tamilbooksworld

Scanned by CamScanner

''அவுரு என்னா சொன்னார் தெரியுமா? நீ ரொம்ப இனிப்பா இருக்கியாம்!' என்று நான் சொன்னதும் அவள் கறுத்த முகத்திலும் நாணத்தின் கருஞ்சிவப்புப் படர முகத்தை மூடிக்கொண்டாள்.

நண்பர் தன்னை மறந்த லகரியில் சிரித்துக்கொண்டார்.

எனக்கு எல்லாமே ஒரு வேடிக்கை கலந்த சோகமாய் இருந்தது.

''என்ன பீர் 'எஃபக்ட், கொறைஞ்சுட்டுதே'' என்றார் நண்பர்.

''பரவாயில்லை. அதோ கள்ளுக்கடை இருக்கு'' என்று நான் காட்டினேன்.

''ஆ! ட்டாடி'' என்று நண்பர் துள்ளினார். ''தென்னங் கள்ளா, பனங் கள்ளா?'' என்று ஆவலுடன் விசாரித்தார்.

''பனங்கள்ளு கிடைக்குமோ என்னமோ...தென்னங் கள்ளு நிச்சயம் இருக்கும்'' என்றேன் நான்.

''கள்ளு கூட சாப்பிடுவீங்களா?'' என்று கேட்டாள் அவள்.

''ஏன்? சாப்பிட்டா என்னா?'' என்று நான் கேட்டேன்.

''சாப்பிட்டா என்ன, ஒண்ணுமில்லே கள்ளு ஒடம்புக்கு ரொம்ப நல்லது. ஜாட்டெ தனிக்கும். ஆனா உங்களை மாதிரிப் பெரிய மனுஷாளுங்க கள்ளுன்னா கேவலம்னு பிராந்தி பீருன்னு குடிப்பீங்களேன்னு கேட்டேன்'' என்றாள்.

இந்த விஷயங்களிலும் இப்படிபட்ட வர்க்க பேதங்கள் உண்டோ என்று நினைத்துச் சிரித்துக்கொண்டோம் நானும் நண்பரும்.

''நீ கள்ளு சாப்பிடுவியா?'' என்று கேட்டேன் நான்.



''சாப்பிடாம என்னா. எப்பனாச்சும் கொஞ்சம் சாப்பிடறதுதான். அது இன்னா செய்யப்போவுது'' என்றாள்.

''சரி அப்ப வண்டியை எடுங்க—நேரா வுடுங்க ஸார் 'டாடி ஷாப்'புக்கு'' என்றார் நண்பர்.

''கள்ளுக்கடைக்கா? ஐயோ'' என்று அவள் வாயைப் பொத்திக்கொண்டு சொன்னாள்: ''நீங்க போயி சாப்பிட்டுட்டு வாங்க - நானு இங்கேயே குந்திக்கினு இருக்கேன்.''

நான் யோசித்தேன் வண்டியில் வாட்டர் ஜக் இருக்கிறது. காரைக்கூட இங்கேயே விட்டுவிடலாம், நண்பரும் அவளும் இங்கே இருக்கட்டும் நான் போய் ஜக் நிறைய கள்ளு வாங்கிக்கொண்டு, அப்படியே கள்ளுக்கடையில் சாப்பிடுவதற்கும் ஏதாவது 'சாக்னா'க்கடைச் சமாசாரங்களைக் கட்டிக்கொண்டு வந்துவிட்டால் சோளக் கொல்லையில் அருமையான 'பிக்னிக்' வைத்துக் கொள்ளலாமே!

இந்த யோசனையைச் சொன்னதும் நண்பர் மிகக் குதூகலமாகச் சிரித்தார் ஆனால் ஒரு திருத்தம் செய்தார். நான் மட்டும் அவ்வளவு தூரம் தனியாகப்போய் 'வாட்டர் ஜக்'கோடு பொட்டலங்களையும் சுமந்து வரச் சிரமமாக இருக்குமாம். எனவே அவரும் கூட வருவாராம்.

அப்ப — இவளை என்ன செய்வது!

''நீ தனியா இங்கேயே இருப்பியா'' என்று அவளிடம் நான் கேட்டேன்.

''அதுக்கென்னா? காருக்குள்ளே குந்திக்கினு இருந்தால் தான் பாக்கறவங்களுக்கு - யார்னாச்சும் பார்த்தா சந்தேகப்படுவாங்க—நான், தே, இப்பிடி இந்த மரத்தடியில் குந்திக்கினு காருக்குக் காவலா இருக்கேன். நீங்க போயிட்டு வாங்க...'' என்று காரிலிருந்து இறங்கி மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு ஒரு குச்சியை எடுத்து மண் தரையில் கோலம் வரைய ஆரம்பித்தாள்.

www.t.me/tamilbooksworld
Scanned by CamScanner

நாங்கள் வாட்டர் ஜக்கை எடுத்து அதிலிருந்த தண்ணீரை எல்லாம் கொட்டிவிட்டுக் கள்ளுக் கடையை நோக்கிப் புறப்பட ஆயத்தமானோம்.

''சீக்கிரம் வந்துடுங்க'' என்று என்னிடம் அவள் சொன்னாள்.

'இரண்டு நாட்களுக்கு முன் வீட்டிலிருந்து புறப்படும் போது இப்படித்தான் சொல்லி அனுப்பினாள்—அவள்' என்று என் மனைவியை நினைத்துக்கொண்டேன் நான்.

இருவரும் கள்ளுக்கடையை நோக்கி நடந்தோம்.

## 2

அந்தக் கள்ளுக்கடை ஒரு தென்னந்தோப்பின் நடுவே மணற்பாங்கான பிரதேசத்தில் மிகவும் குளுமையான சூழ் நிலையில் இருந்தது. வெய்யிலே தெரியவில்லை, சுகமாகக் காற்று வீசிக் கொண்டிருந்தது.

சாலையிலிருந்து கடைக்குப்போகப் பிரிகிற பாதையில் ஒரு மரத்தடியில் ஒரு இளம் விதவை சிறிய கடை மாதிரி தென்னங்கீற்றுப் பந்தலுக்குக் கீழே வைத்திருந்தாள். நண்பரை விளித்துக் கேட்டாள்: சிகரெட்டா ஸார் வோணும்?...''

'என்ன சிகரெட் வெச்சிருக்கே?'' என்று நண்பர் அவளிடம் பேச்சுக் கொடுத்தார்.

''கத்திரி — ஆனை — இஷ்டார் — சார்மன்'' என்று வரிசையாக அவள் சொன்னாள். இந்தச் சிகரெட்டுகளில் விலை அதிகமாயுள்ள கத்திரியில் ஒரு பாக்கெட்டும் நெருப்புப் பெட்டியும் வாங்கிக் கொண்டார். அவளுக்குக் காசு கொடுக்கப் பர்ஸை எடுத்தபோது அவர் கையிலிருந்த 'வாட்டர் ஜக்'கை நான் வாங்கிக்கொண்டேன்.



கள்ளுக் கடையின் உள்ளே நுழைகிற வரைக்கும் நண்பர் அந்தச் சூழலையே ஓர் அதிசயமாகச் சுற்றிச் சுற்றிப் பார்த்த வண்ணம் என்னோடு நடந்து வந்தார்.

பிறகு இருவரும் 

நான் அவரிடம் ஆங்கிலத்தில் கேட்டேன்: ''இதற்கு முன் எப்போதாவது இந்த மாதிரியான கள்ளுக் கடைக் குள்ளே நீங்கள் வந்ததுண்டா?''

''நெவர்!'' என்று சுருக்கமாக எனக்குப் பதில் சொன்ன நண்பர் மொந்தையில் ஒருவன் கள் குடிக்கிற காட்சியில் லயித்து நின்றார்.

அவன் ஒரு தென்னை மரத்தடியில் குத்துக்காலிட்டு அமர்ந்து ஒருகையில் கலயமும் இன்னொருகையில் இலையில் வைத்த 'பக்கத் துணையு'மாக நண்பரையும் என்னையும் பார்த்தான். பார்த்து இணக்கமாகச் சிரித்துக் கொண்டே இலையைத் தரையில் வைத்துவிட்டு எங்களுக்குச் சலாம் வைத்தான்.

அவன் இடுப்பில் சாயவேட்டியும் மேலே ஒரு முண்டா பனியனும் அணிந்திருந்தான். சாய வேட்டியின் மேல் பை வைத்த பெல்ட் கட்டியிருந்தான். பெரிய மீசையில் சிறிது நரை.

நண்பர் அவனுக்குச் சலாம் வைத்தார். அங்கே மரத் தடியில் இவனை மாதிரிப் பல பேர் குடித்துவிட்டும் குடித்துக்கொண்டும் கும்பலாகவும் ஒற்றையாகவும் உட் கார்ந்திருந்தனர். எல்லாருமே சற்று உரத்த ஸ்தாயியில் பேசினர். ரொம்ப இரைச்சலாக இருந்தது. பரஸ்பரம் ஒருவனை ஒருவன் செவிடன் என்று நினைத்துக்கொண்டு பேசுவது மாதிரி 'ஓ'வென்று இரைந்து பேசிக்கொண்டனர்.

கள்ளுக்கடையின் உள்ளே நுழைந்ததும் சாக்னாக் கடையின் மசாலா நெடியும், கள்ளின் மணமும் கலந்து வீசின. தரையில் திட்டுத் திட்டாக ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன.

www.t.me/tamilbooksworld
Scanned by CamScanner

பெஞ்சுகளின் மீது சிலர் உட்கார்ந்து நாகரிகமாகக் குடித்தவண்ணம் இலையில் என்னவோ வைத்துத் தொட்டு நக்கிச் சுவைத்துக் கொண்டிருந்தார்கள் எல் லோரும் எங்களை அதாவது எங்கள் உடையைக் காணச் சற்றே ஆச்சரியம் கொண்டாலும் இதுமாதிரி ஆசாமிகள் இங்கு அடிக்கடி வரக் கண்டவர்கள் மாதிரித் தங்கள் காரி யத்தில் முனைந்திருந்தனர்.

ஒரு பக்கத்தில் வரிசையாகச் சாக்னாக்கடைச் சரக்கு களை வைத்துக்கொண்டு ஒரு அலி உட்கார்ந்திருந்தான்.

பெரிய சட்டியொன்றில் மீன் வருவல் துண்டுகள் எண் ணெய் மினுமினுக்க நான்கைந்து கிடந்தன. தீர்ந்துபோய் விட்டது போலிருக்கிறது. அலுமினியத் தட்டில் பெரிய பெரிய வாத்து முட்டைகள் மசாலா தடவி நிரப்பி இருந்தது. அலுமினியம் கரண்டி இடப்பட்ட வாயகல மான தட்டில் ஏதோ குழம்பும் கறியுமாக இருந்தது. பூவரசன் இலைகளில் வறுத்த ரத்தம் வரிசையாகக் கூறு கட்டி வைத்திருந்தது.

அவற்றின் மீது ஈக்கள் வந்து மொய்க்காதபடி அந்த அலி கையில் ஒரு சவுக்குக் குச்சிவைத்து வீசிக்கொண்டே எங்களைப் பார்த்து நாணத்துடன் சிரித்து முகம் திருப்பிக் கொண்டான். முகம்திரும்பியவன் தனக்குப் பின்னாலுள்ள தட்டி ஓரமாய் வாயிலிருந்த புகையிலையைத் துப்பி விட்டு, நண்பரிடம் கூறினான். ''ரத்தம ஜோடா வறுத்து வெச்சிருக்கு தின்னு பாருங்க ஸார்...''

''ரத்தத்தை வறுக்கறதா?'' என்று நண்பர் என்னிடம் கேட்டார்.

''ஆட்டை வெட்டுகிறபோது அந்த ரத்தத்தைக் கிண் ணத்தில் பிடித்து, அது உறைந்தபின் அந்தக் கட்டியை வேகவைத்து உதிர்த்து...''

அந்த அலி, நண்பருக்கு ஆட்டின் ரத்தத்தை எப்படி வறுப்பது என்பதை ரொம்ப விஸ்தாரமாக விளக்கிச் சொன்னான்.



போகிறபோது

''முதலில் கள்ளை வாங்கிக்கொண்டு, இதில் நுழையலாம்'' என்றேன் நான்.

கள்ளுக்கடையின் மூலஸ்தானம் மாதிரி அந்த மேடை யின் மேல் பெரிய பீப்பாயும், பீப்பாய் மாதிரி ஒரு மனுஷ னும் அவனுக்குப் பின்னால் சுவரில் அவனை மாதிரியே உருவம் கொண்ட பாவாடைராயன் என்னும் அவதார புருஷன் குதிரையின் மீது ஆரோகணித்திருக்கும் ஒரு படமும்—இந்தக் கள்ளுக்கடை கலாச்சாரம் எவ்வளவு புராதனமானது என்று உணர்த்திற்று.

அந்த ஆள் எங்களை மரியாதையான புன்னகையோடு வரவேற்றான். நெற்றியில் விபூதியும் சந்தனப் பொட்டு மிட்டுக் கொண்டிருக்கும் அவன் இதை மிகவும் புனிதமான காரியமாயும் உயர்வான தொழிலாகவும் கருதிச் செய்கிற பெரிய மனிதனாகவே தோன்றினான்.

''யோவ்—வானூராரே—'' என்று யாரையோ அழைத்து ''அந்த நாக்காலிங்களெ கொண்ணாந்து போடுய்யா'' என்று உபசரித்தான்.

உட்கார்ந்தால் எங்கள் உடை மேலும் அழுக்காகிற மாதிரி இரண்டு மர நாற்காலிகளை—அதில் ஒன்றுக்குக் கை ஒடிந்திருந்தது - இன்னொன்றுக்கு சாய்கிற சாய்வே இல்லாமல் இரண்டு பக்கமும் 'ப' மாதிரி சட்டங்கள் மட்டும் நின்றன - கொண்டுவந்து தூக்கிக்கொண்டு போட்டான் வானூரான் என்கிற அந்தக் கிழவன். அவன் எங்கள் அருகே வந்து குனிந்து நிமிர்கிறபோது விட்ட ஸ்வாசத்தில் கள்ளின் நாற்றம் புளித்துக்கொண்டு அடித்தது.

''டேய்—கிளாஸை நல்லா கழுவிக் கொண்டா'' என்று யாரிடமோ கூறினான் கள்ளுக்கடைக்காரன்.

''வேணாம் ஐயா இதிலே வாங்கிக்கிட்டுப் போகத் தான் வந்திருக்கோம். இந்த 'ஜக்'லே எவ்வளவு புடிக்

குமோ அவ்வளவு ஊத்துங்க !'' என்று வாட்டர் 'ஜக்'கை அவர் முன்னால் அந்த மேஜையின்மீது வைத்துத் திறந் தேன்.

''இருக்கட்டும் ஸார். வாங்கிக்கினு போங்க. நான் வாணாம்னா சொல்றேன். நான் பிரியமா என் கையாலே ரெண்டு கிளாஸ் தரேன். எப்பிடி இருக்குதுனு சாப்பிட்டுப் பார்த்தீங்கன்னா எனக்கு அதிலே ஒருசந்தோசம் – டேய்ங் கொக்காளா. சீக்கிரம் கொண்டாடா'' என்று அந்தப் பையனைச் செல்லமாகத் திட்டி அதட்டிக் கூவினான்.

இரண்டு கண்ணாடி தம்ளர்களிலும் தெளிந்த கள்ளை வார்த்து,

''எடுத்துக் குடுடா—மச்சான்'' என்றதும் அந்தக் கோவணாண்டிச் சிறுவன் பயபக்தியுடன் வலது கையில் கிளாஸையும், இடது கையால் வலது முழங்கையையும் ஏந்தி ஒவ்வொன்றாக எடுத்து முதலில் நண்பருக்கும் பிறகு எனக்கும் கொடுத்தான்.

நண்பர் மூக்கருகே வைத்து மோந்து பார்த்தார்.

சாக்கனாக்கடை அலி நண்பரைப் பார்த்துச் சிரித்து ஒரு பெண் போன்ற கனிவுடன் கேட்டான்: ''என்னா ஸார்.. ரத்தம் கொண்டாரட்டா? பிரியமாகக் கேட்டீங் களே... சாப்பிட்டுப் பாருங்க. ஜூடா இருக்குது'' என்று பூவரசன் இலைகளில் அதைக் கொஞ்சம் தாராளமாகவே அள்ளிக்கொண்டு வந்து எங்கள் கைகளில் வைத்தான். அவன் கை அப்போது என் கைகளில் பட்டபோது அரு வருப்பால் என் உடம்பு கூசியதை அவன் அறியாமல் நான் மறைத்துக்கொண்டேன். இலையின் அடியில் கையில் சூடு இறங்கியது

நண்பர் ஒரே மூச்சில் கிளாஸில் இருந்த கள்ளைக் குடித்துவிட்டுக் கிளாஸை நாற்காலியின் ஓர் ஓரமாக வைத்துவிட்டு அந்த ரத்தம் வறுவலை ரசித்துச் சாப் பிட்டார்.



புடிக்கும்'' நாலு பாட்டில்

''இது நெறையான்னா நாலு பாட்டில் புடிக்கும்'' என்று அளந்து ஜக்கைநிறைத்தான் கள்ளுக்கடைக்காரன்.

எங்கள் நாற்காலியைச் சுற்றி இரண்டு நாய்கள் வந்து காவல் காக்கிற மாதிரி நின்று கொண்டன.

பான்ட்டும் ஷர்ட்டும் அணிந்த—படித்துக் கெட்ட மாதிரி தோற்றம் கொண்ட—ஒரு இளைஞன், குடித்துச் சிவந்த கண்களும் பரட்டைத் தலையுமாய் எங்கள் எதிரில் வந்து மிலிட்டிரிக்காரன் மாதிரி சல்யூட் அடித்து ஏற் கெனவே அறிமுகம் உள்ளவன் போலச் சிரித்துக்கொண்டு நின்றான்.

''இந்தாப்பா—உன்னை உள்ளே வரக்கூடாதுன்னு சொன்னேன் இல்லே...போ...போ...நாளைக்கு வா...'', என்றுஅவனை அதட்டி விரட்டினான் கள்ளுக்கடைக்காரன்

அவன் சிரிப்பும் சல்யூட்டும் நண்பரைக் கவர்ந்து விட்டன. என்னிடம் அவர் ஆங்கிலத்தில் சொன்னார்: ''ஓ! அவன் முகத்தைப் பாருங்களேன்.. எவ்வளவு ஆனந் தம் கொப்பளிக்கிறது! ஹீ இஸ் ஃபுல்! ஆனால் இன்னும் வேணும்போல் இருக்கிறது அவனுக்கு.. ஆனந்தமே அப் படித்தான். நாம் அவனுக்குக் கொஞ்சம் 'டாடி' வாங்கிக் கொடுக்கலாமா?''

''எனக்கு ஆட்சேபணை இல்லை'' என்றேன் நான்.

''வேணாம் சார். அந்த ஆளுக்கு இதே தொழில்... ''வேணாம சார். அநத ஆளுக்கு இதே தொழில்... இன்னக்கி நெறையவேகுடிச்சிருக்கான்...'' என்று நாங்கள் பேசிக்கொள்ளுகிற விஷயத்தை யூகித்த கடைக்காரன் தடுத்துக் கூறினான்.

''பரவாயில்லே குடிக்கட்டுமே...இந்தாப்பா போய் வாங்கிக்க...'' என்றார் நண்பர் அவன் மறுபடியும் எங் களுக்கு ஒரு சல்யூட்வைத்துவிட்டு ஓடிஒரு மொந்தையைத் தூக்கிக் கொண்டு வந்து கடைக்காரனிடம் மிக குதூகல மான சிரிப்புடன் கள்ளை வாங்கிக் கொண்டான்.

www.t.me/tamilbooksworld
Scanned by CamScanner

அவன் போட்டிருந்த கால் சட்டையின் பின்புறத்தில் குறுக்கே ஒரு நீளக் கிழிசலின் வழியே தெரியும் பிருஷ்டத்தைக்கூட மறைக்க வேண்டும் என்ற உணர்வில்லாமல் அவன் இருப்பதைப் பார்த்து, அப்போதுதான் நான் உணர்ந்தேன், நான் அறிந்ததை நண்பரிடமும் சொன்னேன். "இவன் புத்தி ஸ்வாதீனம் இல்லாதவன் போலிருக்கிறது''.

நண்பர் மிகவும் அர்த்தத்தோடு சிரித்துக்கொண்டே சொன்னார்: ''புத்தியுள்ள எவன்தான் ஸ்வாதீனத்தோடு இருக்கிறான் ?''.

அவன் குதூகலமாக மொந்தையிலிருந்த கள்ளைக் குடித்துக்கொண்டே ஒவ்வொரு மிடருக்கும் எங்களை ஒரு முறை பார்த்து நன்றியோடு சிரித்துக்கொண்டான்.

நண்பர் ஏனோ அவனைப் பார்த்து மிகவும் மனம் இளகிப் போனார்.

சாக்னாக்கடை அலியைப்பார்த்து அவனுக்கு ஏதாவது சாப்பிடக் கொடுக்கும்படி கூறினார்.

ஓர் இலையில் இரண்டு தோசைகளும் அதன்மீது மீன் குழம்பும் ஊற்றி அவனுக்குக் கொடுத்தான் அலி.

இத்தனைக்கும் அடிக்கடி சிரிக்கின்ற புன்முறுவல் மூலமல்லாது வேறு எந்தவிதமாகவும் அவன் பதில் சொல்லவில்லை.

அவன் சிரிப்பில் ஒரு சோகமும், அவன் தோற்றத்தில் ஒரு பெரிய 'டிராஜிக் லவ் எப்பிஸோடும்' இருப்பதாகத் தோன்றியது. நண்பர் அப்படி நம்பினார்.

நான் 'ஜக்'கில் நிறைந்த நாலு பாட்டில் கள்ளுக்கும், நாங்கள் குடித்த இரண்டு கிளாஸுக்கும், இப்போது இவனுக்குக் கொடுத்த ஒரு மொந்தைக்குமாகக் கணக்குப் பார்த்துக் காசு கொடுக்கும்போது கள்ளுக்கடைக்காரன் எங்களுக்குத் தந்த இரண்டு கிளாஸுக்குப் பணம் வாங்கிக்



கொள்ள மறுத்துவிட்டான். ரொம்பக் கண்டிப்பாக உரிமையுடன் ஒரு சொந்தத்தோடு அவன் காசு வாங்கிக்கொள்ள மறுத்தது நண்பருக்கு மிகவும் ஆச்சரியத்தை உண்டாக்கிற்று.

சாக்னாக்கடை அலியிடம் சென்று தோசைகளும் வறுத்த ரத்தமும் மீன் வறுவலும்—என்று வகைக்குக் கொஞ்சம் வாங்கி மூட்டை கட்டிக்கொண்டு புறப்படும் போது நான் மணியைப் பார்த்தேன்.

இங்கே வந்து அரைமணி நேரத்தை வீணாக்கிவிட்டதையும், அங்கே மரத்தடியில் 'சிவப்புச் சேலை' காத்துக் கொண்டு தரையில் சித்திரம் கீறியவாறு எங்கள் வருகையை எதிர்நோக்கி இருப்பதையும் எண்ணி நான் நிதானமிழந்து நண்பரை உடனே புறப்படுமாறு அவசரப்படுத்தினேன்.

நண்பர் இந்தக் கள்ளுக்கடைச் சூழ்நிலையின் வாழ்க்கை நெடியில், மனிதப் பண்புகளில் தன்னை மறந்து கிறங்கிய நிலையில் பிதற்றுகிற மாதிரி, என் தோளில் பதிந்து அழுத்திப் பிடித்துக் கொண்டு ஆங்கிலத்தில் சொன்னார்.

எனது பெயரின் இரண்டு வார்த்தைகளின் முதல் எழுத்துக்களைத் தொண்டை கரகரக்க அவர் உச்சரித்து என்னை அழைத்தார்.

''எஸ் !'' என்றேன்.

''இதுதான் வாழ்க்கை ! இவர்கள் தான் மனிதர்கள் ! நாம் நகரத்தில் பார்க்கிற வாழ்க்கை இந்த நாட்டின் வாழ்க்கை அல்ல. அந்த மனிதர்களும் இந்த நாட்டின் பிரதிநிதிகள் அல்ல. நான் எனது நாட்டின் வாழ்க்கையை இங்கேதான் சுவாசிக்கிறேன்...ஸ்டேட்ஸில் நீக்ரோக்கள் மாதிரி - இங்கே இவர்கள் இருக்கிறார்கள் ! இவர்கள் தான் இந்தத் தேசத்தின் ஆத்மா !''

''பகலெல்லாம் குடித்த பீரோடு கள்ளும் சேர்ந்து ரொம்பவும் தூக்குகிறதா ?'' என்று சிரித்துக்கொண்டே கேட்டேன் நான்.

www.t.me/tamilbooksworld
Scanned by CamScanner

நண்பர் வாய் விட்டுச் சிரித்தார். பிறகு தானேதான் அந்த 'ஜக்'கைத் தூக்கிக்கொண்டு வருவேன் என்று பிடிவாதம் பிடித்தார். எனக்கும் சௌகரியமாகப் போயிற்று.

பாதி வழியில் 'ஜக்'கை ஒரு மரத்தடியில் வைத்துவிட்டு இடுப்பிலிருந்து நழுவி இறங்கிப்போன 'பாண்ட்'டைத் தூக்கிப் பெல்டை இறுக்கிப் போட்டுக்கொண்டு 'ஜக்கைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு வந்தார். நானும் உதவிக்கு ஒரு கை பிடித்துக்கொண்டு நடந்தேன்.

தூரத்தில் காரும், அதனருகே பளீரென்று சிவப்புப் புடவையும் தெரிந்தன.

ஆங்கிலத்தில் பேசிக்கொண்டே வந்தோம்.

''இந்த 'ஸனகோட்' எப்படி ?'' என்றார்.

''குட்! வெரிகுட்'' என்றேன்.

''உங்களுக்குப் பிடிக்கிறதா ?'' என்றார்.

''ஏன் பிடிக்காமல்—''

''நீங்கள் முதலில்.. ஐ வோன்ட் மைன்ட்'' என்று சொல்லிச் சிரித்தார்

நான் ஒன்றும் சொல்லவில்லை.

''நான் முதலில் போனால்—உங்களுக்கு வேண்டாம் என்று நீங்கள் ஒதுங்கிக் கொள்வீர்கள். எனக்கு அந்த மாதிரி 'இன்ஹிபிஷன்ஸ்' கிடையாது. ஆனால் உங்களுக்கு உண்டு—எனக்குத்தெரியும், என்ன சரிதானே? ''

நான் ஒன்றும் சொல்லவில்லை. சற்று யோசித்தேன்.

எனக்குப் பிராஸ்டிட்டியூட்ஸ் என்றாலே இன்ஹிபிஷன்ஸ் உண்டு என்கிற விஷயத்தைச் சொல்ல வெட்கமாக இருந்தது. இவர் என்னையே தப்பாக நினைத்துக் கொள்ளுவாரோ என்று தோன்றியது. இவர் என்னைத் தப்பாக நினைத்துக் கொண்டால் என்னவாம் என்று இப்போது தோன்றுவதுபோல் அப்போது தோணவில்லை.



''முதலில் போன உடன் ஆளுக்கு ரெண்டு கிளாஸ் கள்ளு குடிப்போம். அவளுக்கு வேணும்கற வரைக்கும் குடுப்போம். அப்புறம் தோசை கறி எல்லாம் தின்போம். நான் கொஞ்சம் நாழி காத்தாடக் காரிலேயே படுத்திருக் கேன். யூ டேக் ஹர்...கொஞ்சம் தூரம் அந்த ஃபீல்டுக் குள்ளே போயிடுங்க.. ஹாவ் யுவர் ஃபன்! என்னா! அந்தப் பக்கத்திலே தண்ணி இருக்கு. இல்லாட்டி தான் என்ன ? இட் இஸ் ஆல் ரைட்! அவ அங்கேயே இருக் கட்டும். அப்புறம் நீங்க கார்லே வந்து கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்குங்க.. தன் ஐ'ல் ஃபினிஷ்!'' என்று பிளான் போட்டுக் கொண்டே வந்தார் நண்பர்.

நான் ஒன்றும் சொல்லவில்லை. மௌனமாக வந்தேன்.

நாங்கள் காரருகே வந்ததும் மரத்தடியில் நான் நினைத்த மாதிரி ஒரே கோலங்களாய்க் கிறுக்கி வைத் திருந்த அவள் எழுந்து நின்றாள். என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே கேட்டாள்.

''இதான் சீக்கிரம் வர்ரதா ? எவ்வளவு நாழி ?'' என்று செல்லச் சிரிப்புடன் அவள் கேட்டபோது, திடீரென்று இடத்தை, தூரத்தை, எல்லாவற்றையும் அழித்துக் கொண்டு வீட்டிலிருந்து புறப்படும்போது ''சீக்கிரம் வந்துடுங்க'' என்று சொன்னாளே அந்த நினைவும் அவள் உருவமும் என் எதிரே தோன்ற நான் சிரித்துக் கொண் டேன்.

## 3

நான் 'பிக்னிக் ஸ்பாட்' தேடினேன். கம்பங்கொல் லைக்கு அப்பால் சற்றுத் தள்ளி ஒரு மேடும் மேட்டின் மீது ஒரு புளியமரமும் அதனடியில் வட்டமாய் நிழலும் தெரிந்தது.

www.t.me/tamilbooksworld
Scanned by CamScanner

'அங்கே போய்விடலாம்''... என்று நான் கூறிய யோசனையை நண்பரும் நினைத்தவர் போல் உடனே ஒப்புக்கொண்டார்.

காரிலிருந்து ஜமுக்காளத்தை நான் எடுத்துக்கொண்டேன். காரின் கண்ணாடிகளை உயர்த்திக் கதவுகளை அடைத்துக் காரைப் பூட்டிக்கொண்டு அவர்களின் பின்னால் தொடர்ந்தேன். வயலின் வரப்புகளில் நண்பர் முன்னாலும், அவருக்குப் பின்னே அவளும், கடைசியில் நானுமாக – போகிற காட்சியை நானே சற்றுத் தள்ளி நின்று பார்த்து மிகவும் விஷமமாய், ராமன் சீதை லட்சுமணன் மூவரும் கானகத்தில் நடக்கிற காட்சியைக் கற்பனை செய்து சிரித்துக் கொண்டேன். என்னுடைய குறும்புத் தனத்துக்காக நானே என்னைக் காதைமுறுக்கித் தலையில் ஒரு குட்டு வைத்துக் கொள்ள வேண்டுமென்று தோன்றியது.

அவள் போகும்போது திரும்பித் திரும்பி என்னைப் பார்த்து சிரித்துக் கொண்டே நடந்தாள்.

"உங்க பேரு என்னான்னு கேட்டேனே – சொல்லவே இல்லை..'' என்று அவள் பேச்சுக் கொடுத்தாள்.

நான் பொய்யாக ஒரு பேரைச் சொன்னேன். நண்பரைக் கேட்டாள். அவரும் அதே மாதிரி ஒரு பொய்யைச் சொன்னார்.

"உன் பேர் என்னா ?'' என்றார் நண்பர்

''கமலா'' என்றாள் அவள். அவளும் பொய்தான் சொல்லுகிறாளோ என்று எங்கள் புத்திக்குப்பட்டது; எனக்குப் பட்டது. நண்பருக்கும் அப்படித்தான் பட்டிருக்க வேண்டும். சரி, எப்படி இருந்தால் என்ன ? அவள் எதற்காகப் பொய் சொல்லப் போகிறாள் ?... நாங்கள் ஏன் சொன்னோம் ? ..



"ஆமா உன்னை அந்த ஆளு, அவந்தான் உன்னை இட்டாந்துட்டவன் வந்து எங்கே காணோமேன்னு தேட மாட்டானா ?'' என்று கேட்டேன் நான்.

"ம்... தேடட்டுமே. காத்தாலே என்னெப் போட்டு எப்பிடி மாட்டை அடிக்கிறமாதிரி அடிச்சான் தெரியுமா?... அவங்கையிலே கட்டை வெக்க...பாவி'' என்று மனம் குமுறிச் சபித்தாள் அவள்.

"நீ எதனாச்சும் வம்பு பண்ணி இருப்பே.. புருசன்னா அடிக்க மாட்டானா? அதுக்காக நீ இப்பிடி திட்டலாமா?'

அவள் அங்கேயே – வரப்பில் எனக்கு முன்னால் நடந்து கொண்டிருந்தவள் – என் பக்கம் திரும்பி நின்று தனக்கு நடக்கிற கொடுமையை முறையிட ஆரம்பித்துவிட்டாள்.

அவள் கண்கள் கலங்கிக் கண்ணீர் வழிய நின்று அழுது கொண்டே சொன்னாள் :

''நீங்களே சொல்லுங்க... நா சண்டைக்காரியா, வம்பு தும்பு பண்றவளான்னு எங்க தெருவுலே வந்து கேளுங்க இந்த ஆம்பளையெ நம்பிப் புத்தி கெட்டுப்போயி ஓடியாந்துட்டவதான் நானு... எனக்கு யாருமில்லே.. நானு ஒரு அநாதி உன்னை நம்பி ஓடியாந்ததனாலே நானு அநாதி ஆயிட்டேன் ... ஆருமில்லாதவளாப் பூட்டேன் ... அப்பிடி வந்துட்ட ஒரு பொண்ணே நீ என்னா மாதிரி வெச்சிக்கினு இருக்கணும் உனக்குப் பொண்டாட்டி இருக்கா புள்ளக் குட்டிங்க இருக்குது – மக்க மனுஷாளுங்க இருக்காங்க.. இருக்கட்டும், நானு வேணாண்ணு சொல்லலே... உன்னோட ஓடியாறப்போ நானு காதிலே ஒரு சோடி கம்மலு, கழுத்திலே செயினு எல்லாம் போட்டுக்கினு இருந்தவ... தோ சம்பளம் வாங்கி மூட்டுத்தரேன்னு வாங்கிக்கினு போயி வட்டிக்கடையிலே வெச்சி வருஷம் ஒண்ணாச்சி – கடைசியிலே வாயிலே போட்டுக்கினே.. தாலிக்கட்டிக்கின உன் பெண்டாட்டி தருவாளா? கேட்டிருக்கியே.. தந்திருக்

காளா ? ஊருக்கு வெளியிலே ஒரு குடிசை வூட்லே என்னைக் குடித்தனம் வெச்சிருக்கே...ஒரு பித்தளைச் சாமான் கெடையாது...ரெண்டு நாளா பட்டினிக் கெடக்கறேன். செத்தாளா இருக்காளான்னுகூட உனக்கு நெனப்பு கிடையாது. ராத்திரியிலே எப்பனா பொம்பளை நெனப்பு எடுத்துக்கினா அதுக்கு மட்டும் ஓடியாறே- அப்ப மட்டும் நான் 'ஊங்' குடுக்கணும். இல்லேன்னா அடிக்கிறே. பொம்பளையாப் பொறந்துட்டவளுக்கு அவன் எப்ப வந்தாலும் ஆசையா பாஷமா இருக்க வேண்டியது தான்...நானு இல்லேன்லே...நீஒரு ஆம்பளை...என்னாடா அவ பொட்டச்சிதானே ? சாப்பிட்டாளா ? சோறாக்கனாளா ? நாம்ப காசி குடுக்கலியேன்னு நெனைக்காட்டி அப்புறம் நீ என்னா ஆம்பளெ?ராத்திரிவந்தே—சத்தியமா சொல்றேன்...நேத்துக் காத்தாலே ரெண்டுஇட்லிவாங்கித் தின்னதுதான்.. நீங்க, பீச்சாண்ட பாக்கறப்ப 'மல்லாட்ட பயிறு' தின்னுக்கினு இருந்தேனே, அவ்வளோதான். வவுறு எரியுது'' என்று பசியினாலும் வாழ்வுமுறிந்துபோன வருத்தத்தாலும் இதையெல்லாம் ஒரு பிச்சைக்காரி மாதிரி சொல்ல நேர்ந்துவிட்ட அவமானத்தாலும் மனம் குமுறி அழுதாள். அவள். முகத்தை முந்தானையால் மூடித் துடைத்துக் கொண்டாள், எனக்கு அவளைப் பார்க்க மிகவும் பரிதாபமாக இருந்தது.

''சரி சரி...அழாதே! வா. அங்கே போயி உக்கார்ந்து சாப்பிடலாம்'' என்று சமாதானப்படுத்திக் கூப்பிட்டேன்.

நண்பர் அதற்குள் அந்தப் புளிய மரமேட்டு நிழலுக்குப் போய் ஒரு சிகரெட்டையும் புகைத்துக்கொண்டு ஜாலியாக காற்று வாங்கியவாறு நின்றிருந்தார்.

அவருக்கு நாங்கள் நடுவழியில் நின்று ஏதோ 'ரொமான்ஸ்' பண்ணுகிறோம் என்று நினைப்பு.

''அவுரைப் பாருங்கனே.. சாப்படறதுக்குத் தயாராப் போயி நிக்கிறாரு ..'' என்று கையை உயர்த்தி நண்பர்





நின்றிருந்த இடத்தைக் காட்டி அவள் சிரித்தாள். இன்னும் இமைகளில் படிந்த கண்ணீர் உலரவில்லை என்பதை மட்டும் நான் கவனித்தேன். அதற்குள் இவளால் எப்படிச் சிரிக்க முடிகிறது !

தன்னைப் பற்றி ஒளிவுமறைவில்லாமல் எல்லா விஷயங்களையும்—தான் இரண்டு நாட்களாகப் பட்டினிகிடக்கிற விஷயத்தைக்கூடச் சொல்லிவிட்டதால் அவள் என்னிடம் மிகவும் சொந்தம் பாராட்டுகிற முறையில், அல்லது சொந்தம் ஏற்படுத்திக் கொள்கிற முயற்சியில் என்னைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டாள்.

''உங்களுக்கு வூடு மெட்ராஸ்தானா ?''

''ம்...''

''கல்யாணம் ஆயிடுச்சா! ஆயிருக்கும்—கொழந்தெங்க இருக்கா ? எம்மாம்...''

''மூணு கொழந்தைங்க இருக்கு...இரண்டு பொண்ணு ஒரு பையன்'' என்றேன். ''எனக்கு கொழந்தெங்கன்னா ரொம்ப ஆசை. சின்னச் சின்ன பசங்கதானே !...பள்ளிக்கூடம் போறதுங்கதானே ? நா உங்ககூட வந்துடட்டா?', என்று பேசிக்கொண்டே நடந்தவள் மறுபடியும் திரும்பி என் பக்கம் முகம் பார்த்து நின்றுகொண்டு கேட்டாள்.

அவள் முகம் மிகவும் அனாதரவாய், பரிதாபமாய் மாறிக் கண்கள் கெஞ்சின.

''நெசந்தான்...என்னை இட்டுக்கினு போங்க—பட்டணத்துக்கு,வந்து உங்கவூட்லேநான் வேலை செய்யிறேன். கொழந்தெங்களெ பார்த்துக்கிறேன்—ரெண்டு வெளை வவுத்துக்கு உங்கவூட்லே மீந்ததெப் போட்டீங்கன்னா போதும்—என்ன நானும் உங்ககூட வரட்டா ?'' என்று கெஞ்சினாள்.

எனக்கு என்ன சொல்வதென்று புரியாமல் தர்ம சங்கடமாய் இருந்தது.

www.t.me/tamilbooksworld

Scanned by CamScanner

''அவருக்குத்தான் உன்மேலே ரொம்ப இஷ்டமா இருக்குது. அவுரையே கேளு. அவுருதான் கல்யாண மாகாத ஆளு. வூட்லே அவுங்க அம்மா மட்டும்தான் இருக்காங்க. வேலைக்கின்னு கொண்டு போயி வச்சுக்க முடியுமான்னு கேக்கறேன், எங்க வூட்லே சந்தேகப்படு வாங்க'' என்று நான் விளக்கினேன்.

''நீங்க சொன்னீங்கனாத்தான் அவுரு கேப்பாரு...'' என்று மிகவும் சாகசமாகச் சிரித்தாள் அவள்.

புளிய மரத்து மேட்டுக்கு வந்ததும் நான் கையிலிருந்த ஜமுக்காளத்தை விரிக்கப் போனபோது அவள் அதை என் கையிலிருந்து வாங்கித் தரையைத் தட்டிச் சுத்தம் செய்து ஒழுங்காக விரித்து வாட்டர் ஜக்கை நடுவில் வைத்து, சாப் பிடுவதற்காகப் பொட்டலங்களையும் வைத்து எங்களை அழைத்தாள்.

''வாங்க...உட்காருங்க'' என்று ஒரு குடும்பத் தலைவி விருந்தாளிகளை உபசரிப்பது மாதிரி அழைத்தாள்.

''நீயும் உக்காரு'' என்று நண்பர் அவள் கையைப் பிடித்திழுத்துத் தன் பக்கத்தில் நெருக்கமாக அமர்த்திக் கொண்டார்.

''முதல்லே கள்ளு சாப்பிடுங்க'' என்று பிளாஸ்க்கைத் திறந்து பிளாஸ்டிக் தம்ளரில் மொண்டு ''கிளாஸ் ஒண்ணு தான் இருக்கு...ஆரு மொதல்லே சாப்பிடுறீங்க?'' என்று கேட்டு இருவருக்கும் பொதுவாக நீட்டினாள்.

''எல்லாத்திலேயும் ஃபர்ஸ்ட் அவருக்குத்தான்'' என்று நண்பர் கண்ணைச் சிமிட்டிக்கொண்டு அவளை என் பக்கம் தள்ளினார். அவள் வெட்கத்தோடு தலை குனிந்தவாறு பிளாஸ்டிக் தம்ளரை நீட்டினாள்; நான் அதை வாங்கி ஒரே மூச்சில் மடக் மடக்கென்று குடித்தேன். கள்ளின் நெடியும் புளிப்பும் நெஞ்சில் கரகரத்தது....அவள் அவசர அவசரமாய் உணவுப் பொட்டலங்களில் ஒன்றைப் பிரித்து



ஒரு மீனை முள் நீக்கிக் கொஞ்சம் எடுத்து என் கையில் வைத்தாள். கள்ளின் புளிப்பு நெடிக்கு அந்தக் காரம் சுவையாய் இருந்தது.

''நீ சாப்பிடு முதலில்'' என்று பிரித்த பொட்ட ணத்தை அவளிடம் தள்ளி வைத்தேன்...

''கிவ் ஹர் டாடி'' என்று நண்பர் அவளுக்கும் கள் தருமாறு என்னிடம் சொன்னார்.

நான் அவரிடம் ஆங்கிலத்தில் ''அவள் சாப்பிட்டு இரண்டு நாளாகிறதாம். முதலில் அவள் சாப்பிடட்டும்!'' என்று சொன்னேன். நண்பரின் முகமே மாறிவிட்டது. ஆனால் என்னிடம் அவள் தனிமையில் ரகசியமாகச் சொன்னதைத் தான் அறிந்து கொண்டதாகக் காட்டிக் கொள்ளக் கூடாது என்ற பண்போடு நண்பர் அவளைச் சாப்பிடுமாறு மட்டும் சொன்னார்.

''ஏதாவது சாப்பிடும்மா உம்...இந்தா...'' என்று இன்னொரு பொட்டணத்தையும் எடுத்துத் தந்தார்.

''இருக்கட்டும்...சாப்பிடுவோம். எங்கே பூடுது.. நீங்க இதைச் சாப்பிடுங்க. சாப்பிடத்தானே வந்திருக்கோம்'' என்று மிகவும் கௌரவமாகச் சொல்லி அவருக்கும் கள்ளை மொண்டு கொடுத்தாள் அவள்.

நண்பர் அவளுக்கு அதை 'டோஸ்ட்' சொல்லி ''ஒரு பெண்ணின் கரத்தால் கள் குடிக்கிற பாக்கியம் கிடைத்த இந்த நாளை நான் என்றும் மறக்கமாட்டேன்...'' என்று கூறிக் குதூகலமாய்க் குடித்தார்.

எனக்கு இரண்டாவது தம்ளருக்குமேலே கள் உள்ளே இறங்க மறுத்தது. அந்த உணவுகளும் காரம் அதிகமாக இருந்ததால் கள்ளின் துணையில்லாமல் அவற்றையோ, அவற்றின் துணையில்லாமல் கள்ளையோ சாப்பிடச் சிரமப்பட்டுக் கொண்டு என் சிரமத்தை வெளியில் காட்டிக் கொள்ளாமல் கொஞ்சம் குடிப்பதும், கொஞ்சம் தின்பது மாக அவர்களுடன் உட்கார்ந்தேன்.

www.t.me/tamilbooksworld
Scanned by CamScanner

அவள் மிகவும் வெட்கத்துடன் ஒரு தம்ளர் கள் குடித்தாள். பிறகு ஒரு பொட்டணத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு சாப்பிட ஆரம்பித்தாள். எனக்கு அவளைப் பார்க்க மிகவும் பரிதாபமாய் இருந்தது அவளை உபசரிக்கிற முறையில் நானே ஒரு தம்ளர் கள்ளை மொண்டு அவளிடம் கொடுத்தேன்.

"ஐயோ.. எனுக்கா?" என்று வயிற்றை எக்கிக் கேலி அவளது 'மானரிஸ' மான ஓசையை எழுப்பிக் கேட்டாள்:

"குடிச்சிட்டு இவ ஆடட்டும். வேடிக்கை பார்க்கலாம்னா?" என்று சிரித்தாள்.

"Yes. I want some fun...you know? Do you know what is fun? fun..." என்று மிகவும் குதூகலமான வெறியுடன் அவளிடம் கேட்டார் நண்பர்.

"இவுரு என்னாங்க சொல்றாரு..." என்று என்னிடம் கேட்டாள் அவள்.

"அவருக்கு ஏதாவது வேடிக்கை செய்யணுமாம்... வேடிக்கைன்னா என்னான்னு தெரியுமான்னு கேக்கறாரு" என்று விளக்கினேன்.

"வேடிக்கை சரி இல்லை. உங்க 'ட்ரான்ஸ்லேஷன்' இஸ் நாட் கரெக்ட்! funன்னா...விளையாட்டு...காதல் விளையாட்டு...game of love...let us play the game of love.. என்று பாடினார். இரண்டு கிளாஸ் கள்ளில் மறுபடியும் நண்பர் 'அடி' வாங்கிவிட்டார் என்று புரிந்து கொண்டேன் நான்.

அவள் மேலும் இரண்டு தம்ளர் கள் குடித்தாள். காரமான அந்த உணவு வகைகளை ரசித்துச் சாப்பிட்டாள். மீன் துண்டிலிருந்து பதமாக முள்ளை நீக்கி அவள் சாப்பிட்டவிதம் ரசமாக இருந்தது. 'இது நல்லா இருக்கும்' என்று ஏதோ ஒரு பாகத்தை எடுத்து என்னிடம் நீட்டினாள். அவள் திருப்திக்காக வாங்கி அதை நான் சாப்பிட்டேன்.



"எனக்கு" என்று நண்பர் குழந்தைமாதிரி கையேந்தினார். அவருக்கும் சிரித்துக் கொண்டே தந்தாள்.

"See, didn't I say? She wants only you"– என்று மறுபடியும் அவர் சொன்னதை அவர் சொன்ன விதத்திலேயே புரிந்து கொண்டு "ம்க்கும்! ஒடனே அவரு மேலே தான் எனக்கு ஆசைன்னு சொல்றீங்களா?" என்று அவள் கேலி செய்தபோது அவளது புத்திசாலித்தனத்தை பாராட்டுகிற மாதிரி இரண்டு பேரும் சிரித்தோம்.

"ஓ! இங்கிலீசிலே சொன்னா –எனுக்குத் தெரியாதா? உங்ககூட இருந்தா ரெண்டு நாள்லே நானும் இங்கிலீசு பேசுவேன்" என்று ஜம்பமாகச் சொன்னாள்.

நண்பர் நன்றாகச் சாப்பிட்டார் நிறையக் குடித்தார். நானும் குடித்தேன். கள் கொஞ்சம் மீதி இருந்தது. 'ஜக்'கைச் சாய்த்துப் பார்த்து 'எனக்குப் போதுமே—இனிமே முடியாது' என்றார் நண்பர். நானும் போதும் என்றேன்.

"நீ வேணும்னா கொஞ்சம் குடி மீதியைக் கீழே கொட்டிட்டு அங்கே போய்த் தண்ணி கொண்டு வரேன்" —என்று சவுக்குத் தோப்புக்குப் பின்னால் தெரிந்த ஓடையைக் காட்டினார் நண்பர்.

"ஐயோ! இவ்வளவையும் கீழேயா ஊத்தச் சொல்றீங்க?" என்று அதை வீணாக்க மனமின்றிக் கேட்டாள் அவள்.

"அப்போ நீ குடி!"

"ஐயோ!...என்னாலே முடியாதுங்க போதும் இப்பவே ஒரு மாதிரி இருக்குது. ஆனாலும் கீழே ஊத்த மனசு வரலியே" என்று சொல்லிக்கொண்டு மணலில் குழி பறித்து அதை மனமின்றி ஊற்றினாள். பின்னர் சாப்பிட்ட இலைகளையெல்லாம் பொறுக்கித் தூர எறிந்தாள். நண்பர் சிகரெட் பற்ற வைத்துக்கொண்டு எனக்கும் ஒன்று கொடுத்தார்.

www.t.me/tamilbooksworld
Scanned by CamScanner

"நான் போயித் தண்ணி கொண்டாரேன்" என்று அவள் புறப்பட்டாள்.

"You go with her-no hurry for water. Take your own time" என்று என்னை அவளுடன் போகுமாறு பிடித்துத் தள்ளினார் நண்பர். நான் தர்ம சங்கடமாக எழுந்து நின்றேன். அவளும் நான் அவளுடன் வருவதை விரும்பினாள் என்பதை நின்ற தயக்கத்திலும் உதட்டில் நெளிந்த சிரிப்பிலும் கண்டுகொண்டேன். அந்த நிலைமை நீடிக்க விட விரும்பாமல் நானும் அவளுடன் நடந்தேன்.

கள்ளின் போதை நடக்கும்போதுதான் எனக்குத் தெரிந்தது. அவள் நன்றாகவே தள்ளாடினாள். இருவரும் மேட்டிலிருந்து இறங்கிச் சவுக்குத் தோப்புக்குப் பின்னாலுள்ள அந்த ஓடையினருகே வந்து நின்றோம். அங்கிருந்து திரும்பிப் பார்த்தபோது நண்பர் இருக்குமிடம் தெரியக்கூட இல்லை. சுற்றிலும் ஆளரவமே இல்லை. சவுக்குத் தோப்பில் நுழைந்து புறப்படுகிற காற்றின் ஒலி 'கும்'மென்று இரைந்தது. பறவைகளின் சத்தம்கூட இல்லை. ஏதோ ஒரு பருந்து மட்டும் ஒற்றைக் குரலில் கூவிக்கொண்டு வானத்தில் வட்டமிட்டது.

அவள் ஓடை நீரில் இறங்கி நின்று 'ஜக்'கை அலம்பி அதை ஒரு தடவை மோந்து பார்த்தபின் அதில் தண்ணீர் நிறைத்துக் கரையில் வைத்தாள். இரண்டு கைகளிலும் நீரை அள்ளிக் குடித்துவிட்டு, "தண்ணீர் நல்லா இருக்குதுங்க" என்றாள். நானும் அவளுடன் சென்று தண்ணீரில் நின்றேன். கணுக்கால் அளவுக்கும் குறைவாகத் தெளிந்த அந்த ஓடை நீர் காலுக்குச் சுகமாக ஜில்லென்றிருந்தது.

"அவுரு பாக்கறாரா;" என்று கேட்டுக்கொண்டே என் அருகே நகர்ந்து வந்து என் மேல் பட்டுக்கொண்டு நின்றாள். தனது இடக்கரத்தால் என் வலக்கை விரல்களைப் பிடித்து நெறித்தாள். நான் எங்கள் கைகளையும்



அவளையும் பார்த்தேன். அவள் பார்வை எதிர்த் திசையில் சவுக்குத் தோப்பில் லயித்து, முகத்தில் வெட்கமும் சிரிப்பும் குழம்பி இருந்தது.

"யாராவது பாப்பாங்களா?" என்று கேட்டாள்.

"எனக்குத் தெரியாது..." என்றேன்.

"சவுக்குத் தோப்புக்குள்ளாறப் போயிட்டா தெரியாது" என்றாள்.

"எதுக்கு? இங்கே நிற்போமே..." என்றேன்.

"ஏன்? பயமா?" என்றாள்.

"ஆமாம்..."

"எதுக்குப் பயம்?"

"எது எதுக்கோ?" என்று அவளிடம் நான் சொன்னேன். அப்புறம் நானே நினைத்துப் பார்த்தேன்: 'நான் ஏன் தயங்குகிறேன்? இவள் ஒரு பிராஸ்ட்டிட்யூட் என்பதனாலா? அதனால் மட்டுமா?... இவள் அழகாகத்தானே இருக்கிறாள்? அழகாக இருந்தால்?... என் மீது இவளுக்கு ரொம்ப ஆசை இருக்கிறது... எனக்கு நிஜமாகவே பயம் ஒன்றும் கிடையாது... பிறகென்ன? ஏதோ ஒரு சுயமரியாதை தடுக்கிறதோ? இல்லாவிட்டால், 'அவ'ளுக்கு நான் துரோகம் செய்கிறேன் என்கிற நினைப்பா! அப்படியெல்லாம் ஒன்றுமில்லையே பிறகென்ன? இதைச் செய்து பெறுகிற சந்தோஷத்தைவிட, இதைத் தவிர்ப்பதில் ஏதோ பெருமிதம் இருக்கிறது இவள் என்மீது வைத்திருக்கிற மரியாதையை அதுகாப்பாற்றும் இவள் பாவம்! வாழ்க்கையில் நொந்து கிடக்கிறாள் இவளை இதற்குப் பயன்படுத்துவது எனக்கு நியாயமோ, அவசியமோ இல்லை..."

"என்ன பேசாம நிக்கிறீங்க; அவுரு காத்துக்கினு இருந்துட்டுப் பொறுக்க முடியாம நேரா வந்துடப் போறாரு" என்றாள்.

www.t.me/tamilbooksworld
Scanned by CamScanner

''வரட்டுமே...'' என்றேன் அவளைப் பார்த்துச் சிரித்த வாறே.

''சிரிக்கறதைப் பாரேன். உங்களுக்கு வேணாமா?'' அவள் பார்வை பரிதாபமாக இருந்தது. சிறிய மௌனத்துக்குப் பிறகு அவள் என்னோடு ஒப்புக்கொள்ளுகிற தோரணையில் பேசினாள்: ''ஆமா.. நீங்க தான் என்னை உங்களோட இட்டுக்கினு போவப் போறீங்களே... இல்லே?''

நான் மௌனமாக நின்றிருந்தேன். ''நானும் வரேங்க, பட்டணத்துக்கு. உங்களுக்கு ஒரு கஷ்டமும் தரமாட்டேன், உங்க தெருவுக்குள்ளே நொழைஞ்சவுடனே என்னெ இறக்கிவுட்டுடுங்க. உங்க வூட்டுக்கு நானா வந்து உங்க வூட்டு அம்மாகிட்டே பேசி நானாகவே எப்பிடியாவது சேந்துக்குவேன். சமையலுகூட நல்லா செய்வேன்... வூட்டு வேலைங்க பூரா செய்வேன்...கொழந்தெங்களெ பாத்துக்குவேன்...அவுங்க எதிரே உங்களை நிமிந்துகூடப் பார்க்கமாட்டேன்...நீங்களா எப்பவாவது பிரியப்பட்டு எங்கேயாவது ரகசியமா இட்டுக்கினு போனா வரேன். வூட்லே யாரும் இல்லாதப்போ...இல்லே அவருகூட அனுப்பினாலும் சரி, இல்லே ரெண்டு பேருமா சேந்து எங்கயாவது என்னைத் தனியா வெச்சி இஷ்டப்பட்டப்ப வந்து போனாலும் சர்த்தான்... இந்தப் பாவிகிட்ட அடி வாங்கிக்கினு, பட்டினி கெடந்துக்கினு சாவ முடியாதுங்க ...நானு ஒண்ணும் இந்த மாதிரியெல்லாம் போயிக்கினு இருக்கிறவ இல்லே...அவன் என்னை அடிச்சா நானு திருப்பி அடிக்கவா முடியும்? அந்த ஆத்திரத்தெத் தீத்துக்கற மாதிரி நானு யாருகூட வேண்ணாலும் போறேன்.. அப்பதான் எனக்கு அவனை ரெண்டு ஆளை வெச்சி அடிச்ச மாதிரி இருக்குது...'' என்று பல்லைக் கடித்துக்கொண்டு அழுதவாறே பேசினாள்.

அவள் பேசுவதையெல்லாம் அனுதாபமாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். அவள் சொன்னாள்: ''நீங்க ரொம்பப் பெரிய மனுஷாளுங்க; உங்களைப் பார்த்தாவே தெரியிது. என்னை மதிச்சிக் கார்லே ஏத்திக்கினு வந்தீங்களே – நீங்க ரொம்ப நல்லவங்க.. இல்லாட்டி நான் எந்தக் காலத்திலே கார்லே ஏறப் போறேன் – கார் எம் மேலே ஏறினாத்தான் உண்டு...'' என்று சொல்லி வருத்தமாகச் சிரித்தாள்.



அவள் பேசிக்கொண்டே இருக்கையில் நான் நண்பர் காத்துக் கொண்டிருப்பதை நினைத்தேன். ஓடை நீருக்கு வந்து நின்று கால்மணி நேரமாகி இருந்தது. நான் குனிந்து தண்ணீரில் முகம் கழுவினேன். கொஞ்சம் தண்ணீரை அள்ளிக் குடித்தேன். சவுக்குத் தோப்பின் நிழல் இன்னும் நீண்டு விழுந்திருந்தது.

''சரி, நீ இங்கேயே இரு. நான் போயி அவரை அனுப்பறேன்...'' என்று 'ஜக்'கைத் தூக்கினேன்.

''நானு எடுத்துக்கினு வரேங்க –'' என்று அவள் என் கையைப் பிடித்தாள்.

''பரவாயில்லே நீ இங்கேயே நில்... அவரு வரணுமே ...'' என்றேன். அவள் என் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு ''ஏங்க? நெசமா என்ன இட்டுக்கினு போறீங்களா?'' என்று கேட்டாள்.

நேரடியாக அவள் முகத்தைப் பார்த்து 'முடியாது' என்று சொல்ல எனக்குச் சிரமமாக இருந்தது. ''நான் அவுருகிட்டேயும் கலந்து பேசிச் சொல்றேன்'' என்று கூறி 'ஜக்'கைத் தூக்கிக்கொண்டு நிமிர்ந்தபோது அவள் என்னைத் தழுவி என் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டாள். நான் அதற்காகச் சந்தோஷப்படுகிற மாதிரிச் சிரித்தேன். அவள் தன் கன்னத்தை என் முகத்தருகே திருப்பி ''எனக்கு ...'' என்று கேட்டாள். நானும் லேசாக அவள் கன்னத்தில் முத்தமிட்டேன். அவள் கன்னம் ரொம்ப மிருதுவாக இருந்தது.

www.t.me/tamilbooksworld
Scanned by CamScanner

''அவரு கேட்டா...நான் ஒண்ணும் பண்ணலேன்னு சொல்லிடாதே—அப்பறம் அவரும் பேசாம போயிடுவாரு ..'' என்று அவளிடம் சொன்னேன் ; அவள் தலையாட்டினாள்.

நான் ஓடையிலிருந்து சவுக்குத் தோப்பருகே மேட்டில் ஏறும்போது ஜமுக்காளத்தில் மல்லாந்து படுத்து சிகரெட் புகைத்துக் கொண்டிருக்கும் நண்பரைப் பார்த்தேன். நான் அருகில் சென்று 'ஜக்'கை வைத்த சப்தத்தில் என்னைப் பார்த்த அவர் ''so soon?'' என்று கேட்டுக் கொண்டே எழுந்தார்.

''தண்ணி நல்லா இருக்கு...'' என்று ஒரு தம்ளர் தண்ணீர்எடுத்துக் கொடுத்தேன். அவர் தண்ணீர் குடித்து விட்டு எழுந்தார். ''now...I am going'' என்று என்னிடம் உத்தரவு கேட்கிற மாதிரி சொன்னார்.

''Go ahead'' என்றேன் ; ''one second'' என்று அவரை நிறுத்தி, ''அவளிடம் எதையும் உறுதி பண்ணிக் கொள்ளாதீர்கள். அவள் பேசுவதையெல்லாம் கேட்டுக் கொள்ளுங்கள்—அவள் நம்மோடு வர விரும்புகிறாள் ; ஜாக்கிரதை என்று எச்சரித்து அனுப்பினேன். அதற்காக மனசில் வருத்தப்பட்டேன். அவர் போனதும் ஜமுக்காளத்தை உதறி மடித்தேன். ஜக்கைக் கொண்டு போய்க் காரில் வைத்தேன். காரின் மீது வெயில் விழுந்தது இப்போது. எனவே நிழல் பார்த்து ஒதுக்கி நிறுத்தினேன். நன்றாகக் காற்று வந்தது. களைப்பாய் இருந்தது. அப்படியே ஸீட்டில் சாய்ந்து கண்களை மூடினேன்.

## 4

காரின் கதவை நண்பர் வந்து திறந்தபோதுதான் ஸீட்டில் சாய்ந்து நன்றாக தூங்கிவிட்டதை உணர்ந்



தேன். அவள் தூரத்தில் சவுக்குத் தோப்பருகே முகத்தைத் தனது சிவப்புப் புடவையின் முந்தானையால் துடைத்தவாறு நின்று, வந்து கொண்டிருந்தாள்.

''உங்களிடம் ஏதாவது சொன்னாளா ?'' என்று கேட்டேன்.

''அவுரு உங்ககிட்ட என்னைப் பத்திப் பேசினாரான்னு கேட்டாள்...பேசினார்னு சொன்னேன். அதுக்கு மேலே நான் அவளைப் பேசவிடலே . she was really fine' .. என்று அவளைச் சிலாகித்த நண்பர், பின் ஸீட்டில் உட்கார்ந்து கொண்டார்.

அவள் என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே வந்தாள். அவளாகவே வந்து முன்ஸீட்டின் கதவைத் திறந்தாள். அவள் உட்கார்ந்ததும் என் கையைப் பற்றி அழுத்தினாள். எனக்கு இப்போது கொஞ்சம் கஷ்டமாகவே இருந்தது. நண்பருக்குக் கார் ஓட்டத் தெரிந்தால் அவரை முன்னால் அவள் பக்கத்தில் விட்டு விடலாமே என்று நினைத்தேன். இவளாவது பின் ஸீட்டிலே போய் உட்கார்ந்திருக்கலாமே என்றும் நினைத்தேன். நான் ஏன் இப்போது மட்டும் இப்படி நினைக்கிறேன் என்றும் நினைத்தேன்.

அவள் மௌனமாக ஆழ்ந்த சிந்தனையுடன், திடீரென முகத்தில் கவிந்த வருத்தத்துடன் தலைகுனிந்து உட்கார்ந்திருந்தாள்.

''என்ன யோசனை?'' என்று நானே பேச்சுக் கொடுத்தேன். 'ஒண்ணுமில்லே' என்று அவள் என்னைப் பார்க்காமலே சொன்னாள். நானாக அவள் மோவாயை அவள் சந்தோஷத்துக்காகத் தொட்டு நிமிர்த்தினேன். அவள் சிரித்தாள்.

நான் சொன்னேன், நிதானமாக அவள் மனசில் பதிகிற மாதிரிச் சொன்னேன் : ''நாங்க உன்னை இட்டுக்கிட்டுப்

Scanned by CamScanner

www.t.me/tamilbooksworld

போறதெப்பத்திப் பேசினோம். அவுரு இங்கே நிலையா இருக்கறவரு இல்லே அதனாலே...நீ சொல்றமாதிரி எங்க வூட்லேதான் உன்னை வெச்சிக்கணும். அதிலே ஒண்ணும் கஷ்டமில்லே ஆனால் திடீர்னு போனா எப்படின்னுதான் யோசிச்சோம்...நான் வீட்டுக்குப்போயிக் கிராமத்திலே இருக்கிற ஒரு... பிரண்டு வீட்டிலே உன்னைப் பாத்து வெச்சிருக்கேன்னு சொல்லி, வீட்டிலே தயார் பண்ணி வெக்கறேன்...அடுத்த வாரம், இதே திங்கக்கிழமை மத்தியானம் நீ பீச்சுக்கிட்ட வந்து நில்லு. நான் வந்து உன்னை அழைச்சுக்கிட்டுப்போறேன்... நிச்சயமா, என்ன சொல்றே.''...என்று கேட்டபோது, அவள் கலங்கும் கண்களோடு என்னைப் பார்த்துஉதடுகள் துடிக்கச் சிரித்துக் கொண்டே சொன்னாள் :

''நான் உங்களைத்தாங்க நம்பி இருக்கேன்...நீங்க எதுக்குப் பொய் சொல்லி, ஏமாத்தப் போறீங்க?...எப்பிடி யாலது பல்லைக்கடிச்சிக்கினு அடுத்த திங்கக்கிழமை வரைக்கும் ஓட்டிடறேன்...அதுக்குள்ளே என்னா என்னா படப் போறேனோ'' என்று பெருமூச்சு விட்டாள் : ''சரிங்க...அப்பிடியே செய்ங்க...திங்கக்கிழமை காத்தாலேயே வந்து பீச்சிலே, அதே எடத்திலே வந்து குந்திக்கினு இருப்பேன்...'' என்று அந்த நாளை நினைத்த மகிழ்ச்சியில் குதூகலமாய்ச் சொன்னாள்.

எனக்கு நெஞ்சு கனத்தது. காரைத் திருப்பினேன். அவள் என்மீது படுகிறமாதிரி எனது ஆதரவில் ஒண்டிக் கொள்கிற குழந்தை மாதிரி நெருக்கமாக என்மீது பட்டுக் கொண்டு உட்கார்ந்தாள், நான் அவள் கைமீது தட்டிக் கொடுத்தேன்.

—'நான் எவ்வளவு பொய்யன்!'

காரை மறுபடியும் ஊருக்குத் திருப்பி ஓட்டினேன். நண்பர் பின் ஸீட்டில் நன்றாகச் சாய்ந்து தூங்க ஆரம்பித்தார்.



மௌனமாக நான் காரை ஓட்டினேன். அவள் மட்டும் என்னை அடிக்கடி பார்த்து ஏதேதோ கற்பனைகளில் மகிழ்ந்து கொண்டிருந்தாள் என்று எனக்குத் தெரிந்தது.

பீச் ரோடில் காரை மெதுவாக ஓட்டினேன். அந்த மறுகோடியில் காரை நிறுத்தி, அவள் இறங்குவதற்கு முன்னால் பர்ஸிலிருந்து இரண்டு பத்து ரூபாய் நோட்டுகளை எடுத்து அவளிடம் நீட்டினேன்.

''ஐயோ!...வேணாங்க...வேணவே வேணாம். நீங்க திங்கக்கிழமை வாங்க...''என்று கதவைத் திறந்துகொண்டு இறங்கினாள். அதற்குமேல் வற்புறுத்தினால் அவள் மனம் உடைந்து விடுவாள் என்ற அச்சத்தினால் வருத்தத்துடன் பணத்தைப் பையில் வைத்துக்கொண்டேன். எனக்குக் கண்கள் கலங்கின. அவள் மறுபடியும் என் கையைப் பிடித்துத் தனது கைகளில் வைத்துக்கொண்டு. ''காத்துக்கிட்டு இருப்பேங்க...திங்கக்கிழமை...'' என்றாள்.

நண்பர் விழித்தெழுந்தார், அவர் கையையும் பிடித்துக் கொண்டு ''போயிட்டு வாங்க. மறந்துடாதீங்க'' என்றாள் அவரிடம்.

நானும் நண்பரும் மத்தியானம் பார்க்கும்போது நின்றிருந்தாளே அதே இடத்தில் அதேமாதிரி எங்களோடு சம்பந்தமில்லாத யாரோ மாதிரி சிவப்புப் புடவையின் முந்தானை காற்றில் பறக்க நின்றுகொண்டு பரிதாபமாகக் கடலை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

நான் காரைத் திருப்பினேன். தெருமுனையில் திரும்புகிற போது மறுபடியும் ஒரு முறை தூரத்தில் நிற்கிற அவளைப் பார்த்தேன்.

www.t.me/tamilbooksworld

Scanned by CamScanner

அடுத்த திங்கட்கிழமையும் அதற்கடுத்த திங்கட்கிழமைகளிலும் அவள் அங்கே வந்து காத்திருப்பாள்!...

அந்த மாசமே நண்பர் அமெரிக்காவுக்குப் போய் விட்டார். நான் ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒரு தடவை அந்த 'பா'ருக்கு அந்த இடத்துக்குப் போனேன்.

கடல் மட்டும் இரைந்து கொண்டிருக்கிறது. பீச்ரோடு 'வெறிச்' சென்றிருக்கிறது. என் கார் வெயிலில் பழுக்கக் காய்ந்து கொண்டிருக்கிறது. நான் போய் அவள் நின்றிருந்தாளே அந்த இடத்தில் அதே மாதிரி நின்று கடலை வெறித்துப் பார்க்கிறேன்...

□



## சிந்தனையாளர் ஜெயகாந்தன் நாவல்கள்

- சில நேரங்களில் சில மனிதர்கள்
- காற்று வெளியினிலே
- ஜயஜய சங்கர
- ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்
- பாரீஸுக்குப் போ
- ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்
- இன்னும் ஒரு பெண்ணின் கதை
- ரிஷி மூலம்
- ஒரு மனிதனும் சில எருமை மாடுகளும்
- வாழ்க்கை அழைக்கிறது
- கை விலங்கு
- பிரம்மோபதேசம்
- எங்கெங்கு காணினும்
- பாவம் இவள் ஒரு பாப்பாத்தி
- ஆயுத பூஜை
- ஓ, அமெரிக்கா!
- ஒவ்வொரு கூரைக்கும் கீழே
- ஊருக்கு நூறு பேர்
- மூங்கில் காட்டு நிலா
- இல்லாதவர்கள்
- காத்திருக்க ஒருத்தி
- கரிக்கோடுகள்
- கருணையினால் அல்ல
- இந்த நேரத்தில் இவள்
- சினிமாவுக்கு போன சித்தாளு
- யாருக்காக அழுதான்?
- அந்த அக்காவைத் தேடி
- கழுத்தில் விழுந்த மாலை
- கரு
- பிரளயம்
- கங்கை எங்கே போகிறாள்
- உன்னைப் போல் ஒருவன்
- பாட்டிமார்களும் பேத்திமார்களும்
- அப்புவுக்கு அப்பா சொன்ன கதைகள்
- இதயராணிகளும் இஸ்பேடு ராஜாக்களும்
- சுந்தர காண்டம்
- ஈஸ்வர அல்லா தேரே நாம்

www.t.me/tamilbooksworld
Scanned by CamScanner

www.t.me/tamilbooksworld

மீனாட்சி
புத்தக நிலையம்

Scanned by CamScanner